இந்தச் சஞ்சலம் இருந்துகொண்டுதான் என்னை இரவும் பகலும் பாதிக்கிறது.

திருவேங்கடம்மாள்: ஆமாம்; உமது மனத்திலிருக்கும் விசனத்தைப்பற்றி நீர்தான் சிலாகித்துக்கொள்ள வேண்டும். உமக்கு அந்தக் கவலை இருக்கிறதென்பதற்கு அடையாளம் என்ன? குழந்தைக்குச் சாந்திக்கல்யாணம் செய்து வைக்க இந்த நான்கு வருஷ காலமாகவா ஏற்பாடு செய்து வருகிறீர்? வகு ஒழுங்கு!

ராகவாசாரி: என்னடி! இப்படிச் சொல்லுகிறாய். நான் இதுவரையிலும் பிரயத்தனம் செய்யாமலா இருக்கிறேன்?

திருவேங்கடம்மாள்: எல்லாம் தெரிகிறது. மகா பிரயத்தினம் செய்து ரொம்பத்தான் சாதித்துவிட்டீர்? குழந்தைக்குச் சாந்திக்கல்யாணம் ஆகியிருந்தால் நீர் உண்மையான பிரயத்தனம் செய்ததாக நினைக்கலாம். என்னுடைய நிர்ப்பந்தம் பொறுக்க மாட்டாமல், 'அவனைப் போய்க் கேட்டேன், இவனைப் போய்க் கேட்டேன், அவன் அப்படிச் சொன்னான்; இவன் இப்படிச் சொன்னான்' என்று என்னைத் திருப்தி செய்ய வீண் ஸால்ஜாப்புகள் சொல்வதில் என்ன பிரயோஜனம்? பேச்சுகள்தான் பிரமாதமாக இருக்கு; காரியம் எதுவும் முடிந்த பாட்டைக் காணோம்.

ராகவாசாரி: நமது தற்கால நிலைமை உனக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும், நீ இப்படிப் பேசினால் உனக்கு நான் என்ன பதில் சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை. நமது இந்தக் கஷ்ட தசையில், நமக்கு ஒரு ரூபாய் யாராவது கடன் கொடுப்பவர்கள் உண்டா? எங்கே, விரலை மடக்கு, பார்க்கலாம்.

திருவேங்கடம்மாள்: ஒரு காரியம் சித்தி ஆக வேண்டுமானால் முதலில் கெஞ்சிக் கேட்க வேண்டுமென்றும், அப்படிக் கேட்டும் பயன்படாவிட்டால் கடனேனும் வாங்க

வேண்டுமென்றும், அதிலும் சாயாவிட்டால் திருடியாவது காரியத்தை முடிக்க வேண்டுமென்றும் இங்கிலீஷ் பாஷையில் ஒரு பழமொழி இருப்பதாக, அநேக தடவைகளில் நீரே சொல்லி இருக்கிறீர் அல்லவா? எப்படியாவது ரூபாய்கள் சம்பாதித்துக் குழந்தைக்குச் சாந்திக்கல்யாணம் பண்ண வேண்டுமென்னும் ஞானம் உமக்கு இல்லாமல் போனது என்ன?

**ராகவாசாரி:** அடி, நான் சொல்வதைக் கேள். நமது குழந்தைக்கு மூன்று வயதாய் இருக்கும்போது கல்யாணம் செய்தோம்; அப்போது நாம் தனவந்தராக இருந்ததால், அந்தத் தேசிகாசாரி உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவரென்றும் அதிக தனவந்தரென்றும் அவர் குமாரனுக்கு நமது குழந்தையைக் கல்யாணம் செய்துகொடுத்தால் நமது குழந்தை கஷ்டமன்னியில் சுகஜீவியாய் வாழ்வாள் என்றும் உத்தேசித்து ஐயாயிரம் ரூபாய் வரதக்ஷிணை தந்து கன்னிகாதானம் செய்து கொடுத்தோம். அத்துடன் நிற்காமல் சாந்திக்கல்யாண காலத்தில் ஆயிரம் ரூபாய் கொடுத்துச் சாந்திக்கல்யாணம் நடத்துவதாக நான் ஒப்புக்கொண்டதும் உனக்குத் தெரியும். நமக்கு இருக்கும் ஒரே குழந்தைக்குக் கல்யாணம் செய்கிறோமென்று தலைகால் தெரியாமல் அமோகமாய்ப் பணம் கடன் வாங்கி, நமது சம்பந்தியின் கௌரவத்திற்கு ஏற்றபடி கல்யாணம் செய்ததால், கல்யாணச் செலவு ரூபாய் ஐயாயிரத்திற்கு ஓடிவிட்டது. வரதக்ஷிணை ரூபாய் ஐயாயிரமும் கல்யாணச் செலவு ரூபாய் ஐயாயிரமும் சேர்ந்து நமக்குப் பத்தாயிரம் ரூபாய் கடனாயிற்று.

இரண்டொரு வருஷங்கள் நமக்குப் பயிர் சரியாய் விளையாததனாலும் வட்டி ஏறிக்கொண்டே போனதாலும், நிலத்தின் பேரில் ரூபாய் போட்டு வைப்பதில் நூற்றுக்குக் கால் வட்டிகூடக் கட்டாதென்றும், வாய்க்காலில் சரியானபடி ஜலம் வராவிட்டால் விளைவு குறைவதால் அந்தக் கால்

வட்டிகூட அகப்படாமல் போவதோடு சர்க்கார் தீர்வையும் கையை விட்டுக் கட்டவேண்டி யிருக்கிற தென்றும், அதை விட நிலங்களை விற்றுவிட்டு நமக்கு இருக்கும் கடன்களை வட்டியும், முதலுமாய்க் கொடுத்துத் தொலைத்துவிட்டு மிகுந்த ரூபாய்களை அர்பத்நட் அவுசில் போட்டால் நாம் வீட்டில் உட்கார்ந்தபடியே, கால் மேல் கால் போட்டுக்கொண்டு சௌக்கியமாய் அரை வட்டி வாங்கிக்கொண் டிருக்கலா மென்றும் சொன்ன துர்மந்திரிகளின் வார்த்தைகளைக் கேட்டு நீ செய்த தொந்தரவின் பேரில் உன் தூண்டுதலின் படியே நமக்கு இருந்த கிராமத்தை விற்று, கடன்களை வட்டியும் முதலுமாய்த் தொலைத்துவிட்டு மிகுந்த ரூபாய் இருபத்தையாயிரத்தையும் அர்பத்நட் அவுசில் போட்டோம்.

நாம் அர்பத்நட் அவுசில் ரூபாய்கள் போட்ட முகூர்த்த மானது, சுமார் நூறு வருஷ காலமாய்க் கிரமமாக நடந்து வந்த அர்பத்நட் அவுசானது நாம் ரூபாய் போட்டவுடன் மூடப்பட்டது. அன்று முதல் இன்றுவரையில் நமக்கு அன்றுடகாலக்ஷேபம் நடப்பதே பெருங்கஷ்டமாயிருக்கிறது. இந்த விவரங்களை யெல்லாம் பரிஷ்காரமாய்க் காட்டி நமது சம்பந்தியாகிய தேசிகாசாரிக்கு ஆறு கடிதங்கள் எழுதியும், சாந்திக்கல்யாண காலத்தில், நான் முன் கொடுப்பதாய் வாக்களித்த ரூபாய் ஆயிரத்தையும் கொடுத்துச் சாந்திக் கல்யாணச் செலவுகளும் செய்தாலொழியத் தாம் சம்மதிக்க முடியாதென்றும், தம் மகன், இப்போது பி. எல். கிளாசில் வாசிப்பதால் அநேகர் அவனுக்குப் பெண்கொடுக்கத் தயாராயிருப்பதாயும் நான் பேசினபடி ரூபாய் கொடுக்காவிட்டால் சாந்திக்கல்யாணம் செய்ய முடியாதென்றும் ஒவ்வொரு தடவையும் கண்டிப்பாய் எழுதுகிறார். இப்போது அவர் இருக்கும் உன்னத பதவியில், இத்தொகை அவருக்கு ஒரு பொருட்டல்லவென்றும், நாம் இருக்கிற தரித்திர தசையில் நம்மால் இப் பெருந்தொகை கொடுக்

கவே முடியாதென்றும் எவ்வளவு பணிந்து எழுதக் கூடுமோ அவ்வளவு எழுதியும் அத் தொகை கொடுத் தால்தான் சாந்திக்கல்யாணம் நடப்பிக்க யோசிக்கலாம் என்பதாய் இன்று மிகு கண்டிதமாய்க் கடிதம் எழுதியிருக் கிறார். அந்த விசனத்தின் பேரில்தான் இவ்வளவு நேரம் பொறுத்து நான் சாப்பிட வந்தேன். என் வேதனையை உணராமல் புண்ணில் கோல்கொண்டு குத்துவதுபோல் நீயும் இவ்வளவு வார்த்தைகளைப் பேசி இப்போது ஹிம் சிக்கிறாய்.

திருவேங்கடம்மாள்: இந்தப் பழைய கதைகளையெல்லாம் நீர் சாமாரியாய்ப் பொழிவதில் சமர்த்தர்தான். இவை யெல்லாம் எனக்கு இதுவரையில் தெரியாத புது சமாசாரம் போல் இப்போது சொல்லுகிறீர். அவரோ ஒரே பிடிவாதம் பிடித்து நிற்கிறார்; நீரோ அதற்கு மேலே; என்னவோ தலையெழுத்து.

ராகவாசாரி: பின் என்னை என்னடி செய்யச் சொல்லு கிறாய்? அர்பத்நட் அவுஸ் திவாலி எடுத்த பின் நாம் குடி யிருந்த வீட்டையும் விற்றுச் சாப்பிட்டாய்விட்டது. நமது உள் சங்கதியெல்லாம் எல்லாருக்குந் தெரியும். அப்படி இருக்கும்போது நமக்கு யார் ஒரு பைசா கடன் கொடுப்பார் கள்? கடனை எப்படித் திருப்பிக் கொடுக்க உத்தேசிக்கிறா யென்று அவர்கள் என்னைக் கேட்டால் அவர்களுக்கு நான் என்ன விதமான பதில் சொல்லுவது? என்னை வழிப்பறி யடித்துப் பணம் கொண்டுவரச் சொல்லுகிறாயா என்ன?

திருவேங்கடம்மாள்: ஆனால் நமது குழந்தை ஆம்படை யான் வீட்டில் வாழாமல் எப்போதும் இங்கேயே இருப்பதா?

ராகவாசாரி: என் புத்திக்கு எட்டியவரையில் இன் னதுதான் செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு இப்போது ஒரே ஒரு யோசனைதான் தட்டுப்

படுகிறது. அது என்னவென்றால் நமது மாப்பிள்ளை ராஜேந்திராசாரி அதிக புத்திமானென்றும் நல்லவனென்றும் கேள்விப்படுவதால் எப்படியாவது வயிற்றைக் கட்டி, பத்து ரூபாய் ரயில் செலவுக்குச் சேகரித்துக் கொண்டு நேரில் போய்ப் பார்த்து நமது கஷ்டங்களையெல்லாம் அவரிடம் சொல்லிக்கொண்டால், அவர் தம் தகப்பனாரிடம் பேசி ஒரு வழிக்குக் கொண்டுவருவாரென நினைக்கிறேன். இது ஒன்றுதான் நாம் செய்யக்கூடிய பிரயத்தனம்.

திருவேங்கடம்மாள்: பேஷ்! பேஷ்! இவ்விஷயத்தில் நான் இதுவரையில் பிரயத்தனம் செய்யவில்லையென்று நிச்சயித்துக்கொண் டிருக்கிறீர்போல் இருக்கிறது. நமக்குத் தெரியாமல் நமது குழந்தை தானே எழுதுவதுபோல் இவ் விஷயங்களையெல்லாம் குறிப்பிட்டு அவள் ஆம்படையானுக்கு மூன்று கடிதங்கள் எழுதும்படி செய்தேன். அந்தப் புத்திசாலிப்பிள்ளை கடிதங்களை எல்லாம் வாங்கி, அவர் தாயாரிடம் கொடுத்தார். அவள் பிரமாதமாய்க் கோபித்து இதிலெல்லாம் ஐபம் சாயாதென்றும், முன் தீர்மானித்தபடி ரூபாய்கள் கொடுத்தாலொழிய சாந்திக்கல்யாணம் செய்யச் சாத்தியப்படாதென்றும், நமது பெண் சாந்திக்கல்யாணம் ஆகுமுன், மாப்பிள்ளைக்குக் கடிதம் எழுதினதற்காக அவர் பிரமாதமாய்க் கோபித்துக் கொண்டாரென்றும் இனிமேல் கடிதம் எழுதினால் நமது பெண்ணை ஒரு கற்புடைய பெண்ணாகப் பாவிக்க மாட்டாரென்றும், அவர் எழுதும்படி சொன்னதாக அவள் எழுதியிருக்கிறாள். ஆகையால் இனி அவ்விஷயத்தில் பிரயத்தனம் செய்வது வியர்த்தமேயாகும்.

ராகவாசாரி: நமது குழந்தை ருக்மிணிக்கு அத்தனை சிறு வயதில் விவாகம் செய்யக்கூடாதென்று வற்புறுத்திச் சொன்ன வார்த்தையைக் கேட்காமல், நாம் ஒரே பிடிவாதமாய்க் கல்யாணஞ் செய்ய ஏற்பாடு செய்ததால் அன்று

கோபித்துக்கொண்டு போன என் தம்பியாகிய வரதாசாரி நல்ல ஸ்திதியில் பினங்கில் இருப்பதை, யாரோ பார்த்த தாய் நேற்று ராமண்ணு சொன்னுன். அதைப் பற்றிச் சரியாய் விசாரிக்கும்படி சொல்லியிருக்கிறேன். அப்படியிருந்து, நான் அவனிடம் போய் உண்மையைச் சொன்னுல் கட்டாயமாய் ஒத்தாசை செய்வான்.

**திருவேங்கடம்மாள்:** 10 வருஷங்களுக்கு முன் சென்றவர் அப்படி உன்னத ஸ்திதியிலிருந்தால் நமக்குக் கடிதம் எழுதியிருக்க மாட்டாரா? இதெல்லாம் புரட்டு. அவர் செத்து இதற்குள் இருந்த இடந் தெரியாமல் புல் முளைத்துப் போயிருக்கும்.

**ராகவாசாரி:** சரி; இனி என்ன செய்வதென்றே எனக்குக் கொஞ்சமாவது தோன்றவில்லை.

**திருவேங்கடம்மாள்:** உமக்குத் தோன்றுமா? எப்படித் தோன்றும்? பிறகு முடிவுதான் என்ன?

**ராகவாசாரி:** என்னதான் என்னுல் செய்யக்கூடும் என்பதை நீயே சொல்லேன்; பார்ப்போம்.

**திருவேங்கடம்மாள்:** நமது குழந்தையை இரண்டு மாத காலம் ஸ்ரீரங்கத்தில் இருக்கும் என் தங்கையிடம் அனுப்புவித்தால் அவள் சாந்திக்கல்யாணம் செய்வதற்கு வேண்டிய ரூபாய்களோடு இரண்டு மாதத்தில் நமது குழந்தையைத் திருப்பி அனுப்புவதாக எழுதியிருக்கிருள்.

**ராகவாசாரி:** என்னடி! புது விநோதமாய்ப் பேசுகிருய். உன் தங்கையின் புருஷனுக்கு ஸ்ரீரங்கம் கோவிலில் மடப்பள்ளி வேலைதானே! அப்படி யிருக்க அவள் எப்படி இப்பெருந்தொகையாகிய ரூபாய் ஆயிரத்து இருநூறு கொடுப்பாள்?

**திருவேங்கடம்மாள்:** அதெல்லாம் உமக்கு என்னத்திற்கு? பெண்களுக்குப் பெண்கள் - எங்கள் சங்கதியில் நீங்கள் தலையிட வேண்டாம். என் தங்கை கொடுப்பேன்

என்றால் கொடுத்தே தீருவாள். அவள் ஆம்படையான் எதிலும் கெட்டிக்காரர்! ஆகையால் யாதொரு தடையும் சொல்லாமல் குழந்தையை அனுப்பும்.

**ராகவாசாரி:** அப்படிக் கொடுக்கும் உன் தங்கை இப்போதே கொடுக்கட்டுமே! நமது குழந்தை போய் இரண்டு மாதம் அவ்விடத்தில் இருந்தால்தான் கொடுப்பேனென்று சொல்வதன் தாத்பரியம் எனக்கு ஒன்றும் தெரியவில்லையே.

**திருவேங்கடம்மாள்:** அதுதான் முன்னமே சொல்லி விட்டேனே! 'நொண நொணவென்று' ஒவ்வொன்றுக்கும் நோண்டி அர்த்தம் கேட்டால் என்னால் சொல்ல முடியாது. ஒன்று நீர் ஏதாவது முடிவு செய்து இந்தச் சித்திரை மாதத்தில் சாந்திக்கல்யாணம் நடத்த ஏற்பாடு செய்யும். அப்படிச் செய்ய உமக்குச் சக்தியில்லையானால் மறு பேச்சுப் பேசாமல் குழந்தையை என் தங்கையிடம் அனுப்பிவிடும். இதில் உமக்கு எது செய்ய இஷ்டமோ அதை நீர் உடனே தெரிவிக்க வேண்டும். இனி ஒரு நிமிஷமாவது தாமதிக்கக் கூடாது. இப்பொழுதே நமது குழந்தையைப் பார்ப்பவர்களெல்லாம் முப்பது வயதுப் பெண்ணைப்போல் அவ்வளவு தாஷ்டிகமாய் வளர்ந்திருந்தும் இன்னும் சாந்திக்கல்யாணம் செய்யாமல் வைத்திருக்கிறார்கள் என்று ஏளனம் செய்கிறார்கள். உமக்கோ ஒன்றும் தோன்றவில்லையென்றும், ஒன்றும் செய்யச் சாத்தியமில்லை என்றும் கொஞ்ச நேரத்திற்குள் பத்துத் தடவை சொல்லிவிட்டீர். இனி உம்மை நம்புவதில் எந்த விதமான உபகாரமும் கிடையாது. ஆகையால் தாமதமன்னியில் என் தங்கையிடம் குழந்தையை அனுப்ப ஏற்பாடு செய்யும். புருஷர்களால் ஆகாத காரியத்தை-பெண்கள்-மனம் மட்டும் வைத்துவிட்டால்-ஒரு நிமிஷத்தில் சாதித்துவிட அவர்களுக்குத் தெரியும்.

இப்படி ஒரே பிடிவாதமாய்ச் சொன்னாள் திருவேங்கடம்

மாள். தமக்கு வேறு வழி ஒன்றும் தோன்றாததால் தம்மனைவி யின் இஷ்டப்படி தம் பெண்ணை அழைத்துப்போய் இரண்டு மாதகாலம் ஸ்ரீரங்கத்தில் இருந்து வரும்படி சொன்னார் ராகவாசாரி. மறுதினமே திருவேங்கடம்மாள் தன் நகைகளில் ஒன்றைக் கொதுவை வைத்து ரயில் செலவுக்குப் பணம் சேகரித்துக்கொண்டு தானும் தன் பெண்ணும் ஸ்ரீரங்கம் போய் மகளை மாத்திரம் தன் தங்கையாகிய ரங்கம்மாளிடம் விட்டுவிட்டு இரண்டு தினங்களில் ஜாடையாகத் தான்மட்டும் திரும்பி வந்துவிட்டாள்.

நமது பெண்களுக்கு இப்போதைவிட அதிகமான சுதந்தரம் கொடுக்க வேண்டுமென்பது தற்கால நாகரிகர்களின் புதுக் கட்சி. நாணத்துடன் தலை குனிந்தவாறு மணப்பந்தலில் காணப்படும் பெண் பிரதமத்தில் மாமியார் முதலிய பெரியோர்களின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருந்து, நாளடையில் சகல அதிகார சுதந்தரங்களையும் படிப்படியாய்க் கைக்கொண்டு, தன் கணவனுக்கு ஒரு கண் மணியாய்-குடும்பத்தின் தலைவியாய்-தாய்க்குப் பின் தாரம் என்னும்படியான உயர்ந்த ஸ்தானத்திற்கு வரத் தொடங்குகிறாள். அப்படி வந்ததற்குப் பிறகு அவளுடைய வார்த்தைப்படிதான் சகலமும் நடக்கும். அப்பால் எது ஒரு விஷயத்துக்குமே அகமுடையான் அவளது ஆலோசனையைக் கேளாமல் யாதொன்றும் செய்யமாட்டான். இவ்வாறு படிப்படியாகச் சுதந்தரத்தை உயர்த்திச் சென்று ஆண்பாலாரைப் பக்குவப்படுத்துவது தொன்றுதொட்டு நடந்து வருகிற வழக்கம். அவ்வழக்கத்தின்படியே இப்பொழுது தலைவி ஸ்தானத்தில் இருக்கும் தமது மனைவியின் வார்த்தைகளுக்கு நமது ராகவாசாரியாரும் இணங்குவதானார். இனி ஸ்ரீரங்கத்தில் விட்டு வந்த ருக்மிணியின் சங்கதி என்னவாயிற்று என்பதைக் கவனிப்போம்.

**ரங்கம்மாள்:** ருக்மிணீ! என்னடி! இன்னும் தாமதித்

துக்கொண் டிருக்கிருய்? நாம் எப்போது காவேரிக்குத் தீர்த்தமாடுவதற்குச் செல்வது? அப்பால் எப்போது பெருமாளைச் சேவிக்கப் போவது? காலதாமதம் செய்யாமல் புறப்படடீ!

**ருக்மிணி:** நான் ராத்திரியே கோவிலுக்கு வரமாட்டேன் என்று சொன்னேனே! ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறீர்கள்?

**ரங்கம்மாள்:** என்னடீ! பெண்ணுய்ப் பிறந்தவள் காலையில் தீர்த்தமாடிவிட்டு ஸ்ரீரங்கநாதனைச் சேவிக்காமல் இருக்கலாமா? அதிலும் பிராமணப் பெண் இப்படி வார்த்தை சொல்லலாமோ?

**ருக்மிணி:** எனக்குப் பக்தி இல்லாமல் இல்லை; இங்கிருந்தபடியே ரங்கநாதரைச் சேவிக்கிறேன்; கோவிலுக்கு வர எனக்கு இஷ்டமில்லை.

**ரங்கம்மாள்:** கோவிலுக்கு வர மாட்டேனென்று இது வரையில் எந்தப் பிராமணப் பெண்ணும், அதிலும் வைஷ்ணவப் பெண்ணொருத்தி சொல்ல நான் இதுவரையில் கேட்டதில்லை; நீதான் இப்படிச் சொல்லுகிருய். இது என்ன அநியாயமோ தெரியவில்லை. இது பட்டணத்து ஆசாரமாக்கும்! நீ இப்படிச் சொல்வதை யாராவது கேட்டாலும் இவள் பிராமணப் பெண் அல்லபோல் இருக்கு என்று நினைத்துக்கொள்வார்கள். ஏண்டி இப்படி முரண்டுகிருய்? ஏன் வரமாட்டேன் என்கிருய்? அதற்குக் காரணமாவது சொல்லித் தொலையேன்; பார்ப்போம்.

**ருக்மிணி:** முந்தாநாள் ராத்திரி கோவிலுக்குப் போனபோது புருஷரும் ஸ்திரீகளும் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து போனதையும் நான் மட்டும் விலகி ஒருவர் மேலும் படாமல் வந்ததில் பலர் பலவிதமாய்ப் பேசியதையும் கேட்டது முதல் இனி கோவிலுக்கே போகக் கூடாதென்று தீர்மானித்துக்கொண்டேன்.

**ரங்கம்மாள்:** என்னடி! ரங்கநாதர் சந்நிதியில் இதையெல்லாம் கவனிக்கலாமோ? பட்டணத்து டிராம் வண்டியிலே எத்தனை ஆண் பெண்கள் கலந்து ஏறிச் செல்லுகிறார்கள்! அவசரத்துக்குத் தோஷமில்லை, ஆபத்துக்குப் பாபமில்லை. ரங்கனுடைய வைபவத்தை நினைத்து, 'ரங்கநாதா, ரங்கநாதா!' என்றுசொல்லிக்கொண்டு நாம் போய்ப் பெருமாளைச் சேவித்துவிட்டு வரவேண்டியதுதானே. மற்ற விஷயங்களையெல்லாம் நாம் ஏன் கவனிக்கவேண்டும்? பாழும் படிப்புப் படித்தால் இப்படி ஒவ்வொன்றையும் உள் நுழைந்து பார்க்கச் சொல்லுகிறதாக்கும். அந்த நாளிலேயே உன்னைப் படிக்க வைக்க வேண்டாமென்றேனே; கேட்காமற் போனாளே! பதில் சொல்லேண்டி?

**ருக்மிணி:** கோவிலுககு வரபபடடவர்களில் பெரும்பான்மையோர் பெருமாளைச் சேவிக்க வேண்டுமென்னும் பக்தி சிரத்தையுடன் வருவதே இல்லைபோல் இருக்கிறது. பலவிதமான கெட்ட எண்ணங்களுடன்தான் வருகிறார்களென்றே கோவிலில் நடந்தேறி வரும் காரியங்களால் நினைக்கிறேன். விசேஷமாய் ஆடவர்களின் கண்கள், அதிலும் அர்ச்சகரின் கண்கள் உத்தமப் பார்வை கொண்டனவாக இருக்கவில்லை. அந்தப் பார்வை என்னை நடுங்கச் செய்கிறது.

**ரங்கம்மாள்:** ஆமாம்! மகாப் பார்வை தெரிந்தவள் தானடி! என் பெண்ணுயிருந்து இப்படிச் சொல்லியிருந்தால் அப்போது தெரியும், நீ படும் பாடு! நானெல்லாம், ஊராரெல்லாம்-கோவிலுக்குப் போகவில்லை யாக்கும்; நாங்களெல்லாம் சம்சாரிகள் அல்லபோல் இருக்கு! நீதான் அதி உத்தமி! பதிவிரதா சிரோமணியாக்கும்! ஒரே வார்த்தை; கோவிலுக்கு வருவாயா மாட்டாயா!

**ருக்மிணி:** அம்மா, மற்றவர்களை நான் தூஷிக்கவில்லை: என் சுபாவமே - நான் எவருக்கும் கோபத்தை உண்டு

பண்ணுபவள் அல்ல; எனக்கு வர இஷ்டமில்லை யென்றால் ஏன் என்னைத் தொந்தரவு செய்ய வேண்டும்?

ரங்கம்மாள்: இப்பேர்ப்பட்ட அகம்பாவம் உன் மனத்தில் குடிகொண்டிருப்பதால்தான் புத்தியறிந்து ஐந்து வருஷ காலமாகியும் இன்னும் சாந்திக்கல்யாணங்கூட நடக்காமல் இருக்கிறது. எள்ளளவாவது பெருமாள் பக்தியிருந்தால்தானே உனக்கு நற்காலம் பிறக்கும். கோவிலுக்குக்கூடப் போகமாட்டேன் என்று பிடிவாதம் செய்பவளுக்கு எப்படி நற்காலம் ஏற்படும்? பூர்வ ஜன்மத்தில் என்ன வினை செய்தாயோ! அதன் பலன்தான் வறுமை இன்னதென்றறியாத உன் பெற்றோர்களுக்கு நீ பெண்ணாய்ப் பிறந்தது முதல் சனியன் பிடித்து, இப்போது சாப்பாட்டிற்குக்கூடத் திண்டாடும்படி ஆகிவிட்டது. நல்லது; நமது ஜாதிப் பெண்களை யெல்லாம் அழைத்து வருகிறேன். அவர்களிடம் உன் நியாயங்களைச் சொல்லு. அவர்கள் கேட்டு ஒப்புக்கொண்டால் எனக்கும் சம்மதமே?

படிப்பு வாசனையே அறியாத மௌடிகப் பெண்களிடம் தர்க்கித்தால் அவர்கள் தங்களை அவதூறாய்ப் பேசினதாக நினைத்து ஆளுக்கு ஓர் அடி அடித்தாலும் அடிப்பார்கள் என்று பயந்து கோவிலுக்கு வருவதாக ருக்மிணி சம்மதித்தாள். காவேரிக்குப் போய்த் தீர்த்தமாடிவிட்டு ஸ்ரீரங்கநாதரைச் சேவித்துவிட்டு இருவருமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அன்று சாயங்காலம் 4 மணி அடித்தவுடனே ரங்கம்மாள் ருக்மிணிக்குத் தலைவாரிக் கட்டி, இரவல் நகைகள் போட்டுக்கொண்டு கோவிலுக்கு வரவேண்டுமென்று சொன்னாள்.

ருக்மிணி: காலையில் தாங்கள் ஒரே பிடிவாதமாய்ச் சொன்னதன் பேரில் கோவிலுக்கு வரச் சம்மதித்தேன். இப்போது தாங்கள் எனக்குத் தலை பின்னி, புஷ்பங்கள் அணிந்து இரவல் நகைகள் போட்டு, அலங்காரங்கள்

செய்துகொண்டு வரச் சொல்வது என் மனத்திற்குச் சற்றும் பிடிக்கவில்லை. தாங்கள் சொன்னபடி ஸ்ரீரங்கநாதரைச் சேவித்து வர வேண்டியது அவசியமென்று வைத்துக் கொண்டாலும் ஸ்ரீரங்கநாதர் பக்திக்காகப் பரமபதம் கொடுக்கிறாரா? அல்லது நாம் செய்துகொள்ளும் அலங்காரத்துக்காகப் பரமபதம் கொடுக்கிறாரா? கேவலம் தேவடியாள்களல்லவா பொதுவாகக் கோவிலுக்குப் போகும்போது பெருமாளைச் சேவிக்க வரும் நூற்றுக்கணக்கான ஆடவர்கள் மயங்கும்படி செய்யும்பொருட்டாகப் பிரத்தியேகமாய் விசேஷித்த அலங்காரங்களைச் செய்துகொள்வார்கள். அந்த அலங்காரத்தில் ஈடுபட்டு ஏமாந்து வரும் ஆடவர்களைத் தட்டிப் பறித்து ஓட்டாண்டியாகச் செய்வதன் நிமித்தம் அவர்களுக்கு அந்த அலங்கார விசேஷங்களெல்லாம் தேவைதான். தனது பதியின் மங்களத்தையும் பகவத் தரிசனத்தையும் அபேக்ஷித்து அவற்றிற்காக மட்டும் கோவிலுக்கு வரும் குல ஸ்திரீகளுக்கு அந்த வீண் அலங்காரங்கள் எதற்காக? பகவான் நமது மனப்பக்குவத்தைக் கவனிக்கிறாரா? இந்த அலங்காரங்களைக் கவனிக்கிறாரா?

**ரங்கம்மாள் :** என்னடீ, அதிகப் பிரசங்கி! இது எதற்கு, அது எதற்கு? இதற்குக் காரணம் என்ன, அதற்குக் காரணம் என்ன? என்று ஒவ்வொன்றுக்கும் காரண காரியங்கள் கேட்டு என் பிராணனை வாட்டுகிறாய். உன் வயதில் எங்களை எங்கள் பெற்றோர்கள் எப்படி நடக்கச் சொல்வார்களோ அப்படி மறு பேச்சுப் பேசாமல் நடந்து வந்தோம். நீ கேட்கும் பல கேள்விகளில் ஒரு கேள்வி கேட்டால் கூட எங்க்ள் பல் முப்பத்திரண்டும் கீழே விழும்படி தவடை மேல் அடிப்பார்கள்! அம்மாடி! இதென்ன? இந்தக் காலத்துப் பெண்கள்! அதிலும் நீ கேட்கிற கேள்விகளோ அபாரமாயிருக்கே! இதற்கெல்லாம் பதில் சொல்ல எங்கள் பெற்றோர்கள் எங்களுக்குக் கற்பித்துக் கொடுக்கவில்லையடி யம்மா

ருக்மிணி : கேட்பதற்கு நியாயம் சொல்லத் தெரியா விட்டால் இந்த மாதிரி பேசி முடிப்பது ஒரு சாமர்த்தியம் போல் இருக்கிறது. நான் இப்படியே வருகிறேன். எனக்கு இருக்கும் அழகே போதும்.

கற்ருேர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்ருேர் அணிகலன் வேண்டாவாம்—முற்றும்
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார்.

நான் அலங்காரங்கள் செய்துகொண்டு அதிலும் இரவல் நகைகள் போட்டுக்கொண்டு சிங்காரங்களோடு கோவிலுக்குப் போகவும் வேண்டாம்; என்னைக் கண்டு பலர், 'ருக்மிணி எவ்வளவு அழகாயிருக்கிருள்!' என்று சொல்லி மெச்சவும் வேண்டாம்.

ரங்கம்மாள் : எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கேட்காதவர்களை எல்லாம் கேட்டுக் கெஞ்சிக் கூத்தாடி நான் நகைகள் வாங்கிக் கொண்டுவந்து, உனக்குப் போட்டு என் கண்ணூரக் கண்டு களிக்க வேண்டுமென்று போட்டுக்கொள்ளச் சொன்ஞல் நீ தலைக்குமேல் ஏறுகிருயே? அட சீ, நீயோ நீ கெட்ட கேடோ! உன்னை அம்மா, அரசே என்ருல் நீ சொன்ன பேச்சுக் கேட்பாயோ? உன்னை எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்லவேண்டும்; இப்படி வந்து உட்காருகிருயா? இல்லையா? வராவிட்டால் தெரியுமா என் சேதி? ஏதோ நல்ல தனமாய்ச் சொல்லும்போதே வந்துவிடு. ரங்கம்மாளுக்குக் கோபம் வந்துவிட்டால் சமுத்திரங்கூடப் பொறுக்காதென்று சொல்லுவார்கள்; ஜாக்கிரதை! இப்போதாவது வந்து உட்கார்ந்து நான் சொல்லுகிறபடி நடந்துகொள்.

'இவள் ஒரு பிசாசைப்போல் இருக்கிருள். இவள் பேச்சைக் கேட்காவிட்டால் ஒருகால் அவமானமடைய நேரிடும் போல் இருக்கிறது. ஆகையால் இவளிடம் இருக்குமளவும்

கூடியவரையில் மரியாதையாக இருந்துவிட்டுத் துரிதமாக ஊர் போய்ச் சேரவேண்டும்' என்று தன் மனத்திற்குள் எண்ணிக்கொண்டு ரங்கம்மாள் சொன்னபடி தலைவாரிப் பின்னிச் சோப்புப் போட்டு முகம் கழுவி இரவல் நகைகளை யெல்லாம் போட்டுக்கொண்டு பச்சைக் கொறநாட்டுப் புடைவை உடுத்துப் பொட்டிட்டுத் தலையில் புஷ்பம் அணிந்து ரங்கம்மாள் கூட ருக்மிணி கோவிலுக்குப் போனாள்.

அவ்வளவு அலங்காரங்கள் செய்திருந்த ருக்மிணியின் முகமானது வருத்தத்தைத்தான் காட்டிற்று. அவள் கும்பலோடு கலக்காமல் தனியாகவே, கும்பல் வந்தபோது விலகிக்கொண்டும், பெண்கள் மேல் விழுந்துகொண்டு போவதையே ஒரு விரதமாகக் கொண்டு கோவிலுக்குப் போகும் ஆடவர்கள் வரும்போது, இன்னும் அதிகமாக விலகிக் கொண்டும் கோவிலுக்குப் போய்ச் சேர்ந்தாள். அங்கே போன பின்கூடப் பெண்கள் கூட்டத்தோடு கலக்காமல் தூரத்தில் ஒரு மூலையில் நின்றுகொண்டு பெருமாளைச் சேவித்து நின்றாளே யொழிய அவ்விடத்தில் வந்து கேலி பண்ணிக்கொண்டும், இன்னும் எழுத ஒண்ணாத அக்கிரமங்களைச் செய்துகொண்டும் இருந்த ஏனைய பெண்களுடன் அவள் கலந்து நிற்கவில்லை. அவள் தூர இருந்ததாலும், தனியாக இருந்ததாலும், அவளுக்குச் சடகோபங்கூடச் சாதிக்கவில்லை! ரங்கம்மாள் கூச்சல் போட்டதன் பேரில் தான் தீர்த்த, திருத்துழாய்ப் பிரசாதங்கள் மட்டும் கிடைத்தன. பொங்கல் முதலிய பிரசாதங்கள் ருக்மிணிக்குக் கொடுக்கப்படவும் இல்லை; அவள் கும்பலில் போய் வாங்கவும் இல்லை. கும்பல் கலைந்த பின் வெளிவருவதாக ருக்மிணி ஒரே பிடியாய்ச் சாதித்துவிட்டதாலும் ருக்மிணி அங்கே நின்றுகொண் டிருப்பதில் ரங்கம்மாளுக்கு அதிருப்தி இல்லை யாதலாலும் வேட்டை நாய்களால் துரத்தப்பட்ட மான் குட்டியானது எப்படிப் பயமடைந்து நிற்குமோ அப்

படியே ருக்மிணியும் நடுங்கிக்கொண்டு நின்றாள். இது நிற்க.

திருச்சிறுப்பள்ளியிலிருக்கும் செயின்ட் ஜோசப் காலேஜில் வாசித்து வரும் பிள்ளைகளுடன் பந்தாடுவதற்காகச் சென்னைச் சட்ட கலாசாலையிலிருந்து வந்த ஒரு கட்சிப் பிள்ளைகள் பந்தாடி ஜயித்துவிட்டுத் திருச்சிறுப்பள்ளி வரையில் வந்தவர்கள் ஸ்ரீரங்கநாதரை வேடிக்கையார்த்தமாய்ப் போய்ப் பார்த்துவிட்டுப் போக வேண்டுமென்று வந்தார்கள். சென்னையிலிருந்து வந்த கட்சியாரின் காப்டன் என்னும் தலைவனும் கூடவே வந்திருந்தான். கோவிலிலுள்ள பற்பல வேடிக்கைகளைக் கண்ணுற்றுக்கொண்டு வரும்போது ருக்மிணி ஒதுங்கி நிற்கும் இடத்திற்கு வந்ததும் சென்னையிலிருந்து பந்தாட வந்த கட்சியாரின் தலைவனை ராஜு என்பவன் ருக்மிணியைக் கண்ணுற்றதும் ஒன்றும் தோன்றாமல் திக்பிரமைகொண்டு நின்றான். கூட வந்தவர்கள் எல்லாம் ரெயிலுக்குப் போக நேரம் ஆயிற்று என்றும் தங்களைச் சரிப்படுத்திக் கொண்டுபோக வேண்டிய தலைவர் ஒரு மாதிரியாய்ச் சித்தப்பிரமை கொண்டவர் போல் நிற்பதால், தாங்கள் உடனே போகாவிட்டால் ரெயில் அகப்படாதென்றும் சொல்லிப் போய்விட்டார்கள். ஆனால் ராஜுவுடன் வந்த ராகவன் என்னும் நண்பன் மட்டும் அப்படிப் போய்விடாமல் ராஜுவைக் கூப்பிட்டுக்கொண்டே நின்றான்.

**ராஜு:** ராகவா, நான் சொல்வதைக் கேள். எனக்கு இன்று மனம் ஒருவாறாக இருக்கிறது. இன்று என்னால் சென்னைக்குப் போக முடியாதென்றே நினைக்கிறேன். ஆகையால் நீ கால தாமதம் செய்யாமல் ஒரு ஜட்கா பிடித்துக் கொண்டு நேராக ஜங்க்ஷனுக்குப் போ.

**ராகவன்:** ராஜு, உனக்கு உடம்புக்கு என்ன செய்கிறது? நீ இங்கே வரும் வரையில் குதூகலமாய் இன்று

நாம் பந்தாடி ஜயித்ததைப்பற்றிப் பேசிக்கொண்டு வந்தவன் மோகினி பிடித்தவன்போல் மௌனஞ் சாதித்துக்கொண்டு ஊருக்கும் வரமாட்டேன் என்கிறாய்; வெளியிலும் வரமாட்டேன் என்கிறாய்; ஏன்? நமது வகுப்பில் உள்ளவர்களெல்லாம் எங்கேயாவது போனால் அங்கும் இங்கும் பார்ப்பது வழக்கம். ஆனால் நீயோ 'மாத்ருவத் பரதாரேஷு, பரத்ரவ்யேஷு லோஷ்டவது, ஆத்மவத் சர்வபூதேஷு, யத்வஸ்த்திதி சபண்டிதஹா' என்னும் சுலோகத்திற்கு இணங்கப் பர மாதரையெல்லாம் உன் தாயாருக்குச் சமானமாகவும், அன்னியருடைய சொத்தைக் கல்லுக்குச் சமானமாகவும் எண்ணி, உன்னைப் போலவே மற்றவர்களையும் நடத்தி வருபவனாதலால் உன்னைப்பற்றி எந்தவிதமான கெட்ட எண்ணமும் நினைக்க மார்க்கமில்லை. இப்படி நிற்பது நீயல்லாது வேறு ஒருவனாக இருந்தால் இவ்விடத்திலுள்ள எந்தப் பெண்ணாவது உன் மனத்தைக் கவர்ந்துவிட்டாளென்று சந்தேகிக்க இடம் நேரும். ஆனால் உன் விஷயத்தில் அப்பேர்ப்பட்ட சந்தேகம் ஏற்படவில்லை. ஆகையால் நீ உண்மையைச் சொன்னால் ஒழிய நான் போகவே மாட்டேன்.

**ராஜ:** ராகவா, இங்கே வரும் வரையில் புத்தி சுவாதீனத்தோடு இருந்ததும் இங்கே வந்த பின் என் புத்தி பிரமை அடைந்திருப்பதும் உண்மையே. உனக்குச் சரியான காரணம் சொல்ல என்னால் கூடவில்லை. இங்கிருக்கும் ஒரு வஸ்து என் மனத்தைக் கவர்ந்துவிட்டது. ஆகையால் என் சித்தப்பிரமை தீரும் வரையில் என்னால் இங்கிருந்து அடியெடுத்து வைக்கச் சாத்தியப்படாது. உனக்கோ ரெயிலுக்கு நாழிகை யாகிவிட்டது. நீ இனி தாமதித்தால் ரெயில் போய்விடும். நாளைக்கு முக்கியமாகிய பரீட்சை நாள். ஆதலால் நீ தாமதிக்காதே. உடனே புறப்படு.

**ராகவன்:** எனக்கு மாத்திரம் பரீட்சை; உனக்குப் பரீட்சை இல்லையோ? உனக்கு ஆனது எனக்கும் ஆகட்டும்.

இந்த ராஜதானியிலேயே நீதான் முதலில் தேறுவாய் என்று பிரின்சிபால் துரையவர்கள் சொல்லுகிறார்கள். அப்பேர்ப்பட்ட நீயே நிற்கும்போது எனக்கென்ன?

**ராஜா:** ராகவா, நீ நினைப்பது சரியல்ல, நானோ தனவந்தன்; நீயோ ஏழை; இவ்வருஷம் இல்லாவிட்டால் அடுத்த வருஷம் நான் பரீட்சைக்குப் போவேன். உன்னால் அம்மாதிரி செய்யச் சாத்தியப்படாது. ஆகையால் நீ பயணத்திற்குத் துரிதப்படு.

**ராகவன்:** நீ என்ன காரணமாய் நிற்கிறாய்? அதை யாவது சொல், நான் போகிறேன். சாதாரணமாய்ப் பெரிய க்ஷேத்திரங்களுக்குப் பக்தர்கள் போனால் அந்த க்ஷேத்திரத்திலுள்ள மூர்த்தி தன் பக்தனுக்கு மட்டும் பிரசன்னமாகி அவனை அப்படியும் இப்படியும் அசைய வொட்டாமல் வசீகரப்படுத்துவது வழக்கமென்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஸ்ரீரங்கநாதர் உனக்கு மட்டும் காட்சி கொடுத்து அப்படி வசீகரப்படுத்திவிட்டாரா என்ன?

**ராஜா:** நீ நினைக்கிறபடி ஒன்றும் இல்லை; ஆனால் இவ்விடத்திலுள்ள வேறொரு வஸ்து என் மனத்தைக் கவர்ந்துவிட்டது.

**ராகவன்:** ராஜா, என்ன இப்படி நம்பக்கூடாத விதமாய் வார்த்தை சொல்லுகிறாயே! நீயோ ஸ்திரீகளைக் கண்ட மாத்திரத்தில் ஆலகால விஷத்தைக் கண்டவன்போல் நடுங்கப்பட்டவன். அவர்களிடம், உயர்வான எண்ணங்கள் வைத்துக் கௌரவமான மார்க்கத்தில் நிற்பவன். அப்படியிருக்க, 'இங்குள்ள ஒரு வஸ்து என் மனத்தைக் கவர்ந்துவிட்டது' என்று நீ சொல்லுவதை நான் எப்படி நம்பக்கூடும்? மேலும் அப்படி உன் மனத்தைக் கவரக்கூடிய அவ்வளவு அபார அழகுள்ள பெண்ணை இங்கே காண...... ......வில்லையே என்று முடிக்குமுன் அங்கும் இங்கும்

சுற்றிப் பார்க்கவே ஒரு மூலையில் சந்திரோதயமானது போன்ற லாவண்ய சோபிதத்துடன் நின்றுகொண் டிருந்த ருக்மிணியைக் கண்டுவிட்டான்; அத்துடன் அவ் வாக்கியத்தைப் பூர்த்தி செய்யவில்லை; சற்று நேரம் பொறுத்து,

ராகவன்: அதோ நிற்கும் பெண் அழகுள்ளவள்தான் என்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இருந்தாலும் அவளைக் கண்டால் குல ஸ்திரீயைப்போல் தோன்றுகிறது. என்னதான் குல ஸ்திரீகள் வேசியரைப்போல் பகட்டான ஆபரணாதிகளும் பட்டுப் பட்டாவளிகளுமாய்ப் பரிமளங்களோடு (செண்ட்) துலங்கினாலும் அவர்களது நாணிய பார்வையும் கூசும் உள்ளமும் கற்பு லக்ஷண வதனமும் நடையழகும் அவளை இன்னார் என்று தெரிவித்துவிடும். அவ்விதமே நஞ்சினும் கொடிய காமுக வேசியர் அன்றுதான் பூத்த மலர்போல் தம் மேனி மினுக்கி அடக்க ஒடுக்கம் பாராட்டிக் கற்புடைய மடவார்போல் நடிப்பினும் அவர்களது அகத்தழகு முகத்தில் தெரிந்துபோம். ஆகையால் இலவு காத்த கிளியைப்போல் நீ இங்கே நின்றுகொண்டு பெருமூச்சு விடுவதில் யாது பயன்? உன் பெருந்தன்மை எங்கே? உன் கௌரவமான மனோதர்மம் எங்கே? சீச்சீ! நீயா இப்படியெல்லாம் நினைப்பது! ஏதோ சற்று அழகான பெண்ணைப் பார்த்த மாத்திரத்தில் உன் புத்தி சஞ்சலம் அடைந்ததுபோல் இருக்கிறது. நீ சஞ்சலமடைவதாக நானே நேரில் பார்க்காமல் ஹரிஹரப் பிரம்மாதிகள் வந்து சொன்னாலும் நான் நம்பவே மாட்டேன். இப்போதுகூட உண்மையாக நீ இப்படிப் பிரமித்து நிற்கிறாயென்று நான் நம்பவில்லை. நான் என்ன சொல்லுகிறேன் என்று பார்ப்பதற்காகவே இப்படி நிற்கிறாய்போல் இருக்கிறது. ரெயிலுக்கு நாழிகை யாகிறது; வா, போவோம்.

இப்படிச் சொன்ன ராகவன் ராஜூவின் கையைப் பிடித்து இழுத்தான். ஆனால் ராஜூவோ தான் நின்ற

இடத்திலிருந்து ஓர் அடி கூட எடுத்து வைக்காமல் நின்று கொண்டு பின் வருமாறு சொன்னான்.

ராஜு: ராகவா, இதுவரையில் பெண்கள் என்றால் விஷமென்று நினைத்திருந்த என் மனத்தை மாற்றுவதற்காகவே பாழும் பிரம்மன் அந்த ரமணீ மணியைச் சிருஷ்டித்தான்போல் இருக்கிறது. ஐயோ! இதுவரையில் பாழும் மன்மதனுடைய புஷ்ப பாணங்களால் அடிபடாத என் தேகமானது திடீரென்று இன்று அப் பாணங்களின் சரமாரியை எப்படிப் பொறுக்கும்? நண்பா! இப்பேர்ப்பட்ட தீய எண்ணங்கள் என் மனத்தில் உதிப்பது சரியல்ல என்றும், பதிவிரதா சிரோமணியாகிய அம்மாதைப்பற்றி நான் நினைப்பதுவும் பாவம் என்றும் நன்றாய்த் தெரிந்தபோதிலும், அவளைக் கண்ணுற்ற மாத்திரத்தில் இந்த நல்லெண்ணங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிவிடுகின்றனவே! என் செய்வேன். அவளைப் பார்த்தால் குல மாதாகத் தோற்றுகின்றாள். அவளோடு இருந்து என் காதல் தாகம் தணியாவிட்டால் என் பிராணன் நிற்காதுபோல் இருக்கிறது. என் உடல் பொருள் ஆவி மூன்றையும் இம் மனோன்மணியின் ஒரு தினத்திய ரமிப்புக்குத் தத்தம் செய்ய இதோ நான் தயார். ஆகா! என்ன நடை? சின்ன இடை! பின்னல் ஜடை! எத்துணை ரமணீய காந்தி! காதல் என்பது தெய்விக நிகழ்ச்சியோ? ஆகா! என்னவென்று இயம்புவேன்! என் செய்வேன்; உனக்கோ ரெயிலுக்கு நாழியாய்விட்டது; நானோ வரப்போவதில்லை; ஆகையால் நீ உடனே போ.

ராகவன்: ராஜு! உன் பரிதாபமான நிலையில் நான் எப்படிச் செல்வேன். இன்றைத்தினம் நான் போகவில்லை; உன் புத்தி ஏதோ சற்றுச் சிதறிப்போயிருக்கிறது. ஆகையால் உனக்கு நற்புத்தி புகட்டுவதற்காகவே நான் இருக்க வேண்டியது அவசியம்.

ராஜூ: அடே ராகவா! நீயா எனக்கு நற்புத்தி புகட்டப் போகிறாய்? போதும், போதும், சீச்சீ வாயை மூடு! இந்த ரங்கநாதர் சாட்சியாகச் சொல்லுகிறேன். என்ன நேரிட்ட போதிலும் சரிதான். இப்பெண்கள் சிரோமணியைக் கட்டாயப் பிரயத்தனத்தாலாவது சுகித்து ஆசை தீருவேனே அல்லாது ஒருபோதும் விடேன். முடியாவிட்டால் கொள்ளிடத்தில் விழுந்து சாவேனே யொழியச் சென்னை திரும்பவே மாட்டேன். இது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

இனி அந்தச் சமயத்தில் நற்புத்தி புகட்டப் பிரயாசைப் படுவதில் சுகிர்தமில்லையென்றும், அவன் மனப் போக்கின் படியே பேசித் திருப்புவதுதான் உசிதமென்றும் அப்படித் திருப்பாவிட்டாலும் தன் நண்பனுக்கு யாதொரு தீங்கும் நேரிடாதபடி தான் கூட இருந்து வேண்டிய காரியாதிகளை முடிக்க வேண்டுமென்றும், தன் நண்பன் மோகாந்தகாரனாக இருப்பதால் சுய புத்தி இருக்காதென்றும் ஆகையால் அச் சமயத்தில் தனியாய் விட்டுப் போவது உசிதமல்லவென்றும் தீர்மானித்து ராகவன் கூடவே இருந்தான். ராஜூ போகும்படி சொன்னதற்குத் தான் அன்று போகவில்லை யென்று மட்டும் சொல்லிவிட்டான்.

இதற்குள்ளாக கூட்டம் கலைந்துவிட்டதால் ருக்மிணியும் ரங்கம்மாளும் வீட்டிற்குப் போகப் புறப்பட்டார்கள். பின்னால் சற்றுத் தூரத்தில் ராஜூவும் ராகவனும் அவர்களைப் பின்தொடர்ந்து அவர்கள் எங்கே போகிறார்களென்று கவனித்துச் சென்றார்கள். ருக்மிணி தன் வீட்டை அடைந்ததும் அவர்கள் அந்த வீட்டைக் குறிப்பாகப் பார்த்துக்கொண்டு திரும்பி, ஸ்ரீரங்கத்திலேயே மேல் அடையவளஞ்சான் வீதியில் 617-வது இலக்கமுள்ள, தமக்கு அறிமுகமான 'ஸ்ரீரங்கநிலையம்' என்ற பெயருள்ள கட்டடத்தில் போய் ஜாகை வைத்துக்கொண்டார்கள். அங்குள்ள பிர

ஜாநுகூலன் பத்திராதிபர், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுத்தார். இடம் முதலியன சொகு சாக அமைந்துபோன போதிலும் ராஜு தனது மோகாந்த காரத்தாலும் ராகவன் தனது நண்பனைப்பற்றிய பெருங் கவலையாலும் அன்றிரவு தூங்கவே இல்லை. ராக்காலத் தில் இப்பேர்ப்பட்ட காரணத்தால் நித்திராபங்கம் நேர்வது எல்லோருக்கும் உள்ள அநுபவந்தானே! ராஜுவுக்கு இப் போதுதான் இது ஆரம்பம் போலும். ராஜு கூடிய வரையில் தூங்குவதற்குப் பிரயாசைப்பட்டும் தூக்கம் பிடிக்கவே இல்லை. பின்னால் எழுதி யிருக்கும் எண்ணங்க ளெல்லாம் அவன் மனத்தில் உதித்துக்கொண்டே இருந்தன:

'என்ன ஆச்சரியம் இது! இதுவரையில் ஸ்திரீகளைக் கண்டால் தேவதாஸ்வரூபம் போன்று பாவித்து வணங்கி வந்த எனக்கு இன்றுமட்டும் அந்த மாதரசியை, பெண் களின் சிரோமணியை, ரமணீரத்தினத்தைக், கண்டது முதல் என் மனம் அடைந்த மாற்றமும் அது ஓர் நிலையில் நிற்காமல் தத்தளிக்கும் தடுமாற்றமும் எனக்கே பெரிதும் வியப்பாகின்றது. அப் பெண்மணி இன்னாளென்றுகூடத் தெரியவில்லை. அவள் எந்தப் பாக்கியவானின் பத்தினியோ? அவளைப் பார்த்தால் மகா பதிவிரதா சிரோமணியைப் போலவே தோற்றுகிறது. நான் அவ்வளவு நேரம் கோயி லில் நின்றுகொண்டு அவளைப் பார்த்துக்கொண் டிருந்தும் அவள் என்னையாவது வேறு எவரையாவது கண்ணெடுத் துக்கூடப் பார்க்கவில்லையே! நின்ற இடத்தை விட்டு அப் படி இப்படி அசையாமல் தங்கப் பதுமையைப்போல் பூமி யைப் பார்த்தபடியே நின்றாளே தவிர அக்கம் பக்கத்தில் என்ன நடக்கிறது என்றுகூடக் கவனிக்கவில்லையே! பக்கத் தில் நின்ற பெண்களெல்லாம் பேசவும், விளையாட வும் சிரிக்கவும் புருஷரைக் கண்டவுடனே கேலி செய்

யவுமாக இருக்க அந்த உத்தமி மட்டும் தலைகுனிந்த படி நிற்பானேன்! அவளது வதனத்தில் ஏதோ மனவேதனையின் குறிகளும் தென்பட்டன. மேகங்களி னிடையே தனது ஒளியிழந்து மறைந்த சந்திரனைப் போல் அவள் தோன்றினாள். அந்த நிலையிலேயே அவளது ரூபம் எனக்கு அத்தியந்த பரவசத்திற்கு இடம் தந்தது என்றால் இனி சரசமாகப் பேசிச் சிரித்து விளையாடிக் களிக்கும்போது புன்னகை தவழும் அவளது வதன காந்தி எத்துணை உந்நதமாக ஒளி வீசி நிற்குமோ! ஆ! அந்தப் பாக்கியமும் எனக்கு லபிக்குமோ?

'அந்நங்கை, இவ்வுலக மாதர்களில் ஒருத்திதானோ, யாதோ! சிச்சீ, அவள் இவ்வுலக மாதே அல்ல; அவள் தேவலோகத்து மாதோ, அல்லது கந்தர்வ ஸ்திரீயோ அறியேன்! என்ன அழகு! என்ன கம்பீரம்! என்ன நடை! என்ன சொகுசு! அவள் அழகைப்பற்றி வர்ணிக்க வேண்டு மானால் ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனாலும் முடியாதென்றால் என்னால் ஆகுமோ? அவளைத் தர்ம பத்தினியாக அடையும் பாக்கியம் எந்தப் புண்ணியவா னுடையதோ? இந்த ஜன்மத்தில் நான் அவளுடன் ரமிக் கும் பாக்கியம் அடைவேனோ என்னவோ? அறிவு மயங்கு கின்றது. ஏதுமே தெரிகிலேன். இப் பிறப்பில் அப் பாக்கியம் எனக்குக் கிடைக்காவிடில் இந்தப் பிராணன் இருந்து என்ன பயன்? அம் மாதரசியை எவ்வாறு அணுகு வது? அவள் எதிரில் இருக்கும் வரையிலாவது அவளைப் பார்த்துப் பார்த்து என் மனமானது ஒருவாறு திருப்தி யடைந்திருந்தது. அவளைப் பிரிந்த நிமிஷத்திலேயே மேகங்களால் மூடப்பட்ட கார்த்திகை மாதத்து அமாவாசை இருட்டில் அகப்பட்டுத் தத்தளிப்பதைப்போல் என் மனமானது தவிக்கிறதே! என் செய்வேன். என்ன வந்தா லும் வரட்டும். இந்த நிமிஷத்திலேயே போய் அவள்

வீட்டின் கதவைத் தட்டி கதவைத் திறந்ததும் உள்ளே பிரவேசித்து துரக்கிருதமாய் என் மனோபீஷ்டத்தை நிறைவேற்றி விடலாமா? சீச்சீ, ஒருகால் அவள் புருஷனாவது வேறு யாராவது இருந்து இங்கே ஏன் வந்தாயென்று னையப் புடைத்தால் என்செய்வது? அடிபடுவதற்கு நான் பயப்படவில்லை. அடித்தாலும் அடிக்கட்டும்; அதைப்பற்றி அக்கறையில்லை; அப்பால் ஜாக்கிரதைப்பட்டு என் மனோபீஷ்டம் நிறைவேறாதபடி செய்துவிடுவார்களே! ஆகையால் சாம பேத தான தண்டம் என்னும் சதுர்வித உபாயங்களால்தான் சாதிக்கவேண்டும். இந்த மூன்று வழிகளிலும என் எண்ணம் நிறைவேறாவிட்டால் கடைசியில்தான் நான்காவது உபாயமாகிய தண்டம் உபயோகப்படுத்த வேண்டும்.

'சீ, சீ, சீ! இந்த எண்ணங்களை யெல்லாம் நினைப்பவன் நானா? உலகத்தோரெல்லாம், "அவனைப்போல் உத்தம சிரேஷ்டன் கிடையாது" என்று நினைக்கும் ராஜுவின் மனத்திலா இப்பேர்ப்பட்ட கெட்ட எண்ணங்கள் உதிக்கின்றன. "மாத்ருவத் பரதாரேஷு" என்று நீதி சாஸ்திரத்தில் நான் படிக்கவில்லையா? எனது மனத்தில் இந்தக் கெட்ட எண்ணங்கள் நிலைக்கக் கொஞ்சமாவது இடம் தரக்கூடாது. கொஞ்சம் இடம் விட்டால் நம்மைக் கட்டாயமாய் ஏமாற்றி விடும். இப்போதே ஜாக்கிரதைப் படாவிட்டால் நமது நல்ல பேருக்கு ஹானி வந்துவிடும். ஆஹா! அவளைப் போல் அழகான ஸ்திரீயை நான் இதுவரையில் எங்கேயாவது பார்த்ததுண்டா? இல்லேவே இல்லை. அவளை அடையும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கும். அவள் என் கண்முன் பட்டதே நான் செய்த தவப்பேற்றால்தான். அவ்வளவு தவசிரேஷ்டரென்றும் ராஜ ரிஷியென்றும் பேர் வாங்கிய விசுவாமித்திரரே மேனகையைக் கண்டதும் தமது தவ நிலைமையை விட்டுப் பிசகினாரென்றால் நான் பிசகு

வது தவறுகுமோ? அது சரியாகவே இருக்கட்டும், தவறு கவே இருக்கட்டும்; என்றால் இனி இந்தத் தாபம் சகிக்க முடியவே முடியாது.'

என்று இவ்வாறாக இரவெல்லாம் நல்ல எண்ணங்களும் கெட்ட எண்ணங்களும் மாறி மாறி வர, சாதாரணமாய்க் கெட்ட எண்ணங்களே பெரும்பான்மையோரிடம் ஜயமடை வதுபோல் நமது ராஜுவின் மனத்தையும் வசமாக்கி விட்டன. உடனே தன் நண்பனை அழைத்து இவ்விஷயத் தில் அநுகூலம் அடைவதற்கு எவ்வாறு வேலை செய்யலா மென்று யோசிக்கலானான். இருவரும் அது வரையில் இப்பேர்ப்பட்ட தீய வழிகளில் பிரவேசித்தவர்கள் அல்ல வாதலால் ஒருவர் ஒரு மாதிரி சொல்வது; மற்றவர் அதில் நேரிடக்கூடிய இடையூறுகளைச் சொல்வது; அப்பால் மற்றவர் ஒரு மாதிரி சொல்வது; அதில் வரக்கூடிய கஷ்டங் களை முதலில் சொன்னவர் சொல்வது ஆக இப்படியே யோசித்து யோசித்து யாதொருவிதமான தீர்மானத் திற்கும் வருமுன் சூரியோதயம் ஆகிவிட்டது. அவர் கள் விசனத்தைத் தீர்ப்பதற்காகவே சனீசுவரன் பிராம்மண உருக்கொண்டு வந்ததைப்போல் கறுத்த தேகமும் துவாதச நாமமும் போட்ட கோபண்ணா என்பவர் அவர்கள் இருக்கும் ஜாகைக்கு வந்து தமது இடது கையால் ஆசீர்வாதம் செய்து விட்டு, 'ரங்கநாதா!' என்று சொல்லி யாரும் உட்காரச் சொல்லுமுன் தாம் மேல்போட்டிருந்த ஒரு சிறு துவாலை விரித்து அதன் மேல் சௌக்கியமாய் உட் கார்ந்தார்.

**ராகவன்:** ஸ்வாமி! தங்களுக்கு எந்த ஊர்? தாங்கள் என்ன ஜோலியாய் இங்கே வந்தீர்கள்?

**கோபண்ணா:** நான் எங்கு எங்கு இருக்கிறேனோ அதெல் லாம் என் ஊர்தான். தற்காலம் என் ஊர் ஸ்ரீரங்கந்தான். எனக்கு உபாயமாய் ஆரூடம், ஜோஸ்யம் முதலியன தெரி

யும். காலையில் எழுந்து தங்களைப்போல் ஒத்த கனவான்களிடம் சென்று தெரிந்த வரையில் ஆரூடமாவது ஜோஸ்யமாவது பார்த்துச் சொன்னால் அவாளவாள் கொடுத்ததைக் கொண்டு உபாய ஜீவனம் செய்துகொண்டு ரங்கநாதனைச் சேவித்துக்கொண்டு வருகிறேன். நாளது வரையில் ரங்கநாதன் எனக்கு யாதொரு குறையும் வைக்கவில்லை. இனி மேலும் குறைவு வரும்படி பார்க்கமாட்டார்.

**ராகவன்:** சுவாமி! நாங்களெல்லாம் வானசாஸ்திரம் முதலியவை நன்றாய் வாசித்தவர்கள்; ஆகையால் எங்களிடம் உமது ஜபம் சாயாது. அவிவேகரிடம் போய் உமது மூட்டையை அவிழ்த்தால் அவர்கள் ஏமாறுவார்கள்.

**கோபண்ணு:** தாங்கள் ஏதோ வானசாஸ்திரம் என்று ஒன்று படித்துவிட்டதால் கிரகங்கள் மாறுகிறதென்றும், கிரகணமென்பது புரட்டு என்றும், கிரகங்களின் பாதை மனிதர்களுக்குக் கிடையாதென்றும், கிரகங்களைக் கொண்டு ஒன்றும் சொல்ல முடியாதென்றும் நினைத்துக்கொண்டு அச்சாஸ்திர விற்பன்னரை யெல்லாம் மூடரென்றும் புரட்டர்களென்றும் நிச்சயித்துவிடுகிறீர்கள். எங்களால் கணிக்கப்பட்ட பஞ்சாங்கங்களின்படி அந்த அந்தக் காலங்களில் கிரகணங்கள் தோன்றுதல் முதலியன நடந்தேறவில்லையா? தக்க தனவந்தர்கள் இருந்து பூர்விக சாஸ்திரங்களை ஆதரித்தாலன்றோ அவை செழிக்கும்; எதுவும் ஆராய்ந்து பார்த்தால்தான் உண்மையென்றும் அல்லவென்றும் புலப்படும். இப்போதுதான் என்ன? நீங்கள் எனக்குப் பணம், காசு ஒன்றும் கொடுக்க வேண்டாம். ஏதோ உங்கள் மனதில் தோன்றினதை நினைத்துக்கொண்டு என்னை ஆரூடம் கேளுங்கள். நான் சரிவரச் சொன்னால் ஏதோ கிஞ்சித்து இனும் கொடுங்கள். இல்லாவிட்டால் என்னைச் சும்மா அனுப்பி விடுங்கள்.

**ராஜு:** ஸ்வாமி! ஏதோ பிரமாதமாய்ப் பேசுகிறீரே!

இப்போது என் மனத்தில் என்ன நினைக்கிறேனென்று உம்மால் சொல்ல முடியுமா?

கோபண்ணு: ஐயா! நான் என்ன ஈசுவரனு? உமது மனத்தில் நினைத்திருப்பதைச் சொல்ல? அது முடியாது. ஆனல் ஏதாவது ஓர் எண்ணைச் சொன்னுல் அதைக் கொண்டு கணித்து லக்கினம் கண்டுபிடித்து, லக்கினத்தையும் மற்றக் கிரக அமைப்பையும் கவனித்து இன்ன காரியமாக இருக்குமென்றும், முடியும் முடியாதென்றும் சொல்லக் கூடும்.

ராஜா: அவ்வளவாவது சரிவரச் சொல்லக்கூடுமென்று நான் நினைக்கவில்லை.

கோபண்ணு: தாங்கள் பரீட்சிக்குமுன் அப்படித் தீர்மானித்து விடுவது சரியல்ல. ஏதோ சொல்லுங்கள், ரங்கநாதர் விட்டவழி விடட்டும்.

ராஜா: என்ன சொல்லச் சொல்லுகிறீர்? இன்னது நினைத்திருக்கிறேன், முடியுமா முடியாதா என்று கேட்கச் சொல்லுகிறீரா? இரண்டில் ஒன்று சொல்வதற்கு ஆருடமாவது ஜோஸ்யமாவது பார்க்கவேண்டிய அவசியமில்லையே!

கோபண்ணு: நான் உங்களைச் சமாசாரம் சொல்லச் சொல்லவில்லை; ஏதாவது ஓர் எண் 120-க்குக் குறைவாய்ச் சொல்லுங்கள், பார்ப்போம்.

ராஜா: எண்பத்தாறு.

கோபண்ணு: 12 ராசிக்கு 120-ஐ வகுத்தால் ராசி ஒன்றுக்கு 10 லக்கம் வருகிறது. ராசிக்கு 10வீதம் 86-ஐ 10-ஆல் வகுத்தால் விடை 8 ஆகிறது. ஆகவே 8வது ராசி முடிந்து 9-வது ராசி, அதாவது தனுர் லக்னம். லக்கினத்திற்கு 7-வது இடத்திலிருக்கிற சந்திரனும் புதனும் லக்கினத்தைப் பார்ப்பதால் கட்டாயமாய் ஸ்திரீ சங்கையென்று சொல்ல வேண்டும்.

9-வது வீட்டுக்குடைய குரு மேஷத்திலிருந்து தன் வீடாகிய லக்கினத்தைப் பார்க்கிறார். தனாதிபதி சனியும் பார்க்கிறார். சப்தம ராஜ்யாதிபதியாகிய புதனும் பார்க்கிறார். லாபாதிபதியாகிய சுக்கிரன் லக்கினத்திற்கு அஷ்டமத்திலிருந்த போதிலும் லாபஸ்தானத்திற்கு 10-ம் இடமாகிய ராஜ்யஸ்தானத்திலிருப்பதால் காரியசித்தி யாகும். விரையாதிபதியாகிய, அங்காரகன் விரையஸ்தானத்திற்குக் காரியஸ்தானத்தி லிருப்பதாலும் தனாதிபதியாகிய சனி லக்னத்தைப் பார்ப்பதாலும் காரிய சாதக விரையம் ஏற்படும். அதை வீண் விரையமென்று சொல்லக்கூடாது. ஆகவே லக்கினங்கள், ராசிகள் முதலியவைகளை விட்டுக் காரியத்தை மட்டும் சொன்னால் தாங்கள் கேட்பது ஒரு ஸ்திரீயைப் பற்றிய சங்கையென்றும் தங்கள் மனோபீஷ்டம் கட்டாயமாய் நிறைவேறுமென்றும், ஆனால் ஷை காரிய சாதன விஷயத்தில் பொருட்செலவுமட்டும் ஆகுமென்றும் தோன்றுகிறது. நான் சொன்னது சரியோ அல்லவோ உங்கள் மனத்திற்குத்தான் தெரியும்.

**ராஜு:** ஸ்வாமி, நான் மனத்தில் நினைத்ததைத் தாங்கள் சரிவரச் சொல்லிவிட்டதாலும் காரியசித்தி கட்டாயமாய் ஆகுமென்று சொன்னதாலும் இதோ இந்த 10—ரூபாய் நோட்டைப் பெற்றுக்கொள்ளுங்கள். தாங்கள் சொன்னபடி காரிய சாதகமானால் தங்களுக்கு இன்னும் 15-ரூபாய் இனாம் அளிக்கிறேன்.

**கோபண்ணா:** இன்று காலையில் வீட்டைவிட்டுக் காவேரிக் கரைக்குப் புறப்படும்போதே கருடன் வட்டமிட்டது. ஸ்நானம் செய்து சந்நிதிக்குப் புறப்படும்போது 2-வது தரம் வட்டமிட்டது. ரங்கநாதரைச் சேவித்துக் கொண்டு வெளிப் புறப்படும்போது மூன்றாவது தரம் வட்டமிட்டது. ஆகையால் இன்று சுதினமென்றே நம்பி வந்தேன். தங்களுக்குச் சொன்ன ஆருடம் சரியான

தென்று தெரிகிறது. தாங்களோ இந்த ஊருக்குப் புதிதாகக் காண்கிறது. வந்த சங்கையோ ஸ்திரீ சங்கையாக முடிந்தது. தங்கள் இருவரையும் பார்த்தால் இப்பேர்ப்பட்ட காரியாதிகளில் அநுபோகம் இல்லாதவர்களைப்போல் தோன்றுகிறது. பொதுவாக இம்மாதிரி சங்கதிகளை நடத்துவதில் என்னைப்போல் ஒத்த கிழடுகளின் மூலமாய்க் காரியங்கள் நடத்தினால்தான் குணம். திருஷ்டாந்தமாக ஒரு யௌவன சுந்தரியிடம் நான் போய் வார்த்தையாடினால் அவளும் சங்கோஜமின்றிப் பேசுவாள். பார்க்கப்பட்டவர்களும் வித்தியாசம் நினைக்கமாட்டார்கள். தங்களைப்போல் ஒத்த விட புருஷர் போய்ப் பேசினால் பெண்ணும் பேசக் கூச்சப்படுவாள். அவளைச் சேர்ந்தவர்களும் தடியெடுத்துக் கொண்டு அடிக்க வருவார்கள். ஆகையால் தங்களுக்கு ஆகவேண்டிய விஷயம் இன்னதென்று தெரிவித்தால் என்னால் ஒத்தாசை செய்யக் கூடுமானால் உங்கள் நற்குணத்திற்காக வஞ்சனை யன்னியில் ஸ்ரீரங்கநாதர் சாட்சியாகப் பாடுபடுகிறேன். காரிய சாதகமானால் தாங்கள் இஷ்டப்பட்டதைக் கொடுங்கள்.

இப்படிச் சொன்ன கோபண்ணவை அங்கே சற்று உட்கார்ந்திருக்கச் சொல்லிவிட்டு ராஜுவும் ராகவனும் உள்ளேபோய்க் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததென்றும் தேடப்போன மூலிகை காலில் சுற்றிக்கொண்டதென்றும், ஸ்ரீரங்கநாதரே தங்களுக்கு ஒத்தாசை செய்யக் கோபண்ண ரூபமாய் வந்தாரென்றும் அவர் மூலமாய்க் காரியங்களை நடத்துவதுதான் சிலாக்கியமென்றும் தீர்மானித்து அவரிடம் உண்மையைக் கூறினார்கள். அப்பெண்ணைக் காட்டினால் மற்ற விஷயங்களை ஆண்டு அறிந்து வருவதாய்ச் சொன்னதால் கோபண்ணவை அழைத்துப் போய் அப்பெண்ணின் வீட்டைக் காட்டிக் கூடிய ஜல்தியில் சகலமும் விசாரித்து வரும்படி சொல்லிவிட்டு ராஜுவும்

ராகவனும் தாங்கள் இறங்கி இருக்கும் ஜாகைக்குப் போய்க் கோபண்ணுவின் வரவை எதிர்பார்த் திருந்தார்கள். அவர்கள் மறையும் வரையில் கோபண்ணு பக்கத்து வீடுகளில் விசாரிப்பதுபோல் நின்றுவிட்டு அவர்கள் போனவுடன் தாராளமாய் உள்ளே சென்றுர்.

கோபண்ணு உள்ளே சென்றதும் ரங்கம்மாள் அவருக்கு நல்வரவு கூறி ஆசனம் அளித்து உட்காரச் சொல்லிப் போன காரியம் காயா பழமா என்று கேட்டாள்.

**கோபண்ணு:** கோபண்ணு போன காரியம் எப்போதாவது காயாவதுண்டா? பழந்தான்.

**ரங்கம்மாள்:** தொகை சொன்னீரா? ஒத்துக்கொண்டானு?

**கோபண்ணு:** அவ்வளவு அவசரப்பட்டால் காரியம் குடிகெட்டுப் போகுமே. ஒன்றும் அறியாதவனைப்போல் பேசி, பெண் வீடு காண்பிக்கச் சொன்னேன். அழைத்துவந்து காட்டினுர்கள். இனிமேல் போய்த்தான் மற்றக் காரியங்கள் பேசவேணும்.

**ரங்கம்மாள்:** இன்னும் தொகை பேசாவிட்டால் பின் அதற்குள்ளாகப் பழம் என்றீரே அது எப்படி?

**கோபண்ணு:** தூண்டில் போட்டவனுக்கு முள்மேல் கண் என்பதைப்போல் ருக்மிணி கோவிலுக்கு வந்தது முதல் யார் அவளைக் கவனிக்கிறுர்கள் என்று தூர இருந்து பார்த்துக்கொண்டே இருந்தேன். பையன் சிரிப்பும் விளையாட்டுமாய் வந்தான். ருக்மிணியைப் பார்த்தான். பார்த்ததும் சிரிப்பும் விளையாட்டும் பறந்துவிட்டன. நமது குழந்தையைப் பார்த்தபடி நின்றுனே தவிர வேறு எண்ணமே அவனுக்கு இல்லை. கூட வந்தவர்களெல்லாம் போனபின்னும் இருவர் மாத்திரம் நின்றுர்கள். நமது பெண் ஆத்துக்குப் புறப்பட்டவுடனே பின்னுடியே அவர்களும் புறப்பட்டார்கள். நானும் பின் தொடர்ந்தேன். பெண் ஆத்திற்கு

வந்தவுடனே சற்று நேரம் திகைத்து நின்று அப்பால் வீட்டிற்குப் போனார்கள். அவர்கள் படுத்துக்கொள்ளும்வரையில் இருந்துவிட்டு விடியுமுன் சென்றேன். கோபண்ணா வலையில் சிக்கினபின் தப்ப விட்டுவிடுவானென்று கனவிலும் நினைக்கிறாயா?

ரங்கம்மாள்: இல்லை, தொகை கேட்டவுடன் கொடுக்கச் சக்தி இருக்குமோ என்றுதான் சந்தேகித்தேன்.

கோபண்ணா: பண்டைகளைக் கோபண்ணா சேர்ப்பானா? பையன் காதிலும் கையிலும் இருக்கும் வைரக் கடுக்கன்களும் மோதிரங்களுமே அநேக ஆயிரம் ரூபாய்கள் பெறும். ஒரு மோதிரமே நமது தொகைக்குமேலேயே கொடுக்கும். அதெல்லாம் உனக்கு என்னத்திற்கு? நீ கேட்டபடி 1200 ரூபாய் இன்று இரவே உன் கையில் சேர்த்துவிடுகிறேன். மற்றக் காரியங்கள் உனக்கு என்னத்திற்கு? இப்பொழுதே உன் பெட்டியில் 1200 ரூபாய் இருப்பதாக நினைத்துக் கொள். ஆனால் பெண்ணின் மனோபாவம் எப்படி இருக்கிறதென்று ஆராய்ந்து அறிய வேண்டாமா!

ரங்கம்மாள்: அதைப்பற்றி நீர் யோசிக்க வேண்டாம்; நான் அதைச் சரிப்படுத்திக்கொள்ளுகிறேன்.

கோபண்ணா: நீ நினைப்பது சரியல்ல; இருக்கும் மாதிரியைப் பார்த்தால் அந்தப் பெண்ணின் சுபாவம் ஒரு மாதிரியாய்த் தோற்றுகிறது. ஆகையால் அதிக ஜாக்கிரதையாய்ப் பேசவேண்டும்! ஜாடையாய்ச் சொல்லிப் பார். சம்மதிக்கும் மாதிரியாக இல்லாவிட்டால் நான் பின்னால் யுக்தி சொல்லுகிறேன். அவர்கள் காத்துக்கொண் டிருப்பார்கள்; ஆதலால் நான் போகிறேன். உன் வேலையை அதிக ஜாக்கிரதையாகப் பார்.

இப்படிச் சொல்லிவிட்டு அவர் போய்விட்டார். ரங்கம்மாள் ருக்மிணியை அழைத்துத் தலை பின்னிக்கொண்டே பின்வருமாறு சொன்னாள்.

ரங்கம்மாள்: ருக்கு! பக்கத்தாத்திலிருந்து இன்று லட்சுமி வந்தாளே, பார்த்தாயா? அவள் புஷ்பவதியானதும் புருஷன் வீட்டார் 500 ரூபாய் கொடுத்தால்தான் சாந்திக் கல்யாணம் செய்வதாகச் சொன்னார்கள். அவள் பெற்றோர்கள் கோகர்ணம் கஜகர்ணம் போட்டுப் பார்த்தார்கள். ஒன்றிலும் பலிக்கவில்லை. கடைசியாக முகுந்தராயபுரம் ராஜா ஸ்ரீ ரங்கநாதரைச் சேவிக்க வந்தபோது அவரிடம் ஒரு ராத்திரி அந்தப் பெண்ணை அனுப்பி இருக்கச் செய்து 500 ரூபாய் வாங்கிச் சாந்திக்கல்யாணம் நடத்தினார்கள். கல்யாணத்திற்கும் பணம், வரிசைகளுக்கும் பணம், சாந்திக்கும் பணம், சகலத்துக்கும் பணம், என்று கேட்கும் இந்த நாளில் இப்படிச் செய்வது சர்வ சாதாரணமாக இருக்கிறது.

ருக்மிணி: அம்மா, லக்ஷ்மி தன் மானத்தை விற்று அத் தொகையைக் கொண்டு சாந்தி பண்ணிக்கொண்டதை விட அவளுக்கு விழுந்து சாக ஒரு குளம் குட்டை இல்லாமல் போயிற்றா? ஸ்ரீரங்கத்தைச் சுற்றிலும் ஜலம் போகும் போது அவளுக்குச் சாக வழி தெரியாமற் போனதென்ன? ஐயோ! இப்பேர்ப்பட்ட காரியம் செய்துவிட்டு அவள் எப்படித்தான் நாலு பேருக்கு மத்தியில் ஒரு மனுஷியைப் போல் வாழ்கிறாளோ தெரியவில்லை!

ரங்கம்மாள்: ருக்கு, உனக்கு இன்னும் உலக அநுபவம் இல்லாததால் இப்படிப் பைத்தியக்காரத் தனமாய்ப் பேசுகிறாய். உனக்கும் அவசியம் நேரிட்டால் அப்போது தான் தெரியும். என்னடி! நாய் விற்ற காசு குலைக்குமா? ஏதோ ஒரு ராத்திரி இருந்துவிட்டு வந்துவிட்டால் குடி முழுகிப்போனதென்ன? இப்படிப் போனவளென்று முகத்தில் எழுதிப் பட்டயங் கட்டியா விடுகிறார்கள்?

ருக்மிணி: தங்கள் பேச்சுக்கும் என் அபிப்பிராயங்களுக்கும் வெகு தூரம்! அரைக் காசுக்கு அழிந்திட்ட கற்பு ஆயிரம் மரக்கால் பொன் கொடுத்தாலும் வருமா? 'மான

மழிந்த பின் வாழாமை முன்னினிதே' என்று பெரியோர் சொல்லி இருக்கிருர்கள். பெண்களாகப் பிறந்தவர்கள் எவ்வளவு ஆபத்து வந்தபோதிலும் தங்கள் கற்பைக் காப்பாற்ற வேண்டுமென்றும் அப்படிச் செய்யச் சாத்தியப் படாவிட்டால் பிராணத்தியாகஞ் செய்துகொள்வதுதான் சிலாக்கியமென்றும் தர்ம சாஸ்திரத்திற் சொல்லியிருக்க வில்லையா?

**ரங்கம்மாள்:** நீ சொன்ன தர்ம சாஸ்திரத்திலேயே ஆபத்துக்குப் பாபமில்லையென்றும் சொல்லியிருக்க வில்லையா?

**ருக்மிணி:** எனது அபிப்பிராயம் என்னவென்ருல் பெண் இப்பேர்ப்பட்ட அக்கிரமம் செய்துவிட்டுப் பிராணனை வைத்திருப்பதைவிட, அவள் மானத்தை இழக்காமல் பிராணத் தியாகஞ் செய்துகொள்வதே சிலாக்கியமாகும் என்பதுதான். சாகத் துணிந்தவர்களுக்குச் சமுத்திரம் முழங் காலென்று சொல்லுவார்கள். தமது சொந்தக் கணவரிடத்திலேயே எவ்வளவோ சங்கோஜமும் பின் வாங்குகையும் சகஜமாக நேரிடக்கூடியதாயிருக்க, அம்மம்மா! இவர்கள் எப்படித்தான் அந்நிய ஆடவர்களிடத்தில் கற்புக் கெட மனம் ஒப்புகிருர்களோ தெரியவில்லை. சீச்சி! ஸ்ரீரங்கம் ஏதோ பெருந் திவ்விய க்ஷேத்திரமென்றும், 108 திருப்பதிகளில் முதன்மை பெற்றதென்றும், அதில் சில தினங்கள் இருந்து போவதால் கெடுதல் இல்லையென்றும் நினைத்திருந்தேன். இவ்விடத்தில் நடக்கும் அக்கிரமங்களை நினைப்பதற்குக்கூட என் தேகம் நடுங்குகின்றது. கோவில் பரிசாரகர்களில் பலர் சற்றும் சன்மார்க்கஸ்தர்களாய் இருக்கக் காணேம். அவர்களெல்லாம் நமது வீட்டிற்கு வருகிறதையும், அவர்களிடம் தாங்கள் ரகசியமாக என்னைச் சுட்டிக் காட்டிப் பேசுவதையும், அவர்கள் காட்சி சாலையில் புது ஜந்துவைக் காண்பதுபோல் என்னைப் பார்த்துவிட்டுச்

செல்வதையும் பார்க்க எனக்கு அச்சம் அதிகமாகின்றது. அம்மா! நான் உடனே ஊருக்குப் போக வேண்டும். தப்பித் தவறி வருகிற கற்புடைய மங்கையரைக் கெடுக்க இவ்வூரில் பல விதத்திலும் வாசல்கள் இருக்கின்றனபோலும்! இனி அரை நிமிஷமும் இங்கே தாமதிக்க எனக்கு இஷ்டமில்லை

**ரங்கம்மாள்:** என்னடி! நான் என்ன அப்படிச் சொல்லி விட்டது? உனக்கு இப்படி ஏன் கோபம் வரவேண்டும்? விவாகத்துக்குப்பணம், சாந்திக்கும் பணம் என்று எடுத்ததற்கெல்லாம் பெண் வீட்டாரைக்கொள்ளையடிக்க நினைத்து மாப்பிள்ளை வீட்டார் செய்யும் அக்கிரமங்களால்-பண ஆசையால்-முடிவாகக் கற்பழிந்த பெண்ணையே தாங்கள் அடைய வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்ற உலகத்துச் செய்தியைச் சொல்லவந்தால் உனக்கேன் இப்படி ஆத்திரம் பொங்குகிறது? ஒரு காசு சம்பாதிப்பது குதிரைக் கொம்பாய் இருக்கிற இந்த நாளில் பெண் வீட்டார் ஆயிரம் ஆயிரமாகப் பணம் கொடுக்க எப்படித்தான் முன்வருகிறார்கள் என்பதை மாப்பிள்ளை வீட்டார் சற்றும் யோசிக்க வேண்டாமா? ஊர் சிரிக்காதிருக்க ரகசியத்தில் அக்கிரமம் நடத்திப் பணம் சேர்த்துத் தொலைக்கிறார்கள். உனக்கு இதுவெல்லாம் இப்போது தெரியாது; போகப் போகத் தான் தெரியும்.

**ருக்மிணி:** இந்தப் பிரஸ்தாபங்களையே என் காதில் போட வேண்டாம். சாயந்தரம் மெயிலுக்கு என்னை அனுப்பிவிடுங்கள். நான் ஆண் பிள்ளையாயிருந்தால் வேறொருவருடைய உதவியும் இன்றி இப்பொழுதே புறப் பட்டிருப்பேன்.

**ரங்கம்மாள்:** என்னடீ! ஒரு மாச காலம் இங்கே இருக்க வந்தவள் திடீரென்று ஊருக்குப் போக வேண்டும் என்கிறாயே.

**ருக்மிணி:** இனி ஒரு நாள் கூட இங்கே இருகக இஷ்ட

மில்லை. ஆகையால் என்னை ஊரில் கொண்டுபோய் விட்டு விடுங்கள்.

**ரங்கம்மாள்:** உன்னை இரண்டு மாதம் பொறுத்து அழைத்துக்கொண்டு போய்விட நான் ஒத்துக்கொண்டது உண்மை தான். இப்போது அழைத்துப் போக என்றால் முடியாது.

**ருக்மிணி:** சரி! அப்படியானால் என் தகப்பனாருக்குக் காகிதம் எழுதி அவரை அழைத்துப்போகச் செய்கிறேன்.

ருக்மிணி இவ்வாறு துக்கத்துடன் சிந்தித்துக்கொண்டிருக்க அவ்விடம் விட்டுப் போன கோபண்ணா, ராஜு இறங்கி இருக்கும் வீட்டுக்குப் போய் ஆசீர்வாதஞ் செய்து விட்டு மௌனமாய் உட்கார்ந்திருந்தார். இதுகாறும் அவர் வரவை அதிக ஆவலுடன் எதிர்பார்த்து என்ன பதில் சொல்லப் போகிறாரோவென்று காத்துக்கொண்டிருந்த ராஜு இரண்டு மூன்று தரம் போன காரியம் எப்படியென்று கேட்டதன் பேரில் கோபண்ணா பின் வருமாறு சொன்னார்:

**கோபண்ணா:** காரியம் என்னவோ பெரிய இடத்துக் காரியம். சித்தியாவது கஷ்டமென்றே நினைக்கிறேன்.

**ராஜு:** சுவாமி! தாங்கள் அப்படிச் சொல்லிவிடக் கூடாது. எவ்வகையிலேனும் தயவு செய்து என் மனோபீஷ்டத்தைத் தாங்கள் நிறைவேற்றினாலொழிய என் பிராணன் நிற்பது அரிது. இது திண்ணமே. தாங்கள் காலையில் ஆரூடம் பார்த்துச் சாதகம் ஆகுமென்று கூறிவிட்டு இப்போது இப்படிச் சொன்னால் எப்படி?

**கோபண்ணா:** ஆரூடம் பார்த்துக் காரிய சித்தி ஆகுமென்று சொன்னது உண்மையே; அத்துடன் காரிய சாதனார்த்தமாகப் பொருள் விரையம் ஆகும் என்றதை மறந்தீர்கள்போல் இருக்கிறது.

**ராஜு:** பொருள் செலவைப்பற்றி அக்கறையில்லை. காரியசித்தியே முக்கியம். தாமதமின்றிப் பேசி முடிவு செய்யுங்கள்.

**ராகவன்:** ஸ்வாமி, எனது நண்பரோ பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். இதுவரையில் எவ்விதமான கெட்ட நடத்தையிலும் பிரவேசியாதவர். அப்படியிருக்க ஏதோ கால வித்தியாசத்தால் அவருக்கு இம்மாதிரி யோசனை பட்டுவிட்டது. எவ்வளவு சகாயமாய்க் காரிய சாதனம் செய்யக்கூடுமோ அவ்வளவு சுலபமாய்த் தீவிரத்தில் அவர் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வித்து எங்களை நாளைக்காவது ஊருக்கு அனுப்பப் பிரயத்தனம் செய்யுங்கள்.

**கோபண்ணா:** இதெல்லாம் இவ்வளவு அவசரத்தில் ஆகிற காரியமா? ஆர அமர யோசித்துத்தான் செய்ய வேண்டும்.

**ராஜா:** ஸ்வாமி, எனக்கு ஒரு நிமிஷம் போவது ஒரு யுகமாக இருக்கிறது. மேலும் நாங்கள் இரண்டொரு நாட்களுக்குமேல் இங்கே தங்க முடியாது. பொருட் செலவைப் பற்றித் தாங்கள் சிந்தனை செய்ய வேண்டாம். 100-150 ஒரு பொருட்டல்ல.

**கோபண்ணா:** அந்தப் பெண்ணின் சிற்றன்னை பொருளாசை பிடித்தவள். அதனால்தான் முடிக்கலாம் என்று ஒரு நம்பிக்கை. அது மட்டுமேயல்ல. அந்தப் பெண் பெரிய மனுஷியாகிச் சில வருஷங்கள் ஆகிவிட்டதாம். புருஷர் வீட்டார் ஆயிரம் ரூபாய் கொடுத்தால்தான் சாந்திக்கல்யாணம் செய்ய முடியும் என்று கண்டிப்பாய்த் தெரிவித்துவிட்டதாகவும் சமாசாரம். பெண்ணின் தகப்பனருக்கோ அன்றாடப் புசிப்புக்கே பெரிய திண்டாட்டம். உங்கள் அதிர்ஷ்ட வசத்துக்குத் தக்கபடி இடமும் பண நெருக்கடியைத் தீர்த்துக்கொள்ள எவ்விதத்திலும் எதிர் பார்க்கிற இடமாய்க் குறுக்கிட்டிருக்கிறது. இப்படியெல்லாம் இருப்பதால்தான் அந்தப் பெண்ணின் சிற்றன்னையைக் கொண்டு பேசிச் சரி செய்யலாமென்று நினைக்கிறேன். எப்படி முடியுமோ?

இப்படிச் சொல்லிவிட்டுக் கோபண்ணு சென்றார். ஜல்தியாகக் காரியம் சாதித்து வரவேண்டுமென்றும் பொருளைப்பற்றிய சிந்தனையே வேண்டாமென்றும் ராஜு சொல்லியனுப்பினார். கோபண்ணு ரங்கம்மாளிடம் போய்ப் பெண்ணின் மனோபாவம் எப்படி இருக்கிறதென்று கேட்க, அந்த அம்மாள் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லி ருக்மிணி ஊருக்குப் போகப் பிரயத்தனம் செய்வதாயும் அவள் தகப்பனாரை வந்து அழைத்துப் போகும்படி கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறாளென்றும் சொன்னாள்.

**கோபண்ணு:** பார்த்தாயா! நான் சொன்னது சரியாய் வந்துவிட்டது. தாமதித்தால் காரியம் கெட்டுப் போகும்; இன்றே ஏற்பாடு செய்துவிட வேண்டும். ஒருவேளை அந்தப் பெண் திடீரென்று புறப்பட்டுவிடுவாள். இந்தக் காலத்துப் பெண்கள் தனியாய் எவ்வளவு தூரமானாலும் போய்விடுவார்கள். சாயங்காலம் நான் கொடுக்கும் மருந்தை மட்டும் அவள் ஆகாரத்தில் சேர்த்துக் கொடுத்துவிடு. மற்ற விஷயங்களை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். அவள் இன்று புறப்படாதபடி ஏற்பாடு செய்யவேண்டும். நீ சற்று வெளியே போ; நான் வேண்டிய ஏற்பாடு செய்துவிடுகிறேன்.

உடனே ரங்கம்மாள் வெளியே போய்விடவே கோபண்ணு ருக்மிணி இருக்கும் இடத்திற்குப் போய் ஒன்றும் அறியாதவர்போல் ரங்கம்மாள் எங்கே என்று கேட்டார். ருக்மிணி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்த் தலை நிமிர்ந்து பார்த்தாள்.

**கோபண்ணு:** ஏன் அம்மா அழுதுகொண்டிருக்கிறாய்? ஐயோ; சாக்ஷாத் லக்ஷ்மியைப் போலொத்த உனக்கு ஏற்பட்ட விசனம் என்ன? உன் விசனத்தைத் தீர்க்க வழி தேடுகிறேன்.

இப்படிச் சமாதானப் படுத்தக்கூடிய வார்த்தைகளைச்

சரியாய்க் கால்மணி நேரம் வரையில் சொன்னதன் பேரில் தான் கொடுக்கும் காகிதத்தைத் தபாலில் போட்டு விடுவதே தனக்குச் செய்யக்கூடிய பேருபகாரமென்று ருக்மிணி சொல்லவே கோபண்ணு தம் வேலையாய் நேராகத் தபாலாபீசுக்குத்தான் போகப் போவதாகவும் ஆகையால் காகிதத்தை உடனே போட்டு விடுவதாயும் சொல்லி அவள் கொடுத்த காகிதத்தை வாங்கிப் பத்திரமாய் வைத்துக் கொண்டு ராஜு இருக்கும் ஜாகைக்குப் போய்ப் பின் வருமாறு சொன்னார்.

**கோபண்ணு:** அப்பெண் கோவிலுக்கு வரமாட்டேனென்று தன் சிற்றன்னையிடம் சொன்னதன்பேரில் சிற்றன்னை கோபிக்க அப்பெண் நாளை ஊருக்குப் போவதாகத் தீர்மானித்து அவள் தகப்பனுருக்குக் கடிதம் எழுதிவிட்டு அழுதுகொண் டிருந்தாள். சுமார் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தால் அவள் சிற்றன்னை வழிக்கு வருவாள்போல் இருக்கிறது. ஆனால் கனகாபிஷேகம் செய்தாலும் அந்தப் பெண் ஒத்துக்கொள்ள மாட்டாள்.

**ராஜு:** ஆனால் காரியம் முடியாதோ?

**கோபண்ணு:** தங்களுக்கு ஆட்சேபம் இல்லாவிட்டால் ஒருவாறு முடிக்கலாம்.

**ராஜு:** என்ன? ஒருவாறு முடிக்கலாமென்று சொல்வதன் தாத்பரியமென்ன? விவரமாய்ச் சொல்லுங்கள்.

**கோபண்ணு:** அந்தப் பெண் சுயபுத்தியோடு இருக்கும் போது ஒருகாலும் சம்மதியாள். அவளுக்கு மருந்து கொடுத்து மயக்கம் உண்டாகும்படி செய்து அப்போது வேண்டுமானால் தங்கள் இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். 2000-ரூபாயும் கொட்டிக் கொடுத்து அப்படிச் செய்வதுதான் எனக்குக் கொஞ்சமாவது பிடிக்கவில்லை. கழுதையை விட்டுத்தள்ளுங்கள். அவளைவிடச் சுந்தரிகளைச் சுலபமாய் 100 அல்லது 200-ல் பேசி முடிக்கிறேன்.

**ராஜு:** ஸ்வாமி, மற்ற வெட்டிப் பேச்செல்லாம் பேச வேண்டாம். தாங்கள் சொன்னபடியே மருந்தின் மயக்கத்தில் இருக்கும்போதாவது, அப்பெண்மணியுடன் ரமித்தால் -அவ்வளவுக்கு எனக்குக் கிட்டினால் போதும். அப்பொழுதுதான் என் ஆவியும் நிற்கும். ஆகையால் அப்படியே ஏற்பாடு செய்துவிடுங்கள். ராகவா, உடனே 2000 ரூபாய் தந்திமணியார்டர் செய்யும்படி என் தகப்பனருக்குத் தந்தி அடிப்போம்.

**கோபண்ணு:** ஒரு வார்த்தை! எவ்வளவுதான் தங்கள் தகப்பனர் தங்கள்பேரில் பிரியமாயிருந்தாலும் தங்கள் வார்த்தையைத் தட்டி நடக்காவிட்டாலும் ஸ்ரீரங்கத்தில் தங்களுக்குத் திடீரென்று 2000 ரூபாய்க்கு ஏற்பட்ட செலவு என்ன என்று தந்தியில் கேட்க மாட்டாரா? அல்லது அவர் நண்பர் யாராவது இவ்விடத்தில் இருந்தால் அவர் பேருக்குத் தந்தி மணியார்டர் செய்து என்ன விஷயத்திற்கு என்று அறிந்து கொடுங்களென்று சொல்லமாட்டாரா? தாங்கள் எதும் தீர்க்காலோசித்துச் செய்யுங்கள்.

இதைக் கேட்ட ராஜு யோசனை செய்து பிராம்மணர் சொன்னது உண்மைதான் என்று நினைத்து இன்னது செய்வதென்று தோன்றமல் திகைத்து நின்றார்.

**கோபண்ணு:** என்னவோ யோசனை செய்கிறீர்கள்போல் இருக்கிறது. தங்களுக்கு யார்தான் கடன் கொடுக்க மாட்டார்கள்? எனக்குத் தெரிந்த அ. ர. க. ஞ. தாண்டவராயன் செட்டியாரை உடனே கொடுக்கச் சொல்லுகிறேன். ஆனல் ரூ. 2000க்கு 4000 ரூபாய்க்கு உண்டியல், தாங்கள் எழுதிக் கொடுக்க வேண்டி வரும்.

**ராகவன்:** என்ன காணும், முழுமோசமாய் இருக்கிறது! முதலில் 2000 ரூ. கொடுப்பதே அநியாயம். அந்த ரூபா 2000-க்கும் துணையாக இன்னும் 2000ரூ. கொடுக்க யார்தான் சம்மதிப்பார்கள்?

கோபண்ணு: நான் தங்களை முதலில் இந்த 2000 ரூ. கொடுக்கும்படியாவது அல்லது அதை வாங்க 4000 ரூ. கொடுக்கும்படியாவது நல்ல வார்த்தை சொல்லவில்லை. உத்தரவு கொடுத்தால் உடனே போய்விடுகிறேன்.

ராஜா: தாங்கள் கோபம் செய்துகொள்ள வேண்டாம். தாங்கள் சொன்ன செட்டியாரிடம் உண்டியல் பேரில் கேட்டால்தான் அப்படிச் சொல்லுவார். இதோ இந்த இரண்டு வைர மோதிரங்களை அடமானம் வைத்துக் கேளுங்கள். அப்போது நியாயமான வட்டிக்குக் கொடுப்பார்கள்.

கோபண்ணு: உண்மைதான்! நகைகள் வைத்தால் செட்டிகளுடைய நியாயமான வட்டி நூற்றுக்கு மூன்று தான். ஆனால் நான் சொல்லி நூற்றுக்கு 2 வீதம் வாங்கிக் கொடுக்கிறேன்.

இப்படிச் சொல்லி அவர்களை அழைத்துப் போய் வைர மோதிரங்களை வைத்து அவர்களையே கையெழுத்துப் போடச் சொல்லி 2000 ரூபாய் கடன் வாங்கும்படி செய்து வீட்டிற்கு வந்தபின் அந்த ரூபாய்களை வாங்கிக் கொண்டு ரூபாய் 1200 மட்டும் பெற்றதாகக் கூறி ரங்கம்மாளிடம் கொடுத்து அன்றைய ராத்திரி தாம் கொடுக்கும் மருந்தை ருக்மிணிக்குத் தரும்படியும் மருந்து சாப்பிட்ட அரை மணி நேரம் பொறுத்துத் தம் ஜாகைக்கு அழைத்து வரும்படியும் சொல்லிவிட்டுக் கோபண்ணு போய்விட்டார்.

ருக்மிணி தனக்கு ஏற்பட்ட விசனத்தால் ரங்கம்மாள் எத்தனை தரம் கூப்பிட்டாலும் தனக்குச் சாப்பாடு வேண்டாமென்று சொல்லிவிட்டாள். ராத்திரி 8 மணியானதும் காபி வைத்து, காபியில் கோபண்ணு கொடுத்த மருந்தைப் போட்டு, ருக்மிணியைச் சாப்பிடச் சொல்லிக் கட்டாயப் படுத்தினதன்பேரில் ருக்மிணி சாப்பிட்டாள். சுமார் அரைமணி நேரம் பொறுத்ததும் ருக்மிணி ஒருவித மயக்கமாக இருப்பதாகச் சொன்னாள்.

ரங்கம்மாள்: சொன்ன வார்த்தை கேட்டால்தானே. காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாமல் இருந்தால் பின் மயக்கம் வராமல் என்ன ஆகும்? அந்தக் காபி போய் வயிற்றில் விழுவே ஆயாசமாக இருக்குபோல் இருக்கு. இந்தா! இந்தக் காபியையும் சாப்பிட்டு விட்டு வா, ரங்கநாதனைச் சேவித்து வருவோம்; அவர் சகல பாதைகளையும் நிவர்த்தி செய்து விடுவார்.

இப்படிச் சொல்லி அவளைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு கோபண்ணு வீட்டின் சமீபமாகப் போனவுடன், மயக்கமாயிருந்தால் கோபண்ணு வீட்டில் சற்றுத் தங்கிப் போகலாம் என்று ரங்கம்மாள் சொன்னாள். கோபண்ணு சோபா முதலியவை போட்டு அலங்காரமாய் வைத்திருந்த அறைக்கு அழைத்துப்போய் ருக்மிணியைச் சற்றுச் சோபாவில் படுத்துக்கொள்ளும்படி சொன்னாள். ருக்மிணி சோபாவின்மேல் படுத்ததுதான் தெரியும்! மயக்கம் அதிகமாகிவிடவே அயர்ந்து நித்திரை போனாள்.

கோபண்ணு உடனே ராஜுவை அழைத்துவந்து அவர் நாடி வந்த வஸ்து அந்த அறையில் இருக்கிறதென்றும் மயக்கம் தெளியுமுன் அவர் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டு ஜல்தியாய் வரும்படியும் சொல்லி உள்ளே அனுப்பிவிட்டுப் போய்விட்டார். முந்தின நாள் சாயங்காலம் முதல் மன்மத பாணங்களால் கஷ்டமடைந்த ராஜு தன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொண்டபின் அங்கே போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு பின்வருமாறு சிந்திக்கலானான்.

'என்ன அநியாயம் இது! பிராம்மண குலத்தில் பிறந்து உன்னதமான பரீட்சையில் தேறி, நான் நியாயந் தவறி நடப்பதில்லை யென்று பி. ஏ. பட்டம் பெற்றபோது வாக்களித்துவிட்டுக் கேவலம் சண்டாளனும் செய்யத் துணியாத இப்பேர்ப்பட்ட அக்கிரமத்தில் பிரவேசித்தேனே!

அம் மாது மருந்தின் மயக்கத்தில் இருந்தாலும் எனது கை அவள்மேல் பட்ட மாத்திரத்தில் அவள் உடல் நடுக்கங் கொண்டதே! அப்போதாவது எனக்குப் புத்தி வந்ததா? ஐயோ! மகா பதிவிரதா சிரோமணியாகிய இம்மாதை மானபங்கம் செய்துவிட்டேனே! அப்பெண் மயக்கம் தெளிந்து எழுந்தால் என்ன நினைப்பாளோ? என்ன செய்வாளோ? அறியேனே! அவளுக்கு மயக்கம் தெளியுமுன் வந்துவிடும்படி கோபண்ணு வற்புறுத்திச் சொன்னரே; அப்படியே போய்விடலாமா? சீச்சீ! அப்படிச் செய்தால் ஒருகால் அவள் எழுந்தவுடன் தன் அலங்கோல ஸ்திதியைக் கண்டு பிராணத்தியாகம் செய்துகொண்டாலும் செய்துகொள்வாள். நாம் அப் பாவத்திற்கும் ஆளாகக் கூடாது. ஆகையால் அவள் மயக்கம் தெளிந்து எழுந்திருக்கும் வரையில் காத்திருந்து அவள் திட்டிய போதிலும், சாபமிட்ட போதிலும், இன்னும் என்ன செய்தபோதிலும் சரிதான, நாம் செய்த அக்கிரமத்திற்கு அவைகளை யெல்லாம் ஏற்றுக்கொண்டு அவளைச் சமாதானப்படுத்தி அவள் தற்கொலை செய்துகொள்வதில்லை என்று வாக்குறுதி பெற்றுப் போனல் ஒழிய என் மனமானது ஒரு நிலையில் நிற்காது.

'என்ன செய்வேன்? அவள் எழுந்தவுடன் என்ன சொல்வாளோ என்ன செய்வாளோ யான் அறியேன். திருச்சிக்குப் பந்தாட வந்ததால் அல்லவா ஸ்ரீரங்கம் வரும்படிக்கும், வந்த இடத்தில் அவளைக் கண்டு காமுற்று இப்பேர்ப்பட்ட அக்கிரமம் செய்யும்படிக்கும் ஏற்பட்டது. நான் இப்பேர்ப்பட்ட இழி தொழில் செய்தேனென்றல் யாராவது நம்புவார்களா? என்னை நல்லவனென்று எல்லாரும் சொல்லிச் சிலாக்கியமாய்ப் பேசினாலும் என் மனச்சாட்சியானது, "நீ சண்டாளன், மகா பாதகன்" என்றுதானே சொல்லிக்கொண் டிருக்கும். இனி என் வாழ்நாட்கள்

முற்றும் வீண் நாட்களே. நடந்துபோன விஷயத்தைப் பற்றிச் சிந்திப்பதில் சுகிர்தமில்லை. அப் பெண்மணியை என்னமாய்ச் சமாதானப்படுத்துவது? எல்லாவற்றிற்கும் கடவுள் இருக்கிறார்' என்று இவ்வாறாகப் பல சிந்தனைகளில் மூழ்கி இருக்கையில் ருக்மிணி மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள்! விளக்கு எரிந்துகொண் டிருப்பது போலவும் தான் எங்கோ படுத்திருப்பதைப் போலவும் யாரோ ஓர் யௌவன புருஷன் நாற்காலியில் உட்கார்ந்திருப்பதைப் போலவும் அவள் கண்களுக்குத் தெரிந்தது. இது கனவோ என்னவோ என்று கண்களைத் திறந்து நன்றாய்த் துடைத்துக்கொண்டு எழுந்திருக்க முயன்றாள். அப்போதும் மயக்கம் எழுந்திருக்க விடவில்லை. தன் ஆடைகள் இருந்த அலங்கோலத்தையும் கதவு உள் தாழ்ப்பாள் இடப்பட்டிருந்ததையும் யாரோ ஒரு மனிதன் உட்கார்ந்திருந்ததையும் பார்த்த மாத்திரத்தில் திடுக்கிட்டு எழுந்தாள். எழுந்ததும், தான் மானபங்கமடைந்த விஷயம் அவளுக்குத் தன்னில்தானே தெளிவாகத் தெரிந்துவிட்டது.

தக்ஷணமே தாங்கொணாத ஆத்திரத்துடன் சீறி எழுந்தாள். தன்னையும் தான் இருக்கும் அறையையும் ஒருமுறை கவனித்துக்கொண்டாள். உலகத்திற் பெறுதற் கரிதாகிய கற்பின் ஒளியைத் தான் இழக்க நேர்ந்ததற்காகப் பெரிதும் ஆற்றாமை மேலிட்டுக் கதறினாள். தலையில் அடித்துக் கொண்டாள். மானம் அழிந்த பின் தனக்கு வாழ்வு எதற்காக என்று தேம்பித் தேம்பி யழுதாள். தற்கொலைக்கும் தயாரானாள். ஆயினும் அந்த அறையினுள் அதற்கான கருவிகள் ஏதும் இன்றி ஏற்கெனவே மிகுந்த யோசனையுடன் அகற்றப்பட்டிருந்தன. கண்ணாடியிலிருந்து ஒரு துணுக்கேனும் தனக்குக் கிட்டாதாவென்று ஓங்கி ஒரு குத்துக் குத்தினாள். பலமான கண்ணாடி யாதலின்

அவளது மிருது மயமான கையின் மெல்லிய பலத்திற்கு அது உடைபடவேயில்லை. செய்வதற்கு ஏதும் தோன்ருது ஸ்தம்பித்து நின்ருள். ஒரு திரும்பு திரும்பினுள். ராஜூ வின் உருவம் தென்பட்டது. அவனைக் காண அவளுக்குச் சகிக்கவில்லை. நெஞ்சம் பகீரென்றது, கொதித்தது! பற்றி எரிந்தது! கோபத் தணல் வீசிற்று! தன் அழிவிற்கு—ஆத்ம நாசத்திற்கு—மானபங்கத்திற்கு—இவனன்ரே காரணம் எனத் துடித்தாள்.—பதைத்தாள்.—உள்ளங் கலங்கினுள்.—உடனே அவன் பக்கமாகத் திரும்பி,

"அட பாதகா! சண்டாளா! உனக்குத் தலைகுனிவும் ஒரு கேடா! என் கற்பை அழித்த துரோகி! நீசனே! இமைப்பொழுதில் உன் உயிரையும் முடித்து என் ஆவியையும் போக்கிக்கொள்வேனே! ஆயுதம் ஏதுமில்லையே! ஐயோ தெய்வமே! கிராதகா! உன்னுல் எத்தனை குல ஸ்திரீகள் தமது கற்புச் சீலம் பாழ்பட்டனரோ? அடே காமுகனே! வெறியேறிய நாயே! இந்த அக்கிரமம் தெய்வத்துக்கு அடுக்குமா! ஏனடா இந்த நாசகால புத்தி! பெண் பாவம் பொல்லாது. என் கண்ணீர் வீணுகாது. உன்னையும் உனது வமிசத்தையும் அது சுற்ருமல் விடாது. அட கெடுவாய்! ஐயோ! அம்மா! இக்கோலங் காணவோ உங்கள் வயிற்றில் பெண்ணுய்ப் பிறந்தேன்! ஐயோ! ஐயோ! என்னுல் தாங்க முடியவில்லையே" என்று கூறிக்கொண்டு திடீரென்று கீழே விழுந்தாள்; மூர்ச்சை போனுள்.

பார்த்தான் ராஜூ; திடுக்கிட்டான். ஆயிரத்தெட்டு அம்புகள் ஏககாலத்தில் ஊடுருவிப் பாய்ந்ததுபோல் மிக்க மன வேதனையை அடைந்தான். அவன் இரு கண்களிலிருந்தும் அருவிபோல் ஜலம் வந்துகொண்டிருந்தது. செய்வது என்னவென்று தெரியாது திகைத்து நின்ருன். சிறிது ஜலத்தை ருக்மிணியின் முகத்தில் தெளித்துக் கண்களைத் துடைத்துச் சற்று விசிறினுன். ருக்மிணியும்

அத்தியந்த ஆயாசத்தோடு எழுந்தாள். ராஜு தன் பெரும் பிழைக்காக அவள் முன் விம்மியழலானான்.

ராஜு: பெண்மணியே! உத்தமி! மகாபாதகன் நான்! என்னினும் கொடிய துன்மார்க்கன் வேறு எவனும் இரான். இது நாள் வரையும் இத்தகைய நீசத்வமான பாதைகளில் நான் சஞ்சரித்தவனல்ல. எனது கெட்ட காலம் என் கிராதகத் தன்மை இப்பொழுது பிரகாசமாகத் தெரிகிறது. பெருந் தவறு இழைத்துவிட்டேன். போயிற்று, உன் கற்பின் மாட்சி! தொலைந்தது நின் ஜீவிய இன்பம்! அகன்றது உன் வாழ்நாள் பெருமை! இன்னும் நீ எவ்வளவு தூஷிப்பினும் நான் பாத்திரனே.

கண்களில் நீர் ததும்ப இவ்வாறு கூறினான்.

ருக்மிணி: அப்படியா! இந்தச் சாகஸமும் உனக்குத் தெரியுமா? என்ன சாமர்த்தியம்! எத்தனை விநயம்? நீ படித்த படிப்பின் குணமர்கும் இது! எவ்வளவு தந்திரமான சூழ்ச்சி? இந்த மகேந்திர ஜாலங்களை எங்கேயடா கற்றாய்! இந்தச் சாதுர்யமான பேச்சுகளால் எத்தனை மாதர்களைக் கெடுத்தனையோ! பாதகா! சீ! நீயும் ஒரு மனிதனா? என் கற்பை அழித்ததன்றி, பரிதாபப்படுவதாகப் பாசாங்கும் செய்கிறாயா? இது வெகு நேர்த்தியான சூழ்ச்சிதான்.

ராஜு: நான் முன்னதாகவே கூறிவிட்டேன். உன் சொல்லம்பு என் மனப் புண்ணை ஆற்றாது. உன் கரங்களால் என் கழுத்தை நெருக்கிக் கொன்றுவிடு. என் தவறுதலுக்காக என் வாணாள் முழுதும் நான் அநுபவித்துத் தீர வேண்டிய சஞ்சலம் உன் கிருபையால் இமைப்பொழுதில் நிவர்த்தியாய்விடட்டும்.

ருக்மிணி: செய்வதையும் செய்துவிட்டு வாக்குச் சாதுரியமும் காட்டுகிறாய். இந்தத் தந்திர ஜாலம் எவர் செய்வார்? இந்த மிருது மதுரமான பாஷிதங்களை ஏன் அளக்கிறாய்! இவற்றால் என்னைச் சரி செய்துகொண்டு என்னுட

னேயே இருந்து உமது காலத்தை மகிழ்ச்சியிற் கழிக்கவா இந்த மயக்குகளேக் காண்பிக்கிறீர்கள். அதுதான் உமது உத்தேசமோ? தெரிகிறது, தெரிகிறது.

ராஜு: பாவாய்! பெண்மணி! நான் காலம் முழுமையும் பரஸ்திரீ கமனமின்றி ஏகபத்தினி விரதனுகவே இருந்து தீரச் சங்கல்பம் செய்துகொண் டிருக்கிறேன். இல்லே; இல்லே, இருந்தேன். என் பிரதிக்ஞையாகிய ஆகாயத்தில் விபரீதத்தால் கார்மேகங்கள் தோன்றி இவ்வாறு நான் கெட்டழிந்த பதரானேன். என் கடைசி காலம் வரைக்கும் இத்தவறுதல் ஒன்றே போதுமானது. அதுவே என் ஜீவகாலத்தைத் தீவிரத்தில் மாய்த்துவிடும். நீ எழுந்திருப்பதற்கு முன்னதாகவே நான் தற்கொலேக்கும் துணிந்தேன். ஆனல் உன்னேக் கற்பழித்த பாவத்துடன் நீயும் அந்தத் துக்கத்தால் உயிர் விடுவாயாயின் அப்பெண் பாவமும் என்னேயே வந்து அடையுமாதலின் அதற்கே பின்னடைந்து அதிலிருந்தும் உன்னேத் தடுக்கவே உயிர் கொண்டு வெற்றுடம்பாய் நிற்கிறேன். இனி நான் வேறு; நீ வேறுதான். இனி இந்த நாணிய உடலுடன் என்றுமே உன் எதிர்ப்படமாட்டேன். என் சவம்கூட உன் கண்முன் படாது. இது நிச்சயம்.

ருக்மிணி: இப்போது காட்டும் இந்த இரக்கத்தை என்னேக் கற்பழிக்குமுன் காண்பித்திருக்கலாகாதா! நீர் பேசுவதெல்லாம் உண்மையோ? அல்லது என்னே வஞ்சிக்கும் கற்கண்டு வசனத்துண்டுகளோ! என்னேப் பாழ்படுத்திய உமது வார்த்தையிலும் நான் நம்பிக்கை வைப்பது கூடுமா! இந்த உலகத்தில் பெண்கள் அஞ்சுவதெல்லாம் உம்மைப் போலொத்த புருஷர்களே நினைத்தே. அவர்களால் எங்கே தம் கற்பு அழிய நேரிடுமோ எனக் கலங்கியேதான்; அதை நீர் மெய்ப்பித்து விட்டீர்.

ராஜு: 'எந்த இடத்தில் ஒரு பொருள் கிடைக்கவே

கிடைக்காதோ அந்த இடத்தில்தான் மனிதனுனவன் சுகத்தையும் சந்தோஷத்தையும் தேடுகிறுன்' என்றுர் ஸ்வாமி விவேகானந்தர். அவர் கூற்றின்படி முயன்று தவருன வழியில் யான் வீழ்ந்து தேடிக்கொண்ட பாவம் போதும் போதும். என்றைக்குமே நம் இருவருக்கும் இனி பரஸ்பர முகதரிசனே இல்லே. நீ தற்கொலே மட்டும் செய்து கொள்ளலாகாது. அதற்கு ஒரு சத்தியம் நீ செய்து தந்துவிட்டால் இந்த நிமிஷமே இந்த அறையை விட்டு நீங்கி விடுகிறேன். அதற்கு நீ மறுத்தால் உன் கண்முன்பாக இப்போதே பிணமாவேன்; கடவுள் அறிய இது சத்தியம்.

ருக்மிணி: மனிதனே தவறுதலின் உருவந்தான். ஆயினும் நீர் செய்தது என் ஆத்ம நாசத்தை உண்டுபண்ணி விட்டது. என் வாழ்க்கை இருண்டு போய்விட்டது. நான் உயிர் தரித்தல் இனி முடியாது. இந்தப் பாப காரியத்தில் உமக்குச் சகாயமாக நின்றது யார்? இந்த இல்லம் எவருடையது?

ராஜு: எனக்குத் தூண்டுதல், துணே, உதவி, இல்லாவிடில் மனத்தால் மட்டும் பாவத்தைத் தேடிக் கொண்டவனுய் அம்மட்டில் விலகியிருப்பேன். கோபண்ணு என்ற துஷ்டப் பிரவர்த்தகன் ஒருவன் எனக்காக இரங்குவது போல் பேசி என் அறிவு மயங்கிக் கெடச் செய்து 2000 ரூபாய்களேயும் இந்தக் காரியத்திற்காகப் பெறுவதானுன். திருக்கோயிலில் உன்னேக் கண்டு நான் பிரமித்தபோதே அக்குறிப்பை அத்துஷ்டன் எவ்விதமோ அறிந்து என்னேத் தொடர்ந்து வந்து உன்னேயும் கெடுத்து என்னேயும் பாழ்படவைத்தான். அவன் உன்னேப் பற்றிய சங்கதிகளேயும் சொன்னுன். உனது புருஷன் ருது சாந்திக்காகப் பணம் கேட்பதாயும் கொடுக்க உன் தகப்பனுருக்குச் சக்தியில்லேயென்றும் சிற்றன்னே அதற்காக முயற்சி செய்துகொண்டிருப்பதாகவும் கூறினுன். நான் இல்லாவிட்டாலும் இன்

னெருவரைக் கொண்டேனும் கோபண்ணவும் உன் சிற்றன்னையும் இப்பேர்ப்பட்ட ஏற்பாடு செய்வார்களாதலால், நான் இதற்கு இணங்குவதில் பாதகம் இல்லையென்று அந்தச் சமயத்திற்கான மூட சமாதானங்களைக் கூறி என் மனச்சாட்சியை நித்திரை போகச் செய்து, சென்னையிலிருந்து பந்தாட்டத்திற்காகத் திருச்சிக்கு வந்த நான் இப்படிப் பெரும் பாதகனானேன்.

ருக்மிணி: தங்களைப்போல் படித்த புருஷர்கள் இப்படி வரதக்ஷிணை வாங்குவதால் அல்லவா என்னை என் சிற்றன்னை இத்தகைய அக்கிரமத்திற்கு உட்படுத்தினாள். உமக்கு விவாகம் ஆகி இருக்கிறதா? உமது மனைவியிடம் நீர் வரதக்ஷிணை வாங்கினீரா? அவளிடம் வழிப்பறியடித்துப் பொருள் பெற்றீரா?

ராஜு: என் மனைவியின் வீட்டாரிடம் வரதக்ஷிணை வாங்கிய விஷயம் எனக்குத் தெரியாது. எனது சிறு பிராயத்தில் என் விவாகம் நடந்தது. அதற்குப் பிறகு என் மனைவியை நான் பார்த்ததேயில்லை. இருக்கும் இடமும் தெரியாது; எனக்குச் சாந்தியும் ஆகவில்லை. எனது பெற்றோர்களுக்கும் அவர்களுக்கும் ஏதோ மனஸ்தாபம் என்று மட்டும் தெரியும். பலமுறை இருப்பிடத்தைக் கேட்டும் என் தாய் தந்தையர் கூறவில்லை.

ருக்மிணி: நானும் எனது பதியை இதுகாறும் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. அவரது முக ரூபங்கள் எப்படி இருக்குமோ அறியேன். உம்மைத் திருக்கோயிலில் முதல் முதலாகப் பார்த்தபோது என் மனம் திடீரென்று உம்மிடத்திற் பாய்ந்தது. உம்மை ஆவலுடன் உற்றுப் பார்க்க வைத்தது. உம்மை வெகு மேன்மையர்க மனத்திற் கொள்ளவும் பாராட்டவும் செய்தது எனக்கே ஆச்சரியமாயிருந்தது. உமது முகச் சாயலால் உம்மை வெகு உத்தம குணநிதியென்றும் ஸாத்மிக சம்பன்ன

ரென்றும் பரநாரி ஸகோதரரென்றும், சகல நற்குணங்களுக்கும் உறைவிடமென்றும், உம்மைப்போலவே எனது பர்த்தாவும் இருக்க வேண்டுமென்றும் கோரிக்கொண்டேன். அவ்விதம் உம்மை உயர்வாக நான் நினைத்ததற்கு நீர் இப்படிச் செய்துவிட்டீர். நான் உமது மனைவியாகவே உண்மையில் இருந்திருந்து, இன்னொரு அந்நிய புருஷன் என்னை நீர் செய்தவாறாக மானபங்கப் படுத்தியிருந்தால் அப்பொழுது உமது மனம் எப்படியிருந்திருக்கும்?

ராஜு: உன் கேள்வி என் மனத்தைப் பிளக்கிறது. ஆம், மிக்க அவதியடைந்திருப்பேன். சாகவும் துணிந்திருப்பேன். அந்த நிலையில் உனது பர்த்தா இருந்து இச் செய்தியை அறிவாரானால் எத்தனை சஞ்சலம் மேற்கொள்வாரோ? மகாபாதகனாகிய எனக்கு அதை நினைக்கவே நெஞ்சு திடுக்கிடுகின்றது.

ருக்மிணி: இந்த விஷயத்தை அவர் அறிந்துகொள்ளும்படி நானே கூறிவிடுவேன். எனது சரீரம் கெட்டு விட்டதேயன்றி என் பரிசுத்தமான ஆத்மா கெடவில்லை. இந்த நிமிஷத்திலும் அது நிர்மலமாகவே இருக்கின்றது. எனது பர்த்தாவை நான் சந்திக்கும் காலத்தில் நீர் என்னைக் கெடுத்து விட்ட சகல சங்கதிகளும் எதுவும் மறைக்காமல் கூறிவிடுவேன். அதன்மேல் அவர் என்னை ஏற்றுக்கொள்ள மனது வைத்து இணங்குவாராகில் நான் ஏதோ ஜீவித்திருக்க முடியும். அவரது அகமோ முகமோ கொஞ்சம் கோணிற்றாகில், அவர் என்னை அங்கீகரிக்க மாட்டேனென்று வாய் மொழியால் கூற வேண்டுவதில்லை. அவர் முகக் குறிப்பாலேயே அக்குறிப்பைத் தெரிந்துகொண்டு தக்ஷணமே எவருக்கும் தெரியாமல் நான் பிராணத்தியாகம் செய்துகொள்வேன். பகவானறிய திரிகரண சுத்தியாக இது சத்தியம்.

ராஜு: உன் உத்தம குணத்துக்கு வியப்பும் பூரிப்பும்

கொள்கிறேன். நீ தற்கொலை செய்துகொள்வதில்லை யென்று சத்தியம் செய்து தரவேண்டும். இல்லையாகில் நான் இக்கணமே இறப்பேன்.

ருக்மிணி: என் கற்பை யழித்து என்னைக் கால முழுமையும் வேகவைத்த-நோகவைத்த—ஒருவரிடம் எனக்கு இரக்கமாவது இளகிய மனமாவது தோன்றுமென்று எப்படி நான் சொல்ல முடியும்? ஆனால் உமக்கும் ஒரு மனைவி இருக்கிறாள். நான் என் கணவனைப் பார்த்த ஞாபகம் இல்லாதவளாய் இருப்பதுபோல், அவளும் உம்மைப் பார்க்காதவளாய் இருக்கிறாள். நான் தற்கொலை செய்துகொண்டால் நீரும் பிராணத்தியாகம் செய்துகொள்வதாகச் சொல்வதால் என் ஸ்திரீ வர்க்கத்தைச் சேர்ந்த-அவளுடைய-அந்த உம்முடைய மனைவியினுடைய — முகத்திற்காகப் பரிதாபப்பட்டு, இரக்கமடைந்து அப்பெண்மணிக்காகவே, அவளுடைய மாங்கல்யம் நிலைப்பதற்காகவே இந்த நிமிஷத்தில் நான் தற்கொலை செய்துகொள்ளாமல் உமக்கு ஒரு சத்தியமும் செய்து கொடுக்கிறேன். ஆனால் என் கணவரை நான் சந்தித்து நான் கெட்டுவிட்ட உண்மைகளை உரைக்கும் போது அவரது முகம் கோணிற்றாகில் இப்போது நான் சத்தியம் செய்து தந்தாலும் அப்போது நிச்சயமாக உயிரை விட்டுவிடுவேன். ஆகவே இப்போது நான் செய்கிற சத்தியம் அப்போது என்னைக் கட்டுப்படுத்தாது.

ராஜு: கற்பினுக் கரசியே! உன் பதிவிரதாக்கினி என்னை அவசியம் சுட்டெரித்துவிடும். நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? உன் மனம்போல் சத்தியம் செய்து தர வேண்டுகிறேன். எனக்குச் சத்தியம் செய்து தந்தால் நான் போய்விடுகிறேன்.

ருக்மிணி: சத்தியமா! சத்தியமா!! நானா? செய்யத் தான் வேண்டுமா? எவ்விதம் செய்வேன்? என்னையே நான்

நம்பக்கூடவில்லையே. இருக்கட்டும்; ஆனவரையில் உயிரைச் சுமந்து நிற்கப் பார்க்கிறேன். அதுவும் முன் கூறியபடி உமது மனைவியின் மாங்கல்யம் நிலைப்பதற்காகவேதான். என் பர்த்தாவைக் கண்டு அவருக்குச் சகலமும் நான் தெரிவிக்கிறதற்கு இடையில் பகவானறிய நான் தற்கொலைக்குத் துணிவதில்லை. என் பெற்றோர் மீது ஆணையாக இது சத்தியம்.

இப்படிக் கூறிவிட்டு இன்னும் ஜீவித்திருக்க வேண்டி நேரிட்டிருக்கிறதே என்று ஆத்திரம் கொண்டாள்.

ராஜு: அவ்வளவுக்குச் சத்தியம் செய்து கொடுத்தது போதுமானது. மகாபாக்கியம்! இப்படி ஒரு பாதகன் தோன்றிக் கற்பழித்தானென்று உன் காலமுழுமையும் கருதி, சதா சாபமிடுவதற்காக எனது பெயர் பதித்த இந்த வைர மோதிரத்தையும், ஒரு பிடியில் அடங்கும் ஒன்பது கஜங் கொண்ட இந்தப் பட்டுத் தலைப்பாகையையும் ஏற்றுக் கொள்ளப் பிரார்த்திக்கிறேன்.

ருக்மிணி: அப்படிக் கீழே போடுங்கள். என் பிராம்மண ஜன்மம்-எனது கற்பு மாட்சி-இக்கோலங் காண நேர்ந்ததை நோக்கிடின் என்றல் துக்கம் தாங்கக் கூடவில்லை. தாங்கள் எதிரில் நிற்க நிற்க எனக்கு ஆத்திரம் அதிகரிக்கவே செய்கிறது. சென்று வாருங்கள்! பகவான் உம்மை மன்னிப்பாராக! இனி எந்த ஸ்திரீயும் உம்மால் கற்புக் குலையாதிருப்பாளாக! என் போன்றும் ஏங்காது இருப்பாளாக!

ராஜு மௌனமாய்த் தலை குனிந்தவாறே அதே நிமிஷம் சென்று தன் நண்பன் ராகவனைக் கண்டு தான் இழைத்த பிழைக்காகப் பெரிதும் கதறிப் பிரலாபித்தான். "உன் நீதிவாசகங்களைக் கேட்கத் தவறினேனே!" என்று சுவரில் இடித்துக்கொண்டான். அன்று முற்றும் அன்ன ஆகாரமில்லை. ராகவன் பல வகையாய்த் தேறுதல்

கூறினனென னுனிம் ராஜுவின் துயரம் அதிகரித்தே நின்றது. அன்று மாலையே பிரயாணமாகிச் சென்னை சேர்ந்தனர். ராஜு தான் பட்ட ஆயாசத்தாலும் அழுகையாலும் கண்கள் சிவந்து தேகம் மெலிந்து தோன்றினன். மறுதினமே ஜுரத்தால் பாயும் படுக்கையும் ஆனன்.

இனிமேல் நடப்பவைகளைக் கவனிப்போம். சாந்திக்கல்யாணத்துக்காக இவ்வாறு சேகரித்த 2000 ரூபாயில் 1200 ரூபாய்தான் ரங்கம்மாள் கைக்கு வந்து சேர்ந்தது. மற்ற 800 ரூபாயையும் கோபண்ணு தம் வயிற்றில் கொட்டிக்கொண்டார். கோபண்ணுவை யொத்த உத்தமர்கள் ஸ்ரீரங்கத்தில் பலர் உளர். தம்மிடம் தரப்பெற்ற 1200 ரூபாயில் ரங்கம்மாள் ஒரு காசும் தொடவேயில்லை. இருந்திருந்து தனது தமக்கைக்கு ஒரே ஒரு பெண். அப்பெண்ணுக்காக ஆஸ்தியும் தோற்று அனைத்தையும் தோற்று, தன் அக்காள் தரித்திர ஸ்திதிக்கு வந்துவிட்டாள். சாந்திக்காக ஆயிரம் ரூபாய் கிடைக்கா விட்டால் தன் அக்காள் குடும்பத்தின் மானமே போய்விடும் என்றுதான் இவ்வளவு பாடும் பட்டாளே யன்றி, மற்றப்படி அவளும் ஓர் உத்தமிதான். ஒரு புருஷனுக்கு மனைவிதான்; ஒரு குடும்பத்தின் தலைவிதான். என்ன செய்யலாம்? வரதக்ஷிணைப் பிசாசின் தூண்டுதல் அப்படிப்பட்டதாக இருக்கிறது. ஓர் உத்தியோகம் காலியானல் ஆயிரம் மனுக்கள் வந்து குவிகிற இந்தக் கஷ்டமும் சோதனையுமான காலத்தில் ஒரு காசு தேடுவதே குதிரைக்கொம்பாயிருக்கிறது. ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் என்று வரதக்ஷிணையும், அதன்மேல் ருது சாந்தியின்போது வேறு பணமும் கொட்டிக் கொடுப்பதென்றல் யாரால்தான் மாரடிக்க-சமாளிக்க- முடியும்? இந்த அநியாயம், வயிற்றெரிச்சல் எப்போது தொலையும்?

ஸ்ரீமதி ஸ்நேகலதா தேவி* என்னும் பதினைந்து வயதுள்ள ஒரு வங்காளப் பிராமணச் சிறுமி தன் விவாகச் செலவு, வரதக்ஷிணை இவைகளின் நிமித்தமாகத் தன் தந்தை தாம் குடியிருக்கும் வீட்டை அடமானம் வைக்கத் துணிந்ததை உணர்ந்தாள். அதற்காக விடியுமுன் எழுந்து சென்ற அவள் தந்தை, மாலை வெகு நேரம் கழித்து வந்ததால் தளர்ந்த கால்கள் நோவ, முகம் வியர்க்க, மெய் சோர வருத்தம் நெஞ்சடைக்க, நாவறட்சி கொள்ள, வீட்டிற்குத் திரும்பி உள்ளே பிரவேசிக்கும்போது, வீட்டை அடமானம் வைத்துவிட்டோமே என்ற துக்கத்தால் அவர், 'எல்லா மிழந்தோம்!' என்று தமக்குள் சொன்ன சொல், ஸ்நேகலதா தேவியின இருதயத்தை ஊடுருவிப் பாய்ந்தது, அவள் மிகுந்த துயரத்தோடு தன் தந்தைக்கு உருக்கமான கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டுத் தனக்குத் தானே தீயிட்டுக்கொண்டு இறந்துபோனாள். என்ன கண்ணராவியிது! வரதக்ஷிணை செய்யும் கோரமன்றோ?

விஸ்தாரமான அக்கடிதத்தின் இரண்டொரு வாசகங்களைமட்டுமே அடியில் குறிப்பிட்டிருக்கிறோம். வரதக்ஷிணையின் கொடுமையால் விவாகத்திற்குவழியின்றித் தற்கொலை

---

*ஸ்நேகலதாதேவி 1914-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் வங்காளத்தில் தற்கொலை செய்துகொண்டாள்.

"நான் கால கதியடைந்த பிறகு எனது சாம்பலை நீங்கள் கண்ணீருதிர்த்துக் கரைப்பீரென்பது நிச்சயம். ஆனால் வீடு காப்பாற்றப்படும். இப்போது நான் மூட்டும் பெருந்தீ தேச முழுமையும் தகிக்கட்டும். எனது அன்பார்ந்த பிதாவே! போய் வருகிறேன். நான் இப்பூவுலகத்திலிருந்து நீங்கும் காலம் நெருங்கிவிட்டது.

இப்படிக்கு
தங்களுக்குத் துரதிருஷ்டப் பெண்ணாய் ஜனித்த
ஸ்நேகலதா."

செய்துகொண்ட பெண்கள் எத்தனை பேரோ! ருதுவாவதற்கு முன் விவாகம் நடக்க வேண்டுமென்ற ஏற்பாட்டில் வரதக்ஷிணையின் கொடுமையால் விவாகம் கைகூடாமல் நாட்கள் கடந்து போய்விட, அதனிடையே ருதுவாகி அது வெளிக்கு வருமாயின் ஜாதிப்பிரஷ்டம் சம்பவிக்குமே என்று ஏங்கிப் பிராணனை விட்ட பெண்களின் தொகையும் கணக்கிட வசமோ? ருதுவாய் விட்டது வெளிக்குத் தெரிந்து அதனால் பலர் ஏச, அந்த அவமானம் தாளாது தம் உயிரை மாய்த்துக்கொண்ட கன்னிகைகள் எத்தனையோ? நமது ருக்மிணியைப்போல் ருதுசாந்திக்குப் பணம் தருவதற்காக வேண்டி மானங் கெட்ட ஈனத்தொழிலுக்கு ரகசியத்தில் வற்புறுத்தப்பட்டு இணங்காமல் நேரிட்ட தற்கொலைகளும் எவ்வளவோ? எப்பொழுது இத்துர்வழக்கம் நம் நாட்டைவிட்டு அகலுமோ அறியோம்! இதுவரை பிராம்மணரிடம் மட்டும் இருந்த இப்பழக்கம் இப்போது இதரஜாதிகளுக்கும் பரவுவது பெரிதும் விசித்திரம்.

இது நிற்க. ரங்கம்மாளின் புருஷன் அந்த 1200 ரூபாயுடன் ருக்மிணியை அழைத்துக்கொண்டு ருக்மிணியின் வீடு சேர்ந்தார். திருவேங்கடம்மாள் கைநிரம்ப 1200 ரூபாயையும் பெற்றுக்கொண்டாள். உயர் குலத்தில் உதித்த உயர் நெறி சார்ந்த உத்தம குணவதிகளும் வரதக்ஷிணையின் கொடுமையால் இவ்விதம் தாம் பெற்ற மகளையே கற்புக் கெடச் செய்வித்து அதனால் மானங் கெட்ட பணத்தை வெட்கமின்றிப் பெற்றுக் கடவுளின் நன்மதிப்பைவிட லோக கௌரவத்தையே வெளிமுகத்தில் பிரமாதமாய்க் காண்பித்துக்கொள்கின்றனர். பாவம்! திருவேங்கடம்மாளுக்கு மட்டுமல்ல; பிராம்மணகுலத்தில் பெண்களைப் பெற்றவர்கள் எல்லாருக்குமே நாம் இரங்க வேண்டியதே! அவர்கள் பரிதாபம், படும்பாடு, மாற்றொணாத சஞ்சலம், மனவேதனை, உள்ளக் கொதிப்பு, மனத்தில், நெஞ்சில் பதை

பதைப்பு, பண விசாரம், என்றுதான் ஆறுமோ தீருமோ! கடவுளுக்கே அர்ப்பணம்! பெண் வீட்டினரிடத்து இப்படிப் பணம் பறிக்கக் கருதும் கிராதகர்கள் அப்பணத்துடன் வரும் பெண் ஒருகால் கற்புக் குலைந்து வெற்றுடம்பு கொண்டு வருதலும் கூடும் என்பதைச் சற்றுச் சிந்திப் பாராக. புதுமணம் புரிந்து புது வாழ்க்கை நிகழ்த்தப் புறப்படும் புமான்காள்! உங்களுக்குக் கற்பு லக்ஷண உத்தமியாம் காரிகை ஒருத்தி வேண்டுமானால், அந்த அவகோலமான மாப்பிள்ளையின் விலையை, வரதக்ஷிணையை—நீசத்வமான பண ஆசையை-நீங்கள் கொள்ளாதீர்கள். ஒரு பெண்ணின் கற்பால் குலம் தழைக்கும்; வானவர் போற்றுவர்; பெய்யெனின் மழையும் பெய்யும். சாவித்திரி தேவி எமனையம் தொடர்ந்து சென்று தனது காதலனின் உயிரை மீட்டாள். நளாயினியோ பொழுது விடியா திருக்கச் சாபம் ஈந்தாள். கற்பின் உயர்வை யாரே அறியாதார்? பணமும் கற்பழிந்த கன்னிகையும் வேண்டுமா? அல்லது பணமின்றிக் கற்பு லக்ஷணமும் உத்தம குணமும் வாய்ந்த காந்தாமணியொருத்தி மட்டும் வேண்டுமா? கற்பு நலத்தையே நாடுங்கள். அம் மாட்சியாளரையே வாழ்க்கைத் துணைவிகளாகப் பெறுங்கள். வருவது சொன்னோம், படுவது படுங்கள்.

நேராக 1000 ரூபாயும் மாப்பிள்ளையின் தந்தையான தேசிகாசாரியின் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தது. அதைப் பெட்டியில் வைத்துப் பூட்டியும் ஆயிற்று. சாந்திக்கல்யாணத்திற்கு நாளும் கிழமையும் குறிக்கப்பட்டன. அந்த ராகவாசாரி மிச்சமுள்ள 200 ரூபாயையும் கொண்டு செலவுகள் செய்யத் தயாரானார். சகலமும் சித்தமாயின. குறித்த தினமும் வந்தது. பந்துக்கள் ஒவ்வொருவராக வந்து கொண்டே இருந்தார்கள். கடைசியாக மாப்பிள்ளை வீட்டாரும் வந்தனர். விவாகம் ஏற்கனவே நடந்திருப்பினும் அது மணமற்ற மலர் போன்றதுதானே! இன்றன்றோ

அந்த விவாகம் என்ற புஷ்பத்திற்கு நறுமணம் ஆவிர்ப் பவிக்கப் போகின்றது. உலக வாழ்வில் இன்றன்றே புகும் முதல் நாள்; மங்கல நாள்! மாப்பிள்ளையும் வந்து சேர்ந்தார். எவ்விடத்திலோ இருந்து இரு கண்கள் அவரைக் கருத் தாய்க் கவனித்தன, திடுக்கிட்டன! மெய் வெயர்த்தது. மாப்பிள்ளையும் வாயிற்படியில் காலை வைத்தார்; மங்கள ஹாரத்தி எடுத்தனர். முகத்தில் பொட்டு இட்டனர். உள்ளே அழைத்துச் சென்றனர். நலங்கிடும் நேரமும் வந் தது. வாத்திய கோஷம் எங்கும் நிறைந்தது. பந்து ஜனங்கள் சூழ்ந்து நின்றனர். மாப்பிள்ளையும் நலங்கிட்டுக் கொள்ள உட்கார்ந்தார். இனி நமது ருக்மிணி வரவேண்டி யது ஒன்றே பாக்கி. பெண் வரவில்லை: மெத்தையில் இருப் பாள்; கீழ் வீட்டில் இருப்பாள்; அந்த-இந்த அறையில் இருப்பாள்; அடுத்த அகத்தில் இருப்பாள்; என்று பலரும் மூலைக்கு மூலை தேடினர். இதென்ன அவகோலம்? அவள் எங்கே சென்றுளென்று உள்ளம் பதைக்கப் பதைக்க ராகவாசாரியும் திருவேங்கடம்மாளும் தேடாத இடம் எங்கும் இல்லை. அவள் அந்த வீட்டிலேயே இல்லை யெனத் தெரிந்தது. எங்கே சென்றுளோ தெரியவில்லை. ருக்மிணியைக் காணவில்லை.

ருக்மிணியுடன் சோபன நலங்கு இட்டுக்கொள்ள உட் கார்ந்த ராஜேந்திரன் அவளை எல்லோரும் தேடிக்கொண் டிருப்பதை நோக்கித் திகைத்தார். கடைசியில் அவள் வீட்டிலேயே இல்லை என்றும் காணவில்லை என்றும் தெரிய வரவே ஒரு புறம் அவமானத்தாலும், மற்றோர் பக்கம் இயற் கையாகவே அவன் மனத்திடை தோன்றிய-தன் நாயகி யைக் கண்குளிரக் காணவேண்டுமென்ற-ஆசைத் தாகம் நிறைவேறுமற் போனதாலும், தான் இன்னது செய்வ தென்றே அவனுக்குத் தெரியாமல், அவ்வளவு வேத னையை அநுபவித்தான். வாய்விட்டு அலற வேண்டியது

ஒன்றே பாக்கி? பர்த்தாவும் பத்தினியும் ஆர்வத்துடனும் காதலுடனும் பரஸ்பரம் சந்தித்துக்கொள்ள விரும்புகிற இயற்கையாகிய விருப்பத்தில் தாய் தந்தையர்களாகிய பெற்றோர்கள் குறுக்கிட்டு ஒருவர் முகத்தை ஒருவருக்குக் காட்டாமல் வைத்து வேதனையை விளைவிப்பதைப்பற்றி அவன் பெரிய பெரிய எண்ணங்கள் நிறைந்தவனானான். தான் முன் ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுத்ததால் அவள் இட்ட சாபமே தனக்கு அப்படி நேர்ந்தது என்று தன்னையே நொந்துகொண்டான். அவன் பட்ட சஞ்சலத்தை இங்கே விவரிப்பது எவராலும் ஆகாது.

கடைசியாக எழுந்து நாற்காலியிற் போய் உட்கார்ந்து தரையை நோக்கியவாறே வெகு நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தான். பிறகு தலையை நிமிர்த்தி ஏதோ சிந்தனையோடும் ஒரு புறம் பார்க்கவே அவன் முன் ஸ்ரீரங்கத்தில் கற்பழித்த பெண்ணின் உருவம் அப்படியே தத்ரூபமாய் அவன் எதிரில் நிற்பதாகத் தோன்றிற்று. தான் அவமானப்பட்டு நிற்பதை நோக்கி அந்த ரூபம் தன்னைப் பரிகசிப்பதுபோன்ற தோற்றம் அவன் மனத்திற் பட்டு மிகுதியும் வருந்தினான். பிறகு உன்னிப்பாய்ப் பார்க்கவே அவ்வுருவம் தான் கற்பழித்த பெண் அல்லவென்றும் சுவரில் மாட்டியிருக்கும் ஒரு படமென்றும் தெரிந்தது. அதை எடுத்துப் பார்க்கவே தனக்குத் தெரிந்த-தன்னால் மானபங்கமடைந்த-பெண்ணின் உருவமாகவே அப்படம் இருந்தது. தன் துராகிருதமான விஷயத்தை அறிந்து தன் மனைவியே தன்னைப் பரிகசிப்பதற்காக அப்படத்தை அங்கே வைத்திருக்கிறாளென்று எண்ணினான். பிறகு அங்கே இருந்தவர்களை விசாரிக்கவே, அப்படம் ருக்மிணியின் படமென்றும், அப்படத்தில் இருக்கும் பெண்தான் அவன் மனைவியென்றும் தெரியலானான்; திடுக்கிட்டான். அந்தச் சமயத்தில் அவன் மனம் இருந்த நிலைமையைச் சொல்வது

கஷ்டம். தனியாக ஒரு புறம் சென்று தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தான். ருக்மிணியின் ருதுசாந்திக்காகப் பணம் கேட்ட பழைய விஷயமெல்லாம் அவன் ஞாபகத்திற்கு வந்தன. தனது பெற்ருேரின் கொடுமையை, பணத்தின் பேராசையை, செய்த அக்கிரமத்தை, நினைத்து நினைத்து அவர்களைச் சபித்தான். உமது மனைவியிடமும் வரதக்ஷிணை வாங்கினீரோவென்று தன்னை ருக்மிணி ஸ்ரீரங்கத்தில் கேட்டதை நினைத்துக்கொண்டு, சாந்திக்கல்யாணத்துக்காகப் பணம் பறித்த தனது பெற்ருேர்கள், தன் விவாகத்தின் போதும் வரதக்ஷிணை வாங்காமல் இருந்திருப்பார்களா, வாங்கியே இருப்பார்கள் என்று தனக்குள் சொல்லொணுத் துக்கத்தை யடைந்தான்.

பின் அங்கே பல தபால் கடிதங்கள் ஒரு இரும்புக் கம்பியில் கோத்திருக்கக் கண்டு சாதாரணமாக அதைப் பார்க்கப்போகத் தனது தாயார் ருக்மிணியின் அன்னைக்கு எழுதியிருந்த கண்டிதமான கடிதம் அவன் கண்ணில் தென்பட்டது. அதை உடனே எடுத்து முற்றும் வாசித்தான். அதில் ருக்மிணி தனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்ததாகவும் அக்கடிதத்திற்குப் பதிலாகத் தனது தாயார் ஆயிரம் ரூபாய் தராவிட்டால் சாந்தி முகூர்த்தம் நடத்தவே முடியாதென்றும் அதுவும் ஜல்தியாய்க் கொடாவிட்டால் வேறு கல்யாணம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமென்றும் வெகு கண்டிப்பாய் வரைந்திருந்ததையும் கவனித்தான். ருக்மிணி காணுமற்போன துக்கம் ஒரு பக்கம் சகிக்கொணுத வேதனையாயிருக்க, தன் பெற்ருேரால் ருக்மிணியின் தாய் தந்தையர் அடைந்த கஷ்டமும், அவளை மனம் ஒப்பி ஸ்ரீரங்கத்திற்கு அனுப்ப நேர்ந்த கண்ணராவியும், யாவும் சேர்ந்து நினைக்க நினைக்க ராஜேந்திரன் நெஞ்சை அடைத்தன. பிறகு தனது மாமியாரை விசாரிக்க வரதக்ஷிணை ஐயாயிரம் வாங்கப்பட்ட விஷயமும் தெரிந்தது.

உலகத்தின் தன்மைகளைப் பற்றியும் விவாக விஷயத்தில் வரதக்ஷிணை யென்னும் பிசாசு குறுக்கிட்டுச் செய்யும் விபரீதங்களைப் பற்றியும் எண்ணி எண்ணி அவன் மனம் புண்ணுனன். இதைப் பின்னும் விவரித்தல் துயரப் பெருக்கே!

சாந்திக்கல்யாணத்திற்காக வந்திருந்தோர் அனைவரும் தத்தம் வீடுகளுக்குச் சென்றார்கள். ருக்மிணியைப் பற்றி ஒரு செய்தியும் தெரியவில்லை. எங்கும் அகப்படவே இல்லை. திருவேங்கடம்மாளும் ராகவாசாரியும் தங்களுக்கு நேரிட்ட விதியைப் பற்றியும் ருக்மிணி காணமற் போனதைப் பற்றியும் பிரலாபித்தபடியே இருந்தார்கள். ராஜேந்திரன் தனது மாமனரையும் மாமியாரையும் நமஸ்கரித்து அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் ருக்மிணிக்குப் பிறகு தான் வேறு எவரையும் கண்ணெடுத்தும் பாரேன் என்று கூறினன். உடனே துப்பறிவதில் நிபுணனான திருவல்லிக்கேணிக் கோவிந்தனுக்குத் தந்தி யடித்து வரவழைத்து ருக்மிணி காணமற்போனதைக் கூறி எவ்விதமும் அவளைக் கண்டு பிடித்துக் கொடுத்தால்தான் தன் பிராணன் நிற்கும் எனப் புலம்பினன்.

அதற்குக் கோவிந்தன், ருக்மிணி காணமற் போனதற்கு எவ்வித விவரமும் காரணமும் தெரியவில்லை. வீட்டில் இருந்த பெண் திடீரென்று காணமற் போயிருக்கிறுள் என்று மட்டும் சொல்லுகிறீர்கள். இதற்குமுன் நடந்த விஷயங்களை ஒளிக்காமற் சொன்னல் மட்டும் கண்டு பிடிக்கக் கூடும் என்று சொல்லியும் ராஜேந்திரன் வெட்கப்பட்டுக்கொண்டு சொல்லாததால் கோவிந்தன் தன்னல் கண்டுபிடிக்க முடியாதென்று சொன்னர். ராஜேந்திரன், "நீங்கள் தாம் எனக்குக் கதி; உங்களால் தான் ருக்மிணியைக் கண்டுபிடிக்க முடியும். நீங்கள் அவ்விதம் கண்டு பிடிப்பதாக வாக்குத் தராவிட்டால் என் ஜீவன் நில்லாது; எனது வாழ்க்கை இத்துடன் முடியவேண்டியதே" என்

ருன். அதற்குக் கோவிந்தன் ஒருவருக்கு ஒரு வாக்குத் தந்து அவரை நம்ப வைத்து ஏமாறச்செய்வது தம் வழக்கமல்லவென்றும். அதன் சம்பந்தமாய் எப்போதேனும் துப்புத் துலங்குமானால் தாம் அந்தச் சமயத்தில் பிரயாசை எடுத்துக்கொள்ளத் தடை இல்லை என்றும் கூறி விடைபெற்றுச் சென்றார். ராஜேந்திரனிடம் இப்படிச் சொல்லிவிட்டாலும் கோவிந்தன் படிப்படியாய் விசாரித்து ருக்மிணி ஸ்ரீரங்கம் சென்றதையும் ஸ்ரீரங்கத்தில் நடந்த விஷயங்களையும் தெரிந்துகொண்டார். கற்பழித்தது மட்டும் ராஜேந்திரனென்று அவருக்குத் தெரியாது. ஆகையால் அவ்விஷயங்களை ராஜேந்திரனிடம் சொன்னால் மன வருத்தம் அதிகம் உண்டாகுமென்று நினைத்துப் பின் ஆராய்ச்சி செய்யவில்லை.

இப்படியே ஒரு வருஷம் கழிந்தது. ருக்மிணியின் பிரஸ்தாபமே இல்லை; அவள் அகப்படவும் இல்லை. ராஜேந்திரனின் பெற்றோர்கள் இன்னொரு கல்யாணம் செய்தால் சுமார் பத்தாயிரம் ரூபாய் பெறலாமென்னும் எண்ணத்தால் மகனை இன்னொரு விவாகம் செய்துகொள்ளும்படி வெகுவாக வற்புறுத்தியும் அவன் அதற்கு முற்றும் மறுத்து விட்டான். ருக்மிணியின் பெற்றோர்கள் உங்கள் வீட்டில் சம்பந்தம் செய்துகொண்டு பட்ட பாடு போதும். இனி இன்னொரு பெண் வீட்டாரும் உங்களிடம் அகப்பட்டுக்கொண்டு அந்தப் பாடுகளைப் பட வேண்டாமென்று கடிந்து தீர்மானித்துக் கூறிவிட்டான். அவர்களுக்கும் தமது குடும்பம் இத்துடன் முடியும்படி யாயிற்றே என்றும், தாங்கள் சாந்தி வரதக்ஷிணைக்கு ஆசைப்படப்போய்க் காலத்தில் சாந்திக்கல்யாணம் நடத்தாததால் பெண் வேறு யாரையோ நேசித்து வெளியேறி விட்டாளென்றும், இவ்வளவும் அதனால் வந்த விபரீதங்களல்லவா என்றும் மன வேக்காடு அடைந்து அதே ஏக்கத்தாலேயே

சில வருஷங்களுக்குள் ஒருவர்பின் ஒருவராய்க் காலஞ் சென்று போனார்கள்.

சென்னைக்கு வந்ததும் ராஜேந்திரன் ருக்மிணியின் பெற்றோர்களிடமிருந்து வரதக்ஷிணையாக வாங்கிய ரூபாய் களுக்கு அன்றையவரையில் வட்டி போட்டுத் தன் மாமனா ராகிய ராகவாசாரி பேருக்கு நல்ல நிலம் வாங்கி அப் பத் திரத்தை அவருக்கு அனுப்பிவிட்டான்.

தான் ருக்மிணியின் மனத்தை நோக வைத்ததன் பலனே இவ்வாறெல்லாம் வந்து சூழ்ந்ததென்றும், ருக்மிணி யின் பெற்றோரைப் படுத்திய பாடுகளெல்லாம் தன் குடும் பத்திற்குத் தீராச் சாபமாகச் சூழ்ந்தனவென்றும், தான் இனி ருக்மிணியைப் பார்ப்பது சந்தேகமேயென்றும் அவள் தற்கொலை புரிந்துகொண் டிருப்பாளென்றும் கருதி மனம் அழிவதானான். தன் பிரிய ருக்மிணியின் படத்தைப்போல் ருக்மிணியின் அளவில் நாலைந்து படங்கள் எழுதுவித்துத் தனது வீட்டில் பல இடங்களிலும் அவற்றை வைத்து ஸதா அவளுடைய ஞாபகமே மேலிட்டவனாகி வரதக்ஷிணை யின் அலங்கோலம் செய்யும் கூத்து இதுவோவென்று நொந்தவனாய்த் தன் காலத்தைக் கழித்து வந்தான். பெருந் தீங்குகளிலிருந்தே ஆத்ம ஞானமும் அவசியமான சீர்திருத் தங்களும் ஏற்படுவது பிரகிருதியின் சுபாவம்; அங்ஙன மாகவே இவ் வரதக்ஷிணைக்கும் ஒரு முடிவு காலம் தோன்ற வேண்டுமென்று கோருகிறோம்.

---

## 2. புத்திரனின் சந்திப்பு

'மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்'—திருக்குறள்

உலகத்தில் மனிதர் தைரியமாய்க் காலூன்றி ஓடி யாடித் திரிவதெல்லாம், எதிர்ப்படும் லௌகிக கஷ்டங் களைச் சகிக்குந் திறனெல்லாம் வீட்டினுள்ளிருக்கும் அவர்

களது மனையாளிடத்தே காணப்படும் ஒருவகைச் சக்திப்பிர பாவத்தினுல்தான். தாய்க்குப் பின் தாரமாக அம்மடநல் லாள் ஊட்டும் உற்சாகத்தில்-ஆதரிப்பில்-அரவணைப் பில் அவன் எவ்விதக் கஷ்ட நிஷ்டூரங்களையும் ஏற்றுச் சகித்தற்கான வல்லமை பெற்றவன் ஆய்விடுகிருன். பிரதி யொரு மனிதனுக்கும் இத்தகைய சக்தி உண்டுபண்ணு வதே விவாகத்தின் உள் நோக்கம். இவ்வாருன சக்தி யொன்றினை ஒருவன் அடையப் பெற்றிருந்தும் பிராரப்த கர்மவசத்தால் அதனை இழந்து விடுவாஞகில் நமது கதா நாயகனின் கதிதான் அவனுக்கும். இந்த அபூர்வ சக்தியினை வரதக்ஷிணை யென்னும் சுழற்காற்றில் அலங்கோலப்படுத் துவது ஹா! என்ன கொடுமை! கண்ணராவி!!

முந்தின அத்தியாயத்திற் கண்ட சம்பவங்கள் நடந் தேறிய மூன்று வருஷங்கள் வரையிலும் ராஜேந்திரன் லௌகிக சுகங்களை உதறின சந்நியாசிபோல் உலகத் தையே வெறுத்த ஞானியாகத் தோன்றுவதாஞன். எந்த விதமான காரியங்களிலும் அவனுக்குச் சிந்தை செல்ல வில்லை. தன் உயிரினும் அருமையாக ஒரு காலம் போற்றிய புஸ்தகங்களெல்லாம் கரையான் அடித்துப் பாழானதையும் அவன் கவனித்தானில்லை. தனது அபரிமிதமான சொத் துக்களிலிருந்து வந்துகொண் டிருந்த ஏராளமான வரு மானத்தையேனும் அவற்றின் செலவுகளையேனும் கண் ணெடுத்தும் பார்ப்பதில்லை. காரியஸ்தர் யோக்கியரானபடி யால் இதைப் பல தடவைகளில் கேட்டுப் பார்த்து, அவரது இஷ்டம்போல் சகல நடவடிக்கைகளையும் நடத்தச் சொல்லி விட்டதாலும் அவரால் கூடியவரையில் தேற்ற முயன்றும் முடியாததாலும், வேறு வழியின்றி, தாமே எல்லா நடவடிக் கைகளையும் எவ்வளவுக்குச் சுருக்கமாய்ச் செய்யக்கூடுமோ அவ்வளவுக்கு முயன்று நிர்வகித்து வந்தார். போஜன காலங்களில் மட்டும் அவர், ராஜேந்திரன் என்ன விதமாக

மறுத்த போதிலுங்கூட வெகு சிரமத்துடனும் கட்டாயப் படுத்தியும் தேகம் இளைத்துப் போகாதபடி காத்துவந்தார். சட்டத்திற்கு ஒவ்வாவிட்டாலும் உண்மையில் பந்துக்களை விட நேசர்களுக்குத்தானே அதிக பாத்தியதை தீ பாந்தவ்யம்!

ராஜேந்திரன் தன் மனைவியைக் குறித்து எந்தச சமாசாரமாவது தெரிவிப்பவர்களுக்கு இருபதாயிரம் ரூபாய் வெகுமதி தருவதாகச் சென்னையிலும் அயல் தேசங்களிலும் பிரசுரமாகும் பல பாஷைப் பத்திரிகைகளிலும் பிரகடனம் செய்ததோடு தன் அருமைக் காதலியின் படத்தையும் மேற்கண்ட பத்திரிகைகளிலெல்லாம் வெளியிட்டான். அவளைப்பற்றிய எந்த விதமான விவரமாவது தெரிவிப்பவர்களுக்கு ரூபாய் இருபதாயிரம் கொடுக்கப்படுமென்றும், அப்பெண் இருக்குமிடம் காட்டுபவர்கள் ஐம்பதாயிரம் ரூபாயை அப்பொழுதே இனமாகப் பெறலாமென்றும் அறிவித்திருந்தான். என்ன செய்தும் பயன்படவில்லை. தன்னால் கூடியவரையில் பற்பல நாடுகளில், ஊர்களில் தானுகவே தேடியும் பார்த்தான். அப்பெண்மணியைப் பற்றிய விவரம் கிஞ்சித்தாவது கிடைக்கவேயில்லை. அவன் தன் தைரியத்தை இழந்து விடும்படிக்கு அவ்வளவு பயமடைந்தான்; பலவீனமுற்றுன். சென்றுபோன விஷயங்களையெல்லாம் நினைத்தபொழுது அவன் கண்ணீர் கன்னங்களின் வழியாய் வடிந்தது. இப்படிப் பல தினங்கள் சென்றன; பல மாதங்கள் ஆயின; பல வருஷங்களும் போயின.

மனிதர்களுக்கு ஏற்படும் பெரும் விசாரங்கள் நாளாவட்டத்தில் குறைந்துகொண்டு வருவது சகஜமானதாலும், தன் உண்மையான காரியஸ்தரும், ஆப்த நண்பருமான ராகவனும் வெகுவாய் எடுத்துக் கூறியதாலும், அவருடைய வற்புறுத்துதலுக்குக் கட்டுப்பட்டு பண லேவாதேவி செய்யும், 'ருக்மிணிபாங்க்' என்னும் நாமம் படைத்த

ஒரு வியாபாரம் ஆரம்பித்து அதற்கு ராகவன் முதல் ஒன்றும் போடாவிட்டாலும் அவரையும் அதில் சமபாகஸ்தராக்கிச் சகல நடவடிக்கைகளையும் ராகவனைக்கொண்டே நடத்தி வந்தார். அப்போதுகூட ராகவன் கட்டாயப்படுத்துவதற்காக ராஜேந்திரன் பாங்கிக்குக் குறித்த வேளையில் வந்து போவதே தவிர, உண்மையாக என்ன வியாபாரம் நடக்கிறதென்றும், பாங்கிக்கு எவ்வளவு லாபம் வந்ததென்றும், அவர் தெரிந்துகொள்ள முயலவில்லை. ராகவனுடைய சாமர்த்தியமான நிர்வாகத் திறமையால் பாங்கியின் வியாபாரம் பெருகி வரவே, சென்னையிலுள்ள பிரசித்தமான பாங்குகளில் ருக்மிணி பாங்கும் ஒன்றென்றும், அது மிகச் சிறந்ததென்றும், அதிக ஐசுவரியம் உடையதென்றும் எங்குமே பிரக்யாதி உண்டாயிற்று.

இவ்வாறு பதினைந்து வருஷங்கள் சென்ற பின்னர் அந்தப் பாங்கியில் இருந்துகொண்டு இதுகாறும் ரூபாய்கள் கொடுத்து வாங்கி வந்த காஷ்கீப்பர் என்ற முக்கிய உத்தியோகஸ்தர் இறந்து போனார். அவருக்கு அடுத்த படியிலிருந்த இரண்டாவது காஷ்கீப்பரை அவ்வேலைக்குக் கொண்டு வர ராகவனுக்கு நம்பிக்கை இல்லாததால் இஷ்டமில்லை. ஆகவே தக்க ஜாமீனுடன் தகுந்த ஆள் வேண்டுமென்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார்கள்.

ருக்மிணி பாங்கியில் பெருத்த லேவாதேவி செய்யும் பினாங்கிலுள்ள பாங்கியார் தக்க மனிதனை அனுப்புவதாகத் தந்தியடித்தார்கள். தந்தி வந்த பத்து நாட்களுக்குப் பின் சுமார் 18-வயதுடைய ரங்கநாத் என்பவர் பினாங்கு பாங்கியிலிருந்து சிபார்சுக் காகிதமும் ரொக்க ஜாமீன் கொடுப்பதற்காக உண்டியல் காகிதமும் கொண்டுவந்து கொடுத்து முதல் காஷ்கீப்பர் வேலையில் அமர்ந்தார். அவர் வயது இளவயதாயிருந்தாலும் நல்ல யோக்கியரென்றும் வேலையில் கெட்டிக்காரரென்றும், எல்லோருக்கும் நல்லவரென்

றும் பேரெடுத்து வேலையைச் செவ்வையாகப பார்த்து வந்தார். வந்தவுடனே வேறு வீடு அமர்த்திக்கொண்டு வேலைக்காரனை வைத்துச் சமையல் செய்யச் சொல்லி சாப்பிட்டு வந்தாலும், அவர் நடந்துகொண்ட நல்ல மாதிரியிலிருந்து ராகவன் தம் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டு தம் வீட்டிலேயே ஜாகை வைத்துக்கொள்ளும்படி சொல்லி அவருக்குத் தனியாக இரண்டு அறைகள் கொடுத்து வேண்டிய சௌகரியங்கள் செய்விக்கும்படி செய்தார்.

ராகவனுக்குச் சுமார் 13-வயதுடைய லக்ஷ்மி யென்னும் அழகான புத்திரி ஒருத்தி இருந்ததாலும் ரங்கநாத் வீட்டிலிருக்கும் சமயத்தில் அப் பெண்ணுடன் வார்த்தையாடிக் காலம் போக்குவது வழக்கமாதலாலும் ரங்கநாத்தும் லக்ஷ்மியும் அதிகப் பிரியமாய் இருப்பது சகஜமானதாலும் ராகவன் தம் பெண்ணை ரங்கநாத்துக்குக் கல்யாணம் செய்து கொடுப்பது சிலாக்கியமென்று எண்ணியிருந்தார்.

இவ்விடத்தில் விஷயங்கள் இவ்வாறு இருந்துகொண்டிருக்கச் சென்னையில் பிரசுரமாகும் பத்திரிகையில் பின்வரும் விளம்பரம் வெளிவந்தது.

> "......ஷ ஜனவரிமீ 4௳ ஸ்ரீரங்கத்திற்கு வந்து பத்திரிகையில் வெளியிட முடியாத சில ரகசியமான விஷயங்கள் நடத்திப்போன 'ராஜு' என்பவர் உயிரோடிருந்து உடனே அவ்விஷயத்தை அடியில் கையொப்பமிட்டிருப்பவர்களுக்குத் தெரிவித்தால் ராஜு என்பவருக்கு அநுகூலமான சில முக்கிய விஷயங்கள் தெரிவிக்கப்படும்.
>
> உண்மை விளம்பி.

குறிப்பு: 'பத்திரிகை மானேஜர் பார்த்து உண்மை விளம்பிக்குக் கொடுப்பது' என்று கடிதமாவது தந்தியாவது அனுப்பினால் சேரும்.

இவ்விளம்பரத்தை ராகவன் பார்த்து ராஜேந்திர னிடம் காண்பித்தார். ராஜேந்திரன் தமது வழக்கம்போல் பாராமலே, 'சரிதான் பார்த்தாய்விட்டது' என்று சொன்னார். ராகவன் மறுபடியும் ராஜேந்திரனைக் கட்டாயப்படுத்திப் பார்க்கச் சொன்னார். ராஜேந்திரன் படித்துப் பார்த்ததும் முகம் மலர்ந்தது. திசை வழி தெரியாமல் அநேக மாதங்களாய் நடுச் சமுத்திரத்தில் திண்டாடிக்கொண்டிருக்கும் ஒரு மாலுமிக்குத் திடீரென்று கரை தென்பட்டால் எவ்வளவு ஆனந்தம் உண்டாகுமோ அவ்வளவு ஆனந்தம் உண்டாயிற்று. தமது நண்பர் ராகவனை அழைத்துக்கொண்டு மோட்டார் வண்டி ஏறி உடனே பத்திரிகை ஆபீசுக்குப் போய் அந்த விளம்பரம் போட்டவர்கள் யாரென்று விசாரித்தார். ரங்கூன் மாண்ட்கோமரி தெரு 38-வது கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும் சுந்தராசாரியின் பத்தினியாகிய வேதவல்லியம்மாள் எழுதியாகத் தெரிந்த தன் பேரில் அன்றே ரங்கூனுக்குப் போகும் கப்பலில் இருவருமாகப் பிரயாணம் செய்து குறிப்பிட்ட விலாசத்தில் போய் விசாரித்தார்கள். அப்போது சுமார் 50-வயதுடைய வேதவல்லியம்மாளென்ற ஒரு கிழவி அங்கே அழுதுகொண்டிருப்பதாகத் தெரிந்து அவளைப் போய்ச் சமாதானப் படுத்தி, "வேதவல்லியம்மாளென்பது தாங்கள்தாமா?" என்று கேட்டார்கள். அந்தப் பேருடைய துர்ப்பாக்கியவதி தான்தானென்றும், அந்த வயதில் புருஷனை இழந்து அவதிப்படும் சமயத்தில் தம்மைத் தொந்தரவு செய்பவர்கள் யாரென்றும் கேட்டாள்.

ராகவன்: அம்மா! தாங்கள் சென்னைப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்த விளம்பரத்தைக் கண்டு கடிதம் எழுதினால் திருப்திகரமா யிருக்காதென்று விஷயம் தெரிந்து போவதற்காக நேரில் வந்தோம். தாங்கள் குறிப்பிட்ட தேதியில் ஸ்ரீரங்கம் வந்த ராஜு—வென்பவர் இதோ நிற்பவர்

தாம். தாங்கள் என்ன சொல்ல உத்தேசித்தீர்களோ அதைத் தாமதமின்றிச் சொல்லக் கோருகிறேன்.

வேதவல்லியம்மாள்: ஐயா! அதுவோ ரகசியமான விஷயம். இவர்தாம் அந்த ராஜுவென்பதற்கு என்ன சாட்சியமிருக்கிறது? போதிய திருஷ்டாந்தரம் சொன்னால் நான் தெரிவிக்க வேண்டியதைக் கூறுகிறேன்.

ராகவன்: ராஜேந்திரனென்றும் ராஜு என்றும் அழைக்கப்படுபவர் இவர்தாம் என்பதாக இவ்வூரிலுள்ள எந்தத் தனவந்தரும் சொல்லுவார்கள். தங்களுக்கு இன்னும் சந்தேகம் இருந்தால் தங்களுக்கு யார் வார்த்தையில் நம்பிக்கையுண்டோ அவர் பேரைச் சொன்னால் அவரைக்கொண்டு ரூபிக்கிறோம்.

வேதவல்லியம்மாள்: இவர் பேர் ராஜேந்திரன் அல்லது ராஜுவென்று ரூபிப்பீர்கள்; உண்மைதான். ஆனால் நான் சொல்லும் ராஜு இவர்தாம் என்பதற்கு என்ன அடையாளம்?

ராகவன்: தங்கள் சந்தேகத்தை எப்படி நிவர்த்தி செய்வதென்று எங்களுக்குத் தெரியவில்லை.

வேதவல்லியம்மாள்: தங்கள் நண்பர் அந்த ராஜுவாயிருந்தால் அன்று இரவு அவர் ஞாபகார்த்தமாக என்ன என்ன வஸ்துக்களைக் கொடுத்து வந்தாரென்பதை யோசித்துச் சொல்லட்டும்; பார்ப்போம்.

ராஜேந்திரன்; அம்மா! ஞாபகப்படுத்திச் சொல்லவேண்டிய தொன்றுமில்லை. எனது பேர் பதித்த வைர மோதிரம் ஒன்றும், சரிகை புட்டாபோட்ட எனது மதுரைத் தலைக் குட்டையும் எனது ஞாபகார்த்தமாய் வைத்துக்கொள்ளச் சொன்னேன். எனது மனைவியைப்பற்றிய விவரம் அறிய சுமார் 18 வருஷ காலமாக அதிக ஆவலுடையவனாக இருக்கிறேனாதலால் இனியாகிலும் தாமதியாமல் என் பத்தினி உயிருடனிருந்தால் எங்கே இருக்கிறாளென்றும் இல்லாவிட்

டால் அவளைச் சேர்ந்த விஷயங்களையும் சொல்லப் பிரார்த்திக்கிறேன்.

வேதவல்லியம்மாள்: தங்களைப் பார்த்தால் நல்லவர்களாய்த் தோன்றுகிறது. சொல்லவோ எனக்கு நாவெழவில்லை. சொல்லியும் தீரவேண்டியிருக்கிறது. தங்கள் சம்சாரம் இறந்து அநேக வருஷங்கள் ஆயின.

உடனே ராஜேந்திரன் வேரற்ற மரம்போல் மூர்ச்சித்துக் கீழே விழுந்தார். ராகவன் தண்ணீர் கொண்டுவந்து முகத்தில் அடித்துச் சைத்தியோபசாரஞ் செய்ததில் சுமார் கால் மணி நேரத்திற்கு அப்பால் அவனுக்குப் பிரக்ஞை வந்து கண் விழித்துக் பார்த்ததும் புத்தி சுவாதீனம் அடையவே தம் பெண்சாதியைப் பற்றிய விவரங்களை அறிய விரும்பி எழுந்து உட்கார்ந்து மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு சவிஸ்தாரமாய் எங்கே இறந்தாளென்றும் எப்படி இறந்தாளென்றும் சொல்லும்படி கேட்டார்.

வேதவல்லியம்மாள்: ஐயா, எனக்குத் தெரிந்தவரையில் வஞ்சனை இல்லாமல் சொல்லிவிடுகிறேன்...௵ அக்டோபர் மீ 28௳ புதன்கிழமை இரவு, நான் பிட்டாபூர் ஸ்டேஷன் வந்து ரெயிலுக்காகக் காத்திருந்தேன். அப்போது சுமார் 16 வயதுடைய ஒரு மாது அதிகமாய் மெலிந்து அடிமேல் அடி வைத்துக்கொண்டு இடுப்பில் சுமார் 20 நாள் வயதுடைய ஒரு குழந்தையைச் சுமந்துகொண்டு ஒரு சிறு மூட்டையை வலது கையில் பிடித்துக்கொண்டு தனியாய் வந்து உட்கார்ந்தாள். அவளைப் பார்த்த மாத்திரத்தில் ஆபரணங்கள் ஒன்றும் அணிந்திராவிட்டாலும் அவள் நல்ல ஸ்திதியிலிருந்த பெண்ணென்றும், காலத்தின் கொடுமையால் அக்கதிக்கு வந்தவளென்றும் நினைத்துக் கொண்டு அவள் தனியாய் வந்த காரணம் என்னவென்று கேட்டேன். தான் ஓர் அநாதையென்றும் தனக்குப் பந்துக்கள் யாரும் இல்லையென்றும் சொல்லிக் கண்ணீர் விட்டாள்.

அதற்குள்ளாக ரெயில் வரும் நேரம் ஆனதால் நாங்கள் இருவரும் டிக்கட் பெற்று வண்டியேறிஞேம். இருந்தாற்போல் இருந்து மின்னலும் இடியும் அகோரமாய் வந்து சுமார் மூன்று மணி நேரம் விடாமழை பெய்ததோடு பக்கத்தில் நிற்கும் மனுஷாள்கூடத் தெரியாமல் அவ்வளவு இருண்டிருந்தது. அப்போது அவள் தனக்கு மரணம் சமீபித்து விட்டதாகக் குறிகள் தெரிவதாகச் சொல்லி, ஒருவேளை அன்று இரவே அவள் இறக்க நேரிட்டால் தான் கையில் வைத்திருக்கும் மூட்டையில் எழுதி வைத்துள்ள கடிதத்தில் கண்டபடி குழந்தையை ஒப்பித்துவிடும்படி என்னை வேண்டிக்கொண்டதோடு சத்தியமும் செய்து கொடுக்கும்படி வெகுவாய்க் கெஞ்சிக் கேட்டதன் பேரில் சத்தியமும் செய்து கொடுத்தேன்.

அப்போது, அநேக மாதங்களுக்கு முன்னமே தான் இறந்திருப்பாளென்றும் தன் கையில் வைத்திருந்த பிள்ளை வயிற்றில் இருந்ததால் தான் கர்ப்பத்தோடு இறக்கக்கூடாதென்று நினைத்து அதுவரையில் உயிர் வைத்திருந்தாளென்றும் இனி தான் ஜீவித்திருக்க மாட்டாளென்றும் குழந்தையை ஒப்பிக்கும் வரையில் என் குழந்தையைப்போல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டாள்.

அவள் பலவீனமாக இருக்கிருளே யொழிய வேறல்லவென்றும் அவள் இறக்கமாட்டாளென்றும் நான் தேறுதல் சொல்லிக்கொண் டிருக்கும்போதே திடீரென்று தவறுதலாய் எதிரில் வந்த ரெயில் வண்டியோடு நாங்கள் போய்க் கொண்டிருந்த ரெயில் முட்டினதில் சில வண்டிகள் நெருப்புப் பற்றிக்கொண்டும் சில வண்டிகள் தண்டவாளக் கம்பியை விட்டுக் கீழே விழுந்தும் எரிந்துபோயின. அதில் நெருப்பால் இறந்தவர் பலர்; வண்டியின் பலகைகளுக்குள் நசுக்குண்டு இறந்தவர் அநேகர்; இன்னும் பலவிதங்களாய்

உயிர் துறந்தவர் வெகுபேர். அந்த ஆபத்தை இப்போது நினைத்தால்கூட என் உடம்பு நடுக்கம் கொடுக்கிறது.

என்னுடன் வந்த பெண், இரண்டு பலகைகளுக்குள் நசுக்குண்டு இறந்து கிடந்தாள். ஆனால் அவள் குழந்தை மட்டும் பக்கத்தில் அழுதுகொண் டிருந்தது. எனக்குக் காலிலும் கையிலும் மட்டும் அடிபட்டு மூர்ச்சித்து விழுந்து விட்டேன். சுமார் ஒரு மணி நேரத்திற்கு அப்பால் ஜனங்கள் எனக்கு மூர்ச்சை தெளிவித்த பின் என்னுடனிருந்த பெண் என்ன ஆனளென்று பார்த்தபோதுதான் இவ் விஷயங்கள் தெரியவந்தன. அவள் இறந்து போய்விட்டாளென்று டாக்டர்கள் சொன்னதால், அந்தக் குழந்தையையும் மூட்டையையும் மட்டும் எடுத்துக்கொண்டு ரெயில்வே அதிகாரிகளின் உதவியால் வீடு வந்து சேர்ந்தேன்.

என் புருஷனிடம் நடந்த விருத்தாந்தங்களைச் சொன்னதோடு, அக்குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்க்கும்படியும் சொன்னேன். பிறகு என்ன நடந்ததென்றே எனக்குத் தெரியாது. எனக்கு ரணஜன்னி பிறந்ததென்றும் மூன்று மாதங்கள் பிரக்ஞையில்லாமல் கிடந்தேனென்றும், தெரிந்தது. நான் பிரக்ஞையற்றிருக்கும்போது மூட்டையை எங்கோ போட்டுவிட்டார்கள். அப்பால் தேடியதில், "மூட்டையேது மண்ணேது! நீ பிழைத்து வந்ததே துர்லபமாயிற்றே! மூட்டையை எங்கே கொண்டு வந்தாய்?" என்று என் புருஷன் சொல்லிவிட்டார். குழந்தை இன்னருடையதென்று தெரியாததால் என் குழந்தையைப்போல் நானே வளர்த்து வந்தேன்.

இப்போது ஒரு மாசத்திற்கு முன் திடீரென்று வாந்திபேதியால் என் புருஷன் இறந்துபோய்விட்டார். எங்களுக்குப் பிள்ளையில்லாததால் அப்பிள்ளையைச் செல்லப் பிள்ளையாக வளர்த்து வந்தோம். அவன் சரிவரப் படிக்காமல் விளையாடித் திரிகிறன். என் புருஷன் இறந்தபின் ஒரு

நாள் அடுப்புக்குக் கட்டைகள் இல்லாததால் பரணைமேல் ஏறிக் கட்டைகள் ஏதாவது மூலையில் இருக்கின்றனவா என்று பார்க்கையில் அவ்விடத்தில் ஒரு மூட்டை கிடந்தது. அம்மூட்டையை எடுத்து வெளிச்சத்தில் பார்த்ததில் சுமார் 19-வருஷங்களுக்கு முன் அப்பெண்ணால் கொடுக்கப் பட்ட மூட்டையென்று தெரிந்து அதை அவிழ்த்துப் பார்த் ததில் அதில் ஓர் ஐம்பது ரூபாய் நோட்டும் ஒரு காகிதமும் தலைக்குட்டையும் ஒரு புடைவையும் இருந்தன. அந்தக் கடிதத்தின்மேல் எழுதியிருந்ததைப் பார்த்த உடனே நான் சொத்துக்காரரிடம் சொத்தை ஒப்பிக்கக் கருதி அவள் கேட்டுக்கொண்டபடி அந்த விளம்பரத்தைப் பிரசுரித்தேன். இதோ இருக்கிறது பாருங்கள் அந்தக் கடிதம்.

இப்படிச் சொல்லி ஒரு கடிதத்தைக் கொடுத்தாள். கடிதத்தின் பேரில் பின்வரும் விஷயங்கள் எழுதப்பட் டிருந்தன:

"திடீரென்று மரணம் நேரிட்டால் இந்த மூட்டை யை எடுக்கும் கனவான்களாவது சீமாட்டிகளாவது இதில் அடக்கம் செய்திருக்கும் ரூபாய் 50 நோட்டை விளம்பரச் செலவிற்கு வைத்துக்கொண்டு பின்னால் குறிப்பிட்ட விளம்பரத்தைச் சென்னையில் பிரசுரமாகும் பத்திரிகைகளில் வெளிப்படுத்தும்படிக்கும், அதைக் கண்டு எவராவது வந்து தம் பேர்தாம் ராஜூவென் றும் தாம்தாம் விளம்பரத்தில் குறிப்பிட்ட ஆசாமி யென்றும் சொல்லித் தம்மிடம் கடிதத்தையும். குழந்தையையும் சாமான்களையும் கொடுக்கும்படி கேட் டால்......௵ ஜனவரி௴ 13௳ இரவு ஸ்ரீரங்கத்தில் தம் ஞாபகார்த்தமாய் அவர் கொடுத்த வஸ்துக்கள் என்ன என்னவென்று கேட்க வேண்டியது. அவர் தம் பேர் பதித்த வைர மோதிரமும் ஜரிகை புட்டா போட்ட மதுரைக் கொட்டடித் தலைக்குட்டையும் கொடுத்த

தாகச் சொன்னால் இதில் அடக்கம் செய்திருக்கும் கடிதத்தையும் குழந்தையையும் மற்றச் சாமான்களையும் அவர் வசம் ஒப்பித்து விடவேண்டியது. அவர் கட்டாயமாய்த் தக்க பரிசளிப்பார்.

ருக்மிணி''

காகிதத்தையும் தலைக்குட்டையையும் புடைவையையும் கொடுத்துவிட்டு, "குழந்தை இப்போது பெரியவனாகி விட்டபடியால் வெளியே போயிருக்கிறான்; வந்தவுடன் அழைத்துப் போகலாம் என்று சொல்லிக்கொண்டிருந்த போதே, கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிய, "மகனே உன்னைப் பிரியுங் காலமும் வந்துவிட்டதே!" என்று ஓவென்று உரத்த குரலாய் அழ ஆரம்பித்துவிட்டாள்.

ராஜேந்திரனோ அவளுடைய அழுகையையாவது விசனத்தையாவது கவனியாமல் கடிதத்தை வாங்கியதும் உறையைக் கிழித்துக் கடிதத்தை எடுத்துப் பிரித்தார். கடிதத்திற்குள்ளிருந்து தாம் தம் ஞாபகார்த்தமாய் ருக்மிணிக்கு ஸ்ரீரங்கத்தில் அன்றிரவு கொடுத்த வைர மோதிரம் பொத்தென்று கீழே விழுந்தது. அம்மோதிரத்தைக் கவனியாமல் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிந்து கொண்டே இருக்க அதனுள்ளிருந்த காகிதத்தை மும்முறை திரும்பத் திரும்ப வாசித்தார்.

## கடிதம்

"என் நாதா!

திக்கு நோக்கித் தியங்கி மயங்கித் தெரிவிக்கும் சிந்தைத் துயரம். என் பெற்றோர்கட்குக் கண் போன மாதிரியும் தங்களுக்குக் கை போன மாதிரியும் செய்து விட்டு நான் இவ்வாறு அநாதையாகத் திரியக் காலம் வாய்த்தது. வாழ்வுக்கு முன் தாழ்வு கண்டேன். கஷ்டம் கஷ்டம்! என் வாணாளைப் பற்றி எப்போதும் அதிருப்தி உடையவளாகவே மாறிவிட்டேன். நான்

எங்கே போனாலும் என் துரதிருஷ்டம் என்னைத் தொடர்ந்து ஓடி வருகின்றது.

இக்காகிதம் தங்கள் கைக்கு எட்டும்போது இதை எழுதிய அபாக்கியவதியாகிய நான் இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகிற்கு ஏகியிருப்பேனென்பது திண்ணம். தங்களை நாதா என்று அழைத்து எழுதுவதற்குக்கூட எனக்குப் பாத்தியதை உண்டென்று நான் நினைக்கவில்லை. ஏனெனில் நமது ஜாதி ஆசாரப்படி புருஷனுக்குப் பெண்ஜாதி தனக்குத் தகுந்தவளாவென்றும், பெண்ஜாதிக்குப் புருஷன் தனக்கு ஏற்றவரனவென்றும் பகுத்தறியக்கூடிய சக்தி வருமுன்னும், அதிலும் தமது சொந்த விஷயத்தில் ஒருவரை ஒருவர் இன்னாரென்றுகூடப் பார்த்து அறிந்து கொள்ளப் பக்குவமில்லாத இளவயதில்-மணம்முடித்து விட்டனர். அக்காரணமாக நமக்கு முகாலோபனம் கூட இல்லாமலே போய்விட்டது. அம்மட்டோ! வரதக்ஷிணை யென்னும் பிசாசு ஒன்று குறுக்கிட்டு நமது ஜாதியையே பாழாக்கி நம்மைக் கேவலம் இழிகுலத்தோருக்குங் கேவலமான ஸ்திதியில் கொண்டு வந்து வைத்துவிட்டது. நமது சொந்த விஷயத்தில் ஏற்பட்ட அநுபவமே இதற்குப் போதிய அத்தாட்சியாகும். தாங்களோ மிகுந்த தனவந்தர்; கல்வித் தேர்ச்சியுள்ளவர்; சொல் சக்தி வாய்ந்தவர். தாங்கள் தங்களால் இயன்ற அளவு இக்கொடிய வரதக்ஷிணை என்னும் பிசாசை நமது நாட்டினின்று வெளியேற்றப் பிரயாசைப் படுவீர்களாயின் தங்களைவிட நமது நாட்டிற்கும் குலத்திற்கும் பரோபகாரம் செய்தவர் யாரும் இரார். இதுவே எனது கடைசி வேண்டுகோள்.

நிற்க, தங்களைப் பார்த்த மாத்திரத்தில்; ஸ்ரீரங்கத்தில் அன்றிரவு, 'நான் உமது மனைவியாகவே உண்மை

யில் இருந்திருந்து இன்னொரு அன்னிய புருஷன் என்னை நீர் செய்தவாறாக மானபங்கப்படுத்தியிருந்தால் அப்போது உமது மனம் எப்படி யிருந்திருக்கும்?' என்று கேட்டபோது தாங்கள், 'உன் கேள்வி என் மனத்தைப் பிளக்கின்றது; ஆம் மிக்க அவதியடைந் திருப்பேன்; சாகவும் துணிந்திருப்பேன்' என்று சொன்ன வார்த்தைகள் உடனே ஞாபகத்திற்கு வந் தன. நான் அன்று தங்களிடம் என்ன சொன்னே னென்பதைச் சற்றுக் கவனியுங்கள். 'இந்த விஷயத்தை என் பர்த்தா அறிந்துகொள்ளும்படி நானே செய்து விடுவேன். எனது சரீரம் கெட்டுவிட்டதே யன்றி என் பரிசுத்தமான ஆத்துமா கெடவில்லை. இந்த நிமி ஷத்திலும் அது நிர்மலமாகவே யிருக்கின்றது. எனது பர்த்தாவை நான் சந்திக்கும்போது சகல சங்கதிகளை யும் கூறிவிடுவேன். அதன்மேல் அவர் என்னை ஏற் றுக்கொள்ள மனது வைத்து இணங்குவாராகில் நான் ஏதோ ஜீவித்திருக்க முடியும்; அவரது அகமோ முகமோ கொஞ்சங் கோணிற்றாகில் நான் பிராணத்தியா கம் செய்துகொள்ளுவேன்; பகவான் அறியத் திரிகரண சுத்தியாக இது சத்தியம்' என்று சொன்னேனல்லவா? தாங்கள், 'சாகவும் துணிந்திருப்பேன்' என்று சொன்ன வார்த்தையிலிருந்தே தாங்கள் முழுமனத்துடன் என்னை அங்கீகரிக்க மாட்டீர்களென்று எனக்குத் தெரியும். ஆகையால் என் எண்ணத்தின்படி நான் இறக்க வேண்டியதே யொழிய இருக்க வேண்டியதில்லை. அதே நிமிஷத்திலேயே நான் தற்கொலை செய்து கொள்வதில்லையென்று தங்களுக்குச் செய்து கொடுத்த சத்தியத்தின் கட்டு நீங்கிவிட்டது. உடனே சாகத் துணிந்து வெளியேறிவிட்டேன். சற்றுத் தூரம் சென்றதும் நான் ஸ்ரீரங்கத்திலிருந்து வந்தபின் தேகப்

பிரஷ்டை யாகவில்லையென்றும், ஆகையால் கர்ப்பமாயிருக்கிறேனென்றும் எண்ணம் உதித்து நான் தற்கொலை செய்துகொள்வது நியாயமே யொழிய தங்களுடைய சொத்தாகிய சிசுவைக் கொல்வது தர்மமல்லவென்று எண்ணி என் நாட்களை ஏகாந்தமாய்த் துக்கத்துடன் கழித்து வந்தேன். விஸ்தரிப்பதில் சுகிர்தமில்லை. பூர்ண கர்ப்பமான பிறகு ஆண் குழந்தையைப் பிரசவித்தேன். அக்குழந்தையை நான் தங்களிடம் சேர்க்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். தங்களுடைய இஷ்டப்படி அப்பிள்ளையைத் தங்கள் சொந்தப் பிள்ளையாகவோ, வேறு விதமாகவோ எவ்வாறு செய்தாலும் சம்மதமே. என் கவலை நீங்கிவிட்டது. தெரிந்தோ தெரியாமலோ நான் செய்த தவறுதல்களுக்கு அநுபவிக்க வேண்டிய பலன்களைப் பெறுவதற்காக ஸ்ரீமந் நாராயணனிடம் செல்லுகிறேன். தாங்கள் என்னை மன்னிப்பீர்களாக. இதற்குமேல் எழுத எனக்கு இஷ்டமுமில்லை; சக்தியுமில்லை.

அபாக்கியவதி, ருக்மிணி."

இக்கடிதத்தைக் கண்ணீர் உகுத்த வண்ணம் திரும்பத் திரும்ப ராஜேந்திரன் வாசித்தார். அப்பால் ராகவன் நடந்துபோன விஷயத்தைப்பற்றிச் சிந்தித்துத் துக்கப்படுவதில் சுகிர்தமில்லையென்றும் மேல் நடக்கவேண்டிய காரியங்களைப் பார்ப்பதே நல்லதென்றும் சொல்லி ராஜேந்திரனைத் தேற்றினர். சுமார் அரைமணி நேரம் பொறுத்த பின்னர் ராஜேந்திரனுடைய புத்திரனாகிய ஸ்ரீநிவாசன் வெளியிலிருந்து வந்தான். உடனே வேதவல்லியம்மாள், "அடே சீனு! இவர்தான் உன் தகப்பனர். உன்னை அழைத்துப்போக வந்திருக்கிருர்!" என்று சொல்லி சீனுவைக் கட்டிக்கொண்டு ஓவென்று அழுதாள், சீனுவும், "அம்மா! உன்னைவிட்டு நான் போகவே மாட்டேன்" என்று அழு

தான். ராஜேந்திரனும் ராகவனும் அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிய வேண்டிய பிரமேயமே இல்லையென்றும் இருவரையும் அழைத்துப் போவதாகவும் சொல்லித் தங்களுடன் இருவரையும் அழைத்துக்கொண்டு சென்னைக்குச் சென்றூர்கள். தம் மனைவியை இழக்க நேரிட்டாலும் அவள்மூலமாய்க் கிடைக்கப்பெற்ற புத்திரனுகிய சீனுவென்ற ஸ்ரீனிவாசன் பேரில் ராஜேந்திரனுக்கு எவ்வளவு பிரியம் இருக்குமென்று நாம் சொல்லவேண்டியதில்லை. தெய்வகதியால் தம் புத்திரன் சௌக்கியமாக வந்து சேர்ந்ததற்காகக் கோவில்களில் விசேஷ உத்சவங்களையும் வீட்டில் விசேஷமான விருந்துகளையும் நடத்திக்கொண்டு ராஜேந்திரன் திருப்தியாக இருந்தார். மனித வாழ்வுக்கு எவ்வகையிலாவது சமாதானப்படுத்திக்கொள்ள ஒரு திருப்தி வேண்டுமே!

---

## 3. ஓர் ஆச்சரியமான திருட்டு

'இதமுறல் எந்நாள் சேயால்?
என்றைக்கும் துன்பமானுல்?'

சென்ற அத்தியாயத்திற் சொன்ன விஷயங்கள் நடந்த மூன்று வருஷங்களுக்கப்பால் ராகவன் தனது நண்பரும் பாகஸ்தருமான ராஜேந்திரனுக்கு ஒரு கடிதம் எழுதினூர். அது பின்வருமாறு:

ராமமந்திரம்
23—7—...

அன்பார்ந்த நண்பரவர்களுக்கு,

தங்களை நித்தியமும் நான் நேரில் சந்தித்துக்கொண்டிருக்கும்போது தங்களுக்கு நான் பிரத்தியேகமாக நிருபம் எழுதப் புகுந்தது பெரிதும் ஆச்சரியமாகத் தோற்லாம்; தோற்றுந்தான். ஆனுல், தாங்கள் என்னு

டன் சம்பாஷித்த பின்தான் நான் எழுதியது நியாய மென்று தங்களுக்குத் தோன்றும். என்றைத்தினம் தங்களுக்குச் சாவகாசப்படுமோ அன்றைத் தினம் குறைந்தது ஒரு மணி நேரமாவது தாங்கள் என் வார்த்தைக்குச் செவி கொடுக்க உடன்பட வேண்டும். ஆனால் இப்போது தாங்கள் அவ்வளவு நேரத்திற்கு அதிகமாகவே நித்தியமும் என்னுடன் பேசிக்கொண் டிருக்கவில்லையா என்னும் கேள்வி பிறக்கலாம். தாங்கள் ஊர் விஷயங்களைப்பற்றி அநேக மணி நேரம் பிரதி தினமும் பேசிக்கொண் டிருந்தாலும் நமது வியாபாரத்தைப் பற்றிய பேச்செடுத்தால் உடனே, 'உன் இஷ்டப்படி செய், என்னைத் தொந்தரவு செய்யாதே, வியாபாரத்தைப் பற்றிய வார்த்தையையே என் காதில் போடாதே' என்று சொல்லி விட்டு எழுந்து போய்விடுகிறீர்கள். நான் கேட்கும் ஒரு மணி நேரத்தில் அவ்வாறு எழுந்து போய்விடாமல் நான் சொல்லும் விஷயங்களைத் தாங்கள் சற்று ஆற அமரச் சிந்தித்து அதன் பின் நான் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அதனை ஆக்ஞாபிக்கும்படி பிரார்த்திக்கிறேன். தாங்கள் கூறும் வண்ணம் நடப்ப தில் எனக்கு எவ்விதமான ஆட்சேபமுமில்லை. தங்கள் வியாபாரத்தில் நான் பேருக்கு மட்டும் பாகஸ்தன் என்று இருந்த போதிலும், வியாபாரம் தங்களுடைய சொந்த முதலை வைத்தே தொடங்கி நடத்தப் பட்டு வருகிறதென்பதையும் சொத்து முழு மையும் தங்களுடையதே என்பதையும் நான் என் மனப்பூர்வமாக உணருவதையும் தாங்கள் நம்ப வேண்டும். எள்ளளவேனும் இதில் எனக்குச் சொந் தமோ சுதந்தரமோ இல்லையானாலும், எனது ஆப்த நண்பராகிய தங்கள் க்ஷேமாபிவிருத்தியில் நான்

பெரிதும் கவலை செலுத்த வேண்டியவனுயிருக்கிற அந்த ஒரு காரணம் பற்றியே, அவ்வொரு கடமையை முன்னிட்டே, நான் தங்களிடம் கட்டாயமாய்ப் பேசித் தீர வேண்டியவனுய் இருப்பதால் தாங்கள் என்னிடம் கோபித்துக்கொள்ளாமல் மனம் பொறுத்துச் சாந்தமாய் நான் சொல்லும் விஷயங்களை முற்றும் கேட்குமாறு மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். தயவு செய்து தங்களுக்கு ஆட்சேபம் இல்லாவிடில் நாளை 12-மணிக்கு நமது பாங்கியின் காரியஸ்தலத்தில் நாம் இவ்விஷயத்தைப்பற்றிப் பேசிப் பரஸ்பரம் ஒருவர் கருத்தை ஒருவர் அறிந்துகொள்வது நலமாயிருக்கும். தயவு செய்து என் மனேபீஷ்டத்தை நிறைவேற்றும்படி மன்றுடிக் கேட்டுக்கொள்ளும்,

தங்கள் பிரிய நண்பன்,
ராகவன்."

இக்கடிதத்தை ராஜேந்திரன் வாசித்துப் பார்த்ததும் ராகவன் விரும்பிக் கேட்டபடி மறுநாள் 12-மணிக்குச் சந்திப்பதாய் வாக்களித்து அப்படியே வந்து சேர்ந்தார். உடனே ராகவன் ரொக்கம் கொடுத்து வாங்கும் முக்கிய வேலைக்காரரான ரங்கநாதத்தையே சகல வேலைகளையும் ஒரு மணி நேரத்திற்கு நடத்திக்கொள்ளச் சொல்லிவிட்டு ராஜேந்திரனுடைய அந்தரங்க அறைக்குட் சென்று பேச ஆரம்பித்தார்.

ராஜேந்திரன்: ராகவா, என்ன என்றுமில்லாத புது மாதிரியாகக் கடிதம் எழுதினுயே; ஏன் என்ன விஷயம்?

ராகவன்: நண்பரவர்களே! நான் சொல்லப்போகும் விஷயம் தங்கள் மனத்திற்குச் சற்று வருத்தத்தை உண்டாக்குமென்று நான் நன்கறிவேன். அப்படியிருந்தும் தங்களிடம் உண்மையைக் கூறித் தங்கள் யோசனையைக் கேட்டே இனி நடக்க வேண்டுமென்று கட்டாயமாக எனக்

குத் தோன்றியதாதலால்தான் தங்களைத் தொந்தரவு செய்யும்படி ஏற்பட்டது.

**ராஜேந்திரன்:** சரி, விஷயத்தைச் சொல்லி முடியுங்கள்.

**ராகவன்:** நண்பரவர்களே! நாம் ரங்கூனுக்குப் போய் நமது ஸ்ரீனிவாசனை அழைத்து வந்ததும், தாங்கள் ஸ்ரீனிவாசன் அது வரையில் கஷ்டதசையிலிருந்து வந்தமையால், அவன் இஷ்டப்படி செலவு செய்யட்டுமென்றும், அதைக் குறித்து எதற்கும் வருத்தப்பட வேண்டாமென்றும், ஸ்ரீனிவாசன் கொடுக்கும் உண்டியல்களையும் செக்குகளையும் யாதொரு ஆட்சேபமும் சொல்லாமல் ஏற்றுக்கொள்ளும்படிக்கும் கண்டிப்பான உத்தரவளித்தீர்கள். நான் தங்கள் ஆக்கினையைச் சிரமேற் கொண்டு ஆறு மாத காலம் வரையில் அப்படியே செய்துவந்தேன். அதற்கப்பால் தங்களிடம் இந்த இரண்டரை வருஷ காலமாக அவர் மட்டுக்கு மிஞ்சிய அபாரச் செலவுகள் செய்து வருகிறாரென்றும் அக்கணக்குகளைத் தாங்கள் சற்றுப் பார்க்க வேண்டுமென்றும் பல தடவைகளில் சொல்லியும் தாங்கள் பார்க்காமலிருந்ததோடு அந்தப் பேச்சை எடுத்தவுடனேயே என் மேல் வெறுப்புக்கொண்டு எழுந்து போய்க்கொண்டும் இருந்தீர்கள். தங்கள் பத்தினி ருக்மிணியின் நிமித்தம் தங்களுக்கு ஸ்ரீனிவாசன் பேரில் அளவற்ற வாஞ்சை இருந்தபோதிலும், அவர் இதுவரையில் செய்திருக்கிற செலவுகளின் மொத்தத்தையாகிலும் தங்களிடம் சொல்லிவிட்டால் என் மனத்திற்குத் திருப்தியாக இருக்கும். அப்படி நான் தெரிவியாதிருந்தால் அவரைக் கெடுத்ததற்கு நானே காரணகர்த்தாவாகத் தங்களால் கூட எண்ணப்படும்படியாக ஆய்விடுவேன். ஆகையால் இதுவரையில் அவர் செலவு செய்த மொத்தத்தைச் சொல்லிவிடுகிறேன். அப்பால் தங்கள் இஷ்டம்போல் நடக்கிறேன்.

**ராஜேந்திரன்:** என்ன ராகவா! பையன் சில ஆயிர ரூபாய்கள் செலவழித்து விட்டதால் கெட்டுப்போன தென்ன? என்ன பிரமாதமாய்ச் சொல்ல வந்தாயே. 30 மாதத்தில் எத்தனை ஆயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிருன்? சொல்லேன் பார்ப்போம். உன் முகம் இருப்பதைப் பார்த்தால் ஏதோ அதிக துக்க சாகரத்தில் மூழ்கியிருப்ப வனைப்போல் இருக்கிறதே; ஏன்?

**ராகவன்:** நான் துக்க சாகரத்தில் மூழ்கியிருப்பது உண்மைதான். எனக்காக நான் துக்கப்படவேயில்லை. தங்களுக்காகத்தான் துக்கிக்கிறேன். இதுவரையில் அதாவது இந்த முப்பது மாத காலத்தில் பதினாறு லட்சத்து ஐம்பத்தேழாயிரத்து அறுநூற்று ஐம்பத்தைந்து ரூபாய் செலவழித்திருக்கிருர்.

**ராஜேந்திரன்:** என்ன பதினாறு லட்சமா? பதினாறு ஆயிரமா? ஒன்றுக்கொன்று தவறுதலாய்ச் சொல்லுகிறீர்கள்போல் இருக்கிறதே!

**ராகவன்:** நான் தவறுதலாய்ச் சொல்லியிருந்தால் அதிக சந்தோஷமாக இருக்கும். உண்மையாகவே பதினாறு லட்சத்திற்கு அதிகமாகவே செலவழித்திருக்கிருர். இதோ இருக்கிறது அவருடைய கணக்கும், அவர் அனுப்பிய உண்டியல்களும்.

**ராஜேந்திரன்:** இவ்வளவு பெருந்தொகை எவ்வாறு செலவு செய்தானே தெரியவில்லையே. தாங்கள் என்னை முன்னால் எச்சரித்தபோதே நான் இதைக் கவனியாமல் இருந்ததற்காக வருத்தப்படுகிறேன். தங்கள் பேரில் எந்த விதமான குற்றமும் இல்லை. தாங்கள் வேண்டிய வரையில் என்னிடம் இவ்விஷயத்தைப்பற்றிப் பேசப் பிரயத்தனம் செய்தீர்கள். நான் முட்டாள்தனமாயும் கண்மூடித்தனமாயும் தங்களை அப்பேச்சு எடுக்காமல் வாயடக்கி வந்தேன். அதன் முடிவு நமக்குப்-அல்ல அல்ல, எனக்கு - பதினாறு

லட்சத்துச் சில்லறை ரூபாய் வீண் விரையமாயிற்று. நண்பரவர்களே! தாங்கள் இதைப்பற்றி வருத்தப்படவேண்டாம். நான் கூடிய ஜல்தியில் இத்தொகைக்குச் சரியான ஈடு செய்து போடுகிறேன். நடந்துபோன விஷயத்தைப்பற்றித் தான் சிந்திக்க வேண்டும். இப்பெருந்தொகைகளை எவ்வாறு செலவு செய்திருக்கிறான்? யார் யாருடன் நட்பாயிருக்கிறான். அவனைக் கெட்ட வழியில் திருப்பினவர் யாவர்? என்ற விஷயங்களைக் கவனித்தீர்களா? மேலும் இனிமேல் அவனைச் சீர்திருத்துவது எப்படி என்றும் சிந்திப்பதற்குத் தங்களுக்குப் போதிய சாவகாசம் இருப்பதால் அப்படிச் சிந்தித்தீர்களா என்றும் என்ன முடிவுக்கு வந்தீர்களென்றும் தயவு செய்து தெரிவியுங்கள்.

ராகவன்: ஐயா! இவ்விஷயங்களைப் பற்றி நான் இரண்டரை வருஷ காலமாகச் சிந்தித்துக்கொண்டுதான் இருக்கிறேன். தாங்கள் வைத்த முதலிலிருந்தே வியாபாரம் பெருகி அவ்வியாபாரத்திலிருந்து வந்த லாபத்திலிருந்தே இந்தப் பதினாறு லட்சத்துச் சில்லறை ரூபாயும் கொடுக்கப்பட்டிருக்கிறதே யொழிய வேறல்ல. அப்படியிருக்கத் தாங்கள் அந்தத் தொகையைத் திருப்பிக் கொடுத்துவிடுவதாகச் சொல்லுவது எனக்குச் சற்றும் பொருந்தவில்லை. அத்தொகையைத் திருப்பிப் பெற நான் ஒருபோதும் சம்மதியேன். என்னை ஒரு பாகஸ்தன் என்பதாக நினைத்துப் பேசுவது என் நெஞ்சைப் பிளக்கின்றது. அது கூடாது. தாங்களே நான்; நானே தாங்கள்; பேதமில்லை.

ராஜேந்திரன்: நண்பரவர்களே! சற்றுப் பொறுங்கள். நான் முதல் வைத்தேனே யொழிய தாங்கள்தான் வியர்வை சொட்டக் கஷ்டப்பட்டு வியாபாரத்தை விருத்திக்குக் கொண்டு வந்தீர்கள். எனது காரியஸ்தர் இதற்காகவே முன்பே, வரும் லாபத்தில் இருவரும் பேர்பாதி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று உடன்படிக்கைப் பத்திரம் (அக்ரி

மெண்ட்) எழுதி அதைப் பதிவுசெய்து (ரிஜிஸ்டர் செய்து) வைத்திருக்கிறார். ஆகையால் அதைப்பற்றி இனி, தாங்கள் ஆட்சேபிக்கவாவது வேறு வார்த்தை பேசவாவது கூடாது. அதிருக்கட்டும்; நான் கேட்ட மற்ற விஷயங்களைப் பற்றிச் சொல்லுங்கள்.

**ராகவன்:** அன்பரே! நமது ஸ்ரீனிவாசன் தனது ஆள் மூலமாகவே அநேகமாக உண்டியல்கள் கொடுத்து ரொக்கம் பெற்றுப் போனாலும் அந்த ரொக்கத் தொகைகளெல்லாம் அநேகமாக நம்மிடம் தற்காலம் பெருத்த லேவாதேவி செய்யும் கோபாலாசாரியார் அண்ட் சன்ஸ்களிடம் போய்ச் சேர்ந்ததாகத் தெரிகிறது. நான் பல தடவைகளில் கோபாலாசாரியர் அண்ட் சன்ஸ்களிடம் போய்ச் சொந்தக்காரரைப் பார்க்க முயன்றதில் நான் போகும்போதெல்லாம் அவர்கள் வீட்டிலில்லையென்றும், ஏதாவது விசேஷம் இருந்தால் எழுத்து மூலமாய்த் தெரிவிக்கும்படிக்கும் அவர்கள் மானேஜர் பேசும் மாதிரியிலிருந்து நாம் அவரைப் பார்க்க விரும்புவதைப்பற்றிக் கோபாலாசாரியாருக்குப் பிரியமில்லாத பாவனையாய்த் தெரிகிறது. இதில் ஏதோ கபடம் இருப்பதாகவும் காண்கிறது. நான் சுமார் இருபது தடவைக்குமேல் சென்று பிரயத்தனம் செய்தும் பயன்படாமற் போனதாலும், ஒரு நாள் கோபாலாசாரி நிச்சயமாய் வீட்டிலிருக்கிறாரென்று தெரிந்து நான் போயும் அவர் வீட்டில் இல்லையென்று பொய் சொன்னதாலும், அது முதல் நான் போவதில்லை. அதன் பேரில் நமது ஸ்ரீனிவாசனுக்குக் கொடுக்கும் நோட்டுகளின் நம்பர்களை எழுதிக்கொண்டு அந்த நோட்டுகள் யார் மூலமாய்த் திரும்ப அனுப்பப்படுகின்றன என்பதை அதிகக் கஷ்டமெடுத்துக் கொண்டு எல்லாப் பாங்குகளிலும் ஆள்கள் மூலமாய் விசாரித்து அறிந்ததில் நமது பாங்கிலிருந்து வாங்கின இரண்டொரு நாட்களுக்குள் கோபாலாசாரியார் அண்ட் சன்ஸ்

கணக்கில் பல பாங்குகளில் செலாவணியாவதாகத் தெரிகிறது. இரண்டொரு தடவைகளில் நான் ஸ்ரீனிவாசனிடம் பெருத்த செலவு செய்யும் விஷயத்தைப் பற்றி லேசாகக் கேட்டதில், 'தன் தகப்பனுர் சொத்தையே தான் செலவு செய்வதாகவும் மற்றவர்கள் அதைப்பற்றிக் கேட்கவேண்டிய பிரமேயமே இல்லையென்றும்' சற்றுக் கடூரமாய்ப் பதில் சொன்னுன். அதுமுதல் நான் பேசுவதில்லை.

ராஜேந்திரன் சுமார் கால் மணி நேரம் வரையில் ஆழ்ந்த யோசனையில் இருந்தார். ராகவன் அவரைத் தொந்தரவு செய்யவில்லை. அப்பால் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு பின்வருமாறு சொன்னுர்.

**ராஜேந்திரன்:** நண்பரவர்களே, நான் ஒருவிதமான தீர்மானத்திற்கு வந்துவிட்டேன். இனி அந்தப்படி நடப்பதே நலம். நான் பக்கத்து அறையில் மறைவாய் உட்கார்ந்திருக்கிறேன். தாங்கள் ஸ்ரீனிவாசனைக் கூப்பிடவிட்டு இதைப் பற்றி இன்னொரு தரம் கேளுங்கள். சரியானபடியும் திருப்திகரமானபடியும் பதில் சொன்னுலாயிற்று. இல்லாவிட்டால் வேண்டிய ஏற்பாடு செய்வோம். இனி இந்த மாதிரி அவன் மனப் போக்கின்படி விடுவது முடியாத காரியம். இப்போதே கடிதம் எழுதி அனுப்புங்கள்.

**ராகவன்:** நண்பரவர்களே! இவ்வேலை தாங்களே செய்வது நலமென நினைக்கிறேன். ஏனெனில் ஒருவேளை அவர் முன்போல் தாறுமாருகப் பேசினுல் தங்களுக்கு வருத்தமுண்டாகும். ஆகையால் தயவுசெய்து என்னை மன்னியுங்கள்.

**ராஜேந்திரன்:** நான் சொல்லுகிறபடி செய்வாயா மாட்டாயா? உன்னை என் பாகஸ்தனுக வைத்து இக்கேள்வி கேட்கவில்லை. நாம் வியாபாரம் செய்ய ஆரம்பிக்கும் முன் இஷ்டராக இருந்தோமே! அந்த நிலைமையில் கேட்கிறேன். நான் சொல்லுகிறபடி நீ இவ்விஷயத்தில் நடக்காவிட்

டால் இது முதல் நாம் பாகஸ்தராயிருந்து வியாபாரம் நடத்திய போதிலும் பழைய சிநேகப்பான்மை விட்டுப் போகுமென்பதை உறுதியாய் நம்பு.

கோபமாய்ச் சொல்லவே ராகவன் ஒருவாறு ஒத்துக்கொண்டு ஸ்ரீனிவாசனுக்கு அன்றைத்தினம் சாயந்தரம் 4-மணிக்கு வந்து தன்னிடம் சில விஷயங்கள் பேசி விட்டுப் போகும்படி கடிதம் எழுதி ஒரு சேவகனிடம் கொடுத்தனுப்பினுர்.

**ராகவன்:** இனி நமது வியாபாரத்தைப் பற்றியும் தங்களிடம் சில விஷயங்கள் பேச வேண்டியிருக்கிறது. தங்களுடைய நண்பர்களின் சிபார்சின் பேரில் வழிபறிபாளையும் ஜமீன்தாரவர்களின் சொத்தின்பேரில் சுமார் இருபத்தைந்து லட்சம் ரூபாய் கடன் கொடுக்கும்படி சொல்லிக் கொடுத்தோமென்பதை மறந்திருக்கமாட்டீர்கள். நாம் தகுதியான சொத்தின்பேரில் இப்பெருந்தொகை கடன் கொடுத்திருந்த போதிலும் அதன் முதலிலாவது வட்டியிலாவது நாளதுவரை ஒரு பைசா கூடச் செலுத்தப்படவில்லை. ஆகையால் சில சமயங்களில் யாராவது திடீரென்று பெருந்தொகைகளுக்கு உண்டியல் அனுப்பினுல் அப்பொழுது சமாளிக்கச் சற்றுக் கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் அத்தொகையிலும் ஏதாவது வசூல் செய்யப் பிரயத்தனம் செய்வது சிலாக்கியம்.

**ராஜேந்திரன்:** நண்பரே! தாங்கள் இவ்வளவு கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு இதுவரையில் வியாபாரம் தனியாய் நடத்தி வந்ததற்காக நான் எந்த விதமாக உபசாரம் சொல்வதென்று தெரியவில்லை. இன்றைய முதல் நானும் தங்களுக்கு ஒத்தாசையாய் இருந்து வேண்டிய விஷயங்களைக் கவனித்து நடத்துவேன். தாங்கள் இனித் தனியாகப் பாரத்தை வகிக்கவேண்டாம்; இருவரும் கலந்தே நடத்துவோம்.

இன்றைத் தினம் மட்டும் தம்மைக் கூப்பிட வேண்டா மென்றும், மறுநாள் முதல் தாம் ஊக்கத்துடன் வேலை செய்வதாயும் சொல்லி ராகவனை வழக்கம்போல் வியாபாரத்திற்கு அனுப்பிவிட்டு, ராஜேந்திரன் ஏகாந்தமாய் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். மூன்றே முக்கால் மணியானதும் ஸ்ரீனிவாசன் வருவதாய் மறுமொழி சொல்லியனுப்பியதாகச் சொல்லி, ராஜேந்திரனைப் பக்கத்து அறையில் போயிருக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு ராகவன் மட்டும் அங்கே உட்கார்ந்து வேலை செய்துகொண் டிருந்தார். சரியாய் நாலு மணி அடித்தவுடன் ஸ்ரீனிவாசன் தன் பேரடித்த சீட்டை அனுப்பினுன். ராகவன் உடனே உள்ளே வரும்படி சொல்லி, ஸ்ரீனிவாசன் வந்தவுடன் எழுந்துபோய் அவனை அழைத்துவந்து ஆசனத்தில் உட்காரச் சொன்னுர்.

ஸ்ரீனிவாசன்: ஐயா! கட்டாயமாய் நாலு மணிக்குத் தங்களை வந்து சந்திக்கும்படி தாக்கீதனுப்பினீர்களே! எதற்காக? தாங்கள் என் பிதாவின் நண்பராயிருந்தாலும் நான் இந்த வியாபாரத்திற்குச் சொந்தக்காரன் என்பதையும் ஆகையால் தங்களுக்குக்கூட எஜமானன் என்பதையும் கவனியாமல் ஒரு நாடோடியை வரும்படி எழுதினதைப்போல் எனக்குத் தாக்கீது அனுப்பினீர்களே! தாங்கள் அப்படி எழுதியது சரிதானு?

ராகவன்: ஐயா! தாங்கள் எனது நண்பரும் எனது எஜமானருமாகிய ராஜேந்திரனுடைய புத்திரரென்பதற்கும் ஆகையால் நான் தங்களுடைய வேலைக்காரனென்பதற்கும் யாதொரு ஆட்சேபமும் இல்லை. தங்களுடைய நன்மையை உத்தேசித்தே சில விஷயங்களைத் தங்களிடம் பேசவேண்டியதற்காக வரும்படி தங்களுக்கு எழுதினேன். நானே தங்களிடம் வந்திருப்பேன். ஆனல் வேறு அசௌகரியத்தினல் தங்களை இங்கே வரவழைக்க நேரிட்டது. அதற்காக மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீனிவாசன்: சரி, எதற்காக வரவழைத்தீர்?

ராகவன்: சென்ற மூன்று வருஷ காலத்திற்குள் சுமார் பதினாறு லட்சத்துச் சில்லறை ரூபாய் செலவழித்திருக்கிறீர்கள். அதாவது மாதம் ஒன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய்க்குச் சற்றுக் குறைவாகச் செலவழித்திருக்கிறீர்கள். தாங்கள் சிறு பிள்ளையாதலால் உலகத்திலுள்ளவர்களை யெல்லாம் நல்லவர்களாக மதித்து ஏமாந்து போகிறீர்களென்றும் இவ்வளவு அபாரமான தொகை எந்த வழியில் செலவு செய்தீர்களென்று எனக்குத் தெரிவித்தால் இனிமேலாவது தாங்கள் ஏமாந்து போகாமல் இருக்கும்படி மார்க்கம் சொல்லலாமென்றும் கேட்கிறேனே யொழிய வேறல்ல. ஆகையால் என்பேரில் கோபித்துக்கொள்ளாமல் தயவு செய்து விவரமாய்ச் சொல்லவேண்டும்.

ஸ்ரீனிவாசன்: என் செலவைப்பற்றிக் கேட்பதற்கு உனக்கு அதிகாரம் கொடுத்தது யார்? நான் உண்டியல் அனுப்பினால் நீ ரூபாய்கள் கொடுக்க வேண்டியவனே தவிர இந்தக் கேள்விகளெல்லாம் நீ அதிகப் பிரசங்கித்தனமாய் என்னைக் கேட்க வேண்டியதுமில்லை; உனக்கு நான் பதில் சொல்ல வேண்டியதுமில்லை. இதற்காகத்தான் இவ்வளவு அவசரமாய்க் கூப்பிடவிட்டாய்போல் இருக்கிறது.

ராகவன்: ஸ்ரீனிவாசா! அவசரப்படாதே. என்னிடம் சொல்வதால் கெடுதல் என்ன? தயவுசெய்து சொல்.

இப்படி நல்ல தனமாய்க் கேட்டுப் பார்த்தும் பதில் சொல்லாமலே ராகவனை வாய்க்கு வந்தபடி யெல்லாம் திட்டிவிட்டு அவன் எழுந்து போனான்.

ராகவன்: ஸ்ரீனிவாசா! கடைசித்தரம் சொல்லுகிறேன். நான் கேட்கும் கேள்விகளுக்கு நீ சரியான பதில் சொல்லாவிட்டால் நாளை முதல் உன் உண்டியல்களுக்குப் பணம் கொடுக்கப்படமாட்டாது. அவ்வளவுக்கு வைத்துக்கொள்ளாதே; நல்லதனமாகக் கேட்கும்போதே சொல்லிவிடு.

ஸ்ரீனிவாசன்: அடே அற்பப் பதரே! நீயா என் உண்டியல்களைத் திரஸ்கரிப்பவன்? நல்லது நாளைக்கே இங்கே நீ வந்தால் உள்ளே வரக்கூடாதென்று உன் கழுத்தைப் பிடித்துத் தள்ளும்படி செய்கிறேன். 'அற்பனுக்குப் பவிஷு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்' என்பார்கள். அது உன் விஷயத்தில்தான் சரியாயிற்று. கேவலம் ஒரு வேளைச் சாப்பாட்டிற்கும் கதியில்லாமலிருந்த உன்னைக் கொண்டுவந்து இவ்வளவு கௌரவமான வேலையில் வைத்தால், நீ இது மட்டுமா பேசுவாய்? இன்னும் அதிகமாய்க்கூடப் பேசுவாய். இன்று பேசினதைப்போல் இன்னொரு தரம் பேசினால் உன் முப்பத்திரண்டு பற்களையும் உடைத்துக் கையில் கொடுப்பேன்.

இப்படிச் சொல்வதற்குமுன் ராஜேந்திரன் கதவைத் திடீரென்று திறந்துகொண்டு உள்ளே வந்து ஸ்ரீனிவாசனை அடிக்கும் மாதிரியாய்ப் போனார். ஆனால் ராகவனே மத்தியில் விழுந்து ராஜேந்திரனைச் சமாதானப்படுத்தி ருக்மிணியின் முகத்திற்காக மன்னிக்கும்படி சொன்னார். உடனே ராஜேந்திரன் இடிவிழுந்த மரம்போல் செயலற்று அங்கிருந்த சோபாவில் சாய்ந்தார். ராகவன் ஸ்ரீனிவாசனைச் சற்று மௌனமாய் உட்கார்ந்திருக்கும்படி ஜாடை காட்டினார். அவரும் அந்தப்படியே செய்தார். சற்றுப்பொறுத்து,

ராஜேந்திரன்: ஸ்ரீனிவாசா, ராகவன் கேட்டதற்குத் தான் பதில் சொல்ல மறுதலித்துவிட்டாய். அவர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லும்படி நான் கேட்கிறேன். சரியான ஜவாபு சொல்.

ஸ்ரீனிவாசன்: என்ன சொல்லச் சொல்லுகிறீர்கள்?

ராஜேந்திரன்: பதினாறு லட்ச ரூபாய்களைச் சுமார் மூன்று வருஷ காலத்தில் எப்படிச் செலவு செய்தாய்? சொல்லு.

ஸ்ரீனிவாசன்: இந்தப் புண்ணியவான் தங்களிடம் இல்

லாத பொல்லாத பொய் புளுகுகளைச் சொல்லி என்மேல் துவேஷம் உண்டாக்கினர்போல் இருக்கிறது.

**ராஜேந்திரன்:** சீ; நாயே! வாயை மூடு! நீ இந்த உண்டியல்களையெல்லாம் அனுப்பிப் பதினாறு லட்சத்துச் சில்லறை ரூபாய் வாங்கினயா? இல்லையா?

**ஸ்ரீனிவாசன்:** நான் கணக்கா வைத்திருக்கிறேன்.

**ராஜேந்திரன்:** இந்த உண்டியல்களெல்லாம் உன்னல் எழுதப்பட்டவைகள் தாமே.

**ஸ்ரீனிவாசன்:** ஆம்.

**ராஜேந்திரன்:** பின்பு அவர் சொன்ன பொய் புளுகுகள் என்ன? கேட்ட கேள்விக்கு ஜவாபு சொல்லவில்லையே.

**ஸ்ரீனிவாசன்:** எப்படிச் செலவு செய்தேனென்று எனக்குத் தெரியாது.

**ராஜேந்திரன்:** நீ சரியான மறுமொழி சொல்லாவிட்டால் நாளை முதல் உன் உண்டியல்களுக்குப் பணம் கொடுக்கப்பட மாட்டாது.

கண்டிப்பாய்ச் சொன்னர்? ஸ்ரீனிவாசன் ஒன்றும் மறுமொழி சொல்லவேயில்லை; அப்போது,

**ராஜேந்திரன்:** ஸ்ரீனிவாசா! இப்போது நீ என்ன நினைக்கிருய் சொல்லட்டுமா? உன் உண்டியல்களுக்கு ரூபாய்கள் கொடுக்காவிட்டால்,மார்வாடிகளிடமாவது நாட்டுக்கோட்டை செட்டியார்களிடமாவது கடன் வாங்கலாமென்று நினைக்கிருய். நான் உன்னை அப்படிச் செய்ய விடமாட்டேன். இன்றே உனக்கும் என் சொத்திற்கும் எவ்விதமான பாத்தியதையும் கிடையாதென்றும், உனக்குக் கடன் கொடுப்பவர்கள் என் சொத்தின்பேரில் வரக்கூடாதென்றும், பத்திரிகைகளிலும் கெஜட்டிலும் விளம்பரம் போடும்படி ஏற்பாடு செய்துவிடுவேன்; ஏன்? செய்துவிட்டேன். நீ எப்போது எனது பிராண நண்பரை உதாசினமாய்ப் பேசினயோ அப்

போதே உன்னைப்பற்றி வேண்டிய ஏற்பாடு செய்தாயிற்று உன் இஷ்டம் எப்படியோ அப்படி இனி நடக்கலாம்.

ராகவன்: நண்பரவர்களே! தாங்கள் அவ்வளவு தூரம் கடூரமாய்க் கோபித்துக்கொள்ளச் கூடாது. ஸ்ரீனிவாசனுக்குச் செலவுக்காக மாதம் நூறு ரூபாயாவது கொடுக்க உத்தரவு கொடுங்கள். நான் சொல்வதற்காகவாவது பெரிய மனது செய்யுங்கள்.

வெகுவாய் வேண்டிக்கொண்டதன் பேரில் ராஜேந்திரன் ஒருவாறு சம்மதித்தார். அப்போதும் அவர் கேட்ட கேள்விகளுக்குச் சரியான ஜவாபு சொல்லும் வரையில் ஸ்ரீனிவாசன் தன் எதிரில் வரக்கூடாதென்று கண்டிப்பாய்க் கூறி அனுப்பிவிட்டார்.

அது முதல் ராஜேந்திரனும் ராகவனும் வியாபாரத்தைக் கவனித்து ராகவன், ராஜேந்திரனிடம் வியாபாரத்தைப் பற்றிக் கலந்து பேசும்போதெல்லாம் யோசனைகள் சொல்லியும் வேண்டியபோது ஒத்தாசைகள் செய்தும் வந்தார். ஸ்ரீனிவாசன் உண்டியல் அனுப்பி 100 ரூபாய் பெறுவதைத் தவிர ருக்மிணி பாங்கிக்கும் அவனுக்கும் எவ்வித மான சம்பந்தமும் கிடையாதெனத் தீர்ந்தது.

மேற்கண்ட மன வருத்தம் உண்டான சுமார் பத்துத் தினங்களுக்கப்பால், ஒரு நாள் காலையில் வழக்கமாக வரும் நேரமாகிய பத்து மணிக்கு வராமல் சுமார் 15-நிமிஷங்கள் பொறுத்து ரங்கநாத் என்னும் பொக்கிஷதார் வந்தார். அவர் வந்ததும் ராகவனிடம் போய்ப் பெரிய இரும்புப் பெட்டியின் சாவியை வாங்கி வந்து இரும்புப் பெட்டியைத் திறந்து பார்த்ததும் அப்பெட்டியில் அடுக்காய் மடித்து வைத்திருந்த சுமார் ஐந்து லட்சம் ரூபாய் நோட்டுகளைக் காணோம். ரங்கநாத்துக்கு வைத்த இடம் நன்றாக ஞாபகம் இருந்தும்; இங்கு வைத்தோமா அங்கு வைத்தோமா என்ற சந்தேகம் ஏற்பட்டுப் பெட்டி யெங்கும் தேடியும் காணு

மல் இருந்ததால் சேவகனை விட்டு ராகவனை அழைத்து வரச் சொன்னார். அவர் வந்தவுடன் அவரிடம் நோட்டுகள் காணமற்போன விஷயம் தெரிவித்தார். அவர் உடனே ராஜேந்திரனைக் கூப்பிடவிட்டுச் சமாசாரம் தெரிவித்தார். நோட்டுகள் மட்டும் காணமற் போயினவா? வேறு ஏதாவது போயிருக்கிறதா என்று சோதித்துப் பார்த்ததில் சுமார் ஐம்பது லட்சம் ரூபாய் பெறுமான 'கோபாலபுரம் வைரங்கள்' என்ற பேர்போன வைர நகைகளும்-அந்த நகைகளின் சொந்தக்காரரால் பந்தோபஸ்துக்காக வைக்கப்பட்டிருந்ததும் காணப்படவில்லை. பூட்டுகளெல்லாம் சரிவரப் பூட்டப்பட்டிருந்தபோது அதில் வைக்கப்பட்டிருந்த நோட்டுகளும் இந்த நகைகளும் காணமற் போனது ஆச்சரியமல்லவா? இந்த விஷயம் வெளிக்கு வரவும் எல்லோரும் திகைத்து நின்றனர்.

---

## 4. விசாரணை

'இன்ன லரும்பொருளை ஈட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலும் துன்பமே.'

**ராஜேந்திரன்:** ரங்கநாத், இதென்ன ஆச்சரியம்! பூட்டுகளோ எல்லாம் சரியாக இருக்கின்றன. பெட்டியும் சாதாரணமானதல்ல. இரும்புப் பெட்டி. அதில் வைத்த வைரநகைகளும் நோட்டுகளும் காணமற்போயினவென்றால் என்ன கண்கட்டு வித்தை இது? எவ்விதமாக ஆலோசித்தாலும் வழிவகை ஏதும் தெரியவில்லையே! வெளியிலிருந்து எவரேனும் கள்வர் வந்து திருடியிருப்பதாகவும் சொல்ல முடியவில்லை. எடுத்தவன் உள்ளனும் கள்ளனுமாகத்தான் இருக்கவேண்டும். நமது வியாபார ஸ்தலத்தில் சம்பந்தப்பட்டவர்கள்தான் செய்திருக்க வேண்டும். வேறு என்ன விதமாகத்தான் முடிவுக்கு வருகிறது? ரங்கநாத், நோட்டு

களை எங்கே வைத்தீர்கள்? நேற்றுச் சாயங்காலம் எத்தனை மணிக்குப் பெட்டிகளை மூடினீர்கள்? அப்போது யார் யார் அங்கே இருந்தார்கள்? மேலும் தங்களிடம் ஒரு சாவியும், ம-ா-ா-ஸ்ரீ ராகவனிடத்தில் ஒரு சாவியும் இருக்கின்றனவே? சாவிகளுக்குமேல் உங்கள் இருவருக்கு மட்டும் தெரிந்த *பேர்ப் பூட்டும் போடப்பட்டிருக்கிறதே. அந்தப் பேரும் நேற்றுத்தான் மாற்றினதாக ம-ா-ா-ஸ்ரீ ராகவன் சொல்லுகிறார். ஆகையால் வெளியாரால் அந்தப் பேர் இன்னதென்று தெரியாமல் பூட்டைத் திறக்கவே முடியாது. ம-ா-ா-ஸ்ரீ ராகவன் இன்ன பேரால் பூட்டப்பட்டிருக்கிறதென்று யாரிடமும் தாம் கூறியதில்லையென்று சொல்லுகிறார். தாங்கள் எவரிடமாவது தெரிவித்தீர்களா? இதில் ஏதாவது தவறுதல் இருந்திருந்தால் தயவுசெய்து எங்களிடம் சொல்லிவிடுங்கள். நாங்கள் இதைப்பற்றி மேல் நடவடிக்கை நடத்தாமல் ஓர் ஒழுங்கு செய்துவிடலாம். எப்படிச் செய்வதென்று தாங்கள் சிந்திக்கவேண்டாம். தங்களிடம் எனக்குள்ள அன்பு அளவு கடந்தது. என் பையன் தவறுதல் செய்திருந்தால் எப்படி மன்னித்து வெளிக்குக் கொண்டுவராமல் இருப்பேனோ அப்படியே இதையும் வெளிக்குத் தெரியாமல் சரிப்படுத்திவிடுவோம். பகிரங்கத்துக்கு இது வருமானால் பாங்கியின் நாணயத்தையும் அதன் நற்பெயரையும்கூட இது பாதிப்பதாயிருக்கும்.

ரங்கநாத்: ஐயா! தாங்கள் கேட்பதற்கு முன்னதாகவே நிச்சயமாக எல்லோரும் என் பேரில்தான் சந்தேகப்படுவார்

---

*பேர்ப்பூட்டு என்பது எந்தப் பேரிலுள்ள எழுத்துக்களையாவது ஒழுங்காய் அந்த அந்த ஸ்தானத்தில்சரிவர வைத்துத்திறந்தால்தான் திறக்கலாம். திருஷ்டாந்தமாக இராமாநுஜலு நாயுடு என்னும் பேரில் வரும் எழுத்துக்களை வைத்துப் பூட்டினால் அந்த எழுத்துக்களில் ஓர் எழுத்து மாறினால் கூடத் திறக்காது. ஆகையால் சரிவரத் தெரிந்தவர்கள்தான் திறக்க முடியும்.

கவேன்பதை நான் நன்குணர்வேன். நான் நினைத்தபடியே காரியங்களும் அதன் போக்குகளும் இருக்கின்றன. ஏனெனில் தாங்கள் இவ் வியாபாரத்தில் சிரத்தை யெடுத்துக் கவனிக்க முயன்ற அன்றே பெருந்தொகைகளை இருப்பில் வைக்கக் கூடாதென்று கண்டிதமாய் உத்தரவளித்தீர்கள். அந்த உத்தரவிற்கு நேர் விரோதமாக நான் ஐந்து லட்ச ரூபாய்களை இருப்பில் வைத்தது முதல் குற்றம். தாங்கள் என்னைப்பற்றி எப்படி நினைத்த போதிலும், எனக்குத் தோன்றினதை என் மனச்சாட்சி பூர்வமாகச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைத்தினம் சரியாய்ப் பத்தரை மணிக்குக் கோபாலாசாரியார் அண்டு ஸன்ஸார் அவர்கள் கணக்கில் இருந்து நமது பாங்கியில் ஐந்து லட்சம் ரூபாய் அவசரமாய் வாங்கப் போவதாயும், வந்தவுடன் அட்டி சொல்லாமல் உடனே கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். இன்று நான் வரச் சற்று நேரமாகுமென்று எனக்கு முன்னலேயே தெரியு மாதலாலும், அவர்கள் வந்தவுடன் எவ்விதத் தாமதமும் அன்னியில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதனுலும், தங்கள் உத்தரவிற்கு மாருக நேற்றே 5 லக்ஷத்துக்கு நோட்டுகளை வாங்கும்படி நேர்ந்தது. நேற்றுச் சாயங்காலம் நான் நோட்டுகளை எடுத்து வைத்துப் பூட்டும்போது நமது காவற்காரன் அருகே இருந்தான். நான் பூட்டுப் போட்டு ஆனவுடன் ஸ்ரீமான் ராகவன் வந்து அவர் பூட்டைப் பூட்டினுர். அப்பால் அவரே எழுத்துப் பூட்டையும் பூட்டினுர். உடனே நான் வெளியே சென்றேன். இங்கே களவுபோன விஷயத்தைப்பற்றி எனக்குத் தெரியவே தெரியாது. என் புத்திக்கு எட்டியவரை எவ்விதமாகத் தீர்மானிக்கவும் கூடவில்லை என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே சேவகன், ஒரு கனவான் அவசரமாய்ப் பங்காளிகளில் ஒருவரைப் பார்க்க விரும்புவதாய்ச் சொன்னுன்.

ராஜேந்திரன், "சற்று நிதானிக்கச் சொல்" என்று சொன்னார். அதற்குச் சேவகன், "ஐயா! என்னால் எவ்வளவு தூரம் தாமதிக்கச் சொல்லக் கூடுமோ அவ்வளவு தூரம் சொன்னேன். அவர் தாம் சரியாய்ப் பத்தரை மணிக்கு வருவதாக முன் கூட்டித் தெரிவித்திருப்பதாகவும் தாம் தாமதிக்க முடியவே முடியாதென்றும் தடபுடலாய்ச் சொல்வதோடு இன்னும் கேவலமான வார்த்தைகளும் சொல்லுகிறார்.

"தாங்கள் அவருடன் பேசி அவரை அனுப்பிவிட்டால் நல்லதென்று நினைக்கிறேன். பாங்கியில் வந்திருப்பவர்களிடமெல்லாம் அவர் நமது பாங்கியைப்பற்றி இழிவாய்ப் பேசுவதற்கு எனக்கு அவரை மென்று தின்று விடக்கூடிய கோபம் வந்தது. தாங்கள் கோபித்துக்கொள்ளுவீர்களென்று நான் இதுவரையில் பொறுத்திருந்தேன்; ஆகையால் சீக்கிரமாய்த் தாங்கள் பார்த்துப் பேசி அந்தச் சனியனை அனுப்பிவிடுங்கள். இல்லாவிட்டால் எனக்கு உத்தரவு கொடுத்தால் மாடிமேலிருந்து தூக்கித் தெருவில் எறிந்து விடுகிறேன். இனி அவர் ஒரு நிமிஷமேனும் இங்கிருக்கக்கூடாது" என்று சொன்னான்.

அந்தச் சேவகன் ராஜேந்திரன் சிறு பிள்ளையாயிருக்கும்போது அவரை எடுத்து வளர்த்து வந்த பழைய நாள் வேலைக்காரனாதலால் ராஜேந்திரனிடம் கபடமற்றுச் சகஜமாய்ப் பேசுவது வழக்கம். ராஜேந்திரன், "பாங்கியைப் பற்றி என்ன இழிவாய்ப் பேசினார்?" என்று கேட்டார். அதற்குச் சேவகன், "பேர் பெரிய பேரே யொழிய காரியத்தில் ஒன்றும் பிரயோஜனம் இல்லையென்றும், இப்பாங்கியில் ரூபாய்கள் வைத்திருக்கப் பயந்தே தாம் தம் ஐந்து லட்ச ரூபாய்களை அன்றே வாங்கிவிடத் தீர்மானித்து விட்டதாயும் இப்போது தாமதிப்பதைப் பார்த்தால் அதுவும் கொடுப்பார்களோ வீண் சால்ஜாப்புகள் சொல்வார்களோ என்று

சந்தேகப் படுவதாகவும் இன்னும் இதைப்போலொத்த அசங்கிதமான வார்த்தைகள் பேசுவதாகவும் சொன்னான். அவரை உடனே அழைத்து வரச் சொல்லி அவர் உள்ளே வந்ததும் ராஜேந்திரன் அவரை உட்காரச் சொல்லாமல் நின்றபடியே பின்வருமாறு கேட்டார்.

**ராஜேந்திரன்:** *ஐயா! தாங்கள் யார்? என்ன அவசர ஜோலியாய் இங்கு வந்தீர்கள்? தயவுசெய்து சொல்லுங்கள்.*

**வந்தவர்:** *ஐயா! நான்தான் கோபாலாசாரியார் அண்டு சன்ஸ் பாகஸ்தன்! நான் ஸ்ரீமான் கனம் கோபாசாலாரியார் அவர்கள் புத்திரனாகிய கிருஷ்ணமாசாரி: இன்றைத்தினம் ஐந்து லட்சம் ரூபாய்கள் பத்தரை மணிக்கு நாங்கள் எங்கள் கணக்கில் வாங்குவதாக முன் கூட்டித் தெரிவித்திருக்கிறோம். அத்தொகையைப் பெறவே இதோ இந்த உண்டியலுடன் வந்தேன். தொகையை இந்த நிமிஷமே கொடுங்கள்! நான் அவசரமாகப் போகவேண்டும்.*

**ராஜேந்திரன்:** *ஐயா! தங்களுக்குக் கொடுப்பதற்காகவே நேற்று ஐந்து லட்ச ரூபாய் தயார் செய்து வைத்திருந்தோம்.*

**கிருஷ்ணமாசாரி:** *"வைத்திருந்தோம்" என்றால் என்ன? இப்போது ரூபாய்கள் இல்லையா?*

**ராஜேந்திரன்:** *அவசரப்படாதேயுங்கள். தங்களுக்காக இரும்புப் பெட்டியில் தயாராய் வைத்திருந்த ஐந்து லட்ச ரூபாய் நோட்டுகள், பூட்டுகளெல்லாம் சரிவரப் பூட்டப்பட்டிருக்கும்போது ஆச்சரியமாய்க் காணமற்போய்விட்டன.*

**கிருஷ்ணமாசாரி:** *பேஷ்! பேஷ்!! பேஷ்!!! வெகு நம்பிக்கையுள்ள பாங்கி!!! எங்கள் தகப்பனார் சொன்னதே சரியாயிற்று. நான் வரும்போதே, 'பணத்துடன் வரப்போகிறாயோ, வெறுங்கையாய் வரப்போகிறாயோ என்று சந்தேகப் படுகிறேன். ருக்மிணி பாங்கி கூடிய ஜல்தியில் திவாலி எடுக்கும்' என்று சொன்னது உண்மையாய் விட்டது! எங்களுக்குக் கொடுக்கவேண்டிய ஐந்து லட்சம் ரூபாயை மோசம்*

செய்வதற்காகத் தாங்களும் தங்கள் பங்காளியும் காஷ் கீப்பரும் சேர்ந்துகொண்டு இந்தப் புரளி நாடகம் நடிக்க ஏற்கனவே தீர்மானித்து வைத்தீர்கள்போல் இருக்கிறது.

**ராஜேந்திரன்:** போதும்; வாயை மூடும். அதிகமாய்ப் பேசவேண்டாம். உமது ரூபாயைக் கொடுப்பதில் ஆட்சேபம் இல்லை. ஆனால்..................

**கிருஷ்ணமாசாரி:** உமது ரூபாயைக் கொடுப்பதில் ஆட் சேபம் இல்லை. ஆனால் எங்களுக்கு வாயிதாக் கொடுத் தால் கொடுக்கக்கூடும் என்று சொல்லப் போகிறீர்போல் இருக்கிறது. ஏனையா இந்தப் பித்தலாட்டங்களெல்லாம்! உங்களையெல்லாம் யாரையா பாங்கி வைத்து வாழச் சொன்னார்கள்?

**ராஜேந்திரன்:** ஓய்! வாயடக்கிப் பேசாவிட்டால் என் சேவகனைக் கூப்பிட்டு உம்மைப் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லுவேன். நீர் நினைக்கிறபடி ருக்மிணி பாங்கி, 'வந்தட்டி வரந்தட்டி பாங்கியல்ல' தயவு செய்து எங்கள் காஷ்கீப்பருடன் மதராஸ் பாங்கி வரையில் நீர் போனால் அங்கே உமது ரூபாய்களைக் கொடுத்துவிடச் சொல்லுகிறேன். ராகவா! ஒரு செக் எழுதி ரங்கநாத்தைக் கூட அனுப்பி வாங்கிக் கொடுத்துவிட்டு வரச்சொல்லும்; யாரடா சேவகன்?

ராஜேந்திரன் வாயிலிருந்து, "யாரடா சேவகன்?" என்ற வார்த்தை வந்ததுதான் தர்மதம். 'எப்போது நமது எஜ மான் உத்தரவு கொடுப்பார்; அவன் எலும்புகளை ஒடித்து எறிந்துவிடலாம் என்று காத்திருந்த சேவகன், 'உம்மைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லுவேன்' என்று ராஜேந்திரன் சொன்ன வார்த்தையை மட்டும் கேட் டிருந்தவனாதலால் அங்கிருந்து வந்ததும் கோபாலாசாரி யார் அண்ட் ஸன்ஸ் பாகஸ்தனும் கோபாலாசாரியார் பிள்ளையுமாகிய கிருஷ்ணமாசாரியைப் பிடித்துத் தட்டட்டி

யின் வழியாய்த் தெருவில் எறிந்துவிடுவதற்காகத் தூக்கிக் கொண்டான். கிருஷ்ணமாசாரி கதறுவதானார். உடனே ராஜேந்திரன், "அவரைக் கீழே விட்டுவிட்டு இப்படி வா! என்ன பரம தடியனாயிருக்கிறாயே! செக் புஸ்தகம் வாங்கி வரக் கூப்பிட்டால் வந்ததும் அவரைப் பிடித்து மேலே தூக்கிவிட்டாயே'' என்றார்.

சேவகன் தன் எண்ணம் நிறைவேறாததைப்பற்றி அதிக வருத்தத்துடன் அவரை விட்டுவிட்டுச் செக் புஸ்தகம் வாங்கப் போனான். அப்போது ராகவன் ராஜேந்திரனிடம் மதராஸ் பாங்கியில் முன்னாலேயே அதிகப் பணம் வாங்கியிருப்பதாகவும் ஆகையால் செக் அனுப்பினால் அங்கீகரிக்கப்பட மாட்டாதென்றும் மெதுவாய்ச் சொன்னார். கிருஷ்ணமாசாரியார் அதைக் கேட்டுக்கொண்டு கேவலமாய்ப் பேச வாயெடுத்தார். அதற்குள் சேவகன் அவர் பக்கம் திரும்பினதும் மௌனமாக இருந்துவிட்டார். உடனே ராஜேந்திரன் தமது சொந்தச் செக் புஸ்தகத்தை எடுத்து ஒரு செக் எழுதி ரங்கநாத்திடம் கொடுத்து, "கிருஷ்ணமாசாரியை அழைத்துக்கொண்டு உடனே மதராஸ் பாங்கிக்குப் போய்,பணம் வாங்கித் தட்சணமே அவரிடம் கொடுத்துவிட்டு வா'' என்று கூறிப் போகச் சொன்னார். அப்போது கிருஷ்ணமாசாரி தாம் அவசரப்பட்டு மதியீனமாகப் பேசியதற்காக மன்னிக்க வேண்டுமென்றும் ராஜேந்திரனின் பெருந்தன்மை தமக்குச் சரிவரத் தெரியாதென்றும் இன்னும் இதைப் போலொத்த உபசார வார்த்தைகள் பேச வாயெடுத்தார். ராஜேந்திரனே அவரைப் பேசவிடாமல் வாயடக்கியதோடு, 'இனிப் பேசினால் கட்டாயமாய் என் சேவகனை அழைத்து...'என்று வாக்கியத்தைப் பூர்த்தி செய்யுமுன் தட்டட்டியின் வழியாய் மெத்தை மேலிருந்து தள்ளப்படுவது இஷ்டமில்லை யாதலால் கிருஷ்ணமாசாரி படிகளின் வழியாய்த் துரிதமாய் இறங்கிப் போய்

விட்டார். தெருவில் சென்றதும் ராஜேந்திரனுடைய வண்டியில் அவர் சொன்னபடியே ரங்கநாத், கிருஷ்ணமாசாரியை அழைத்துக்கொண்டு மதராஸ் பாங்கிக்குப் போகப் போனார். அப்போது வழியில்,

கிருஷ்ணமாசாரி: ஐயா! உங்கள் பாங்கியில் ஐந்து லட்சம் ரூபாய் திருட்டுப் போனதாக வேலைக்காரர்கள் கிசுகிசுவென்று பேசிக்கொள்ளுகிருர்களே! அது உண்மைதானு?

ரங்கநாத்: எனது எஜமானர் ராஜேந்திரன் தங்களிடம் நேரில் சொல்லியும் தாங்கள் ஏன் சந்தேகப்படுகிறீர்கள்?

கிருஷ்ணமாசாரி: சந்தேகமில்லை. பாங்கிகளில் பலவிதமாய் ஏமாற்றல்கள் நடக்கிறதுண்டே, அப்படி ஏதாவது இருக்குமோ என்னமோவென்றுதான் சந்தேகம்.

ரங்கநாத்: எங்கள் எஜமானருடைய குணம் உமக்கு நன்ருய்த் தெரியாததலால் நீர் அப்படிப் பேசுகிறீர், அவரைவிடச் சிறந்த கனவான் இச் சென்னையிலேயே கிடையாது.

கிருஷ்ணமாசாரி: இப்போது ருக்மிணி பாங்கியில் பணக்கஷ்டம் அதிகம் என்று பிரஸ்தாபம். உமக்குச் சகல விஷயங்களும் நன்ருய்த் தெரியுமே; அது உண்மையா பொய்யா?

ரங்கநாத்: நீர் என்னையும் உமது ஸ்தானத்தில் வைத்து இக் கேள்விகளைக் கேட்டீர். நான் உம்மைப்போல் தூர்த்தனுயிருந்தால் பாங்கியின் ரகசியங்களை வெளியிற் கொட்டி விடுவேன். அதற்கு நான் ஆள் அல்ல. ஆனுல் ஒன்றுமட்டும் சொல்லுகிறேன். இன்றைத் தினம் கூடச் சென்னையிலிருக்கும் பாங்கிகளில் மதராஸ் பாங்கிக்கு இரண்டாவதாக ருக்மிணி பாங்கியைத்தான் மதிக்கலாம்.

கிருஷ்ணமாசாரி: ஆம்; ஆம். நீர் அவர்கள் உப்பைத் தின்றுவிட்டு இவ்வளவாவது சொல்லாவிட்டால் நன்ருயிருக்குமா? எனக்கு ஊர் மர்மங்களெல்லாம் தெரியும். இப்படிச் சொன்னுல் பழையபடி நாங்கள் ரூபாய்களை உங்கள்

பாங்கியில் போடுவோமென்று நினைத்து அப்படிப் பேசுகி றீர்போல் இருக்கிறது. சரிதானையா சரிதான்; இப்போது விளங்குகிறது.

ரங்கநாத்: ஐயா! எப்படியாவது நினைத்துக்கொள்ளுங் கள். எங்களுக்கு அதைப்பற்றிய கவலையில்லை. உமக்கு ஒரு விஷயம் சொல்லுகிறேன். இனிமேல் நீர் எங்கள் பாங்கி யில் கால் வையாதேயும். ஏனெனில் உமது பேரில் இருக்கப் பட்ட கோபத்திற்குக் கட்டாயமாய் ராஜேந்திரன் உம்மைக் குதிரைச் சவுக்கால் அடிப்பார்.

கிருஷ்ணமாசாரி: இப்போது இந்தச் செக்கை நான் திருப்பிக் கொண்டுபோய்க் கொடுத்து உங்கள் பாங்கியி லேயே பணம் இருக்கட்டும் என்று சொன்னால்கூடவா அப்படிச் செய்வார்.

ரங்கநாத்: நீர் மட்டும் அப்படிச் செய்து பாரும்; நான் சொன்னபடி உமக்கு மரியாதைகள் நடக்காவிட்டால் உமது காலில் இருக்கும் செருப்பால் அடிபட நான் சம்மதிக் கிறேன்.

கிருஷ்ணமாசாரி: சரி, என் பணத்தை அங்கே போட உத்தேசமில்லை. ஆகையால் அந்தப் பேச்சை விட்டுத் தள்ளும். நான் அங்கே வந்தபோது, இருந்த காரியங்களை யெல்லாம் கவனித்தால் குற்றம் உமது பேரில்தான் ஏற்படு மென்று எல்லாரும் பேசிக்கொண்டார்களே; உண்மை தானா?

ரங்கநாத்: நான் நிரபராதி. யார் என்ன நினைத்தாலும் எனக்கு அவசியமில்லை. மடியில் கனம் இருந்தால்தானே வழியில் பயம்; குற்றம் உள்ள நெஞ்சல்லவோ குறு குறு என்னும்.

கிருஷ்ணமாசாரி: நண்பரே! நான் சொல்வதை நிதான மாகக் கேளும். நீர் குற்றவாளியோ அல்லவோ, அதை யெல்லாம் யாரும் கவனிக்க மாட்டார்கள். எப்படியாவது

சந்தேகம் உமது பேரிலும் ராகவன் பேரிலுந்தான் ஏற்படும். அவர் பாகஸ்தரானபடியாலும் நீர் நோட்டுகள் வாங்கி வைத்த விஷயமே அவருக்குத் தெரியாததாலாலும், போலீசார் வந்தவுடனே கழுவுக்கேற்ற கோமுட்டி நீர்தாமென்று உம்மைப் பிடித்து மாட்டி விடுவார்கள். கோர்ட்டிலும் உமது பேரில் கேஸ் நன்ருய் ஜோடிக்கப்பட்டு ருஜுவாகி விடும். கடைசி முடிவாய் உம்மைத் தீவாந்தரம் ஏற்றி அனுப்பிவிடுவார்கள்.

ரங்கநாத்: 'திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை' யென்றும், 'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' என்றும் நம்பியிருக்கிறேன். கடவுள் விட்டபடி விடட்டும். மேலும், நான் வெகு தூரமான அயல் தேசத்திலிருந்து வந்து இந்த வேலையை ஒப்புக்கொண்டவன். எனக்கு இங்கு ஏதேனும் ஆபத்து நேரும் பக்ஷத்தில் ராஜேந்திரருக்குத் தாங்கள் அனுப்பும் ஒரு தந்தி எந்தவிதமான ஆபத்துகளையும் கஷ்டங்களையும் ஒரு நிமிஷ நேரத்தில் நிவர்த்தித்துவிடும் என்று என்னை இங்கே அனுப்பி வைத்த பாட்டனுர் எனக்குத் தைரியம் கூறியிருக்கிருர். ராஜேந்திரரிடத்தில் எனக்குப் பற்றுதல்-எஜமான விசுவாசம்-அதிகம். அந்த விசுவாசமே என்னை எப்போதும் க்ஷேமத்தில் வைக்கும். நான் எவருக்கும் பயப்பட வேண்டியதில்லை. தர்மம் தலை காக்கும்.

கிருஷ்ணமாசாரி: நீர் இந்தக் காலத்திற்கேற்ற ஆளல்ல. என்னவோ சத்தியத்தையும் கடவுளையும் சொல்லுகிறீர். இந்தக் கலியுகத்தில் கடவுளேது மண்ணேது? சதா வஞ்சனையும் கொடுமையும் செய்வதையே விரதமாகக் கொண்டவர்கள்தான் நல்ல ஸ்திதிக்கு வருகிருர்கள். எத்தனை நாள் புசித்தாலும்நெஞ்சிலே விசுவாசமில்லாதவர்களுக்குத்தான் பின்னும் பின்னும் ஆக்கிக் கொட்டுகிருர்கள்? எஜமான விசுவாசமென்றீர். அதுவெல்லாம் பழைய நாள் கதை. உம்மைப்போலொத்தவர்கள் எல்லாம் தலையில் கையை வைத்

துக்கொண்டு லக்ஷம் ரூபாய்க் கட்டடத்திற்கு. *நீலமெத்தைக்கு ●இரட்டைக் குதிரை வண்டியேறிப் பிரவேசமாக வேண்டியதுதான். உமக்குப் புத்தியில்லை. நான் சொல்வதையும் கேட்க மாட்டேனென்கிறீர். கெட்டுப் போகக் காலம் வந்திருக்கும்போது நல்ல புத்தி தோன்றுமா? உம்மைப்போன்ற மவுட்டியத்தை நான் எங்கும் கண்டதில்லை.

ரங்கநாத்: ஐயா! உமது பணத்திமிரை இங்கே காட்ட வேண்டாம். வார்த்தைகளை நிதானித்துப் பேசும்.

கிருஷ்ணமாசாரி: இப்போதாவது நான் சொல்லுவதைக் கேள். இந்த நிமிஷத்திலேயே எங்கேயாவது ஓடி ஒளிந்து கொள். உன் செலவுக்குத் தேவையிருந்தால் இப்போதே பத்தாயிரம் ரூபாய் நான் கொடுக்கிறேன். உனக்குச் சௌகரியப்பட்டபோது திருப்பிக் கொடுக்கலாம். பாவம்! உன்னைப் பார்த்தால் நல்ல பிள்ளையாகத் தோன்றுகிறாய். ரூபாய் கொடுக்கட்டுமா?

ரங்கநாத்: ஐயா! திருடன் விஷயத்தில் தாங்கள் எடுத்துக்கொள்ளும் இவ்வளவு சிரமத்திற்காகவும் ஒரு திருடனுக்குப் பத்தாயிரம் ரூபாய் கடன் கொடுக்கிறேனென்று சொன்னதற்காகவும் நான் தங்களுக்கு என் மனமுவந்த வந்தனம் அளிக்கிறேன். ஆனால் நான் திருடனுமல்ல, உமது பண உதவியும் எனக்குத் தேவையில்லை. என்னை இங்கே அனுப்பி இருப்பவர்கள் கூறியிருக்கிற தைரிய வாசகமே எனக்குப் போதுமானது. உமது பேச்சைக் கேட்டு நான் ஓடிப்போனால் நான்தான் திருடினேனென்று ஏற்பட்டுப்

---

*நீல மெத்தை—ஜெயில்.

●இரட்டைக் குதிரைவண்டி: சென்னையில் ஜெயிலுக்குக் கொண்டுபோகப்பட்டவர்களை இரண்டு பெரிய குதிரைகள் கட்டிய மூடின வண்டியில்தான் கொண்டுபோவது முன்னைய வழக்கம். இப்போது மூடிய மோட்டார் வண்டியில் கொண்டு போகிறார்கள்.

போம். இந்த உபகாரத்தைத்தான் - இந்த நல்ல பெயரைத் தான்-நீர் எனக்குத் தேடி வைக்கிறீர்போலும். என்னுடைய உறுதியில் என் மனத்தைக் கலைக்க ஈசனாலும் முடியாது.

இதற்குள்ளாக மதராஸ் பாங்கி வரவே இருவருமாக இறங்கிப் போனார்கள். ரங்கநாத் நேராக மதராஸ் பாங்கிப் பெரிய துரையிடம் போய்ச்செக்கைக் கொடுத்துத் துரிதமாக ரூபாய்கள் தேவையென்று சொன்னார். அவர் அங்கிருந்த இரும்புப் பெட்டியிலிருந்த நோட்டுகளைக் கொடுக்க, வாங்கி, கிருஷ்ணமாசாரியிடம் கொடுத்து ரூபாய்களுக்கு ரசீது பெற்றுக்கொண்டு அவரை அவரது இஷ்டமான இடத்திற்குப் போகச் சொல்லிவிட்டுத் தாம் மட்டும் வண்டியேறிப் பக்கத்திலுள்ள ஜெனரல் போஸ்டாபீசுக்குப் போய் ஒரு தந்தி கொடுத்துவிட்டு நேராகப் பாங்கி போய்ச் சேர்ந்தார். அவர் போய் வந்தவரையில் வண்டியின் பின் பக்கத்தில் சேவகன் உட்கார்ந்து போனானென்ற விஷயமாவது அவர் ஓடிப்போக முயன்றிருந்தால் அவரை உடனே பிடித்துக் கொள்வானென்ற விஷயமாவது அவருக்காவது கிருஷ்ணமாசாரியாருக்காவது தெரியவே தெரியாது.

நிற்க. ரங்கநாத்தை மதராஸ் பாங்கிக்கு அனுப்பினவுடனே ராஜேந்திரனும் ராகவனும் அவர்களது அந்தரங்கமான அறையினுட் சென்று பின்வருமாறு பேசிக்கொண்டார்கள்.

ராகவன்: இத்திருட்டைப்பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க ஒன்றுமே திருப்திகரமாயில்லை. அப்படியிருக்க ரங்கநாத்தைத் தாங்கள் தனியாய் அனுப்பியது சரிதானா? ஒருவேளை ஓடிப் போய்விட்டால் என்ன செய்கிறது?

ராஜேந்திரன்: நண்பரே! ரங்கநாத் ஓடிப்போக வேண்டுமானால் அவன் ஓடிப்போய் 16 மணி நேரங்களுக்கு அதிகம் ஆகியிருக்கும். ஒன்று அவன் நிரபராதியாக இருக்க

வேண்டும்; இல்லாவிட்டால் கை தேர்ந்த பெரும் திருடனாக இருக்கவேண்டும். அவன் கொண்டு வந்த சிபார்சுக் கடிதங்களிலிருந்தும் இது நாள் வரையிலும் நம்மிடம் பழகியிருக்கும் அவன் குணபாவங்களிலிருந்தும் அவன் யோக்கியனென்றே நான் நினைக்கிறேன். அவனைத் திருடனென்று சந்தேகிக்க என் மனம் இடந்தரவில்லை. மேலும் நம் இருவரிடத்தும் அவனுக்குப் பரம விசுவாசம். நமக்கும் அவன் மீது அப்படியே.

**ராகவன்:** ஆனால் என்னைத் திருடன் என்கிறீர்போலும்!

**ராஜேந்திரன்:** நாராயணா! நாராயணா!! என்ன இந்த மாதிரி பேசுகிறீர்? இதென்ன கர்ண கடூரமான வார்த்தைகள்! நான்தான் பணத்தையே லட்சியம் செய்யாதவனாயிற்றே. நீர் கேட்டுக்கொண்ட பிறகல்லவா நான் பாங்கிக்கு வந்துபோவதாய் இருக்கிறேன். என்னருமை ருக்மிணியைப் பிரிந்த பிறகு இவைகள் என்ன கதியானால்தான் எனக்கென்ன? நான் இனி இதில் பிரவேசிப்பதில்லை.

**ராகவன்:** இரும்புப் பெட்டியின் சாவிகள் என்னிடத்தில் ஒன்றும் அவனிடத்தில் ஒன்றுமாக இருக்கின்றன. மேலும் பேர்ப்பூட்டு எங்கள் இரண்டு பேருக்குத்தான் தெரியும். பூட்டுக்களோ உடைக்கப்படவில்லை. ஆகையால் எங்கள் இருவரைத் தவிர வேறு யாரால் திறக்கக்கூடும்?

**ராஜேந்திரன்:** உங்கள் மனத்துக்கு நீங்கள் திறக்கவில்லையாதலால் கட்டாயமாய் அவன்தான் திருடனென்று நிச்சயித்து விட்டீர்கள்போல் இருக்கிறது. இதைச் சீராய் ஆராய்ந்து அறியாமல் ஒன்றும் சொல்லலாகாது. இப்போது நமது சேவகன், ரங்கநாத் ஓடிப் போய்விடாமல் பந்தோபஸ்தாய்ப் போயிருக்கிறான். அவனுக்குப் போதிய சாவகாசம் இருப்பதால் அவனே திருடியிருந்தாலும் நோட்டுகளை ஒளித்து வைக்கப் போதிய சாவகாசம் இருக்கிறது. அதனால் அவனைச் சிறைப்படுத்துவதால் சொத்து அகப்

படமாட்டாது. ஆகையால் நானே போலீஸ் கமிஷனரவர்களிடம் நேரில் சென்று திருட்டுப்போன விஷயத்தை எழுதி வைத்து இவ்விஷயத்தைப் பகிரங்கப் படுத்த வேண்டாமென்றும் ரகசியமாகவே துப்புத் துலக்க வேண்டுமென்றும் சொல்லி ஏற்பாடு செய்கிறேன். நீ மாத்திரம் ரங்கநாத் விஷயத்தில் துவேஷம் காட்டாமல் வேலைகளை நடத்திக் கொண்டு வா. நமது சொத்துக் கட்டாயமாய் அகப்படுமென்று எனக்கு எக்காரணத்தாலோ தோற்றுகிறது.‘அரங்கன் சொத்து அக்கரை யேருது’.

**ராகவன்:** தாங்கள் சொல்லும் விஷயங்கள் ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை. நான் பூட்டுப் போடுவதற்குள் நோட்டுகளை எங்கோ ஒளித்து வைத்துவிட்டுப் பூட்டுப் போட்டிருப்பான். நான் போய் வழக்கம்போல் பூட்டுப் போட்டு வந்தேன்; இரும்புப் பெட்டியை நான் திறக்க வேண்டுமானால் கூட அவனுடைய சாவி தேவையல்லவா? ஆகையால் அவனேதான் எடுத்திருப்பானென்று பூரணமாய் நான் நினைக்கிறேன்.

**ராஜேந்திரன்:** நண்பரவர்களே! அவன் உண்மையான குற்றவாளியாக இருந்தாலும் நமது சொத்தை நாம் பெற விரும்பினால் அவனை வெளியில் விட்டு வைத்துத் துப்பறிவோர்களை அவனுக்குத் தெரியாமல் பின் தொடரச் செய்து அவன் காரியாதிகளைக் கவனித்தால்தான் நல்லது. நான் கமிஷனர் துரையவர்களிடம் நேரில் போய்ப் பேசி அப்படியே ஏற்பாடு செய்கிறேன்.

இப்படிச் சொல்லித் தமது நண்பரைச் சமாதானப் படுத்திவிட்டுக் கமிஷனர் துரையவர்களிடம் போய்ப் பேசி அப்படியே ஏற்பாடு செய்துவிட்டார். கமிஷனர் துரையவர்களோ போலீஸ் வழக்கப்பிரகாரம் ரங்கநாத்தை மட்டும் கவனிப்பதாய் ராஜேந்திரனிடம் சொன்னபோதிலும், ராஜேந்திரன், ராகவன், ரங்கநாத் ஆகிய மூவரையும் ஜாக்கிரதை

யாகக் கவனிக்கும்படியும் மூவரில் எவராவது ஊரைவிட்டு வெளியூர் போகப் புறப்பட்டால் அவர்களை உடனே கைது செய்து தம்மிடம் கொண்டுவரும்படிக்கும் தம் உத்தியோகஸ்தருக்கு உத்தரவு செய்தார். அன்று சாயங்காலம் 3-மணிக்கு ருக்மிணி பாங்கியுடன் பெருத்த லேவாதேவி செய்யும் இந்து பினுங்கு பாங்கியிலிருந்து ராஜேந்திரனுக்குப் பின் குறிப்பிட்ட மாதிரி தந்தி வந்தது.

## அயல்தேசத் தந்தி

மானேஜர் இந்து பினுங்கு பாங்கி, பினுங்கு.

ம-ா-ா-ஸ்ரீ ராஜேந்திராசாரி அவர்கள்,

ருக்மிணி பாங்கி, சென்னை.

தங்கள் பாங்கியில் ஆச்சரியமான பெருத்த திருட்டு நடந்ததாகவும் ரங்கநாத் பேரில் சந்தேகம் ஏற்படுவதாகவும் தெரிகிறது. இத் திருட்டைத் துலக்குவதற்குக் கியாதிபெற்ற திருவல்லிக்கேணித் துப்பறியும் கோவிந்தனை எங்கள் செலவில் நியமித்து வேலை நடத்தவேண்டியது. அந்தச் செலவுக்காக ரூபாய் பத்தாயிரத்திற்கும், பெருத்த தொகையாகிய ஐந்து லக்ஷம் ரூபாய் திருட்டுப்போன பணக் கஷ்டத்தை நிவர்த்திக்கும்பொருட்டு ஐந்துலக்ஷம் ரூபாய், 'பிக்செட் டிபாசிட்'டுக்காகவும் ஆக ஐந்து லக்ஷத்துப் பத்தாயிர ரூபாய்க்கு மதராசு பாங்கியின் பேரில் தந்தி மூலமாய்த் தரிசன உண்டியல் அனுப்பி யிருக்கிறோம். ரங்கநாத் உண்மையான குற்றவாளியாக ஏற்படும் விஷயத்தில் இந்த ஐந்து லட்சத்தையும் அந்த நஷ்டத்திற்குத் தாங்கள் ஈடு செய்துகொண்டு ரங்கநாத்தையும் சட்டப்படி தண்டனை யடையச் செய்யவேண்டியது. அப்போது கோபாலபுர வைரங்களுக்கும் நாங்கள் ஈடு செய்யத் தயாராயிருக்கிறோம்.

மானேஜர், இந்து பினுங்கு பாங்கி,

தந்தியைப் படித்த உடனே ராஜேந்திரன், ராகவனைக் கூப்பிட்டனுப்பி அவரிடம் தந்தியைக் கொடுத்தார். ராகவன் தந்தியை வாசித்துப் பார்த்துவிட்டு தந்தியின் பிரகாரம் ஐந்து லட்ச ரூபாயை வாங்கித் தங்கள் வசம் வைத்திருப்பது நல்லதுதானென்று சொன்னார். அதற்கு ராஜேந்திரன் ஒத்துக்கொள்ளாமல் அப்படிச் செய்வது தங்கள் பாங்கியின் அந்தஸ்துக்குத் தகுந்ததல்லவென்றும் 5 லட்சம் ரூபாய்களைச் சமாளிக்கச் சக்தியற்றிருப்பதால்தான் சந்தோஷமாய் ரூபாய்களை உடனே அங்கீகரித்துக்கொண்டார்களென்று இந்து பிணங்கு பாங்கியார் தங்களை இழிவாக நினைக்கக் கூடுமென்றும், அல்லது இந்து பிணங்கு பாங்கியார் முன்னாலேயே ரங்கநாத்துக்குக் கொடுத்திருக்கும் ஜாமீனை நம்பாமல் ரூபாய்களை வைத்துக்கொண்டார்களென்றும் அவர்களை நம்பவில்லையென்றும் நினைக்கக் கூடுமென்றும், ஆகையால் உண்டியலை அங்கீகரிக்காமல் வந்தனத்துடன் திருப்பிவிடுவதே நல்லதென்றும் சொல்லிப் பின்வருமாறு தந்தியடித்தார்.

## அயல் தேசத் தந்தி

ராஜேந்திராசாரி,
ருக்மிணி பாங்கி, சென்னை.
மானேஜர், இந்து பிணங்கு பாங்கி,
பிணங்கு.

தங்கள் தந்தி சேர்ந்தது. ருக்மிணி பாங்கிக்குப் போதுமான பண வருவாய் இருப்பதாலும், தங்கள் ஜாமீனைப்பற்றிப் போதிய நம்பிக்கை யிருப்பதாலும் தாங்கள் தந்தி மூலமாய் அனுப்பிய தரிசன உண்டியலை வந்தனத்துடன் பெற்றுக்கொள்ள மறுதலிக்கிறோம். எங்கள் பாங்கியில் திருட்டுப் போனதற்கு எங்கள் செலவில் துப்பறியும் திருவல்லிக்கேணிக் கோவிந்

தனை நியமிப்பதே நியாயமாகையால் தங்கள் வேண்டுகோளின்படி திருவல்லிக்கேணித் துப்பறியும் கோவிந்தனைத் துப்புத் துலக்க நியமித்திருக்கிறோம். ஆனால் அதற்காகத் தாங்கள் அனுப்பிய ரூபாய் பத்தாயிர உண்டியலையும் வந்தனத்துடன் திருப்பிவிட்டோம். மன்னிக்கவும். எனக்கு மட்டும் இன்னும் என் பிரியமான ரங்கநாத் பேரில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

ராஜேந்திராசாரி.

மேற்சொன்னவாறு தந்தியை அனுப்பிவிட்டுத் திருவல்லிக்கேணித் துப்பறியும் கோவிந்தனை ராஜேந்திரன் டெலிபோன் மூலமாய்க் கூப்பிட்டார்.

---

## 5. கோவிந்தனின் ஆராய்ச்சி

'மெய் வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்
........கருமமே கண்ணாயினர்.'

கோவிந்தன் வந்ததும் ராஜேந்திரன் அவரை ஆசனத்தில் அமரச் செய்து க்ஷேம லாபங்களை விசாரித்தார்.

**கோவிந்தன்:** ஐயா! தாங்கள் என்னை என்ன காரணமாய் வரவழைத்தீர்கள்? முதலில் அதைச் சொல்லுங்கள்; மற்ற விஷயங்கள் பிறகு ஆகட்டும்.

**ராஜேந்திரன்:** ஐயா நேற்றைத் தினம் இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிய 5 லக்ஷ ரூபாய் நோட்டுகளும், எங்களிடம் பந்தோபஸ்துக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் ஐம்பது லட்சம் ரூ. விலை மதிப்புள்ள கோபாலபுரம் வைரங்களும் பூட்டுகளெல்லாம் பூட்டினபடி இருக்கும்போது மாயமாகக் காணமற் போயிருக்கின்றன. இரும்புப் பெட்டியின் இரண்டு சாவிகளில் ஒரு சாவி எனது ஆப்த நண்பரும், ருக்மிணி பாங்கியின் பாகஸ்தருமான ம-ா-ா-ஸ்ரீ ராகவனிடத்திலும், இன்னொரு சாவி-எங்கள் பாங்கியில் இரண்டு வருஷ கால

மாக மிகவும் நம்பிக்கையுடன் பெருத்த லேவாதேவி செய்யும் இந்து பிஞங்கு பாங்கியிலிருந்து தக்க ஜாமீனும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்று வந்த-ரங்கநாத் இடத்திலும் இருந்தன. சாயங்காலம் நோட்டுகளை வைத்து ரங்கநாத் பூட்டினதாகவும் அதன் பேரில் ராகவன் தம் பூட்டைப் போட்டதாகவும் சொல்லுகிருர்கள். இந்த இரண்டு பூட்டுகளுக்குமேல் அவர்கள் இருவருக்கு மட்டும் தெரிந்த பேர்ப் பூட்டும் பூட்டப்பட்டிருந்தது.

கோவிந்தன்: ஐயா! சற்று நிதானியுங்கள். இந்த இரு சாவிகளும் ஒரே மாதிரி சாவிகளா? வெவ்வேறு சாவிகளா? அதாவது ஒரேவிதமான சாவி இருவரிடமும் இருக்கிறதா? அல்லது ஒவ்வொன்றும் வேவ்வேறு விதமான சாவியா? ஒருவரிடம் இருக்கும் சாவியைக் கொண்டே பெட்டியைத் திறந்துவிட முடியுயா?

ராஜேந்திரன்: வெவ்வேறு சாவிகள்தாம். இருவரிடமும் இருக்கும் இரண்டு சாவிகளையும் போட்டுத் திறந்தால்தான் பெட்டியைத் திறக்கலாம். இந்தச் சாவிகள் போடுவதற்கு முன் பேர்ப்பூட்டைத் திறந்தால்தான் சாவிகள் போடும் இடம் தெரியும். ஆகவே எந்தப் பேரால் பூட்டப்பட்டிருக்கிறதென்று தெரிந்து பேர்ப்பூட்டைத் திறந்து, பின்னுல் இருவரிடமுமுள்ள சாவிகளையும் வைத்துத் திறந்தால்தான் பெட்டியைத் திறக்கக் கூடும்.

கோவிந்தன்: சரி, இப்பேர்ப்பட்ட பூட்டுகளுக்கு 'மாஸ்டர் கீ' என்று சொல்லும் இரு பூட்டுகளையும் திறக்கக்கூடிய ஒரு சாவி அனுப்புவது வழக்கமாயிற்றே. அப்பேர்ப்பட்ட சாவி இதற்கு இருக்கிறதா? இருந்தால் யாரிடம் இருக்கிறது?

ராஜேந்திரன்: நல்ல வேளையாக ஞாபகப்படுத்தினீர்கள். அப்பேர்ப்பட்ட சாவி ஒன்று என்னிடம் உண்டு. இந்தப் பெட்டி வந்தவுடன் ராகவன் அதன் 'மாஸ்டர் கீயை' என்னிடம் கொண்டு வந்து கொடுத்து என்னை வைத்துக்கொள்

ளச் சொன்னார். என்னிடம் தேவையில்லையென்று சொன்னேன். அவர் கட்டாயப்படுத்தி வைத்துக்கொள்ளச் சொன்னதன் பேரில் ஒரு பையில் போட்டுச் சீல் அடையாளமிட்டுக் கொடுக்கும்படி செய்து அப்படியே வாங்கி 16 வருஷங்களுக்கு முன் என் கைப்பெட்டியில் வைத்தேன். அதை இதோ எடுத்து வருகிறேன்; பாருங்கள்.

கோவிந்தன் வேலைக்காரனை விட்டு அப்பெட்டியைக் கொண்டுவரச்சொல்லி தம் முன் திறப்பது நலமென்று சொன்னதன்பேரில் தமது நம்பிக்கையுள்ள ஆளிடம் சாவி கொடுத்து அறையைத் திறந்து அப்பெட்டியைக் கொண்டு வரச் செய்து கோவிந்தனிடமே அப்பெட்டியின் சாவியைக் கொடுத்துத் திறக்கச் சொன்னார்.

**கோவிந்தன்:** தாங்கள் இப்பெட்டியை அடிக்கடி திறப்பதில்லையோ? கடைசியாக எப்போது திறந்தீர்கள்?

**ராஜேந்திரன்:** நான் இப்பெட்டியை அநேகமாய்த் திறப்பதில்லை. கடைசியாக எப்போது திறந்தேனென்று ஞாபகமேயில்லை. எப்படியும் நான் திறந்து அநேக வருஷங்கள் இருக்கலாம்.

கோவிந்தன் பெட்டியைத் திறந்து ராஜேந்திரன் காட்டிய இடத்திலிருந்து சாவி அடங்கிய பையை உடனே எடுத்துவிடாமல் பூதக்கண்ணாடி கொண்டு அதிகக் கூர்மையாய்ப் பார்த்து, பின் அதை எடுத்து அதன்மேல் போட்டிருக்கும் அரக்கு முத்திரையைக் கூர்மையாய்க் கவனித்துப் பார்த்துவிட்டு எடுத்த இடத்தில் வைத்துப் பூட்டி ராஜேந்திரனிடம் கொடுத்துவிட்டுப் பின்வரும் கேள்விகளைக் கேட்டார்.

**கோவிந்தன்:** கோபாலபுரம் வைர நகைகள் அடங்கிய பெட்டியையும் நோட்டுகளையும் வைத்து ரங்கநாத் பூட்டினதை ராகவன் பார்த்தாரா? இல்லாவிட்டால் யார் பார்த்தார்கள்?

ராஜேந்திரன்: சட்டப்படியும் வர்டிக்கைப்படியும் ராகவன் பார்த்ததன்பின்தான் இரு பூட்டுகளும் பூட்டவேண்டி யிருந்தாலும் வழக்கத்தில் நம்பிக்கையின்பேரில் இவ்விஷயத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதில்லை. ஆகவே ராகவன் பார்க்காமலே தம் பூட்டைப் போட்டதாகச் சொல்லுகிறார். ஆனால், என்னைச் சிறு குழந்தை முதல் தூக்கி வளர்த்து வந்தவரும், பாங்கிகளுக்குப் போய்ப் பெருந்தொகைகள் பெற்று வருபவருமான ராமன் என்னும் வேலைக்காரர் தாம் நேற்றுச் சாயங்காலம் மதராஸ் பாங்கியிலிருந்து சுமார் ஐந்துமணிக்கு, பாங்கி மூடப்போகும் சமயத்தில் நோட்டுகளைக் கொண்டு வந்ததாகவும் அவைத ரங்கநாத் வாங்கி உள்ளே போட்டு உடனே பூட்டிவிட்டதைத் தாம் பார்த்ததாகவும் அதன்பேரில்தான் ராகவன் பூட்டுப் போட்டதாகவும் ராகவன் அங்கிருக்கும்போதே ரங்கநாத் அவசரமாக வெளியே போய்விட்டதாகவும் சொல்லுகிறார்.

சர்க்கார் கஜானுக்களிலிருக்கும் பெருந்தொகைகளுக்குக் கலெக்டர்களும் கஜானு சார்ஜ் டெபுடி கலெக்டர்களும் ஜவாப்தாரியாக இருந்தாலும், ஒவ்வொரு பையிலும் ரூபாய்கள் சரிவர இருக்கின்றனவா என்பதைக் கவனித்துக் கலெக்டரும் டெபுடி கலெக்டரும் பார்த்துத்தான் கஜானுவைப் பூட்டவேண்டுமென்று சட்டமிருந்த போதிலும் வழக்கத்தில் அது அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படுவதுமில்லை; கொண்டு வருவதும் அதிக கஷ்டம். எல்லாம் சரியாய் நடக்கும் வரையில் எல்லாருக்கும் நல்ல பேர்தான். ஏதாவது பணம் குறைந்துவிட்டால் கலெக்டருக்குத்தான் பிடித்தது ஏழரை நாட்டுச் சனியன். அப்படியே இப்போது பார்க்காமல் தம் பூட்டைப் பூட்டினது ராகவன்பேரில் குற்றமாய் இருக்கலாம்; ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை.

கோவிந்தன்: இக்களவை நான் உண்மையாகக் கண்டுபிடிக்க வேண்டுமென்னும் எண்ணம் தங்களுக்கு இருந்தால்

நான் கேட்கும் கேள்விகளால் தாங்கள் கோபப்படாமலும், இது அவசியம் அது அநாவசியம் என்று நினைக்காமலும், எவ்வளவு அந்தரங்கமான விஷயமாக இருந்தாலும் ஒளிக்காமலும் உண்மையான மறுமொழிகள் சொல்வதாயிருந்தால் மட்டும் நான் இதில் தலையிடக்கூடும். முன் தங்கள் பத்தினியாகிய ருக்மிணியைத் தேடச் சொன்னபோது தாங்கள் என் கேள்விகளுக்குச் சரியான பதில் அளிக்காததால் தான் என்னால் முடியாதென்று விட்டுவிட்டதைத் தாங்கள் நன்கு உணர்வீர்கள். ஆகையால் இந்த விஷயத்திலும் முன் போல் தாங்கள் ஒளிப்புமறைப்பாகப் பேசுவதானால் தங்கள் காரியம் கைகூடாமற் போவதோடு என்னால் கண்டுபிடிக்க முடியாமற் போயிற்றென்ற அவமானமும் எனக்கு வரும். ஆகையால் தாங்கள் தீர்க்காலோசனை செய்து எப்படி நடந்துகொள்ள உத்தேசித்திருக்கிறீர்களென்று சொல்லி விடுங்கள். முன்பின் யோசித்துத் தங்கள் வேலையையும் என் நேரத்தையும் வீணாக்காமல் சொல்லுங்கள்; உத்தரவு கொடுத்தால் இப்போதே போய்விடுகிறேன்.

ராஜேந்திரன்: கோவிந்தா! முன்னால் நான் சங்கோஜப் பட்டுக்கொண்டு தங்களிடம் உண்மையைக் கூறாதது வாஸ்தவமே. அப்படி இவ்விஷயத்தில் நான் கூச்சப்படவாவது பயப்படவாவது ஒளிக்கவாவது எவ்விதப் பிரமேயமுமில்லை. நீங்கள் எந்தவிதமான கேள்விகள் கேட்டாலும் நான் உண்மையான பதில் அளிக்கிறேன்; கோபப்படுவதும் இல்லையென்று உறுதியாய்க் கூறுகிறேன். இவ்விஷயத்தில் நான் மாத்திரம் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று இருக்கவில்லை; ரங்கநாத்துக்கு ஜாமீன் கொடுத்திருக்கும் பிணங்கிலிருக்கும் இந்து பிணங்கு பர்ங்கி மானேஜரும் தங்களை வைத்துத் துப்புத் துலக்கும்படிக்கும் அந்த செலவுகளைப் பொறுப்பதாயும் அடித்திருக்கும் இந்தத் தந்தியையும் அதற்குக் கொடுத்த பதிலையும் பாருங்கள். எப்படியாவது

துப்புத் துலக்கி உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடிப்பதோடு கோபாலபுரம் வைரங்களையும் கண்டு பிடித்துத் திருப்பிக் கொடுக்கவேண்டும். அதன் கிரயமாகிய ஐம்பது லட்ச ரூபாயைக் கொடுக்க எங்களுக்குச் சக்தி இருப்பினும் அப்படிச் செய்வது அகௌரவமென்று நினைக்கிறோம். கோபாலபுரம் மகாராஜா அவர்களும் இப்போது ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்வதால் அவர்களுடைய விலாசம் எங்களுக்குத் தெரியாது. கஷ்டப்பட்டு விசாரித்தால் கண்டு பிடிக்கக் கூடுமானாலும், தெரியாதென்ற சாக்கையே காரணமாக வைத்துக்கொண்டு தாங்கள் துப்புத் துலக்கும் வரையில் வெளியில் சொல்லாமல் இருத்தல் நலமென்று நினைக்கிறோம். எப்படியாவது தாங்கள் கஷ்டப்பட்டுத் துப்புத் துலக்கி எங்கள் மானத்தைக் காப்பாற்ற வேண்டும். அதற்காக எவ்வளவு பொருள் விரயமான போதிலும் சரிதான். இப்போதே அச் செலவுகளுக்காகப் பதினாயிரம் ரூபாய் தங்களுக்கு முன்கூட்டிக் கொடுக்கிறேன்.

கோவிந்தன்: ஐயா! நான் துப்புத் துலக்கி உண்மையைக் கண்டு பிடித்தால் மட்டும் இனாம் வாங்குவது வழக்கமேயொழிய இல்லாவிட்டால் ஒரு காசுகூடப் பெறமாட்டேன். தங்கள் வார்த்தையே போதுமானது. நான் சரியானபடி துப்புத் துலக்கினால் தாங்கள் சந்தோஷப்பட்டுக் கொடுப்பதைப் பெற்றுக்கொள்ளுகிறேன். அதைப்பற்றி இப்போது பேசி வீண்காலம் போக்கவேண்டாம். தயவு செய்து தங்கள் பாங்கிக்காவது தங்களுக்காவது இப்போது பணக் கஷ்டம் உண்டா என்றும் தங்கள் வரவு செலவுகளைப்பற்றிய உண்மையான நிலைமையையும் ஒளியாமற் சொல்லக் கோருகிறேன். நான் இப்படி நிர்த்தாக்ஷிண்யமாய்க் கேட்பதற்குத் தாங்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது.

ராஜேந்திரன்: ஐயா! முன்னாலேயே நான் கோபப்படுவதில்லையென்றும் உண்மையைச் சொல்லுகிறேனென்றும்

தங்களுக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன். ஆகையால் இனி, தாங்கள் எவ்விதமான கேள்விகளையும் நிர்த்தாக்ஷிண்யமாய்க் கேளுங்கள். நான் உண்மையான பதிலேயே தெரிவிக்கிறேன். தாங்கள் இதில் கொஞ்சமேனும் சந்தேகப்பட வேண்டாம். என் சொந்தக் கணக்குச் சம்பந்தப்பட்ட மட்டில் எவ்விதமான பண நெருக்கடியும் கிடையாது. இன்றைத் தேதியில் என் சொந்தக் கணக்கில் அநேக லட்ச ரூபாய்கள் மதராஸ் பாங்கியில் பிக்செட் டிபாசிட்டில் இருக்கின்றன. ஆனல் எங்கள் பாங்கி சம்பந்தப்பட்ட மட்டில் கொஞ்சம் பண நெருக்கடியென்றே சொல்லவேண்டும். அதுவும் அதிருப்தியான வியாபாரத்தால் அல்ல; எனது முட்டாள்தனத்தாலேயே அப்படி ஏற்பட்டது.

**கோவிந்தன்:** தங்கள் முட்டாள்தனமென்பது என்னவென்றும் ருக்மிணி பாங்கியின் லேவாதேவிக் கணக்குகளைப்பற்றியும் தயவுசெய்து சற்று விவரமாகவே தெளிவாய்ச் சொல்லுங்கள்.

**ராஜேந்திரன்:** சுமார் 80 லட்சம் ரூபாய்கள் ஜமீன் நிலங்களின் கொதுவைகளின் பேரில் கொடுத்திருக்கிறேம். அவைகளிலிருந்து சரியான வட்டி வந்துகொண்டிருந்தாலும் திடீரென்று அவைகளிலிருந்து சில லட்சங்களைப் புரட்ட வேண்டுமானல் சாத்தியமாகாது. ரூபாய்களுக்கு மோசமில்லை; முன்பின் திருப்ப மட்டும் சரிப்படாது. அத்துடன் முன்பின் புரண்டுகொண்டிருந்த சுமார் இருபது லட்ச ரூபாயில் சுமார் பதினைறரை லட்ச ரூபாய்களை என் குமாரனை ஸ்ரீனிவாசன் உண்டியல்கள் கொடுத்துத் துர்விநியோகப்படுத்திவிட்டான்.

**கோவிந்தன்:** யார்? தங்கள் குமாரனு? யாரையாவது சுவீகாரம் செய்துகொண்டீர்களா? தங்கள் மனைவியாகிய ருக்மிணி காணமற் போனபின் விவாகம் செய்துகொள்வ

தில்லையென்று கங்கணம் கட்டியிருந்ததை யாற்றி ரகசிய மாகக் கல்யாணம் செய்துகொண்டீர்களா? என்ன?

ராஜேந்திரன், அப்படியொன்றும் இல்லையென்று சொல்லி, சென்னைப் பத்திரிகைகளில் விளம்பரம் வெளிப் பட்டது முதல், தாங்கள் ரங்கூனுக்குப் போய் ஸ்ரீனிவாசனை அழைத்து வந்த வரையில் நடந்த விஷயங்களை சாங்கோ பாங்கமாய்ச் சொல்லி முடித்தார். மேலும் அதுவரையில் ஸ்ரீனிவாசன் தரித்திர தசையில் இருந்ததால் சில நாட் களுக்கு அவன் இஷ்டப்படி செலவு செய்யட்டுமென்று தாம் நினைத்து, அவன் கொடுத்த உண்டியல்களைத் தடை செய்யாமல் அங்கீகரிக்கும்படி கண்மூடித்தனமாக ராகவனுக்கு உத்தரவிட்டதையும் ஸ்ரீனிவாசன் மிதமிஞ்சிய செலவு செய்கிறனென்று ராகவன் பல தடவைகளில் சொல்ல முயன்றதையும், தாம் அதற்கு இடந் தராமல் ராகவன்பேரில் கிஞ்சித்து வருத்தங் கொண்டதையும் பின்பு ராகவன் கடைசியாகச் சில தினங்களுக்கு முன் தமக்குக் கடிதம் எழுதியதுமான அனைத்தையும் விவர மாய்ச் சொன்னர்.

**கோவிந்தன்:** எல்லாம் சரிதான். இன்னும் ஸ்ரீனிவா சன் எப்படி அந்தப் பதினறரை லட்சம் ரூபாய்களைச் செலவழித்தானென்று தாங்கள் கண்டுபிடிக்கவில்லை போல் இருக்கிறது.

**ராஜேந்திரன்:** மொத்த ரூபாய்களும் ஏறக்குறையக் கோபாலாசாரியார் அண்டு ஸன்ஸ் கணக்கில் செலாவணி யாகியிருப்பதைத் தவிர வேறு விவரம் ஒன்றும் தெரிய வில்லை. அதைப் பற்றிப் பின்னல் விசாரித்துக்கொள்ள லாம். இக்கேஸ் சம்பந்தமான சமாசாரங்களைக் கேளுங்கள். ஆகவே இருபது லட்ச ரூபாயில் பதினறரை லட்சம் ரூபாய் போனல் சுமார் மூன்றரை லட்சம் ரூபாய்கள்தாம் புரண்டு வருகின்றன. திடீரென்று ஏதாவது பெருந் தொகையை

யாராவது வாங்கும்போது சற்றுக் கஷ்டப்படுகிறது. இன்னும் ஒரு வாரத்தில் என் சொந்தப் பிக்செட் டிபாசிட் கணக்கிலிருந்து எனக்கு 25 லட்ச ரூபாய் வரும். அதை என் மகன் துர்விநியோகப்படுத்தியதற்கு ஈடு செய்துவிட்டால் அப்போது ஒருவிதக் கஷ்டமும் இராது. அதற்கு மத்தியில் சற்று இடைஞ்சல்தான்.

திருஷ்டாந்தமாகக் கோபாலாசாரியார் அண்ட் ஸன்ஸ் கணக்கிலிருந்து 5 லட்சம் ரூபாய் இன்று சரியாய்ப் பத்தரை மணிக்கு வாங்குவதாக முன் கூட்டித் தெரிவித்திருந்தார்களாம். ரங்கநாத் ஏதோ வேலையாய் நேற்றுப் போனதாலும் இன்று பத்தே கால் மணிக்கு முன் வர முடியாதென்று தெரிந்ததாலும் பெருந்தொகைகள் இருப்பில் வைத்திருக்கக் கூடாதென்ற என் உத்தரவிற்கு விரோதமாக நேற்றே 5 லட்சம் ரூபாய் வாங்கி வைத்ததாகச் சொன்னார். கோபாலாசாரியார் அண்ட் ஸன்ஸ் சரியாய்ப் பத்தரை மணிக்கு ரூபாய்கள் வேண்டுமென்று சொன்னதாலும் காலையில் பத்தே கால் மணிக்குச் செக் அனுப்பிப் பத்தரை மணிக்குள் மதராஸ் பாங்கியிலிருந்து அப் பெருந்தொகை வாங்குவது கஷ்டமாகுமானதாலும் ரங்கநாத் அவ்வளவு தொகையைப் பெட்டியில் வைத்திருந்தது குற்றமாகாது.

இன்று காலையில் கோபாலாசாரியார் அண்ட் சன்ஸிலிருந்து வந்தவர் செய்த ஆர்ப்பாட்டத்தையும், 2 நிமிஷம் பணம் தாமதமானதற்கு எங்கள் பாங்கியைப்பற்றிப் பேசிய இழிவான வார்த்தைகளையும், தமது தகப்பனரான கோபாலாசாரியார் இன்று ருக்மிணி பாங்கியார் பணம் கொடுப்பார்களோ என்னமோவென்று சந்தேகமாய்ச் சொன்னதாகச் செய்த பிரசங்கத்தையும் நினைக்க நினைக்க எனக்கு எவ்வளவோ வருத்தமாயிருக்கிறது. என் சேர்ந்த ரூபாய்கள் 5 லட்சம் மட்டும் இன்று மதராஸ் பாங்கியில்

இல்லாமலிருந்தால் இன்னும் எவ்வளவு கேவலமாய்ப் பேசியிருப்பாரோ தெரியாது. உடனே என் சொந்த உண்டியல் எழுதி, ரங்கநாத்தை என் வண்டியிலேயே போய் மாற்றிக் கொடுத்துவிட்டு வரச் சொன்னேன்.

கோவிந்தன்: சரி, தங்கள் ஆப்த நண்பராகிய ம-ள-ள-ஸ்ரீ ராகவனை இங்கே வரவழைத்து என்னைக் காட்டி இவர்தாம் துப்பறியும் கோவிந்தனென்றும் அத்திருட்டைத் துப்புத் துலக்க வந்திருக்கிறாரென்றும் திடீரென்று தெரிவியுங்கள்".

உடனே ராஜேந்திரன் மணியடித்ததும் சேவகன் வந்தான். சேவகனிடம் சொல்லி ராகவனை அழைத்துவரச் சொல்லி, அவர் வந்ததும் கோவிந்தன் சொன்னவாறு ராஜேந்திரன் சொன்னார். உடனே ராகவன் கோவிந்தனின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு, அவரைத் தமக்கு நேரில் தெரியாவிட்டாலும் அவர் பிரதாபங்களை மட்டும் தாம் கேள்விப்பட்டிருப்பதாகவும் ஆகையால் தங்கள் பாங்கியிலிருந்து திருட்டுப்போன வைரங்களையும் ரூபாய்களையும் கண்டுபிடிப்பது அவருக்கு மிகவும் சுலபமென்றும், முக்கியமாகத் திருடன் இன்னானென்று தெரிந்தபின் சொத்தைக் கண்டுபிடிப்பது அவருக்கு மிகவும் சுலபமென்றும் தெரிவித்தார்.

கோவிந்தன்: ஆனால் தங்களுக்குத் திருடினவன் இன்னானென்று தெரிந்துவிட்டதா?

ராகவன்: தங்களுக்கு எனது நண்பர் இன்னும் சமாசாரங்களை முற்றும் தெரிவிக்கவில்லைபோல் இருக்கிறது.

கோவிந்தன்: அவருக்குத் தெரிந்தவரையில் சமாசாரங்களைத் தெரிவித்துவிட்டதாகத் திட்டமாய்ச் சொன்னார்.

ராகவன்: பின் தங்களுக்குச் சந்தேகமென்ன? ஒருகால் ரங்கநாத் பேரில் ராஜேந்திரனுக்கு இருக்கும் நம்பிக்கையைத் தங்கள் மனத்தில் பதித்து வேறொன்றும்படி செய்துவிட்டார் போல் இருக்கிறது. அவருக்கு வெளுத்ததெல்லாம் பால்தான்.

கோவிந்தன்: ஆனால் ரங்கநாத்தே திருடியிருப்பாரென்று தாங்கள் நிச்சயமாய் நம்புகிறீர்கள்போல் இருக்கிறது.

ராகவன்: அதில் சந்தேகமென்ன? நோட்டுகளை வைத்ததாக அவர்தாம் சொல்லுகிறார். அவர் பூட்டிய பின்தான் நான் என் பூட்டைப் போட்டேன். அவர் வைத்திருக்கும் சாவியில்லாமல் என்னால் பெட்டியைத் திறக்கவே முடியாது. ஆகையால் அவரைத் தவிர வேறு எவரால் எடுக்க முடியும்?

கோவிந்தன்: இவ்விதமான எண்ணத்தைக் கொண்டு அவரை அவ்வளவு சுலபத்தில் தண்டித்து விடக் கூடுமா?

ராகவன்: ஏன் கூடாது? அவரே எடுத்தவர்.

கோவிந்தன்: ஏன் தண்டிக்கக் கூடாதென்பதற்குக் காரணம் கூறுகிறேன். நேற்று ஐந்து லட்ச ரூபாய்களுக்குச் சில்லறை நோட்டுகள் வேலைக்காரன் கொண்டுவந்ததாகத் தெரிகிறதால், ஒரு பெரிய கட்டு நோட்டுகள் இருந்தனவென்றும் அவ்வளவு நோட்டுகளையும் வெளிக்குத் தெரியாமல் எவராலும் கொண்டுபோக முடியாதென்றும், தாங்கள் பூட்டுப் பூட்டியவுடன் தங்கள் எதிரிலேயே ரங்கநாத் அவசரமாக வெளியே போய்விட்டதாகவும், அவர் சென்றவுடன் தாங்கள் இரும்புப் பெட்டியிருக்கும் அறையைப் பூட்டச் சொல்லிச் சாவி கொண்டுவந்து விட்டதாகவும் தெரிகிறது. ஆகையால் அவர் எடுத்துப் போகவில்லை என்பதற்குத் தாங்களே அவருக்குச் சாட்சியாகிறீர்கள்.

ராகவன்: ஏன்? முன்கூட்டியே நோட்டுகளை வெளியில் வைத்திருந்தால் ஆகாதோ? என்ன ஐயா?

கோவிந்தன்: சுமார் 5-மணிக்கு வேலைக்காரன் நோட்டுகள் கொண்டு வந்ததாகவும் அதை உடனே உள்ளே போட்டுவிட்டுத் தங்களைக் கூப்பிட விட்டதாகவும் தெரிகிறது. அதற்குள் எப்படி ஒளித்திருக்கக் கூடும்.

ராகவன்: ஒரு நிமிஷத்திற்குள்ளாக நோட்டுகளை வெளியே கொண்டுபோய் வைத்துவிட்டு வந்தாலாகாதோ? பின் எப்படித்தான் போயிருக்கும்! ரங்கநாத்தின் வேலை தான் இது.

கோவிந்தன்: எப்படிப் போயிருக்கும் என்பதைத்தான் கண்டுபிடிக்கவேண்டும். ரங்கநாத்தின் வக்கீல் என்ன சொல்லுவாரென்றால் ருக்மிணி பாங்கிக்கு பணக் கஷ்டம் இருப்பதால் பங்காளிகளாகிய ராஜேந்திரனும் ராகவனும் சேர்ந்து நோட்டுகளை எடுத்து ஒளித்துவிட்டு, கழுவுக்கேற்ற கோமுட்டி ரங்கநாத் என்று அவர்மேல் பழியேற்றிச் சொல்வதாகக் கூறுவர்.

ராகவன்: அவர் சொன்னால் அவர் வார்த்தையை யார் நம்புவார்கள்? நாங்கள் சதியாலோசனை செய்ததாக வைத்துக்கொண்டாலும் அவருடைய சாவியில்லாமல் பெட்டியை எங்களால் எப்படித் திறக்கக் கூடும்?

கோவிந்தன்: தங்களுக்குத் திருப்தியாகும்படி தெரிவிக்கிறேன். அப்பால் நீங்கள் சொல்வதைச் சொல்லுங்கள். உங்களிடமும் ரங்கநாத்திடமும் இருக்கும் இரண்டு சாவிகளையும் எடுக்காமல் ராஜேந்திரனிடம் இருக்கும் 'மாஸ்டர் கீ' என்று சொல்லும் ஒரே சாவியைப் போட்டுப் பெட்டியைத் திறக்கக்கூடும் அல்லவா? தாங்களும் ராஜேந்திரனும் சேர்ந்து சதியாலோசனை செய்து அச்சாவியைக் கொண்டு தங்களுக்குத் தெரிந்தபோர்ப் பூட்டைத் திறந்திருக்கக்கூடுமல்லவா? மேலும் வெளிக்கதவைத் திறக்காமல் உங்கள் வீட்டிலிருந்தும் ராஜேந்திரன் வீட்டிலிருந்தும் இரும்புப் பெட்டியிருக்கும் அறைக்கு வர வழிகளும் இருக்கின்றனவே? நீங்கள் ஏன் செய்திருக்கக் கூடாது?

ராகவன்: எங்கள் பணத்தை நாங்களே திருடுவதா?

கோவிந்தன்: ஏன் செய்யக் கூடாது? ரங்கநாத்துக்கு ஜாமீன் கொடுத்தவர்களிடமிருந்து ரூபாய்கள் பெறவும்

கோபாலபுரம் வைரங்களை விற்றுத் தற்காலம் செலவிடவும் செய்திருக்கலாமென்று சொன்னால் அதற்கு என்ன ஜவாபு சொல்லுவீர்கள்?

ராகவன்: ஐயோ! ஜன்மமே; இதற்காகத்தான் துப்புத் துலக்குவதற்காக நீங்கள் ஏற்பட்டீர்கள்போல் இருக்கிறது. சபாஷ்! நன்றாய்ச் சொன்னீர்கள்! எங்கள்பேரில் நேர்த்தியாகக் கேஸ் ஜோடித்துவிட்டீர்கள்! போதுமையா போதும்!

ராஜேந்திரன்: ராகவா! அவர்பேரில் ஏன் கோபித்துக் கொள்கிறாய்? நாம் ரங்கநாத்பேரில் அவ்வளவு திட்டமாய்க் குற்றஞ் சாட்டினதற்கு ஈடாக, அவர் நமது பேரில் எல்லாரும் நம்பக்கூடிய விதமாகச் சந்தேகம் ஏற்படுத்திவிட்டார். அவர் சொன்னதில் ஏதாவது பிசகு இருக்கிறதா? அவர் சொன்ன விதமாயும் வெளிக்குத் தோற்றக்கூடுமல்லவா?

ராகவன்: ஐயா! உண்மையாகவே எங்கள் பேரில் நீர் சந்தேகப்படுகிறீரா?

கோவிந்தன்: ஐயா! துப்பறிவோன் எல்லாரையும் குற்றவாளிகளாகவும், ரூபிக்கும் வரையில் எல்லாரையும் குற்றமற்றவர்களாகவுந்தான் கருதி, ஆராய ஆரம்பித்துப் பின்னால் ஏற்படும் சாட்சியங்கள் எப்படிப் பொருந்துமோ அப்படிக் கூட்டியும் குறைத்தும் வேலை செய்தால்தான் உண்மை வெளியாகும். எடுக்கும்போதே இவன்தான் செய்திருப்பானென்று தாங்கள் நினைத்ததைப்போல் நினைத்து அதன்பேரில் துப்புக் கண்டுபிடிக்க முயன்றால் முற்றும் கஷ்டமாய் முடியும். தாங்கள் நினைப்பதைப்போல் நினைத்து ஏமாந்து வேலை செய்வதால்தான் போலீசாரில் பெரும்பாலோர் குற்றமற்றவர்களைக் கொண்டுபோய் அடைத்துவிட்டு, பின் அடைத்துவிட்டதற்காகவாவது பொய்ச் சாட்சிகளைத் தயாரித்து ருஜுவாகாமல் திண்டாடும்படி நேரிடுகிறது. ரங்கநாத் பேரில் இவ்வளவு கெட்ட அபிப்பிராயப்பட அவர்மீது தங்களுக்கு இதுவரையில்

ஏற்பட்ட சந்தேகங்கள் என்ன என்ன? தாங்கள் அவர்பால் கண்டுபிடித்த தவறுதல்களைத் தெரிவியுங்கள்.

ராகவன்: இ...ல்...லை; அப்படி ஒன்றுமில்லை. ஆனால் அவைகளினாலெல்லாம் அவர் திருடினாரென்று சொல்ல முடியாது.

கோவிந்தன்; எவைகளால்? தயவுசெய்து தங்களுக்குத் தெரிந்தவற்றைச் சொல்லுங்கள்.

ராகவன்: சென்ற மூன்று மாத காலம் வரையில் பொழுது போனால் எங்கள் வீட்டை விட்டு வெளியே போகாமல் இருந்து வந்தார். அதற்குப் பின் அவர் வீட்டிற்கு இரவு 10, 12, 1, 2 மணிக்குக்கூடத் திரும்பி வருகிறார். எங்கள் வீட்டில் ஜாகை வைத்திருந்தவர் நினைத்த நேரங்களில் வருவதால் எங்களுக்கு அசௌகரியம் உண்டாகுமென்று நினைத்து வேறாக ஜாகையும் சாப்பாடும் வைத்துக்கொண்டார். இப்போது எங்கள் வீட்டிற்கு வருவதே இல்லை. ஆகையால் ஏதாவது துஷ்ட சாவகாசம் ஏற்பட்டிருக்குமென்று நினைத்து ஜாடையாய்க் கண்டிக்கப் பார்த்தேன். அவர் மரியாதையாய், "தங்கள் வேலை நேரங்களிலாவது வேலையிலாவது தவறுதல் ஏற்பட்டால் மட்டும் என்னை விசாரித்துத் தக்க தண்டனை விதியுங்கள்" என்று சொன்னார். இனிப் பேசுவது மரியாதைக் குறைவென்று அத்துடன் நிறுத்திவிட்டேன்.

கோவிந்தன்; எங்கே செல்கிறார்? என்ன செய்கிறார் என்று விசாரித்தீர்களா?

ராகவன்: யாரோ தண்டையார்ப் பேட்டையிலிருக்கும் லீலாவதி என்று சொல்லும் ஒருத்தி வீட்டிற்குப் போவதாயும் அங்கே சதுரங்கமாடுவதாயும் மட்டும் தெரிகின்றது. என்ன என்ன செய்வாரோ யார் பார்த்தார்கள்? அப்பால் நான் விசாரிப்பதில்லை.

உடனே தாம் ராகவனைக் கேட்க வேண்டிய கேள்வி

கள் கேட்டாயிற்றென்றும் இனி அவர் தம் இஷ்டம்போல் போகலாமென்றும் சொல்லி அனுப்பிவிட்டார். அப்பால் ராஜேந்திரனிடம் அநேக வருஷங்களாக இருந்துவரும் அந்த ரங்க வேலைக்காரனுன ராமனைத் தம்முடன் தம் சிறு மூட்டையைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு வர அனுப்ப வேண்டுமென்றுர்.

ராஜேந்திரன்: அவரை மூட்டையை எடுத்துப் போகச் சொன்னுல் சற்றுக் கேவலமாக நினைப்பார். அதைவிட எங்கள் தோட்டத்தில் காய்த்த பலாப்பழம் ஒன்றைத் தங்களுக்குக் கொடுக்கிறேன். தாங்கள் எடுத்துப் போகக் கூடாததாலால் வேண்டாமென்று சொல்லுங்கள். அப்போது அவரை அனுப்புகிறேன்.

மணியடித்தார். ராமன் வந்ததும் வீட்டிலிருக்கும் பலாப்பழத்தை எடுத்து வரும்படி சொல்லி ராமன் கொண்டு வந்ததும், கோவிந்தனிடம் அதைத் தோட்டத்தில் பழுத்த நல்ல ருசியான பழமென்றும் அதைக் கொண்டு போகும் படியும் சொன்னுர். கோவிந்தன் தாம் நடந்து போக விரும்புவதால் பழத்தை எடுத்துப்போக முடியாதென்று சொன்னுர். உடனே அவர், "ராமா! இதை இக்கனவான் கூடவே கொண்டு போய்க் கொடுத்து விட்டு வா" என்றுர். ராமன் அதை எடுத்துக்கொண்டு கோவிந்தன் கூடவே மெதுவாக நடந்து போனுர்.

கோவிந்தன்: ஐயா! உமக்கு இவ்வளவு வயதாகியும் பாவம்! இன்னும் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. உமக்கு என்ன சம்பளம் கொடுக்கிறுர்கள்? இந்த உயர்ந்த சுருட்டைப் பிடித்துக்கொண்டே போனுல் வழி நடக்கும் கஷ்டம் தெரியாது.

ராமன்: எனக்குச் சுருட்டு என்னத்துக்கு? அதெல்லாம் தங்களைப் போலொத்த பிரபுக்கள் பிடிக்க வேண்டியது. நானே எனக்குப் புத்தி தெரிந்தது முதல், ஏன்,

ராஜேந்திரன் பிறப்பதற்கு அநேக வருஷங்களுக்கு முன்னு லிருந்தே அவர்கள் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டும் அவர்கள் கொடுக்கும் வஸ்திரங்களை உடுத்துக்கொண்டும் அவர்கள் ஆளாகவே இருக்கிறேன். நான் சம்பளமென்று வாங்கினதேயில்லை. எங்கள் வீட்டிற்குத் தேவையான நெல்லோ புல்லோ என் பெண்சாதி வாங்கிப் போவாள். கல்யாணம், காட்சி, சாவு, வாழ்வு, முதலியவைகளுக்கெல் லாம் அவர்களே பணமோ சாமான்களோ கொடுத்து வரு கிறார்கள். என் ஆயுசு வரையில் இப்படித் தள்ளிவிட்டுப் போனால் அதுவே போதும். நான் சுருட்டுப் பிடிப்பது மில்லை, பொடி போடுவதுமில்லை; கள்ளு, சாராயம் முதலிய வைகளைக் குடிப்பதுமில்லை. ஆகையால் தயவு செய்து மன்னியுங்கள்.

**கோவிந்தன்:** ஆனால் சரி; உன் எஜமானர் மெத்த நல்லவர்போல் இருக்கிறது. 'தாயைப்போல் பிள்ளை, நூலைப்போல் சேலை' என்பதைப்போல் அவர் மகனும் அப் படியேதான் இருப்பார். ஆகையால் உனக்கும் உன் சந்ததி யாருக்கும் எந்தவிதமான குறைவும் இருக்காது.

**ராமன்:** எனது எஜமான் இருக்கும்போதே நான் செத் துப்போக வேண்டுமென்று சுவாமியைப் பிரார்த்திக்கிறேன்.

**கோவிந்தன்:** ஏன் அப்படி? அவருக்குப் பின்னால் அவர் குமாரனான ஸ்ரீனிவாசன் அவரைப் பார்க்கிலும் உமது பேரில் அதிகப் பிரியமாக இருப்பாரல்லவா?

**ராமன்:** ஐயா! அந்த வயிற்றெரிச்சலைக் கேளாதேயுங் கள். நான் புண்ணியம் செய்திருந்தால் எனது எஜமானர் கண் முன்பே ஹாய்யாக நான் போய்விடவேண்டும்.

**கோவிந்தன்:** நீ அப்படிச் சொல்லக் காரண மென்ன? ஸ்ரீனிவாசனுக்கு உமது பேரில் இஷ்டமில்லையோ?

**ராமன்:** ஐயா! அவருக்குப் பிரியம் இருக்குமோ இல் லையோ! அதைப்பற்றி அவசியமில்லை. எனது எஜமான

ருக்குப் பின்னால் இவர் சொத்தைக் கால் நாழிகையில் அவர் செண்டாடி விடுவார்! அப்பால் அவரே திண்டாடும் போது என் பாடு எப்படி?

கோவிந்தன்: அவர் அவ்வளவு செலவாளியா? என்ன செலவு செய்கிறார்?

ராமன்: அதுதான் தெரியவில்லை. 10 நாட்களுக்கு முன்வரையில் நித்தியம் பெரும் தொகைகளுக்கு உண்டியல் அனுப்பிவந்தார். ஒரு நாள் நான், "ஐயா! உங்களிடம் ஒரு வார்த்தை கேட்கிறேன். கோபித்துக்கொள்ள வேண்டாம். தாங்கள் சிறுவர்; இவ்வளவு ரூபாய்கள் செலவழித்தால் எப்படி? என்ன செலவு செய்கிறீர்கள்?" என்று கேட்டேன். உடனே, "அடே ராமா! அற்பப் பதரே! அந்தத் தடியன் ராகவன் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு நீ என்னைக் கேட்டாயோ? இன்னொரு தரம் இப்படிக் கேட்பாயாகில் என் பூட்சால் உதைப்பேன்" என்றார். நான் பிள்ளையாகப் பிறந்து பெரிய எஜமான்கள் இருவரிடமும், "அடே!" என்ற வார்த்தையைக் கேட்டு அறியேன். இவரிடம் வேலை செய்தால் பூட்ஸ் அடி கூடப் படும்படி நேரிடும்போல் இருக்கிறதே என்று அன்று முதல் நான் அவர் ஜோலிக்குப் போவதில்லை. எஜமானரவர்களின் கண் முன்பாகவே என்னைக் கூப்பிட்டுக்கொள்ள வேண்டுமென்று சுவாமியைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன்.

கோவிந்தன்: சரி, பெரிய இடத்துக் காரியம்; எப்படியாவது போகட்டும்; நமக்கென்ன? இன்று ஏதோ ஐந்து லட்ச ரூபாய் நோட்டுகளும் கோபாலபுரம் வைரங்களும் காணோமென்று உன் எஜமானர் விசனித்திருப்பதாகத் தெரிவித்தார். ஆனாலும் அந்த நோட்டுகள் எப்படித்தான் போயிற்றோ தெரியவில்லையே.

ராமன்: அதென்னமோ பெரிய ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. 5-மணிக்குத்தான் ஒரு பெரிய சுமை நோட்டு

கள் கொண்டு வந்தேன். ரங்கநாத், தாம் அவசரமாய்ப் போகவேண்டியதிருப்பதால் நேரம் பொறுத்து வந்தேனென்று சொல்லிக்கொண்டே நோட்டுகளைக்கூடச் சரியாய் எண்ணுமல் கட்டுக் கட்டாய் எண்ணி இரும்புப் பெட்டியில் வைத்தார். உடனே பூட்டினர். பூட்டினதும் தாம் எங்கோ அவசரமாகப் போக வேண்டியிருப்பதால் தயவு செய்து ராகவனை ஜல்தியாய் அழைத்து வரும்படி சொல்லி விட்டு, அவர் தம் மேஜைக்குப் போனர். நான் ம-ா-ா-ஸ்ரீ ராகவனை அழைத்து வந்தேன். அவர் வந்து பூட்டினதும் ரங்கநாத் அவசரமாகப் போய்விட்டார்.

கோவிந்தன்: நீர் ராகவனைப் போய்க் கூட்டிக்கொண்டு வருவதற்குள் ரங்கநாத் பெட்டியைத் திறந்து நோட்டுகளை எடுத்து வெளியே கொண்டுபோய் வைத்துவிட்டு வந்து, அவர் ஸ்தானத்தில் உட்கார்ந்திருக்க முடியுமோ?

ராமன்: அட அநியாயமே! அவர் தம் மேஜைக்குப் போனர். நான் ராகவனைப் போய்க் கூப்பிட்டுவர ஒரு நிமிஷம் கூடப் பிடிக்கவில்லையே. மேஜையை விட்டுப் போய் இரும்புப் பெட்டியைத் திறக்கக் கூட நேரம் இருக்காதே.

கோவிந்தன்: அப்போது அவர்பேரில் சந்தேகிக்க இடமில்லை. எப்படியாவது போகட்டும். ராகவனுக்கும் ரங்கநாத்துக்கும் ஏதாவது முன்பின் விரோதமுண்டோ?

ராமன்: இந்த எளவெல்லாம் யாருக்குத் தெரிகிறது? விரோதம் இருப்பதாகத் தெரியவில்லை; ஆனல் உள்ளுக்கு மாத்திரம் கொஞ்சம் மனஸ்தாபம் இருக்கும்போல் இருக்கு.

கோவிந்தன்: ஏதற்காக மனஸ்தாபம்? ஏதாவது தெரியுமா?

ராமன்: ரங்கநாத் வந்ததும் அதிக அடக்கமாய் எங்கும் போகாமல் எப்போதும் ராகவன் புத்திரியாகிய லக்ஷ்மியிடமே பேசிக்கொண்டிருந்தார். அப்பால் ராகவன் ரங்கநாத்தைத் தம் வீட்டில் சாப்பிட ஏற்பாடு செய்தார். வெளி

யில் ரங்கநாத் லக்ஷ்மியைத்தான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிருரென்ற சத்தம் உண்டாயிற்று. இப்போது 8-மாதங்களுக்கு முன்ஞலிருந்து ரங்கநாத்தும் லக்ஷ்மியும் பேசுவதே இல்லை.

கோவிந்தன்: அப்படி இருப்பதற்குக் காரணமென்ன?

ராமன்: யாருக்கும் தெரியாது; ஏதோ இருவருக்கும் மனவருத்தம்போல் இருக்கு. எனக்கு அவ்வளவு சரியாய்த் தெரியாது.

கோவிந்தன்: சரியாய்த் தெரியாது என்கிறீர்களே! உங்களை என்ன கோர்ட்டில் கொண்டுபோய் நிறுத்திப் பிரமாண வாக்கு மூலத்தின் மேலா கேட்கிருர்கள்? ஏதோ வழி நடைப் பேச்சாகவும் நேரப்போக்காகவும் பேசிக்கொண்டு போகிருேம். உமக்குத் தெரிந்ததைச் சொல்லுமே; இதில் என்ன கஷ்டம்?

ராமன்: வழக்கம்போல் ஒரு நாள் சாயங்காலம் ரங்கநாத்தும் லக்ஷ்மியும் தோட்டத்திலுள்ள பெஞ்சியில் உட்கார்ந்து. பேசிக்கொண் டிருந்தார்கள். அன்று ஞாயிற்றுக்கிழமையாதலாலும் எனக்கு வேலையில்லாததாலும் நான் அங்கே போட்டிருந்த ஒரு பெஞ்சியின் கீழ் அவர்கள் வருமுன்னேயே படுத்துத் தூங்கிக்கொண் டிருந்தேன். நானிருந்தது அவர்களுக்குத் தெரியாதென்றே நினைக்கிறேன். லக்ஷ்மி அழுதுகொண்டே பேசிய மாதிரி சத்தம் கேட்டதும் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தேன். அப்போது இரண்டொரு வார்த்தைகள்தான் என் காதில் கேட்டது. இருவரும் தாழ்ந்த குரலில் பேசியதால் எனக்கு நன்ருய்க் கேட்கவில்லை.

கோவிந்தன்: நீங்கள் கேட்டதைச் சொல்லுங்களேன்.

ராமன்: அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் மறக்குங் காலம் வந்துவிட்டதென்றும், தான் வேருெருவரைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி நேரிடும்போல் இருக்கிற

தென்றும், அதுமுதல் அவர் வெளியில் ஜாகை வைத்துக் கொள்ளுவதே நலமென்றும் லக்ஷ்மி சொன்னதுபோல் இருந்தது. அப்போது ரங்கநாத், தாம் செய்த தவறு என்னவென்று அழாத துக்கமாய்க் கேட்டார். அப்போது லக்ஷ்மி இன்னும் அதிக துக்கத்துடன் நாம் இப் பிறப்பில் புருஷன் பெண்சாதியாக இருக்க முடியாமற் போவதற்காக அதிக வருத்தப்படுவதாயும், தன்னை ரங்கநாத் உண்மையாக நேசித்தால் தான் கேட்டுக்கொண்டபடி கட்டாயமாய் நடந்து வரவேண்டுமென்றும் அவள் உடலை வேறொருவருக்கு ஒப்பிக்க நேரிட்ட போதிலும் அவர்கள் இருவர் ஆத்துமாக்களையும் பிரிக்க எவராலும் சாத்தியமாகாதென்றும் அழுதபடியே சொன்னாள். ரங்கநாத் அப்பால் ஏதோ பேசிவிட்டுக் கண்களிலிருந்து நீர் வடிந்தபடியே சென்றார். லக்ஷ்மியும் அழுதுகொண்டே போய்விட்டாள்.

**கோவிந்தன்:** ரங்கநாத் அதற்குப் பின்னால்தான் இரவுகளில் வெளியே போகிறாரா என்ன?

**ராமன்:** அன்றையவரையில் வீட்டைவிட்டு எங்கும் சென்றதே கிடையாது. அதற்கப்பால்தான் வாடாவழியாக அலைகிறார்.

**கோவிந்தன்:** ராகவனுக்குப் பெண்ணை யாருக்குக் கொடுக்க இஷ்டம்?

**ராமன்:** ரங்கநாத்துக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று இருந்தார். அவர் தம் பெண்ணைக் கவனியாமல் போகிறாரென்றுதான் அவர் பேரில் கோபமும் விரோதமும் போல் இருக்கிறது.

**கோவிந்தன்:** அவருக்கு இன்னும் அப்படி அபிப்பிராயம் இருக்கிறதென்று உமக்கு எப்படித் தெரியும்?

**ராமன்:** ஒரு பதினைந்து நாட்களுக்கு முன் தமக்குள்ளாகவே, "இருந்தாற்போலிருந்து அவனுக்கு வந்த கேடென்ன? நமது லக்ஷ்மியின்பேரில் எவ்வளவு பிரியமாய்

இருந்தவன் இப்போது அவள் இருக்கும் திசையைக்கூடப் பார்ப்பதில்லையே. என்ன காரணமாயிருக்கலாம். எனக்கு இருக்கும் ஒரே பெண்ணுக்குத் தகுந்தவன் அவனே. வேறு எவருக்கும் கொடுக்க எனக்கு மனம் வரவில்லையே. வேறு தக்க வரனை எங்கே போய்த் தேடுவது?'' என்று இவ்வாறாக மெதுவாகத் தமக்குத் தாமே பேசிக்கொண்டிருந்தார்.

**கோவிந்தன்:** ராகவனின் மனைவியினது போக்கு எப்படி?

**ராமன்:** ஐயா! எனக்குத் தெரியாது. ஒன்றைமட்டும் கவனித்தேன். சுமார் 3-மாசங்களாய் எப்போதும் லக்ஷ்மியும் அவள் தாயாரும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருக்கிறார்கள்.

**கோவிந்தன்:** ராகவனுககு ஏதாவது கெட்ட குணங்களுண்டா?

**ராமன்:** ஐயா! எனக்குத் தெரிந்தவரையில் அவர் மிகவும் யோக்கியர்தான். தீய குணமென்பதைக் கனவிலும் நினையாதவர். அயல் வீடு போகார். யாராவது இஷ்டர்கள் அதிகத் தொந்தரவு செய்தால் எனது எஜமானர் கூடப் போவார். தனியாய் எங்கும் சென்றதே கிடையாது. திருஷ்டாந்தமாக நேற்றுத் தங்கசாலைத் தெருவில் நடந்த ராமதாஸ் சரித்திர காலட்சேபத்திற்கு வரும்படி நூறு தடவை வந்து அவரைக் கூப்பிட்டதன்பேரில்தான் அவரும் ராஜேந்திரனும் நேற்றைய இரவு சென்றார்கள்.

**கோவிந்தன்:** அவர்கள் இருவரும் நேற்றிரவு வீட்டில் இல்லையோ?

**ராமன்:** இருவரும் காலட்சேபத்திற்கு 9-மணிக்குப் போய் இரண்டு மணிக்குத்தான் வந்தார்கள்.

**கோவிந்தன்:** இன்று உமது எஜமானர் உத்தரவின் பேரில் ஒரு பெட்டியைக் கொண்டு வந்தீரே; அந்தப் பெட்டி எப்போதும் எங்கிருக்கும்?

ராமன்: ராஜேந்திரன் படுக்கை அறையில்தான் இருக்கும்.

கோவிந்தன்: அந்த அறைக்கு யாரும் போவதில்லையே?

ராமன்: என்னைத் தவிர விசேஷமாய் யாரும் செல்வதில்லை.

கோவிந்தன்: விசேஷமாய்ப் போகாவிட்டாலும் வேளா வேளைகளிலாவது யாராவது போவதுண்டா?

ராமன்: எப்போதாவது எங்கள் எஜமானர் குமாரர் ஸ்ரீனிவாசன் வருவார். வேறு யாரும் வரமாட்டார்கள். எங்கள் எஜமானர் இல்லாத வேளைகளில் பூட்டப்பட் டிருக்கும்.

கோவிந்தன்: ஸ்ரீனிவாசன் தம் தகப்பனாரிடம் பேசப் போவார்போல் இருக்கிறது.

ராமன்: இ...ல்...லை. எப்போதாவது போவார்; எஜமானர் பிள்ளை எங்கேதான் போகமாட்டார்?

கோவிந்தன்: யார் போகவேண்டாம் என்கிறார்கள்? அடிக்கடி போவாரோ? அவருக்கு அங்கே ஆகவேண்டிய வேலை ஏதாவது உண்டா? தகப்பனார் இருக்கும்போது போவது வழக்கமா? இல்லாதபோது போவது வழக்கமா?

ராமன்: அதெல்லாம் யார் எழுதி வைத்திருக்கிறார்கள்? அனேகமாய் இல்லாதபோதுதான் பார்த்ததாக ஞாபகமிருக்கிறது. நேற்றிரவுகூட அவர் தகப்பனார் காலட்சேபத்திற்குச் சென்றிருந்தபோது அங்கே சற்று நேரம் படுத்திருந்தார்.

கோவிந்தன்: சரி; எப்படியாவது போகட்டும்; அதைப் பற்றி நமக்கென்ன? இரும்புப் பெட்டியிருக்கும் அறைக்கு வர எத்தனை வழிகள்?

ராமன்: மாமூலாய் ஒரே வழிதான். அதாவது பாங்கியிலிருந்து போகும் வழிதான் மாமூலானது. ராகவன் படுக்கை அறையிலிருந்தும் ராஜேந்திரன் படுக்கை அறையிலிருந்தும் வழிகள் இருக்கின்றன. அவ்வழிகள் எனக்குத்

தெரிந்த வரையில் உபயோகப்பட்டதே கிடையாது. எப்போதும் அக்கதவுகள் பூட்டப்பட்டுத்தான் இருக்கும், நான் அவைகளின் வழியாய் எவரும் வந்ததை இதுவரையில் பார்த்ததேயில்லை.

கோவிந்தன்: நேற்று இரவு இரும்புப் பெட்டி வைத்திருக்கும் அறையின் வெளியில் யார்யார் படுத்திருந்தார்கள்? யாராவது வந்து கதவைத் திறந்தார்களா?

ராமன்: நானும் இன்னும் இரண்டு வேலைக்காரரும் இருந்தோம். நான் எப்போதும் இங்கே படுத்துக்கொள்வதே யொழிய, காவல் இருக்கவேண்டியது மற்ற இருவர்தாம். அவர்கள் இருவரில் ஒருவர் இரவு 12-மணி வரையிலும் மற்றவர் காலை 6-மணி வரையிலும் விழித்திருப்பார்கள். வழக்கம்போல் நான் தூங்கிக்கொண்டிருந்தேன். கதவை யாரும் திறக்கவேயில்லை. ஏனென்றால் கதவைத் திறந்தால் என்னைத் தள்ளிவிட்டுத்தான் திறக்கவேண்டும்.

கோவிந்தன்: அறைக்குள் ஏதாவது சத்தம் கேட்டதா?

ராமன்: ஏதோ ஆள் நடமாடுவதைப்போல் சத்தம் கேட்டதாகக் காவற்காரர்கள் சொன்னார்கள். நான் கவனித்ததில் ஒன்றுமே யில்லை. எப்போதும் அவர்கள் ஜடாமுனி ஒன்று நடமாடுவதாகச் சொல்வது வழக்கம். 'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்தானே!' நேற்று வெள்ளிக்கிழமை யானதால் ஜடாமுனியை நினைத்துக் கொண்டே இருப்பார்கள். அது நடந்ததுபோல் தோன்றியிருக்கும்.

அதற்குள்ளாகக் கோவிந்தன் வீடு வரவே பலாப்பழத்தை வாங்கிகொண்டு ராமனுக்குப் பலகாரங்களும் காபியும் திருப்தியாகக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

---

## 6. துஷ்ட சகவாசம் துன்பத்தின் பாதை

'சீரிய ரென்னலுந் தீப ரென்னலுஞ்
சேரினத் தியல்பினாற் சேர்ந்த நாமமே.'

ராமனுக்கு வேண்டிய அளவு ஆகாராதிகள் கொடுத்து அனுப்பியதும் கோவிந்தன் மாறுவேடம் பூண்டு ருக்மிணி பாங்கியின் ஓரத்தில் போய் மறைவாய் எவருக்கும் தெரியாமல் அங்கிருந்து போகும் ஆட்களைக் கவனித்துக்கொண்டிருந்தார். வழக்கப் பிரகாரம் தம் வேலைகள் முடிந்தவுடன் ரங்கநாத் இரும்புப் பெட்டியைப் பூட்டிவிட்டு ராகவனை அழைத்து மேல் பூட்டுப் பூட்டச் சொல்லி அவர் பூட்டியதும் பேர்ப் பூட்டைப் போட்டுப் பூட்டிவிட்டு வெளியே போனார். அவர் சற்றுத் தூரம் சென்றதும் ஓர் ஐயங்கார் ரங்கநாத்துக்குத் தெரியாமல் அவரைப் பின் தொடர்ந்தார். அவர்கள் இருவரும் சற்றுத்தூரம் சென்றதும் உடுப்புப் போடாமல் இருந்த ஒரு போலீஸ்காரன் அவர்கள் இருவரையும் பின்னால் தொடர்ந்தான். அவர்கள் மூவரும் சற்றுத் தூரம் போனபின், கூட இன்னும் யாராவது பின் தொடருகிறார்களாவென்று கவனித்துப்பார்த்து எவரும் வெளிவரவில்லையாதலால் கோவிந்தன் மேற்சொன்னவர்கள் மூவரையும் அவர்களுக்குத் தெரியாமல் பின் தொடர்ந்து சென்றார்.

ஆகவே ரங்கநாத்துக்குத் தம்மைத் தொடர்ந்து ஆட்கள் வருகிறார்களென்ற சமாசாரமாவது ஐயங்காருக்கு அவரைத் தொடர்ந்து இருவர் வருகிறார்கள் என்றாவது உடுப்புப் போடாத போலீஸ்காரனுக்குத் தன்னைத் தொடர்ந்து ஒருவர் வருகிறாரென்றாவது தெரியாமல் நால்வரும் முன் பின்னாய் முன்னால் போகப்பட்டவர்களைக் கவனித்துப் பார்த்துக்கொண்டே சென்றார்கள். ரங்கநாத் அவசரமாய்ச் செல்லாமலும் எதிரிலாவது பக்கங்களிலாவது இருக்கும் ஆட்களையாவது பிராணிகளையாவது வஸ்துக்களை

யாவது கவனியாமலும் ஆழ்ந்த யோசனையுடனும் மிகுதியும் நொந்த உள்ளத்துடனும் சென்றார்.

அவர் போனதைப் பார்த்தால் வழக்கப் பிரகாரம் அவரது கால்கள் ஓர் யந்திரத்தைப்போல் நடந்து செல்வதாகத் தெரிந்ததே தவிர அவர் சுய புத்தியுடன் சென்றதாகத் தெரியவில்லை. இப்படி மெதுவாக ஒரு மணி நேரம் நடந்து போனபின், தண்டையார்ப் பேட்டையிலுள்ள ஒரு பங்களாவின் சமீபம் சென்றதும் ஐயங்கார் அவருக்குத் தெரியாமல் பின் வாசல் வழியாகப் பகிரங்கமாக வீட்டிற்குள் சென்று ரங்கநாத்தைக் கவனித்து வந்தார். உடுப்புப் போடாத போலீஸ்காரன் தாழ்வாரத்தில் ஒரு பக்கத்தில் போய் எவருக்கும் தெரியாமல் கவனித்திருந்தான். கோவிந்தன் மதில் சுவர் ஏறிக் குதித்து எவருக்குந் தெரியாமல் மிகவும் சமீபமாக இருந்து மூவரையும் கவனித்து வந்தார்.

ரங்கநாத் உட் சென்றதும் ஐயங்கார் வகுப்பினளான சுமார் 25 வயதுடைய ஓர் அழகிய யௌவன மங்கை மிகு மந்தஹாசமாய் அவரை அதிக ஆவலுடன் எதிர்கொண்டழைத்து, அங்கே போட்டிருந்த ஒரு சோபாவில் வீற்றிருக்கச்செய்து தான் பக்கத்திலுள்ள நாற்காலியில் அமர்ந்து, அவரைப் பார்த்து, "நண்பரவர்களே! பூரண சந்திரோதயமானதுபோல் இருக்கப்பட்ட உங்கள் முகாரவிந்தமானது அதிகமாய்க் கறுத்துத் திகிலடைந்து விசனத்தைக் காட்டும் காரணம் யாது? எதிர்பாராத விதமாகத் தங்களுக்கு ஏற்பட்ட கவலையென்ன? தயவுசெய்து தெரிவிக்கக் கோருகிறேன்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்த ஒரு மணியை அடித்தாள். உடனே வேலைக்காரியாகிய சீதா வர, அவளைச் சிற்றுண்டிகளும் தேயிலைப் பானமும் சீக்கிரம் கொண்டு வரும்படி ஆக்ஞாபித்து அவள் கொண்டு வந்ததும் ரங்கநாத்தின் சமீபத்தில் தன் நாற்காலியை இழுத்துக்கொண்டு அவருக்கு அதிகப் பிரியமான போண்டாவை எடுத்து அவர் வாயில் வைக்கப்போனாள். அப்போது,

ரங்கநாத்: அக்கா லீலா, எனக்கு இப்போது சிற்றுண்டிகள் ஒன்றும் தேவையில்லை. என் மனம் ஒரு நிலைபில் இல்லை. ஆகையால் அவைகளைத் தூரத்தில் வைத்து விடுங்கள்.

லீலா: என் பிரிய நண்பரவர்களே! நான் சொல்வதைக் கேளுங்கள். இச்சிற்றுண்டிகளை அருந்திச் சூடாயிருக்கும் தேயிலைப் பானத்தை முதலில் அருந்துங்கள். பின் தங்களுக்கு ஏற்பட்ட மனக்குறையை என்னிடம் தெரிவியுங்கள். நான் கட்டாயமாக அக்குறையை நிவர்த்திக்கச் சரியான வழி சொல்லுகிறேன்.

ரங்கநாத்: முதலில் அவைகளைப் புசிக்கவே எனக்கு விருப்பம் இல்லாதபோது எப்படி நான் அவற்றை உண்பது?

லீலா: தங்கள் முகத்தைப் பார்த்தால் தாங்கள் இன்று காலை முதல் ஜலபானங்கூடச் செய்திருக்க மாட்டீர்களென்று தோற்றுகிறது. அவ்வளவு வருத்தத்தைக் கொடுக்கக்கூடிய விஷயம் தங்களுக்கு என்ன ஏற்பட்டதோ தெரியவில்லை. சரி; அவற்றை யெல்லாம் பின்னல் யோசித்து ஒருவித முடிவுக்கு வரலாம். இப்போது என் வார்த்தையைத் தட்டாமல் சாப்பிடுங்கள்.

ரங்கநாத்: எனக்கு எதிலும் விருப்பமில்லை. தயவு செய்து என்னை வீணே தொந்தரவு செய்யவேண்டாம்.

லீலா: நான் காலையில் சாப்பிட்டவள். தாங்கள் போனது முதல் என் மனமானது ஒரு நிலையில் நிற்காமல் நிஷ்காரணமாய்த் தத்தளித்துக்கொண்டே இருந்தது. ஏன்? இன்னும் அப்படியே இருக்கிறது. தங்களுக்கு என்ன ஆபத்து நேரிட்டதோ என்னும் வருத்தத்தால், அப்படித் தங்களுக்கு ஏதாவது கஷ்டம் நேரிட்டால் பின் இப்பாழும் உடம்பை வைத்திருப்பதில்லையென்றும் உடனே பிராணத் தியாகம் செய்துவிடுவதென்றும் தீர்மானித்துக்கொண்டு தாங்கள் வரும் வழியைப் பார்த்தபடியே இருந்தேன். தாங்

கள் சாயங்காலம் 6-மணிக்கு முன் வரமாட்டீர்களென்று திட்டமாய்த் தெரிந்தபோதிலும் தாங்கள் சென்றது முதல் தாங்கள் வரும் திக்கையே நோக்கி யிருந்தேன்.

ஏனெனில் என் மனமானது ஒரு நிலையில் இல்லாத தால், தங்கள் மனத்திற்கோ உடம்பிற்கோ ஏதோ கஷ்டம் நேர்ந்திருக்க வேண்டுமென்றும், அக்கஷ்டத்தின் பிரதிபலிப்பான மின்சார சக்தியால்தான் ஈருடம்பும் ஓர் உயிரும் போல் இருக்கும் நம் இருவரில் எவருக்காவது கஷ்டம் ஏற்படின் மற்றவர்களுக்கு அது உடனே அந்த மின்சார வழியாகப் பிரதிபலித்து விடுகிறதென்றும், அப்படியே எனக்கும் பிரதிபலித்த காரணத்தால்தான் என் மனமானது ஒரு நிலையில் இல்லையென்றும், திட்டமாக நான் நம்புவதால் தான் ஒன்றும் சாப்பிடாமல் தங்கள் வரவையே ஆவலுடன் நான் எதிர்பார்த்திருந்தேன். தெய்வாதீனமாகத் தாங்கள் உடம்புக்கு எந்த விதமான வருத்தமும் இல்லாமல் இருப்பதால் ஏதோ மனவேதனைதான் ஏற்பட்டதென்று நினைக்கிறேன். தங்கள் மனவேதனையை மாற்றக் கூடிய வழிகள் எனக்கு அநேகம் தெரியும். ஆகையால் தாங்களும் பட்டினியிருந்துகொண்டு என்னையும் ஏன் பட்டினி போடுகிறீர்கள்?

ரங்கநாத்: அக்கா லீலா, தேகத்திற்கு ஏதாவது வருத்தம் நேரிட்டால் அதை மாற்றுவது சுலபமாகும். மனவேதனைக்குத்தான் எவ்வித மருந்தும் இல்லை. மனத்தை அடக்குவது மகா துர்லபம். அதை உத்தேசித்தே தாயுமான ஸ்வாமிகள், 'சிந்தையை யடக்கியே சும்மாயிருக்கின்ற திறமரிது' என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். ஆகையால் தாங்கள் நினைக்கிறபடி மனத்தையோ மனவேதனையையோ அடக்குவது கொஞ்சமும் சாத்தியமல்ல. எனக்காகத் தாங்கள் சாப்பிடாமல் இருக்க வேண்டிய பிரமேயம் இல்லை. தாங்கள் தயவு செய்து உடனே சாப்பிடப்போங்கள்.

லீலா: தாங்கள் மனவேதனையில் இருக்கிறீர்களென்றும் காலை முதல் சாப்பிடவில்லையென்றும் திட்டமாகத் தெரிந்தபின் தங்களை விட்டு விட்டு என்னைச் சாப்பிடும்படி சொல்லத் தங்களுக்கு மனம் எப்படித்தான் வந்ததோ தெரியவில்லை. உண்மையாகச் சொல்லுகிறேன் கேளுங்கள். தாங்கள் சாப்பிடாதவரையில் நான் ஜலபானங்கூடச் செய்வதில்லையென்று சாக்ஷாத் பார்த்தசாரதி சாட்சியாய்க் கூறுகிறேன். எவ்வளவு நேரம் என்னைப் பட்டினிபோட்டு வைக்கத் தங்களுக்கு இஷ்டமோ அவ்வளவு நேரம் பட்டினி போட்டு வையுங்கள்.

ரங்கநாத்: அக்கா, உன்னைப் பீப்பிள்ஸ்பார்க் தோட்டத்தில் மூன்று மாதங்களுக்கு முன் சந்தித்தது முதல் நீங்களும் நானும் சொந்த அக்காளும் தம்பியும்போல் அந்நியோந்நியமாகப் பிரதிதினமும் சந்தித்தும் புஸ்தகங்கள் வாசித்தும் தினசரிப் பத்திரிகைகளைப் படித்தும் பல விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்தும் சதுரங்கமாடியும் நாட்களைக் கழித்துவந்தோம். இன்று எனக்கு ஏற்பட்ட மனவேதனையால் எனக்குச் சிற்றுண்டிகள் தேவையில்லையென்று நான் சொன்னால் நீங்கள் அதற்காக ஏன் சாப்பிடாமல் இருக்க வேண்டும்? நீங்கள் சொல்வதற்காக இதோ ஒரு போண்டாவை எடுத்துச் சாப்பிடுகிறேன். தாங்கள் இனிச் சாப்பிடத் தடையில்லையே!

லீலா: என்ன சொன்னீர்கள்! சொந்த அக்காளும் தம்பியும் போலவா? உடன் பிறப்பு ஒன்றுக்கு மட்டுந்தான் அது பொருந்துமே தவிர மற்ற இடத்துக்கு அது சாத்தியமே இல்லை. சரிப்பட்டும் வராது. நிர்மலமான ஹிருதயத்தோடு அக்காளும் தம்பியுமாக இருந்தாலும், நடந்து கொண்டாலும் உடற்பிறப்பான அக்காளுக்கும் தம்பிக்கும் கொடுக்கிற கௌரவத்தை உலகம் இவர்களுக்கு ஒரு போதும் கொடாது. ஏதோ அவர்களுக்குள் அக்காள்—

தம்பி என ஓர் உறவு வைத்துக்கொண்டார்களென, அம் மட்டிற்குச் சாமான்யமாய் அதை மதித்து மிதித்து ஒதுக்கு வார்கள். சொந்த அக்காளைப்போல் இந்த உறவு-அக்காள் ஒரு பாயில் தன் உறவுத் - தம்பியுடன் படுத்து உறங்காள். அங்ஙனம் படுத்தால் உலகம் ஏசும். வீட்டில் உள்ள மாமி வைவாள். உறவுத்-தம்பிக்கு அருகிலே தனது பாயை உறவு-அக்காள் பிரியத்துடன் போட்டுக்கொள்ளப் போனு லும் மாமி சிடுசிடுத்துத் தடுத்துவிடுவாள். உறவுத்-தம்பி யின் மனைவி காலமாகித் தந்தி வந்து அதற்கு உறவு-அக் காள் உடனே போக ஆத்திரப்பட்டால் மற்றவர்கள் அதைத் தடுத்து இந்த உறவுத்-தம்பிக்கு இனி ஆகப்போகிற இரண்டாம் கல்யாணத்திற்குப் போகலாமென்று கூறிவிடு வார்கள். உறவாயில்லாமல் உடன்பிறப்பாயிருந்தால் இப் படி யெல்லாம் தடுப்பாரா? எதிர் பேசுவாரா? ஏசுவாரா? ஒரு பாயில் உறங்கக் கூடாது என்பார்களா?

உடற்பிறப்பாளரைவிடப் பதின்மடங்கு பாசம் வைத்தா லும் உலகம் அதை மதியாது; கௌரவிக்காது. இதை நீங் கள் உணராமல் உடன் பிறப்பாக இல்லாத என்னை, "அக்கா! அக்கா!" என்கிறீர்கள். நான் உறவு-அக்காளு மல்ல, உடன்பிறப்பு-அக்காளுமல்ல, அந்நிய மாது. எனக்கு ஏன் இந்த அக்கா உறவு? ஆதி முதற்கொண்டு இந்த அக் காள் பரியாதையை நான் ஒப்பவே இல்லை. அந்த உறவை வைத்துக்கொண்டு அழுகிறவர்கள் அழட்டும்; எனக்கு அது வேண்டாம். தங்களை எத்தனையோ தரம் என்னை ஏகவசனமாக லீலா என்று கூப்பிடும்படி வற்புறுத்தியும் அக்கா என்று அழைத்து என்னைக் கிழவியென்று ஏளனம் செய்யவேண்டாமென்று சொல்லியும் என்னைத் தாங்கள் அடிமையாகப் பாவித்து ஏகவசனமாக அழைக்கும்படி பல தடவைகளில் கேட்டுக்கொண்டும், நான் சொன்ன இரண் டொரு நிமிஷங்களுக்கு அப்படி அழைத்துவிட்டு மறுபடி

யும் அக்கா என்றும், வாருங்கள், போங்கள் என்றும் மரியாதை வார்த்தைகளால் கூப்பிட ஆரம்பித்து விடுகிறீர்கள். நான் தங்களைவிட ஒரு வேளை இரண்டொரு வருஷங்கள் பெரியவளாக இருப்பினும், தங்களுடைய கௌரவத்திற்கு ஏற்றவாறும் நான் பெண்பாலாக இருப்பது பற்றியும் இனி மேலாவது என்னைத் தாங்கள் இப்படி மரியாதையாகக் கூப்பிடக் கூடாது.

இப்போது தாங்கள் சித்தம் குழம்பிப் போய் நிற்கிறீர்கள். அதனால்தான் ஒரு போண்டாமட்டும் சாப்பிடத் துணிந்தீர்கள். அதையெல்லாம் நான் ஒப்ப முடியாது. தாங்கள் ஒன்றுமட்டுமே எடுத்துக்கொண்டால் நான் அதில் பாதிதான் உண்பேன். எப்போதும் தாங்கள் எட்டுப் போண்டா சாப்பிட்டால் நான் நான்கு மட்டும் எடுத்துக் கொள்ளுவது வழக்கம். இன்றோ எனக்கு அதிகப் பசி. தாங்கள் குறைத்து எடுத்துக்கொண்டு என்னை, அதிலும் பாதியை உண்ணும்படி வைத்து வீணாக என்னைப் பட்டினி கிடக்கும்படி செய்யவேண்டாம்.

அவர் பக்கத்தில்போய் அந்தச் சோபாவிலேயே உட்கார்ந்துகொண்டு, சிற்றுண்டிகளைத் தன் கையால் எடுத்து அவர் வாயில் வைக்கப்போனாள். அப்போது ரங்கநாத் அந்தச் சோபாவிலிருந்து சட்டென்று எழுந்திருந்து தூரத்திலுள்ள நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பின்வருமாறு சொன்னார்.

ரங்கநாத்: நான் என் மனப்பூர்வமாக உங்களை அக்கா என்று அழைத்து வந்ததை, இப்போது நீங்கள் உறவு-அக்கா வேறு, உடன் பிறப்பான அக்கா வேறு என்று பிரித்துப் பேதமும் கற்பித்துவிட்டீர்கள். அதன்படியே உடன்-பிறப்பு அக்கா பலகாரத்தைத் தன் தம்பியின் வாயில் இட்டு உண்ணும்படி செய்யலாம். அந்த உடன்-பிறப்பு அக்கா செய்யக்கூடியதை இந்த உறவு-அக்கா செய்

யக் கூடாது என்பதற்கு உங்களுடைய பேச்சே போதுமானது. உங்களுடைய வார்த்தைக்கு எதிரிடையாகவே உறவு-அக்காளாகிய நீங்கள் உடன்-பிறப்பு அக்காள்போல நடந்துகொள்ள முயல்கிறீர்கள். இது சரியாகாது. மேலும், லீலாவதி, நாம் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையை முற்றும் மறந்து நீ சோபாவில் என் பக்கத்தில் உட்கார வந்தது நியாயந்தானு?

லீலா: முற்றும் நியாயந்தான். அக்கா என்ற உறவு நீங்கள் கொண்டதே யன்றி நான் அப்படி அழைக்கும்படி கூறவேயில்லை. உடன்-பிறப்பு அக்காவும் நானல்ல; உறவு-அக்காவும் நானல்ல. ஆதி முதற்கொண்டு நான் தங்கள் அன்பு ஒன்றுக்கே அடிமையானவள். தங்கள் அன்புக்குரியவளாய்த் தங்கள் ஆதரணைக்கு உட்பட்டு என் ஜீவகால முழுதும் தங்களையே எனது ரக்ஷகராக, பிராணுதாரமாகக் கொண்டு இருந்துவிட நினைத்து அதனையே நாடி நடந்தவள்.

அதற்கு ஏற்பவே என் பேச்சுகளும் குறிப்புச் சொற்களும் இருந்து வந்திருக்கின்றன. இதனுல் நான் முன்னொரு விதமாகவும் இப்போது ஒரு விதமாகவும் நடக்கிறேனென்று என்னைக் குற்றங் கூற ஒரு சிறிதும் இடமில்லை. அன்றியும், தாங்கள் சொன்ன தேதியில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி தாங்கள் மாத்திரம் உடன்படிக்கையை மீறி நடக்கலாம்; நான் நடக்கக்கூடாதா? மேலும் நான் என்ன அப்படி அக்கிரமமாக நடந்துவிட்டேன்? தாங்கள் உட்கார்ந்திருக்கும் சோபாவில் தங்கள் சமீபத்தில் உட்கார்ந்துகொண்டு தங்களுக்குச் சிற்றுண்டிகளைக் கொடுக்க முயன்றதில் என்ன முழுகிப்போயிற்றோ தெரியவில்லை. நான் உங்களின் உறவு-அக்காவாகப் பக்கத்தில் உட்கார வந்திருந்தால். நீங்கள் ஆட்சேபிப்பது பொருந்தும்; தகும்.

நானோ உங்கள் அன்புக்குரியவள் என்ற ஸ்தானத்தில்

தங்கள் அருகே வந்து உட்காரலானேன். இதை நீங்கள் எப்படி ஆட்சேபிக்க முடியும்? உங்களிடத்து எனக்கு அன்பு உண்டா இல்லையா? யதார்த்த அன்பு-பிரேமை-தங்கள்மீது நான் வைத்திருப்பது உண்மையானால் என் தங்கள் அருகில் சோபாவில் நான் உட்காரலாகாது? உறவு-அக்கா உட்காரக்கூடாதே தவிர, உயிருக்குயிராக அன்புடையவள் தாராளமாக ஏகாசனத்தில்-கட்டிலில்-ஒரே சோபாவில்-உட்காருதல் கூடுமன்றோ? அப்படி உட்கார்ந்து, தங்கள் விசனத்திற்குரிய உண்மைக் காரணத்தை விசாரித்து நான் மாற்றுவிடில், பின் யார்தான் மாற்றுவார்கள்?

ரங்கநாத்: அப்படியே வைத்துக்கொண்டு பார்த்தாலும் உன்னை அத்தியந்த அன்புடைய உறவு-அக்கா என்றே முடிக்கவேண்டும். வேறுவித முறைகள் என்னளவில் சற்றுமே பொருந்தாது. அவ்வளவுக்கு நான் இடம் கொடுத்துக்கொள்ளப்பட்டவன் அல்ல. இனி நான் வாக்கைத் தவறி உன்னை அக்காவென்று அழைக்கவில்லை. நீயும் தூரத்தில் உட்கார்ந்து வார்த்தையாடு.

லீலா: அப்படியே செய்வோம். இச் சிற்றுண்டிகளைச் சாப்பிடுங்கள்.

இப்படிப் பலவந்தப்படுத்தி அவரைச் சாப்பிடச் சொன்னாள். அவரும் மாமூலாய்ச் சாப்பிடுவதில் பாதி புசித்துத் தேத் தண்ணீர் அருந்தினார்.

லீலா: நண்பரவர்களே! தயவுசெய்து தங்களுக்கு ஏற்பட்ட விசனத்தைத் தெரிவியுங்கள்.

ரங்கநாத்: நேற்று இரவு நான் இங்கே வந்திருந்தபோது ருக்மிணி பாங்கியின் இரும்புப்பெட்டியில் ஐந்து லட்சத்துச் சில்லறை ரூபாய்கள் வைத்துவிட்டு வந்ததாகவும், நாம் இருவரும் நாடகத்திற்குப் போகத் தீர்மானித்திருந்ததால் தூக்கம் இராதென்றும், இன்று காலையில் போகச்

சற்று நேரமாகுமென்றும், ஆகையால் கோபாலாசாரியார் அண்ட் ஸன்ஸுக்குச் சரியாய்ப் பத்தரை மணிக்குக் கொடுப்பதற்காகவே நேற்றே அவ்வளவு பெருந்தொகை வாங்கிவைத்துவிட்டு வந்தேன் என்பதையும் நான் சொன்னதை நீ மறந்திருக்க மாட்டாயல்லவா? இன்று காலையில் நான் போய் இரும்புப் பெட்டியைத் திறந்த போது பூட்டுகளெல்லாம் சரிவரப் பூட்டினபடி இருக்க அந்த நோட்டுகள் முற்றுமே காணமற் போய்விட்டன.

லீலா: என்ன ஆச்சரியம்! பூட்டுகளெல்லாம் பூட்டினபடி இருக்கும்போது எப்படி நோட்டுகள் காணமற் போயிருக்கக்கூடும்? இது நம்பக்கூடிய சமாசாரமாக இல்லையே! மேலும் தங்களிடம் ஒரு சாவியும் ம-ா-ா-ஸ்ரீ ராகவனிடத்தில் ஒரு சாவியும் இருப்பதாயும் இச்சாவிகள் எவர் கையில் அகப்பட்டாலும் அப்போதும் பேர்ப் பூட்டு இன்ன பேரால் பூட்டப்பட்டிருக்கிறதென்று தெரிந்து அந்தப் பேரெழுத்துக்களை வரிசையாக வைத்துத் திறந்தால்தான் இரு சாவிகள் போடக்கூடிய துவாரம் புலப்படுமென்றும் பின்னல்தான் சாவிகள் போட்டுத் திறக்க முடியுமென்றும் அந்தப் பேர் தங்களுக்கும் ம-ா-ா-ஸ்ரீ ராகவனுக்கும் மட்டுந்தான் தெரியுமென்றும் சொன்னீர்களே! இவ்வளவு பந்தோபஸ்தில் இருந்த நோட்டுகளை எவரால் எடுக்க முடியும்?

ரங்கநாத்: எவராலும் எடுக்க முடியாதென்பதால்தான் ராகவன் திட்டமாய், நான் பெட்டிக்குள் நோட்டுகளை வைக்காமல் ஏய்க்கிறேனென்று கூறுகிறார். பார்ப்பவர்களுக்கும் அவ்வார்த்தைகள் நம்ப இடம் கொடுக்கிறது.

லீலா: தங்கள் பேரில் எவ்வாறு குற்றம் சொல்லக்கூடும்? தாங்கள்தான் வைத்துப் பூட்டிவிட்டு வந்துவிட்டீர்களே! அப்பால் ராகவன் அவர் பூட்டைப் பூட்டினரே! அப்படி இருக்கும்போது தங்களால் எப்படி எடுக்கக்கூடும்?

ரங்கநாத்: எனக்கும் ம-ா-ா-ஸ்ரீ ராகவனுக்கும் மட்டும்

இன்னபேரால் இரும்புப்பெட்டி பூட்டப்பட்டிருக்கிறதென்று தெரியுமாதலாலும், ராகவனிடத்தில் ஒரு சாவியும் என்னிடம் ஒரு சாவியும் இருப்பதாலும், எங்கள் இருவரில் ஒருவரால் மற்றவர் சாவியில்லாமல் திறக்க முடியாதாதலாலுந் தான் ராகவன் என்பேரில் சந்தேகப்படுகிறார். அவர் சந்தேகப்படுவதற்கும் காரணங்கள் சரியாகத்தான் இருக்கின்றன. நான் நோட்டுகளை வைத்துவிட்டு வந்ததும் உண்மைதான். எப்படிப் போயிருக்கலாமென்று என்னால் கூடிய வரையில் யோசித்துப் பார்க்கிறேன்; எனக்கு விளங்கவேயில்லை.

லீலா: தங்கள் கால் தூசுகூட அப்பேர்ப்பட்ட வேலை செய்யாதே! உண்மையாக ராகவன் தங்கள்பேரில் சந்தேகமாய்ப் பேசினாரா? ஸ்ரீமான் ராஜேந்திரன் என்ன சொன்னார்? போலீஸ்காரர்கள் என்ன சொல்லுகிறார்கள்?

ரங்கநாத்: ஸ்ரீமான் ராகவன் திட்டமாக நான்தான் திருடனென்று வெளிப்படையாகச் சொல்லுகிறார். ஸ்ரீமான் ராஜேந்திரன் மட்டும் ஆராய்ந்தறிந்த பின் சொல்லவேண்டுமென்றார். அதன்பேரில் அவர்கள் இருவருக்கும் கூடச் சற்று மனவருத்தம் ஏற்பட்டது. ஐந்து லட்சத்துச் சில்லறை ரூபாய்களுடன், ஐம்பது லட்சம் ரூபாய் பெறுமான கோபாலபுரம் வைர நகைகளும் திருட்டுப்போய் இருக்கின்றன. ஆகையால் வெளிக்குச் சொன்னால் பாங்கியின் நல்ல பேருக்குக் கெடுதலாகுமென்று போலீசுக்குக்கூடத் தெரிவிக்கவில்லை. இனி என்ன செய்வார்களோ தெரியவில்லை.

லீலா: என்ன சொன்னீர்கள்? 50 லட்ச ரூபாய் பெறுமான வைரங்களும் திருட்டுப்போயினவா, உண்மைதானா? எப்படியிருந்தாலும் பெரிய இடத்துக் காரியம் வேறுதான். அற்பர்கள காரியம் வேறுதான். ஸ்ரீமான் ராஜேந்திரனுக்கும் ராகவனுக்கும் உள்ள தாரதம்மியங்களைப் பார்த்தீர்களா? ராகவன் தங்களை எதிரில் வைத்துக்கொண்டே திருட

னென்று சொல்லவும் தாங்கள் அதைப் பொறுத்துக் கொண்டிருக்கவும் ஏற்பட்டதல்லவா? தங்கள் கௌரவத்தைச் சற்றுகிலும் கவனியாமல் இப்படிப் பேசினரல்லவா? தங்களுடைய அந்தஸ்துக்கு இப்படி ஐந்து பாங்கிகள் வைக்கலாமே. தாங்கள் ஏன் அந்தச் சொட்டுச் சொல்லைக் கேட்டுக்கொண்டு இருக்க வேண்டும்? இனி தாங்கள் அந்தப் பாங்கிக்குள் அடி எடுத்து வைக்கக்கூட நான் பார்த்துச் சகிக்கமாட்டேன். இப்பொழுதே புறப்படுங்கள். நாம் வெளிதேசம் செல்லலாம்.

ரங்கநாத்: லீலா! நீ பெண்பாலானதால் காரிய காரணங்களைச் சீர்தூக்கிப் பாராமல் கோபித்துக்கொண்டாய். நான் ஸ்ரீமான் ராகவன் ஸ்தானத்தில் இருந்தால் அவர் சொன்ன மாதிரியைத் தவிர வேறு விதமாக நினைக்கச் சாத்தியமாகாது. நீ ஏதோ என்னைப்பற்றிப் பிரமாதமாக நினைத்துக்கொண்டு பேசுகிருய். என் வெளிப்பகட்டையும் படாடோபத்தையும் கண்டு ருக்மிணி பாங்கியில் நான் காஷ்கீப்பர் உத்தியோகத்திலிருந்து சம்பாதித்து வைத்திருந்த ரூபாய்களை இப்போது மூன்று மாதங்களாக நான் இப்படிச் செலவிடும் மாதிரியிலிருந்து நான் பெரிய கோடீசுவரப் பிரபுவின் புத்திரனென்று கருதியிருக்கிருய். என் உண்மையான கதையைச் சொல்லுகிறேன்; சற்றுக் கவனமாய்க் கேள்: நானே ஓர் அநாதைப் பெண்ணின் புத்திரன். என் தாயார்பேரில் மனம் இரங்கி அந்த அம்மாள் பந்துவாகிய ஒருவர் எங்களுக்குத் தர்மத்திற்குச் சாப்பாடு போட்டு எனக்குப் போதிய கல்வியும் சொல்லி வைத்தார். நான் நடந்துகொண்ட நல்ல மாதிரியால் அக்கனவான் என்பேரில் கிருபை வைத்து எனக்குத் தக்க ஜாமீன் கொடுத்துச் சிபார்சுக் கடிதத்துடன் என்னை ருக்மிணி பாங்கிக்கு அனுப்பினர். இந்த வேலையை விட்டுவிட்டால் நான் 12 ரூபா சம்பளம்கூடப் பெறுவது கஷ்டமாகும். இவ்வளவு

ஈனஸ்திதியிலுள்ள என்னை நீ ஒரு பிரபுவென்று நினைத்திருக்கிறாய்போல் இருக்கிறது. அப்படி எண்ணியிருந்தால் அதை நீ இப்போதே மாற்றிவிடு.

லீலா: ஐயா! தாங்கள் ஏழையென்றே வைத்துக் கொள்வோம். நான் இந்த நிமிஷத்திலேயே தங்கள் கையில் ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்துவிடுகிறேன். அப்போது என்னோடு வருவதற்கு என்ன ஆட்சேபம்?

ரங்கநாத்: லீலா! ஐம்பதாயிரமல்ல; ஐம்பது லட்சம் கொடுத்தாலும் இத்திருட்டுக் கேஸின் துப்புத் துலங்கும் வரையில் நான் இவ்விடம் விட்டு அசையவே மாட்டேன். எனக்குப் பேர் பிரதானமேயொழிய பொருள் பிரதானமல்ல. என்னை அவ்வளவு நம்பிக்கையுடன் ஜாமீன் கொடுத்து அனுப்பி வைத்தவர் என்னைப்பற்றி என்ன நினைப்பாரோ என்ற எண்ணம் என் மனத்தைக் கூரிய வாள் கொண்டு அறுப்பதைப்போல் துன்புறுத்துகிறது.

லீலா: தங்களைப்போல் சிலாக்கியமான குணமுடையவரை இப்பிரபஞ்சத்திலேயே நான் பார்த்ததில்லை. சென்ற மூன்று மாத காலமாய்ப் பிரதிதினமும் இவ்விடத்தில் சுமார் 4, 5 மணி நேரம் என்னுடன் இருந்துவிட்டு நாம் வேடிக்கையார்த்தமாய் அக்காளும் தம்பியும்போல் இருப்போமென்று சொன்ன வார்த்தையை மீறி நடக்காமல் இருந்துவந்த தங்கள் மனம் என்ன கல்தானோ! இரும்போ! அல்லது இரும்பினும் கடிய இருடியம் என்னும் உலோகமோ, அறியேன். இன்றுடன் நாம் செய்துகொண்ட வாக்குறுதி நீங்கிவிட்டது. இன்று முதல் நாம் இருவரும் மதனும் ரதியும்போல் இருக்கவேண்டும்.

இப்படிச் சொல்லி அவர் மறுமொழி சொல்ல வாயெடுக்கு முன்னமே, சட்டென்று எழுந்து அவரை இறுகத் தழுவி முத்தமிட்டாள். உடனே ரங்கநாத் அவளிடமிருந்து திமிறிக்கொண்டு கோபித்த முகத்துடன் பின்

வருமாறு சொன்னார். அப்போது ஒருவர் வெளியில் உறுமியதாகச் சத்தம் கேட்டது.

ரங்கநாத்: லீலா, முன்னமே துக்க சாகரத்தில் மூழ்கியிருக்கும் என்னைக் கழுத்தைப் பிடித்துத் தண்ணீருக்குள் அமுக்குவதைப்போல் கொஞ்சமாவது மாதர்களுக்கு இருக்க வேண்டிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் குணங்களுக்கு முற்றும் மாறாக என்னைத் திடீரென்று பலவந்தமாகப் பிடித்து முத்தம் கொடுத்துவிட்டாயே! நீ செய்தது சரிதானா? கேவலம் விலை மாதரும் இப்படிச் செய்யமாட்டார்களே! இனி இந்த இடத்தில் கால்கூட எடுத்து வைக்கமாட்டேன். முதலில் நான் உன்னைச் சந்தித்தபோது நீயும் துக்க சாகரத்தில் மூழ்கி அழுதுகொண்டிருந்தாய். நானும் விசனத்தில் ஆழ்ந்திருந்தேன். நாம் இருவரும் வெகு நேரம் சிங்காரத் தோட்டத்தில் விசனமாய் உட்கார்ந்திருந்ததன் காரணமாக நமக்குள் அன்பு ஏற்பட்டது. அன்றே நாம் இருவரும் உடன்-பிறப்பான அக்காள் தம்பிபோல் நடந்துகொள்வதாக வாக்குறுதி செய்துகொண்டோம். அன்று முதற்கொண்டு உனக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தேன். நீ இன்று அதற்கு முற்றும் விரோதமாக நடந்துவிட்டாய். இன்று முதல் நீ வேறு; நான் வேறுதான்.

லீலா: ஐயா, நான் கேட்கும் கேள்விக்கு ஈட்டும் தயவு செய்து சரியான ஜவாபு சொல்லுங்கள் பார்ப்போம். என்னைப்போல் அழகிய யுவதி ஒருத்திக்குத் தங்களைப் போலொத்த விட் புருஷர் பங்களா ஒன்று அமர்த்திக் கொடுத்து, அதற்கு வேண்டிய சோபாக்கள், நாற்காலிகள், கட்டில்கள் முதலிய சகல தட்டுமுட்டுச் சாமான்களையும் தங்கள் செலவில் வாங்கிக் கொண்டுவந்து போட்டு, மூன்று மாத காலமாய் வீட்டுச் செலவுகளையும் செய்து வேடிக்கையார்த்தமாக என் அக்காவாய் வைத்திருக்கிறேனென்று

யாரிடமாவது சொன்னால் எவராவது நம்புவார்களா? உலகந்தான் ஒப்புமா?

எத்தனை பேர் அண்ணன் தங்கை முறையை ஆரம்பத்தில் கொண்டாடிப் பின்பு சரசக் கண்ணுளராயினர்? உலகத்திலே என்போல் ஒத்தவர்களிடம் விடபுருஷர் சென்றால், மாமா, மருமகனே, மைத்துனா, என் தம்பி, சிற்றப்பா, சிநேகா, அண்ணா, என்று பலவிதமான முறைகள் வைத்துக் கூப்பிட்டுக்கொண்டு, வெளிக்கு ஒரு தினுசாக இருந்தாலும் உள்ளுக்குள் அவர்கள் இஷ்டர்களே! அப்படியே நாமும் இருக்க வேண்டியதுதானே உலக இயற்கை? தாங்கள் மட்டும் சென்ற மூன்று மாத காலமாய் நானென்ன விதத்தில் ஜாடைகள் செய்தும், தங்களை வசப்படுத்த முயன்றும் தாங்களாக என்பேரில் பிரியப்பட்டு, என்னைப் பலவந்தப்படுத்தியதாக ஏற்பட வேண்டுமென்னும் எண்ணத்துடன், என்னாலாகிய கஜகர்ணங்கள் போட்டுப் பார்த்தும் ஒன்றிலும் பலிக்கவில்லை யாதலால், 'நவாப் உத்தரவின்படி இமயமலை நவாப் இருக்கும் இடத்திற்குப் போகாவிட்டால், நவாப் இமயமலை இருக்கும் இடத்திற்குப் போக வேண்டும்' என்று சொல்வதற்கிணங்க நானாகத் தங்களைப் பலவந்தப்படுத்தும்படி நேரிட்டது; இதில் தவறுதல் என்ன? சொல்லுங்கள் பார்ப்போம். என்னால் எவ்விதமான பிரதி உபகாரமும் பெற விரும்பாமல் என் நிமித்தம் பல ஆயிர ரூபாய்கள் செலவழித்தீர்களென்றால் யார்தான் நம்புவார்கள்! உங்கள் அந்தரங்க எண்ணம் நானே வலிய வர வேண்டும் என்பதாகவே இருக்கும்போலும்; அப்படித்தான் தோற்றுகிறது.

**ரங்கநாத்:** யார் நம்பினாலும் சரிதான்; நம்பாவிட்டாலும் சரிதான். நீ கபடமாகச் சொன்ன பல கதைகளையும் உண்மையென நம்பி ஜீவகாருண்யத்தால் தூண்டப்பட்டு, நான் அப்போது ஒத்தாசை செய்யாவிடில் ஒருகால் நீ தீய

வழியில் புகும்படி நேரிடும் என்று நம்பி, ஒரு பெண்மணி யின் கற்பையாவது காத்தோமென்னும் ஒரு திருப்தி என் மனத்தில் உண்டாகுமென்றும், அன்றையவரையில் என் பிராணனுக்குச் சமானமாய் நான் பார்த்து, ஒருவரை ஒரு வர் விரும்பி, விவாகம் செய்துகொள்வதாய் நிச்சயித்திருந்த ஒரு பெண்மணி, திடீரென்று அவளிடம் அதுமுதல் நான் பேசக் கூடாதென்றும், எங்கள் இருவருக்கும் கல்யாணம் என்ற பேச்சே காற்றில் விட்டு விடப்பட வேண்டுமென்றும், தீர்மானமாய் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகச் சொல்லிவிட்டதாலும் ஏதோ நேரப் போக்குக்காக மகா பதி விரதா சிரோமணியாகப் பாவித்த உன்னுடன் பேசி, வாசித்து, சதுரங்கமாடிக் காலத்தைக் கழிக்கலாமென்னும் எண்ணத்துடன் இப்படிச் செய்தேனே தவிர, நீ நினைத்த படி உன்னுடன் கூடிக் குலாவி யிருப்பதற்காகச் செலவு செய்யவில்லை. ஆகையால் இன்றுமுதல் நீ வேறு நான் வேறுதான்.

**லீலா:** சரி, தங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள். ஆனல் ஒரு வார்த்தை! தாங்கள்தான் செய்தீர்களென்று ஏற்பட் டிருக்கும் திருட்டைத் தாங்கள் செய்யவில்லையென்றும், இன்னார்தான் செய்தார்களென்றும் நான் என் சாமர்த்தி யத்தால் பிரயாசைப்பட்டுக் கண்டு பிடித்து ரூபித்தால், அப்போதாவது என்னைக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதிக்கிறீர்களா!

**ரங்கநாத்:** யாரை! உன்னையா? நானு? வேசியையா கல் யாணம் செய்துகொள்ள வேண்டும்?

**லீலா:** ஐயா, தாங்கள் நினைக்கிறபடி நான் வேசியு மல்ல; தாசியுமல்ல. தங்கள் பேரில் இருக்கும் அதிகமான பிரியத்தால் தூண்டப்பட்டுப் பைத்தியம் பிடித்தவள்போல் பேசினேன். தாங்கள் கல்யாணம் செய்துகொள்ளச் சம்ம திக்காவிட்டால் என்னை அபிமான பத்தினியாக வைத்துக்

கொண்டாலும் . அதற்கும் தங்கள் பேரில் எனக்கிருக்கும் அணைகடந்த பிரியம் சம்மதிக்கும்படியே தூண்டும்.

இதற்குள் பக்கத்தறையில் ஒருவர் உரத்த குரலாய் உருமியதாகச் சத்தம் கேட்டது. ரங்கநாத் தாம் மலபாரைக்குச் சென்று வருவதாகச் சென்றார். அவர் சென்றவுடன் ரங்கநாத்தைப் பின்தொடர்ந்து வந்த ஐயங்கார் லீலாவதியிடம் வந்து, "ஜாக்கிரதை! அவனிடம் நாக்கடக்கி உனது நிலைமை அறிந்து பேசாவிட்டால் இத்துப்பாக்கியால் உன்னை இரக்கமில்லாமல் சுட்டுக் கொன்று போடுவேன். அவ்விஷயத்தைப்பற்றி இனி ஒரு வார்த்தை மட்டும் பேசு, அப்போது பார், நீ படும் பாட்டை! நீ அதிகமாகப் பேசின சமயத்தில் இரண்டு தரம் உருமிக் காண்பித்தேன். அதுகூட உன் காதில் படவில்லை. இதுவரையில் நீ பொருளைமட்டும் அபேக்ஷித்து நின்றாய் ; காமாக்கினியென்பது இவ்வாறு இருக்குமென்பதை நீ அறியாய். இப்போது உன் குணத்திற்கு முற்றும் மாறாக உன்னை மன்மத பாணங்கள் வாட்டுகின்றன. நீயும் அவனும் எங்கள் பார்வையிலிருந்து ஒரு நிமிஷங்கூடத் தப்ப முடியாது. சொன்னேன்! சொன்னேன்!! சொன்னேன்!!! எங்கள் வார்த்தைக்கு மாறாக நடந்தால் இதோ இக் கைத்துப்பாக்கியால் உன்னைச் சுட்டுக் கொன்றுபோடுவேன்" என்று அதிகக் கோபத்துடன் சொன்னார். அதற்குள்ளாக ரங்கநாத் வரும் காலடிச் சத்தம் தூரத்தில் கேட்கவே, ஐயங்கார் உள்ளே போய்விட்டார். ரங்கநாத் வந்ததும் தம் தலைப்பாகையை எடுத்து வைத்துக்கொண்டு போகப் போனார்.

லீலா: ஐயா, நான் கேட்ட கேள்விக்குத் தயவுசெய்து பதில் உரைத்துவிட்டுப் பின் செல்லுங்கள்.

ரங்கநாத்: லீலா, நீ சொன்ன நிபந்தனைக்குக் கட்டுப்பட நான் ஒருகாலும் சம்மதிக்கவே மாட்டேன், இது சத்தியம்.

லீலா: சரி, பரவாயில்லை. நான் அதிக க்ஷீணதசையில்

இருக்குங்கால் தாங்கள் எனக்காக இரங்கி என்னை இவ்வளவு உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவந்ததற்காக நான் என் மனமுவந்த வந்தனம் அளிப்பதோடு என்னால் கூடியவரையில் இந்தத் திருட்டின் துப்பைத் துலக்கப் பிரயாசைப் படுகிறேன். நான் கண்டுபிடிக்கும் வரையில் தாங்கள் தயவுசெய்து வழக்கம்போல் நித்தியம் வந்து போங்கள். தாங்களாக இஷ்டப்பட்டு மனம் இரங்கி உத்தரவு கொடுக்கும் வரையில் உங்கள் ஜோலிக்கு நான் வருவதில்லையென்று உறுதியாயும் சத்தியமாயும் சொல்லுகிறேன். தங்களை ஒரு நாள் நான் பார்க்காவிட்டால் என் மனத்தில் அப்பிரிவைச் சகிக்க முடியுமாவென்று எனக்கு நானே சந்தேகப்பட வேண்டியதாயிருக்கிறது! அவ்வளவு அணை கடந்த ஆசையைத் தங்கள்மீது நான் வைத்துவிட்டபடியால்தான் தங்களை நான் வரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

இதுவரையில் இருந்ததைவிடப் பதின்மடங்கு நிர்ணயமாக நான் இருக்கிறேன். ஆனால் ஒரு வேண்டுகோள். எனக்கு வரவேண்டிய ரூபாய்கள் இப்போது வந்துவிட்டதால் இனித் தங்களிடம் ஒரு காசுகூடப் பெறச் சம்மதியேன். அத்துடன் இதுவரையில் என்னிமித்தம் தாங்கள் செலவழித்த கணக்கின் மொத்தத்தையும் சொல்லி அத்தொகையையும் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்போதுதான் எனக்குத் திருப்தி.

ரங்கநாத்; உன் நிமித்தம் நான் செலவு செய்தபோது உனக்குக் கடனாகவாவது திரும்பிப் பெறுவேனென்ற எண்ணத்துடனாவது செலவு செய்யாததால் உன்னிடமிருந்து நான் திரும்பி வாங்கிக்கொள்ளமாட்டேன். நீ இப்போது சொன்னமாதிரி நடந்துகொள்ளும்வரை எப்போதாவது வந்துபோவதில் ஆட்சேபமில்லை. நம் உடன்படிக்கைக்கு

விரோதமாக அகத்தாலோ முகத்தாலோ நடப்பதாக என் மனத்தில் பட்டால்கூட அது முதல் இங்கே அடிகூட எடுத்துவைக்க மாட்டேனென்பதைத் திட்டமாக அறிந்து கொள். நான் சென்று வருகிறேன்.

இப்படிச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவர் போனதும் ஐயங்கார் மறுபடியும் வந்து முன்சொன்ன மாதிரியே வற்புறுத்திச் சொல்லிவிட்டு ரங்கநாத்தையே பின்தொடர்ந்து சென்றார். உடுப்புப் போடாத போலீஸ் காரன் அவர்கள் இருவரையும் பின்தொடர்ந்தான். ரங்க நாத் வீட்டிற்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டதும் ஐயங்கார் தம் ஜாகைக்குச் செல்ல, போலீஸ் காரன் ஐயங்கார் வீட்டைக் கவனித்துக்கொண்டு, தான் போனதுமுதல் பார்த்த விஷயங்களையும் கேட்ட சமாசாரங் களையும் எழுதி இன்ஸ்பெக்டருக்கு அனுப்பினான். இன்ஸ் பெக்டர் ஷை ரிப்போர்ட்டைப் போலீஸ் கமிஷனர் துரையவர் களுக்கு ரகசியம் என்னும் பைக்குள் அடக்கம் செய்து அனுப்பிவிட்டார். கோவிந்தனே அவர்கள் மூவரையும் கவனித்துவிட்டுத் தம் ஜாகைக்குச் சென்றார்.

---

## 7. கமலத்தின் ரகசியங்கள்

'முன்னமோர் பொய்யுரைக்க, அப்பொய் வெளியாகாமல் மூடும் வண்ணம் பின்னுமோர் பொய்யுரைக்க, அதை நிலைநிறுத்திட, வோர் பெரும்பொய் சொல்லல்.'

மூந்தின அத்தியாயத்திற் சொன்ன விஷயங்கள் நடந்த ஒரு வாரத்திற்கு அப்பால் ராகவன் மனைவியாகிய கமலம்மாள் தன் படுக்கை அறையில் இருந்தபடியே சத்தம் போட்டு அழாமல் ஊமைக் கண்ணீர் விட்டுக்கொண் டிருந் தாள். அப்போது அவள் புத்திரியாகிய லக்ஷ்மி பக்கத்தில் வந்து பார்த்ததும் தன் தாயார் கண்களிலிருந்து வடியும்

நீரைத் துடைத்துவிட்டுச் சமாதானம் சொல்ல வாயெடுத்தாள். அதிகமான துக்கத்தால் பேச்சே வரவில்லை. அவள் கண்களிலிருந்தும் நீர் வடிய ஆரம்பித்துவிட்டது. சில நிமிஷங்களுக்கு அப்பால் கண்ணீரைத் துடைத்துவிட்டுத் தன் தாயாரைப் பார்த்து,

லக்ஷ்மி: அம்மா, விசனம் என்பதே இப்படி இருக்குமென்று குழந்தை முதல் அறியாத நானும், எனக்குப் புத்தி தெரிந்தது முதல் சந்தோஷமாக இருந்த தாங்களும் இப்போது மூன்று மாச காலமாய்த் துக்க சாகரத்தில் மூழ்கியிருக்கும்படி ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ஆக்ஞாபித்து விட்டார்போல் இருக்கிறது. அத்துடன் போனாலும் பாவாயில்லை. இனி நமது ஆயுள் காலம் முழுவதிலும் சந்தோஷமே இப்படி இருக்குமென்று அறிய மார்க்கம் இல்லாதபடி ஆகிவிட்டதே. இதை உத்தேசித்தே என் பிராணனை வைத்திருப்பதைவிட இறப்பதே சிலாக்கியமென்று என் மனத்தில் பட்டது. அப்படி நான் இறந்துபோனாலும் அதனால் தங்கள் விசனம் மாறுவதற்கு மார்க்கம் இல்லையே! என்ன செய்வது?

கமலம்: குழந்தாய்! நான் சிறுபோதில் செய்த தவறுதலுக்காக, இப்போது விசனத்தை அநுபவிக்கிறேன் என்று இருந்தாலும், 'பிள்ளையாரைப் பிடித்த சனி அரச மரத்தையும் சேர்த்துப் பிடிப்பது'போல் நீயும் என்னால் விசனத்தை யடைய நேரிட்டதை நினைக்கும்போதுதான் எனக்குத் துக்கம் அதிகமாகிறது. நம் இருவரையும் பிடித்த சனியன் நம்மோடு நிற்காமல் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள உத்தேசித்து, உன்னுடன் பேசி விளையாடிக் கொண்டிருந்த ரங்கநாத்தையும் சேர்த்துப் பிடித்திருக்கிறது. அவர் வீட்டில் தரிக்காமல் வாடாவழியாய்த் திரிவதற்குக் காரணமென்ன? நாம்தான். எப்போது நீ அவரைப் பார்த்து, 'நீர் இனி என்னைக் கல்யாணம் செய்து

கொள்ளலாமென்று நினைப்பது முடியாத காரியம். நான் வேறு ஒருவரைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி நேரிட்டு விட்டது. ஆகையால் என்னை மறந்துவிடுங்கள்' என்று சொன்னேயோ அன்றே அவர் வாழ்வு புண்பட்டுவிட்டது. அன்று முதல் அவர் இன்னதுதான் செய்கிறோம்; அது சரியோ அல்லவோ என்று கூடக் கவனிப்பதில்லை. எப்படி யாவது பொழுது போக வேண்டுமென்று நினைத்தவாறு நடப்பதாகவே தெரிகிறது. இன்னும் நமது வீட்டின் பக்கம் போகும்போதெல்லாம் நீ இருக்கும் அறையின் ஜன்னலைப் பார்த்தபடியேதான் போகிறார். இதையெல்லாம் நினைக்க நினைக்க என் வயிறு பகீரென்று எரிகிறது.

லக்ஷ்மி: அம்மா, நாம் இனி விசனப்பட்டுக்கொண் டிருப்பதில் கொஞ்சமாவது சுகிர்தமில்லை. இப்போதே அப்பா அவர்கள் நம் இருவர் மனத்திலும் ஏதோ விசனம் குடிகொண் டிருப்பதாகச் சந்தேகிக்கிறார். நாம் அவர் வரும்போது நமது விசனத்தை யெல்லாம் அடக்கிக் கொண்டு மாமூலாக இருப்பதுபோல் நடித்தாலும், 'அகத் தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதற்கு இணங்க நம் மால் நமது விசனத்தை முற்றும் மறைப்பதற்குச் சாத்திய மாகவில்லை. அவரும் அடிக்கடி காரணம் கேட்டு வருகிறார். ஆகையால் நாம் இருவரும் இதைப்பற்றிச் சரிவர ஆலோ சித்துச் சந்தேகத்திற்கு இடமன்னியில் நடந்துகொள்ள வேண்டும். இல்லாவிடில் எப்படியாவது தெரிந்துகொள் வார். அம்மா, மேலும் தாங்கள் மனித உருக்கொண் டிருக்கும் அந்தச் சனியன் கையில் எப்படியோ சிக்கி யிருக் கிறீர்களென்றும் அவனுக்குத் தங்களைப் பயமுறுத்தி அவன் இஷ்டப்படி நடக்கும்படி செய்யக்கூடிய சக்தியிருக் கிறதென்பதையும் அறிந்த நான், என் நிமித்தம் தாங் கள் வருத்தத்திற்கு உள்ளாகக் கூடாது என்றே அவன் கோரும் ஆசாமியைக் கல்யாணம் செய்துகொள்

ளைச் சம்மதித்தேன். இப்படிச் செய்தாலொழிய அவன், அப்பா அவர்களுக்குத் தெரிவித்துவிடுவதாகச் சொன்னதை நான் கேட்டதால் தங்களை வருத்தத்தினின்று நீக்குவதற்காகவே அவன் இஷ்டப்படி அவன் குறிப்பிடும் ஆசாமியைக் கல்யாணம் செய்துகொள்வதாய் வாக்களித்தேன்.

தயவு செய்து தங்களைப் பயமுறுத்தக்கூடிய சக்தி அவனுக்கு எப்படி ஏற்பட்டதென்றும் இப்போது மூன்று மாத காலமாய் அவன் தங்களிடம் வந்து என்ன என்ன விஷயங்கள் சொன்னானென்றும் விவரமாகத் தெரிவிக்கக் கோருகிறேன். நான் வேடிக்கையார்த்தமாயாவது, அல்லது தங்கள் ரகசியத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் எண்ணத்துடனாவது கேட்பதாக நினையாமல் தயவுசெய்து தெரிவிக்கக் கோருகிறேன். அப்போதுதான் நாம் கிணற்றில் விழ ஏற்பட்டாலும் கண் தெரிந்து விழலாம். தாங்கள் சொன்ன பிற்பாடு நான் மாறிப் பேசுவேனென்பதைத் தாங்கள் கனவிலும் நினைக்க வேண்டாம். இருந்தாலும் ஒரு தலை யோசிப்பதை விட இரண்டு தலைகள் சேர்ந்து யோசிப்பது நல்லது. ஆகையால் தயவு செய்து சாவகாசமாய் எல்லா விவரங்களையும் தெரிவிக்கக் கோருகிறேன்.

கமலம்: லக்ஷ்மி, உன்னிடம் இவ்விஷயங்களைச் சொல்லப் பலமுறை முயன்றும் என் மனம் தத்தளிப்பில் இருந்தபடியால் ஏதும் தோன்றாமல் இதுகாறும் வெளியிடாமலே இருந்தேன். எவ்விஷயத்தை நான் வெளியிட அஞ்சுகிறேனோ அவ்விஷயத்தில் உன் அப்பாவுக்கு ஒரு பிடிவாதமான துவேஷம் இருப்பதால்தான் பயப்படுகிறேன். இல்லாவிட்டால் இப்போதுகூட நான் எவருக்கும் பயப்படவேண்டிய பிரமேயம் இல்லை. விவரமாய்ச் சொல்லுகிறேன்; கவனித்துக் கேள்.

நான் பிறந்த ஊர் ஸ்ரீரங்கம். எனக்கு 8-வயதாக இருந்தபோது அவ்வூருக்குப் பாலாமணி நாடகக் கம்பெனி வந்தது. ஒரு நாள் என் பெற்றோர்களுடன் நான் நாடகம் பார்க்கச் சென்றிருந்தேன். அன்று பாரிஜாத புஷ்பஹரணம் என்னும் நாடகம் வெகு விமரிசையாக நடந்தது. அந் நாடகத்தில் வந்து நடித்தவர்களெல்லாம் அழகிய விலையுயர்ந்த ஆடையாபரணாதிகள் அணிந்திருந்ததாலும் நாடக மேடையில் ஒவ்வொருவரும் ஆடிய நேர்மையாலும் அவர்கள் உண்மையாகவே சாதாரணமான பெண்களாக இருக்க முடியாதென்றும் கந்தர்வ ஸ்திரீகளென்றும் என் மனத்தில் பட்டது. மறுநாள் என் வயதுப் பெண்களுடன் சேர்ந்து கொண்டு அந் நடிகர்கள் இறங்கியிருக்கும் ஜாகைக்குப் போய் அவர்களைப் பார்த்துவிட்டு வருவதற்காக நான் சென்றேன்.

அங்கே சென்றதும் அந்த நாடகக் கம்பெனியின் தலைவியாகிய பாலாமணிக்கு உண்மையாகவே சிறுமிகளிடத்தில் அதிகப் பிரீதி உண்டாகையாலும், எங்களில் இரண்டொருவரைக் கூடுமானால் தன் கம்பெனியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற விருப்பம் இருந்ததாலும், கம்பெனியிலுள்ள நடிகர்களுக்குச் சமையல் செய்து போடும் பிராம்மணனிடம் சொல்லிப் பலகாரங்கள் கொண்டுவரச் செய்து எங்களுக்குக் கொடுக்கும்படி செய்தாள். நாங்கள் சாப்பிட்ட பின் உட்காரச் சொல்லி எங்களெல்லோரையும் ஒவ்வொருவராகப் பாடச் சொன்னாள்.

அவள் கோரியபடியே நாங்கள் பாடினோம். நாங்கள் இஷ்டப்பட்டால் என்னையும் லீலா என்ற பெண்ணையும் தன் கம்பெனியில் சேர்த்துக்கொள்வதாயும், நித்தியம் பலகாரங்களுடன் சாப்பாடுபோட்டு மாதம் 20 ரூபா சம்பளம் கொடுப்பதாகவும் சொன்னாள். பிராம்மண குலத்திற் பிறந்து நாடகக் கம்பெனியில் எப்படிச் சேர்வதென்று

கேட்டோம். அப்போது அங்குள்ள பெண்களில் சிலரைக் காட்டி அவர்கள் எல்லாரும் பிராம்மணப் பெண்கள் தாமென்றும் கோதை என்னும் பிராம்மணப் பெண் மாதம் ஒன்றுக்கு ரூபா 150 சம்பளம் பெறுவதாயும் சொன்னாள். நாங்கள் ஒன்றும் பதில் சொல்லாமல் ஓடி வந்துவிட்டோம்.

அதற்கு ஒரு வாரத்திற்குப் பின் மார்கழிமீ வைகுண்ட ஏகாதசியின் காலத்தில் வழக்கமாக மாமூலாய் வரும் வாந்தி பேதியால் காலையில் என் தாயாரும் மத்தியான்னம் என் தகப்பனாரும் இறந்தனர். தாய் தகப்பனை ஒரே நாளில் இழந்துவிட்டவளாகிய எனக்கு ஊரிலுள்ளோர் ஆதரவு சொல்லி, என் துக்கத்தைத் தீர்ப்பதற்குப் பதிலாக, நான் பிறந்த கெட்ட காலத்தால்தான் என் பெற்றோர்களை விழுங்கிவிட்டேனென்றும், நான் மகா கொடியவளென்றும், என் முகத்தில் விழித்தால்கூட எட்டு நாட்களுக்குச் சாப்பாடு அகப்படாதென்றும் வருவார் போவாரெல்லாம் கன்னத்தில் இடித்து இடித்துத் திட்டினார்கள். எனக்கோ அங்கே நெருங்கிய பந்துக்கள் யாரும் இல்லை. சாப்பிட்டாயா என்று கேட்பதற்குக்கூடத் திக்கில்லை. அவ்வளவு ஸ்திதியில் நான் இருந்தபோது பாலாமணியம்மாள் அழைத்துவரச் சொன்னதாக ஒருவர் வந்து கூப்பிட்டார். நான் வர முன்பின் யோசித்ததைக் கண்டு பலவிதமான யுக்தி வார்த்தைகளால் என்னை மயக்கி அழைத்துச் சென்றார்.

என்னைக் கண்டதும் பாலாமணியம்மாள் அதிக வருத்தப்பட்டுத் தேறுதல் சொல்லி, சாப்பாடு வைக்கும்படி ஏற்பாடு செய்தாள். பின் உயர்ந்த கொறனாட்டுச் சிற்றாடையும் ரவிக்கையும் கொடுத்து அணிந்துகொள்ளச் சொன்னாள். நானும் உடுத்துகொண்டேன். எப்போது அவர்கள் உடையை நான் உடுத்துக்கொண்டேனோ அது முதல் நான் அவர்களோடு சேர்ந்தவள் என்பதில் தடையென்ன?

எனக்கு முன்னுலேயே லீலாவதியையும் கொண்டு வந்து வைத்திருந்தார்கள், அது வரையில் சாப்பிட்டாயா இல்லையா என்று கூடக் கேட்கத் தவறிய தாரபந்துக்கள் அப்போது தடியெடுத்துக் கொண்டு பாலாமணியம்மாளிடம் சண்டைபோடத் தயாராகி வந்தனர்.

கம்பெனி வாசலண்டை அவர்கள் கும்பலாக வந்ததும் தெருவிலிருந்த காவற்காரன் அம்மாள் உத்தரவில்லாமல் உள்ளே போகக்கூடாதென்று சொன்னுன். அவர்கள் சற்று உரத்த சத்தமாய்க் கூச்சல் போடவே, பாலாமணியம்மாள் முற்றத்தில் போய் நின்று என்ன சமாசாரமென்று கேட்டாள். அவர்கள் எங்களை விட்டுவிட வேண்டுமென, அதற்குச் சட்டப்படி மாஜிஸ்டிரேட்டாரிடமிருந்து உத்தரவு வாங்கி வந்தால் மட்டும் விடுவதாய்ச் சொல்லி, வீண் கூச்சல் போட்டால் கழுத்தைப் பிடித்துத் தள்ளும்படியும் காவல்காரனுக்கு உத்தர விட்டுவிட்டு ராணியைப் போல் உள்ளே சென்றுவிட்டாள்.

பின்னும் அவர்கள் கூப்பாடு போட்டபோது காவற்காரன் உள்ளிருந்த நாலைந்து வேலைக்காரர்களை அழைத்துக் கொண்டு வந்து எல்லோரையும் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டான். அன்றிரவே எங்கள் இருவரையும் தகுந்த பந்தோபஸ்துடன் சென்னைக்கு அனுப்பிவிட்டார்கள். மறுநாள் போலீஸார் வந்து அங்கே பார்த்தபோது நாங்கள் இல்லாததாலும் அவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு எங்களை அயல் ஊர்களில் தேட எவரும் இல்லாததாலும் சும்மா இருந்துவிட்டார்கள். அதுமுதல் 4-வருஷ காலம் நாங்கள் அக்கம்பெனியிலேயே குதூகலமாய் நடித்து வந்தோம். நான்காவது வருஷம் சென்னையில் ஆடி வரும்போது அகோரப் புயல் காற்றும் மழையும் அடித்து நாடகக் கொட்டகை இருந்த இடமே தெரியாமல் போய்விடவே கம்பெனிக்குப் பெருத்த நஷ்டம் உண்டாயிற்று. அப்போது கம்பெனி கலைந்துவிட்டது.

அதுவரையில் எனக்குச் சம்பளமாகக் கிடைத்த சுமார் 1500 ரூபாய்களையும் அந்த அம்மாள் எனக்குச் செய்து போட்ட சுமார் 1000 ரூபாய் பெறுமான நகைகளையும் வைத்துக்கொண்டு திருவல்லிக்கேணியில் இருந்த என் அத்தையம்மாள் வீட்டில் நான் இரண்டு மாதங்கள் வசித்தேன். அப்போதுதான் உன் தகப்பனாரான ராகவர் என்னைக் கண்டதும் நான் நாடகாலங்கார சோபிதையாகையால் என் அழகில் ஈடுபட்டு என்னைக் கல்யாணம் செய்து கொடுக்கும்படி என் அத்தையிடம் கேட்டார். எனக்குப் புத்தி அறியும் சமயம் வந்துவிட்டதாலும் இனி நாடகக் கம்பெனியில் இருக்கச் சம்மதம் இல்லாமையாலும் இயற்கையாகவே உன் தகப்பனாரைக் கண்டதும் அவர் எனக்குத் தகுந்த நாதனாவாரென்று என் மனமானது அவரை நாடிச் சென்றதாலும் கல்யாணத்திற்குச் சம்மதித்தேன்.

கல்யாணமும் நடந்துவிட்டது. கல்யாணமான ஆறு மாதங்களுக்குப் பின் நான் புஷ்பவதியானேன். அப்பால் சோபன முகூர்த்தம் நடந்தது. சோபன முகூர்த்தமான மூன்று மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் நாடகம் பார்க்க அழைத்துப் போகும்படி உன் தகப்பனாரிடம் நான் கேட்டேன். அப்போது உலகத்தில் அவர் நாடகத்தையே அதிகமாய் வெறுப்பதாயும், அதிலும் நடிகர்களை இன்னும் அதிகமாய் வெறுப்பதாயும் பெண் நடிகர்களைக் காணக்கூடச் சகிக்க மாட்டாரென்றும், அதிலும் தாசிகளல்லாத வேறு குலத்து மாதர் நடிகர்களாக இருப்பதைக் கண்டுவிட்டால் அவர்களைவிட உலகத்தில் அவர் வெறுக்கக்கூடிய வஸ்து வேறொன்று இல்லையென்றும், ஆகையால் நாடகப் பேச்சே எடுக்கக் கூடாதென்றும் அவ்வளவு கடூரமாய்ச் சொன்னார். அன்றே நான் நாடகத்திற் சேர்ந்திருந்தவிஷயம் அவருக்குத் தெரிந்தால் என்னை வீட்டை விட்டு ஓட்டிவிடுவாரோ என்னவோ என்னும் பயம் என் மனத்தில் குடிகொள்ள

ஆரம்பித்தது. நான் நாடகத்தில் சேர்ந்திருந்த விஷயத்தை அவருக்குத் தெரிவித்தால் என்ன அனர்த்தம் விளையுமோ வென்று பயந்து இதுவரையில் சொல்லாமலே இருந்து விட்டேன். சுமார் மூன்று மாதங்களுக்கு முன் லீலாவதி சென்னைக்கு வந்தவள் என்னைப் பார்க்க விரும்புவதாக நம்மை இப்போது ஹிம்சிக்கும் சனியனிடம் சொல்லி யனுப்பினள். நாடக பாத்திரங்களில் லீலாவதி அதிகப் பேர் பெற்றவளானதுபற்றி அவள் இங்கே வருவதை உன் தகப்பனர் பார்த்தால் அதிலிருந்து நானும் அவளும் முன் நாடகத்தில் சேர்ந்திருந்த விஷயம் எங்கே உன் தகப்பனர் காதுக்கு எட்டிவிடுகிறதோ என்று பயந்து, இந்தச் சனி யனிடம் உண்மையைக் கூறி லீலாவதி என்னைப் பார்க்க விரும்பும் காரணம் என்னவென்று கேட்டு வரச் சொன்னேன்.

அவர் மறுநாள் வந்து லீலாவதி இப்போது கஷ்ட தசையில் இருப்பதால் ஆயிரம் ரூபாய் கடன் வேண்டு மென்று கேட்கிருளென்றும் இல்லாவிட்டால் பழைய இஷ்டத்தை உத்தேசித்து ஒருமாத காலமாவது தன்னை நமது வீட்டில் வைத்திருக்க வேண்டுமென்று அவள் சொன்னதாயும் சொன்னர். அப்போது ருக்மிணி பாங்கியில் பண நெருக்கடி அதிகமாக இருந்ததால் உன் தகப்பனர் நமது வீட்டுச் செலவையே வெகுவாகச் சுருக்கி வந்தபோது என்னல் தொகை கொடுக்க முடியாதென்றும் அவள் இங்கே வந்திருக்கவும் சாத்தியப் படாதென்றும் சொல்லி யனுப்பினேன். அவர் மறுபடியும் அன்று சாயங்காலமே வந்து லீலாவதியே உன் தகப்பனரிடம் நேரில் வந்து பழைய இஷ்டத்தைக் கவனியாமல் நான் இப்படிச் சொல்வதாகச் சொல்லப் போகிருளென்றும், ரூபாய்கள் கொடுத்துத் தொலைப்பதே சிலாக்கியமென்றும் சொன்னர்.

என்னிடம் ரூபாய்கள் இல்லையென்று சொன்னேன்.

எனக்காக வேண்டுமானால் அவர் ரூபாய்கள் கொடுப்பதாயும் சாவகாசமாய் என் கையில் எப்போது ரூபாய்கள் வருமோ அப்போது கொடுத்தால் போதுமென்றும் ஞாபகார்த்தம் ஒரு ரசீது எழுதிக் கொடுக்கும்படியும் சொன்னார். நான் சம்மதிக்கவே ஒரு காகிதத்தில் ஏதோ எழுதி ஒரு தபால் முத்திரையின் பேரில் கையெழுத்துப் போடச் சொன்னார். நானும் சரியென்று போட்டுவிட்டேன். மறுநாள் வந்து ரூபாய்கள் லீலாவதிக்குக் கொடுத்து விட்டதாகவும் இனி லீலாவதியின் தொந்தரவு இருக்காதென்றும் சொன்னார். அப்பால் ஒரு வாரம் பொறுத்து வந்து நான் எழுதிக் கொடுத்த புரோநோட்டை அவர் இரும்புப் பெட்டியில் வைத்திருந்ததாயும் அதை அவர் மகன் அவருக்குத் தெரியாமல் ஒரு மார்வாடிக்கு மாற்றி விட்டதாயும் ரூபா 1000 என்பதில் எப்படியோ ஒரு சுன்னம் அதிகமாய் விழுந்துவிடவே ரூபாய் பதினாயிரத்திற்குத் தன் குமாரன் மார்வாடிக்குப் புரோநோட்டை மாற்றி விட்டதாயும் தனக்குச் சேரவேண்டிய தொகை ஆயிரந்தான் என்றும், மார்வாடி கேட்கும் காலத்தில் தன்னைக் கேட்டால் தான் ஒன்பதாயிரம் ரூபாயைக் கொடுத்து விடுவதாயும் சொன்னார். ஒன்றும் அறியாத பெண் பிள்ளையாகிய என்னை இப்படி ஏமாற்றலாமாவென்று கேட்டேன்.

தனக்குத் தெரியாமல் எப்படியோ ஒரு சுன்னம் அதிகமாய் விழுந்துவிட்டதென்றும் தாம் வேண்டுமென்று செய்யவில்லையென்றும் 100 சத்தியங்கள் செய்தார். அதற்குப் பின் 15 தினங்கள் பொறுத்து மார்வாடி பத்திரத்தை ராஜேந்திரன் பிள்ளையாகிய ஸ்ரீனிவாசனுக்கு மாற்றி விட்டதாகவும் ஸ்ரீனிவாசன் தனக்கு லக்ஷ்மியைக் கல்யாணம் செய்து கொடுத்தால்தான் அப்பத்திரத்தைத் திருப்பிக் கொடுப்பதாயும் இல்லாவிட்டால் சட்டப்படி கோர்ட்டில் தாக்கல் செய்வதாய்ச் சொல்வதாகவும், ராஜேந்

திரனும் ராகவனும் அதிக இஷ்டர்களாதலாலும் பாகஸ்தர் களாதலாலும் அவர்கள் பிள்ளையாகிய நீயும் ஸ்ரீனிவாசனும் கல்யாணம் செய்துகொள்வதே சிலாக்கியமென்றும் சொன்னார்.

நீ ரங்கநாத்தைத் தவிர வேறு எவரையும் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதியா யென்பதை நன்கு உணர்ந்த நான் அது சரிப்படவே சரிப்படாது என்றேன். அப்போது தான் அவன், அப்படி லக்ஷ்மி-கல்யாணம் செய்துகொள்ள இஷ்டப்படா விட்டால் நான் அவமானமடையவும், புருஷ னுடைய கோபத்திற்குப் பாத்திரமாகவும் நேரிடும் என்று சொன்னான். அதைக் கேட்டுக்கொண் டிருந்த நீ என் விசனத்தை மாற்றுவதற்காகச் சம்மதித்தாய். என்னிடம் சம்மதித்து விட்டு ரங்கநாத்தையும் பார்த்து இனிக் கல் யாண ஆசை வைப்பது கூடாதென்றும் சொல்லிவிட்டாய்.

அது முதல் அவரும் சுயபுத்தி மாறித் திரிகிறார். நீயும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் இருக்கிறாய். அம் மட்டோ! சென்ற வெள்ளிக்கிழமை இரவு அந்தச் சனியனும் அவன் மகனும், உன் தகப்பனார் ஹரிகதை காலட்சேபத் திற்குச் சென்ற பின் சுமார் 10-மணிக்கு என்னிடம் பேச வந்தபோது உன் தகப்பனாரவர்கள் ஒரு வேளை கதை முடி யும் வரையில் இராமல் முன்கூட்டி ஒரு சமயம் எழுந்து வந்துவிட்டால் அவர் வரவைப் பார்த்திருந்து தெரிவிக்கும் படி சொல்லி உன்னை அனுப்பிவிட்டபின் என்ன சமாசாரம் என்று கேட்டேன். ஸ்ரீனிவாசன் கல்யாணத்தைப் பற்றி அவசரப்படுவதாயும் கட்டாயம் வைகாசி மாதத்தில் முகூர்த்தம் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் சொன்னார். நான் ஆட்சேபிக்கவே அவர் பேச்சுகளால் மூர்ச்சித்துக் கீழே விழுந்துவிட்டேன். அப்போது மணி பத்தே தகால். பத்தே முக்கால் மணிக்கு என் முகத்தில் தண்ணீர் அடித்ததில் கண்களைத் திறந்து பார்த்தேன்.

அரைமணி நேரமாக என்னை எழுப்பியும் நான் எழுந்திராதது கண்டு, தம் மகனைப் பின் வாசல் வழியாய் டாக்டரை அழைத்துவர அனுப்பியிருப்பதாகச் சொன்னார். அவருக்கு ஒரு நமஸ்காரம் செய்து ஜல்தியாய்ப் போய் டாக்டரை வேண்டாமென்று சொல்லச் சொன்னதோடு சீக்காயிருந்தது நான் அல்லவென்று சொல்லும்படியும் சொல்லியனுப்பினேன். போகும்போது தான் சொன்னதை மறவாமல் வைகாசி மாதத்தில் முகூர்த்தம் வைக்கவேண்டும் என்றும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யாவிட்டால் முன் சொன்ன பிரகாரம் நடத்துவதாயும் வற்புறுத்திக் கூறிவிட்டுச் சென்றார். இதுதான் உண்மையான சங்கதி. எனக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவும் உனக்கு இப்போது தெரியும். இனி என்ன செய்வதென்று தெரியாததால்தான் விசனப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

லக்ஷ்மி: அம்மா, உரலில் தலையை வைத்து விட்டு உலக்கை இடிக்குப் பயந்தால் ஆகுமா? இனிச் சிந்திப்பதில் காரியமில்லை. நமது மானம் தக்க வேண்டுமானால் விவாகம் செய்தே தீரவேண்டும். ஜகத்ரக்ஷகன்பேரில் பாரம் போட்டு ஏற்பாடு செய்யுங்கள். கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் விட்ட வழி விடட்டும்.

கமலம்: லக்ஷ்மி, ரங்கநாத்தைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குத் துக்கம் மேலிடுகிறது. நீ என் எதிரில் இவ்வளவு பிரியமாய்ப் பேசினாலும் உனக்கு இவ்விஷயத்தில் எவ்வளவு வருத்தம் இருக்கிறதென்று எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனாலும் வரும் விதி வழித் தங்காது. நீ சொன்ன பிரகாரம் இவ்விஷயத்தைப்பற்றி உன் தகப்பனாரிடம் பேசுகிறேன்.

இப்படிச் சொல்லி அன்றிரவு ராகவன் படுத்துக்கொண்டதும், கமலம் அவர் கால்களைப் பிடித்தபடியே பின் வருமாறு சொன்னாள்.

கமலம்: நாதா! நமது லக்ஷ்மிக்கு இப்பொழுது வயது 13 ஆகிறது. இனிக் காலஹரணம் செய்யாமல் விவாகம் முடிக்க வேண்டும். தங்களுக்குத் தெரியாத யோசனையல்ல; நான் சொல்ல வேண்டியதைச் சொன்னேன்.

ராகவன்: பெண்ணே! நீ சொல்வது சரியே. வைகாசி மீ விவாகம் முடித்துவிட வேண்டும். மாப்பிள்ளையைப் பற்றித்தான் யோசிக்கிறேன்.

கமலம்: என்ன யோசிக்கிறீர்கள்?

ராகவன்: முன் ரங்கநாத்துக்கே லட்சுமியைக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்திருந்தேன். இப்போது ரங்கநாத் நடந்துகொள்ளும் மாதிரியிலிருந்து அவருக்குக் கொடுக்கக் கொஞ்சம் யோசனையாக இருக்கிறது. அவரை விட வேறு தக்க வரனையும் காணோம்.

கமலம்: ராஜேந்திரன் தங்களுக்கு ஆப்த நண்பராக இருப்பதோடு பாகஸ்தராயும் இருக்கிறார். அவருக்கும் ஸ்ரீனிவாசன் ஒரே பிள்ளை. நமக்கும் லக்ஷ்மி ஒரே பெண். அவ்விருவருக்கும் விவாகம் செய்தாலென்ன? தங்கள் அபிப்பிராயம் எப்படியோ?

ராகவன்: ரங்கநாத் ஏதோ சில நாட்களாய் ஒரு மாதிரியாக இருக்கிறார். அதற்குத் தக்க காரணம் எனக்குத் தெரியவில்லை. ரங்கநாத்தும் லக்ஷ்மியும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமல் இருந்தவர்கள் இப்போது மூன்று மாத காலமாய் ஒருவர் இருக்கும் திக்கைக்கூட மற்றவர் நோக்காமல் இருக்குங் காரணம் என்ன? உனக்குத் தெரியுமா? ஸ்ரீனிவாசன் எப்போதும் நம்மை இழிவாய்ப் பேசுகிறான். மேலும் ராஜேந்திரன் இதைப்பற்றி ஒன்றுமே சொல்ல வில்லையே? நாமாக எப்படிப் பேசுகிறது?

கமலம்: ஸ்ரீனிவாசன் துஷ்டன் என்பதைப்பற்றி யோசித்துத் தங்களிடம் எப்படிக் கேட்பதென்று யோசித்துக்கொண் டிருப்பார். அவருக்கும் உங்களுக்கும் எந்த

விதமான வித்தியாசமும் கிடையாதாதலால் நீங்களாகப் பேசுங்கள்பார்ப்போம்.

ராகவாசு அதற்குச் சம்மதித்து மறுநாள் காலையில் ராஜேந்திரனைக் கண்டு அவ்விஷயமாகப் பேசினார். அவர் தமக்கு லக்ஷ்மியை ரங்கநாத்துக்குக் கொடுக்கவே சம்மதமென்றும், லக்ஷ்மி ஸ்ரீனிவாசனை முழு மனத்துடன் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதித்தால் தமக்கு அத்தியந்த சந்தோஷமாக இருக்குமென்றும், லக்ஷ்மியின் வார்த்தையைக் கேட்டு ஸ்ரீனிவாசன் நல்லவனாகக் கூடுமென்றும் வைகாசி மாதத்தில் விவாகம் நடத்துவதில் யாதொரு ஆட்சேபமும் இல்லையென்றும் சொன்னார். இவ்விஷயம் மறுநாள் பகிரங்கமாயிற்று.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் குறிப்பிடக்கூடிய விஷயம் ஒன்று உண்டு. அதாவது எந்தச் சங்கதியையும் ரகசியத்தையும் நமது பெண்மணிகள் தம் கணவருக்கு...அவர் அறியாதபடி மறைத்து வைக்கக் கூடாதென்பதுதான். நமது கமலம்மாள் ஆரம்பத்திலேயே தன் நாடக ரகசியத்தை மறைக்காமல் வெளியிட்டிருப்பாளாயின்-அவள் விவாகமான பின்பே புஷ்பவதியாயினமையின்-ராகவன் அவளை வெறுத்து ஒதுக்கி இருக்கமாட்டார். சிறிது வருத்தத்தோடு அவ்விஷயம் அடக்கப்பட்டுப் போயிருக்கும். அப்படி ராகவன் அந்த ரகசியத்தை அறிந்திருக்கும் பக்ஷத்தில் கமலம்மாள் லீலாவதிக்காவது அவளது தூதாகிய ஐயங்காருக்காவது அஞ்சி நடக்க வேண்டி இருந்திராது. அவர்களைத் தன் கணவனைக்கொண்டே அடக்கி யிருக்கலாம். இப்போது எது ஒன்றையும் செய்வதற்கு ஏதுவில்லாமற் போய் விட்டது.

தான் நாடகத்தில் இருந்ததைத் தன் கணவனுக்குத் தெரிவிக்க அஞ்சிய கமலம்மாள், இப்போது அதனிலும் பெரிதாகிய பிராமிசரி நோட் பதினாயிரம் ரூபாய்க்கு எழுதித்

தந்த குற்றத்தையும் செய்தவளானுள். தான் சிறுபோது முதல் நேசித்த ரங்கநாத்திடம், 'உன்னை விவாகம் செய்து கொள்ள முடியாது' என்று லக்ஷ்மி தெரிவிக்கும்படியான ஹேதுவையும் தேடிவிட்டு, அந்த விஷயத்தை ரங்கநாத்; தாமாகவே மாறி விலகியதாகத் தன் பர்த்தா நம்பும்படியும் செய்கிருள். ஐயோ! என்ன அவிவேகம் இது? இவ்வளவு பாடுகளுக்கும் ஆரம்பத்திலேயே தன் நாடக ரகசியத்தைத் தன் கணவனுக்குத் தெரிவித்திருந்தால் கணவனோடு சேர்ந்துகொண்டு நன்ருக எதிர்க்கலாமே. இந்த இடத்தில் இந்த விஷயத்தை நமது பெண்பாலார் நனகு சிந்திக்கக் கடவர்.

---

## 8. கெடுவான் கேடு நினைப்பான்

'தாம்தாம்முன் செய்தவினை. தாமே அநுபவிப்பார்
பூந்தா மறையோன் பொறிவழியே.'

ஸ்ரீனிவாசனுக்கும் லக்ஷ்மிக்கும் விவாகம் நிச்சயமாயிற்றென்ற விவரம் ஊரெல்லாம் பரவிவிட்டாலும் ரங்கநாத்துக்கு மட்டும் தெரியாது. ரங்கநாத் முன்போல் பிரதி சாயங்காலமும் வழக்கம்போல் தண்டையார்ப்பேட்டையிலுள்ள லீலாவதியின் வீட்டிற்கு இப்போது செல்வதில்லையாதலால், திருவல்லிக்கேணி பீச்சில் போட்டிருக்கும் ஒரு பெஞ்சியின்மீது உட்கார்ந்துகொண்டு ஆழ்ந்த யோசனையில் இருந்தார். அப்போது அங்கு உலாவ வந்த ஸ்ரீனிவாசன் ரங்கநாத்தைக் கண்டதும் அவரிடம் போய் நமஸ்காரம் செய்துவிட்டுப் பக்கத்தில் அமர்ந்தார்.

ஸ்ரீனிவாசன்: ஐயா! தங்கள் ஏகாந்தத்தைக் கலைத்துவிட்டதற்காக மன்னிக்கவேண்டும். ஏது? தாங்கள் அபூர்வமாகச் சமுத்திரக் கரைக்கு வந்தீர்கள்.

ரங்கநாத்: வேலை முடிந்ததும் நேரப் போக்குக்காகவும்

சிரம பரிகாரார்த்தமாயும் இங்கே சற்று நேரம் உட்கார்ந்திருக்கிறேன்; விசேஷம் ஒன்றுமில்லை.

ஸ்ரீனிவாசன்: தங்களுக்கு விசேஷ ஜோலிகள் ஒன்றும் இல்லாவிட்டால் தயவுசெய்து என்னுடன் கூட வாருங்கள். நேரம் எப்படிப் பறக்கிறதென்று பாருங்கள்.

ரங்கநாத்: எனக்கு வேலை ஒன்றுமில்லை. இருந்தாலும் சற்று நேரம் ஏகாந்தமாக இருப்பதே உசிதமென்று நினைக்கிறேன்.

ஸ்ரீனிவாசன்: ஐயா ரங்கநாத், தயவுசெய்து நான் சொல்வதைச் சற்றுக் கேளுங்கள். சென்ற சில நாட்களாய்த் தாங்கள் அதிக துக்கத்துடனேயே இருக்கிறீர்கள். இந்த வயதில் துக்கத்தைக் கொடுக்கக்கூடிய சில விஷயங்கள் நமது மனத்தில் ஏற்பட்டபோதிலும் அவைகளை நாம் கனவாக நினைத்து அப்போதே மறந்துவிட்டுப் பட்சிகளைப்போல் சந்தோஷமாய் ஓடி ஆடித் திரியவேண்டும். எழுந்திருங்கள்! இன்றுவது சந்தோஷமாய்ப் பொழுதுபோக்குவோம்.

ரங்கநாத்தைப் பலவந்தமாய்த் தமது வண்டியில் ஏற்றிச் சாயங்காலமானவுடன் எல்லோரும் சந்தித்தும் பந்தாடியும் பேசியும் வாசித்தும் இதர விளையாட்டுக்கள் ஆடியும் பொழுது போக்கும் இடமாகிய தமது கிளப்புக்கு அழைத்துப்போய், அங்கே பலவித விளையாட்டுக்களில் அமர்ந்திருந்த தமது நண்பர்கள் பலருக்கு ரங்கநாத்தை அறிமுகப்படுத்திச் சுமார் ஒரு மணி நேரம் பொழுது போக்கியபின் அவ்விடத்திலுள்ள பலகாரச் சாலைக்குச் சென்று வழக்கம்போல் இருவருக்கும் பலகாரங்கள் கொண்டுவரும்படி ஸ்ரீனிவாசன் ஒரு சீட்டு எழுதி அனுப்பினார்.

அங்குள்ள வேலைக்காரன் வேருக ஒரு மேஜை தயாரித்து, அதில் இரண்டு டம்ளர்களில் அவர்கள் இருவருக்கும்

வர்ணத்துடன் இருக்கும் பானமும் இரண்டு பெரிய தட்டு களில் பலவிதமான தின்பண்டங்களும் கொண்டுவந்து வைத்துவிட்டு ஸ்ரீனிவாசனிடம் வந்து சகலமும் தயாராக இருக்கின்றனவென்று சொன்னான். உடனே ஸ்ரீனிவாசன் ரங்கநாத்தை அழைத்துக்கொண்டு போய் அம்மேஜையில் உட்காரும்படி செய்து தாமும் உட்கார்ந்துகொண்டு முத லில் டம்ளரிலுள்ள பானத்தை எடுத்து ஸ்ரீனிவாசன் தம் கையில் வைத்துக்கொண்டு, "நண்பரவர்களே! தங்களுக்குத் தேகாரோக்கியமும் உத்ஸாகமும் உண்டாக வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்து இதோ பானம் செய்கிறேன்" என்றார்.

முன்பின் செத்த பிணமானாலல்லவா உடனே டம்ளரை எடுத்துக்கொண்டு ஸ்ரீனிவாசன் சொன்னதைப்போல் அவரும் ஸ்ரீனிவாசனுடைய தேகாரோக்கியத்திற்காகச் சாப்பிடுவதாகச் சொல்லிச் சாப்பிட வேண்டுமென்பது ரங்கநாத்துக்குத்தெரியும். அவருக்குப் பழக்கம்இல்லாததால் சும்மா இருந்தார். அப்போது ஸ்ரீனிவாசன் இப்படிச் சொல் லிச் சாப்பிட வேண்டுமென்று அவருக்குப் போதித்தார்.

ரங்கநாத் டம்ளரை எடுத்து வாயில் வைக்கப் போகும் சமயத்தில் டம்ளரிலுள்ள பானமானது ஒரு மாதிரி வாசனை யாக இருந்ததால் தமக்குப் பிடிக்கவில்லையென்று கீழே வைக்கப் போனார். ஸ்ரீனிவாசன் அப்படிச் செய்ய விடாமல், அதைச் சாப்பிட்டால்தான் அறிவை விளக்கி உத்ஸா கத்தை உண்டுபண்ணுமென்றும், தாம் சொல்லுகிறபடி அன்று மட்டுமாவது கட்டாயமாகக் கேட்க வேண்டுமென் றும் பலவந்தப்படுத்திக் கொஞ்சமாவது சாப்பிடச் சொன் னார். 'தொழுப் புகுந்த மாடு புழுக்கை போட்டுத்தானே தீர வேண்டும்' என்பதைப்போல் அவரும் கால்பாகம் குடித்து விட்டு டம்ளரைக் கீழே வைத்துவிட்டு, "வாந்தி வருவது போல் அருவருப்பாய் இருக்கிறது" என்றார்.

ஸ்ரீனிவாசன் உடனே, "தின்பண்டங்களைச் சாப்பிடுங்கள். அப்போது அருவருப்புப் போய்விடும்" என்று சொல்லித் தின்பண்டங்களில் சிலவற்றைச் சாப்பிடச் சொல்லியும், மறுபடியும் டம்ளரிலுள்ள பானத்தைக் குடிக்கச் சொல்லி, திரும்பவும் தின்பண்டங்களை உண்ணச் செய்தும் இப்படியாக மாறி மாறி டம்ளரிலுள்ள பானத்தையும் தட்டிலுள்ள பலகாரங்களையும் இருவருமாகச் சேர்ந்து சாப்பிட்டுத் தீர்த்தார்கள். அப்போது ரங்கநாத்துக்கு அதுவரையில்லாத மாதிரியாய் ஒருவித மயக்கமும் உத்ஸாகமும் ஏற்படுவதுபோல் இருந்தது. இருக்க இருக்க அவ்வுணர்ச்சி அதிகரித்தே வந்தது. விஸ்தரிப்பானேன்? ரங்கநாத்துக்குக் குடி மயக்கம் தலைக்கேறி இன்னதுதான் செய்கிறோமென்று தெரியாத விதமாய்ச் சுய புத்தி அவரைவிட்டுப் பறந்தோடிப் போய்விட்டது. அதற்குள்ளாக மணியும் சுமார் ஒன்பதாயிற்று. அங்கிருந்து வண்டி ஏறி இருவருமாக வீடுவந்து சேர்ந்தார்கள்.

ருக்மிணி பாங்கின் மத்தியிலும் அதற்கு இரு பக்கங்களிலும் உள்ள இரண்டு பங்களாக்களில் ஒரு பங்களாவில் ராகவனும் மற்றொரு பங்களாவில் ராஜேந்திரனும் வசித்து வருகிறார்களென்று நாம் முன் சொன்னதை வாசிப்போர் மறந்திருக்க மாட்டார்கள். அந்தப் பங்களாக்களுடன் சேராமல் சற்றுத் தூரத்திலிருக்கும் வெளி வீடு என்று சொல்லும் இடத்தின் மேல்மாடியில் ஸ்ரீனிவாசனுக்கு ஒரு பக்கமும் ரங்கநாத்துக்கு மற்றொரு பக்கமும் தனியாக ஜாகைகள் இருந்தன. அவர்கள் வீடு வந்து சேர்ந்தார்களென்று நாம் சொன்னதில் அவர்கள் ஜாகைக்குத்தான் வந்தார்களென்று நமது வாசகர்கள் மனத்தில் வைக்கவேண்டும்.

வண்டியிலிருந்து ரங்கநாத் இறங்கியதும் தமது அறைக்குப் போகச் சென்றார். ஸ்ரீனிவாசன் அவரைப் போகவிடாமல் தடுத்துத் தம் அறைக்கே அழைத்துப்

போய் அவரை உட்கார வைத்து, இருவருக்கும் சாப்பாடு கொண்டுவரச் செய்து சாப்பிட்டார்கள். பின் சிறிது நேரம் காகிதங்கள் ஆடலாமென்று சொன்னார். ரங்கநாத் தமக்குத் தூக்கம் வருவதாகச் சொல்லியும் விடாமல் சீட்டுக்கட்டை எடுத்துவந்து, “வேடிக்கையாக ஆடுவோம்” என்று முதலில் சொல்லி, பின் பந்தயம் வைத்து ஆடாவிட்டால் ஆட்டம் சுகப்படாதென்று சொல்லி, 10-ரூபாய் மேஜை வைத்தும், கொஞ்ச நேரம் போனதும், 50-ரூபாய் மேஜை என்றும், இன்னும் கொஞ்ச நேரம் போனதும் 100-ரூபாய் மேஜையென்றும், ஸ்ரீனிவாசனுக்கு எப்படியெல்லாம் இஷ்டமோ அப்படியெல்லாம் ஆடும்படி செய்து சுமார் ஒரு மணி நேரத்தில் ரங்கநாத் இருபதாயிரத்து ஐந்நூற்று முப்பத்தைந்து ரூபாய் தோற்றுவிட்டதாக ரங்கநாத்திடம் சொன்னார்.

அவருக்கு அதுவரையில் சுயபுத்தி இல்லாததாலும், அவர் வேறாகக் கணக்கு வைக்காததாலும் ஸ்ரீனிவாசன் சொன்னதை மறுக்க முடியாமற் போயிற்று. இருந்தாலும் சுமார் இருபது ஆட்டங்கள் தான் ஆடியிருக்கக் கூடுமென்றும் அதில் அவ்வளவு பெருந்தொகை எவ்வாறு நஷ்டமடைந்திருக்கக் கூடுமென்றும் கேட்டார்.

**ஸ்ரீனிவாசன் :** என்ன ரங்கநாத்! நீ மகா யோக்கியனென்று நினைத்தேன். கடைசியாகச் சீட்டாடித் தோற்றுவிட்டதால் அதை மறுதலிக்க இவ்வாறு பேசுகிறாய் போல் இருக்கிறது. இவ்வளவு யோக்கியதை உள்ளவனைத்தானா லக்ஷ்மி கல்யாணம் செய்துகொள்ள உத்தேசித்தாள்?

லக்ஷ்மியின் பேரை எடுத்த உடனே ரங்கநாத்துக்குக் கோபம் வந்துவிட்டது. சீட்டாடிக்கொண் டிருக்கும்போதே: “அநாவசியமாய் ஏன் ஒரு கௌரவமுள்ள பெண்ணின் பேரை மத்தியில் இழுக்கிறாய்?” என்றார்.

"ஓகோ! நான் லக்ஷ்மியின் பேரையே எடுக்கக் கூடாதா? நான் லக்ஷ்மியைக் கல்யாணம் செய்துகொள்ளும் போது முகத்தை எங்கே வைத்துக்கொள்வாய்!" என்றான் ஸ்ரீனிவாசன்.

"உன் முகத்துக்கு லக்ஷ்மி உன்னைக் கட்டிக்கொள்ளாமல் இருக்க மாட்டாள், நீயோ, நீ கெட்ட கேடோ, உனக்குக் கல்யாணமும் ஒரு கேடா?" என்றார் ரங்கநாத்.

அப்போது ஸ்ரீனிவாசன், "என் நண்பனே! முதலில் நீ தோற்ற தொகைக்குப் பிராமிசரி நோட்டாவது எழுதிக் கொடு; அல்லது இருபதாயிரத்து ஐந்நூற்று முப்பத்தைந்து ரூபாய்க்கும் ஒரு ஆட்டம் ஆடுவோம். இந்த ஆட்டத்தில் நீ ஜயித்து விட்டால் பாக்கியில்லாமல் போய் விடும்" என்றான்.

ரங்கநாத் முதலில் சம்மதிக்காவிட்டாலும் ஸ்ரீனிவாசன் காகிதக் கட்டை எடுத்துக் கலைத்து ரங்கநாத்தை வெட்டும்படி சொன்னான். ரங்கநாத் அப்போது, "இனி உன்னுடன் ஒரு ஆட்டம்கூட ஆட எனக்கு இஷ்டமில்லை. இருந்தாலும் கடைசித் தரமாக நான் ஒரு சீட்டு வெட்டி எடுக்கிறேன்; நீ ஒரு சீட்டை வெட்டி எடு. யார் சீட்டுப் பெரிய தொகை கொடுக்கிறதோ அவர்கள் ஜயித்ததாகக் கருதுவோம்" என்ற நிபந்தனையின்பேரில் வெட்டி எடுத்தார். ஆடுதன் ராஜா வந்தது. உடனே ஸ்ரீனிவாசன் வெட்டி எடுத்து, எடுக்கும்போதே சீட்டின் பின்பக்கத்தை மெதுவாகத் தூக்கிப் பார்த்து, அதை எடுக்காமல் அதற்கு அடுத்த சீட்டை எடுக்கப்போகும் சமயத்தில் ரங்கநாத், "நீ முதலில் எடுத்த சீட்டைத்தான் எடுக்கவேண்டும். அந்தப் பார்த்துக்கொண்டு வேறே எடுக்க உத்தேசித்திருக்கிறாய்" என்றார்.

உடனே ஸ்ரீனிவாசன், "நானென்ன திருடனா; அந்த மாதிரி யெல்லாம் செய்ய? திருட்டுக் குணமுடைய

உன்னுடன் ஆடினதாலல்லவா அப்படிச் சொன்னாய்'' என்றான்.

"ரங்கநாத், "பேஷ் பேஷ்! போதும்; அதே சீட்டை எடு'' என்றார். "இதோ பார், சீட்டெடுக்கிறேன்'' என்று வேறு சீட்டை எடுக்கப்போகும்போது ரங்கநாத், "முன் எடுத்த சீட்டையே எடுக்கவேண்டும். திருட்டுப் பதரே! என்னையா ஏமாற்ற யோசிக்கிறாய்? அதெல்லாம் என்னிடம் நடவாது'' என்றார்.

"என்னையா திருடன் என்கிறாய்? ஐந்து லட்சம் ரூபாய்கள் திருடியதால்தான் லக்ஷ்மி உன்னைக் கல் யாணம் செய்துகொள்ள மாட்டேனென்று சொல்லிவிட்டு என்னைக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதித்தாள்!'' என்றான்.

"அடே துஷ்டப் பேயே. இனி மட்டும் லக்ஷ்மியின் வார்த்தை உன் வாயில் வந்தால் பார், நீ படும்பாட்டை'' என்றார் ரங்கநாத்.

"என் மனைவியின் வார்த்தையை நான் எடுப்பதை நீ எப்படித். தடுக்கக்கூடும்'' என்றான் ஸ்ரீனிவாசன்.

"யார் லக்ஷ்மியா? உன்னையா கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாள்? மூதேவியாகிய உன் முகத்தில் விழித்தால்கூட மூன்று நாட்களுக்குச் சாப்பாடு அகப் படாதே? அப்பேர்ப்பட்ட உன்னையா லக்ஷ்மி கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாள்?'' என்றார் ரங்கநாத்.

"ஓகோ உனக்கு இன்னும் சமாசாரம் தெரியாதுபோல் இருக்கிறது. எல்லாம் பேசி முடிவாகிவிட்டது; அடுத்த மாதம் எங்கள் கல்யாணம; தீர்மானம் ஆகிவிட்டது. கல்யாணமான பின்னல்லவா தெரியப்போகிறது உனக்கு'' என்றான் ஸ்ரீனிவாசன்.

"லக்ஷ்மி உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள ஒரு நாளும் சம்மதியாள். அப்படியே நீ சொல்லுகிறபடி

இருந்தால் நீ அவளைக் கல்யாணம் செய்துகொள்ளுமுன் உன்னைக் கட்டாயமாய்க் கொன்றுவிடுகிறேன்!" என்றார் ரங்கநாத்.

"சீச்சீ! அற்பப் பதரே! நீயா என்னைக் கொல்லுபவன்? இன்று சாயங்காலம் சீமைச் சாராயம் குடித்ததில் உன் புத்தி சிதறியிருப்பதால் நீ சொன்னதற்கு மன்னித்தேன்?" என்றான் ஸ்ரீனிவாசன்.

"யார்? நானா சாராயம் குடித்தேன்" என்றதும், ரங்கநாத் பளீர் என்று ஸ்ரீனிவாசன் கன்னத்தில் ஓர் அறை அறைந்தார்.

ஸ்ரீனிவாசன் உண்மையாகவே கோழையாதலாலும், இன்னும் பல அறைகள் ரங்கநாத்திடம் பெற விரும்பாததாலும், ரங்கநாத் தன்னைவிட இரு மடங்கு பலவானென்று தெரியுமாதலாலும், "ரங்கநாத் உனக்கு இஷ்டமானபடி இன்னும் அடி" என்று சொன்னான். உடனே ரங்கநாத் மறுமொழி சொல்லாமல் தம் ஜாகைக்குச் சென்றார்.

இயற்கையாக மயக்கம் நேரிட்டதாலும் நேரமாகி விட்டதாலும் படுத்து உறங்கிவிட்டார். ரங்கநாத்தின் உடம்பானது உண்மையாகவே தூங்கிக்கொண்டிருந்தாலும் அவர் மனம் மட்டும் தூங்கவேயில்லை. ஸ்ரீனிவாசனுடைய அறைக்கு யாரோ ஒரு பெண் வந்ததாகவும், அச்சமயத்தில் யாரோ ஒரு புருஷன் வந்ததாகவும், ஸ்ரீனிவாசனுடன் அதிகக் கோபமாய்ப் பேசியதாகவும் இருவருக்கும் சண்டை உண்டானதாகவும், அந்த இடத்தில் யாரோ கொலையுண்டதாகவும் இன்னார்தான் கொன்றார்கள், இன்னார்தான் கொலையுண்டார்களென்று தெரியவில்லையென்றும், தாமும் அங்கே சென்றிருந்ததாகவும் கனாக்கண்டு திடுக்கிட்டு எழுந்தார்.

தாம் தம் படுக்கையில்தான் படுத்திருப்பதாகவும் கோரமான கனாக் கண்டதாகவும் எண்ணிப் படுக்கையிலேயே எழுந்து உட்கார்ந்ததும் தம் உடம்பெல்லாம் வேர்வை ஓடுவதைக் கண்டு, 'இவ்வளவு குளிர்ந்த நேரத்தில் நமக்கு இவ்வளவு வேர்வை வடியக் காரணம் என்ன? நாம் கண்ட கனாவின் பயனாய்த்தான் இருக்கவேண்டும்' என்று நினைத்துக்கொண்டு வேர்வையைத் துடைத்துக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் தம் படுக்கை அறையின் ஜன்னலின் வழியாய்த் தாழ்வாரத்தில் ஒரு பெண் நடப்பதுபோல் தெரிந்தது.

'என்ன! இன்று தோன்றுவதெல்லாம் விபரீதத் தோற்றங்களாக இருக்கின்றனவே! ஸ்ரீனிவாசன் நாம் சீமைச் சாராயம் குடித்தோமென்று சொன்னது உண்மைதான்போல் இருக்கிறதே. அந்த வெறியால்தான் நமது கண்களுக்கு இப்பேர்ப்பட்ட தோற்றங்கள் தெரிகின்றன' என்று நினைத்துக்கொண்டிருக்கும்போதே முன் அந்தப் பக்கம் சென்ற பெண் திரும்பவும் ஜன்னல் பக்கம் வந்ததாகத் தோன்றிற்று. உடனே கண்களை நன்றாகத் துடைத்துக்கொண்டு எழுந்து நின்று, 'பார்த்தது ஒரு பெண்தான்போல் இருக்கிறது. யார் என்று பார்ப்போம்?' என்று நினைத்துத் தட்டித் தடுமாறிக் கதவைத் திறந்து பார்த்தார்.

உண்மையாகவே ஒரு பெண் நிற்பதாகக் கண்டு ரங்கநாத், "அம்மா! இந்த நேரத்தில் நீ எங்கே வந்தாய்? யாரிடம் வந்தாய்?" என்று கேட்டார்.

அப்பெண், நித்திரை மயக்கத்தில் பேசுபவளைப்போல், "நானா? நானா? நானா? எங்கே வந்தேன்? எப்படி வந்தேன்?" என்றாள்.

ரங்கநாத் அவளுடைய குரலைக் கேட்டவுடனே மெதுவாகக் கையைப் பிடித்து அழைத்து வந்து அங்

இருந்த சோபாவில் உட்கார வைத்துவிட்டு மின்ஸார விளக்கை ஏற்ற, அங்கே வைத்திருந்த பித்தானை அமுக்கினார். அவருக்கு ஏற்பட்ட ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. தம்மைக் கல்யாணம் செய்துகொள்வதாய் முன்னால் ஒப்புக்கொண்டிருந்து பின்பு நிஷ்காரணமாய்த் தான் வேறொருவரைக் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாய்ச் சொன்ன, தன் பிராணனுக்குச் சமானமான லக்ஷ்மி தன்மேல் போர்த்துக்கொண்டிருந்த வெள்ளைப் பட்டுப் போர்வை பூராவும் ரத்தத்தில் முழுக்கி எடுத்ததுபோல் ரத்த மயமாயிருக்கவும், அவளுடைய இரு கைகளும் ரத்தமயமாக இருக்கவும் கண்டு திடுக்கிட்டார். இன்னதுதான் செய்வதென்று அவருக்குத் தோன்றவில்லை. சீமைச் சாராயக் குடி மயக்கம் எங்கோ பறந்துவிட்டது. அத்துடன் லக்ஷ்மி புத்தி சுவாதீனம் இல்லாமல் சித்தப் பிரமை அடைந்தவள்போல் இருந்தது அவருக்கு அதிக வருத்தத்தைக் கொடுத்தது. என்ன செய்வார் பாவம்!

சட்டென்று எழுந்ததும் ஜன்னலை இழுத்து மூடித் தாழ்ப்பாள் இட்டதோடு வெளியிலிருந்து யாராவது கூர்ந்து பார்த்தாலும் தெரியாதபடி ஜன்னலில் கட்டியிருக்கும் பட்டுப் படுதாக்களையும் தொங்க விட்டுவிட்டுக் கதவையும் தாழ்ப்பாள் இட்டுவிட்டு லக்ஷ்மியின் மேலிருந்த ரத்தம் தோய்ந்த போர்வையைப் பிடுங்கி அங்கிருந்த தமது அழுக்குத் துணிப் பெட்டியில் போட்டு அதை மூடிவிட்டு, அங்கிருந்த முகம் கழுவும் எனமல் பேசினில் தண்ணீர் கொண்டுவந்து லக்ஷ்மியின் கைகளைச் சரிவரக் கழுவச் சொல்லி, அவள் சித்தப்பிரமை கொண்டவள்போல் கழுவாமல் நின்றதால் தாமே கழுவிவிட்டு, "லக்ஷ்மி! லக்ஷ்மி!! என்னைப் பார். நான் யார் என்று உனக்குத் தெரியவில்லையா?" என்றார்.

லக்ஷ்மி: *நீங்களா? நீங்கள் யார்? எங்கேயோ எப்போதோ பார்த்த ஞாபகமாகவோ அல்லது தங்கள் குரலைக் கேட்ட ஞாபகமாகவோ இருக்கிறது; திட்டமாய்த் தெரியவில்லை. நீங்கள் யார்? நான் யார்? இது எந்த இடம்? நான் எங்கிருந்து எப்படி வந்தேன்? தெரிந்தால் சொல்லுங்களேன் பார்ப்போம். எனக்குத் திட்டமாய் ஒன்றுமே தெரியவில்லை.*

ரங்கநாத்: *லக்ஷ்மி! நீ இப்படிப் பேசுவதைக் கேட்க எனக்கு அதிக வருத்தமாக இருக்கிறது. சில நாட்களுக்கு முன் உன் அன்பனும் இஷ்டனும் பிரியனும் இருந்து பின் உன்னால் புறக்கணிக்கப்பட்ட ரங்கநாத் என்னும் துர்ப்பாக்கியன் நான். உன்னால் புறக்கணிக்கப்பட்ட உடனேயே எனது வாழ் நாட்கள் வீண் நாட்களாகவும் நீண்ட நாட்களாகவும் மாறிவிட்டன. நீயோ எனது உயிருக்கு உயிராயிருந்த, இல்லை, இல்லை, இருக்கும் லக்ஷ்மி! இது ருக்மிணி பாங்கியின் வெளி வீடாயும், என்னைப் போலொத்த வீணர் இருப்பிடமாயும் இருக்கும் எனது வாசஸ்தலம். நீ இங்கே எங்கிருந்து எப்படி வந்தாயென்று என்னால் சொல்ல முடியாது; உனக்கு இப்போது உடம்பு குணமில்லையென்றே நினைக்கிறேன்.*

லக்ஷ்மி: *ரங்கநாத்-லக்ஷ்மி-ருக்மிணி பாங்கி-வெளி வீடு- ஒன்றும் தெரியவில்லையே! என்னுடன் சேர்ந்தவர்கள் யாரும் இல்லையா? என் வீடு இதல்லவா? இல்லாவிட்டால் இங்கே நான் ஏன் வந்தேன் ?*

ரங்கநாத்: *அந்தரங்கமாக மனத்தில் இது உன் வீடென்று மதித்திருந்ததால்தான் இங்கேவந்தாய். நல்லது; நீ சற்று நேரம் தூங்கி எழுந்திருந்தால்தான் நல்லது. இச் சோபாவில் படுத்துக்கொள்; என்ன செய்வதென்று யோசித்து வருகிறேன்.*

லக்ஷ்மி: *தாங்கள் எங்கே போகிறீர்கள்? நீங்கள் சமீபத்தில் இருந்தால்தான் எனக்குப் பயம் இல்லாமல் இருக்*

கிறது. இல்லாவிட்டால் எப்படியோ இருக்கிறது. நீங்கள் இன்னாரென்று எனக்குத் தெரியாவிட்டாலும் எப்படியோ தங்களிடத்தில் எனக்கு அபாரமான நம்பிக்கை இருக்கிறது. இப்படிச் சமீபத்தில் உட்காருங்கள்.

உடனே ரங்கநாத் அவள் சமீபத்திற்சென்று அந்தச் சோபாவில் அவளைப் படுத்துக்கொள்ளும்படி செய்தார். படுத்த 5 நிமிஷத்திற்குள் அவள் கண் அயர்ந்து விட்டாள். ரங்கநாத் மணியைப் பார்த்தார். சரியாக இரவு பன்னிரண்டு மணி. மெதுவாக அங்கிருந்து எழுந்துபோய்ச் சத்தம் போடாதபடி கதவைத் திறந்து வெளியில் பூட்டுப் போட்டு விட்டு இறங்கிப்போய் ராகவன் வீட்டில் இருந்த தமக்கு நம்பிக்கையுள்ள ராஜம் என்னும் ஒரு வேலைக்காரியை இரண்டாம் பேருக்குத் தெரியாமல் எழுப்பி அவளிடம் நடந்த விஷயங்களைச் சுருக்கமாய்ச் சொல்லி ராகவன் மனைவியாகிய கமலம்மாளை யாருக்குந் தெரியாமல் எழுப்பும்படி சொன்னார்.

அவர் சொன்னபடியே அவள் தனக்குத் தேள்கொட்டி விட்டதென்று சொல்லி, கமலம்மாளை எழுப்பி அந்த அம்மாள் வெளியே வந்ததும் நடந்த சமாசாரங்களைச் சொல்லி ரங்கநாத்திடம் அழைத்து வந்துவிட்டாள். ரங்கநாத் கமலம்மாளையும் அவளுடைய அந்தரங்க வேலைக்காரியையும் அழைத்துப் போனார். மெதுவாகக் கதவைத் திறந்து மூவருமாகக் கதவைத் தாழிட்டுக்கொண்டு உள்ளே சென்றார்கள். கமலம்மாள், "லக்ஷ்மி! லக்ஷ்மி!!" என்று தட்டி எழுப்பினாள். லக்ஷ்மி கண்ணைத் திறந்து பார்த்ததும் தன்னை அழைத்துக்கொண் டிருந்த தன் தாயாரைப் பாராமலே ரங்கநாத் இருந்த திக்கைப் பார்த்து, "இவர்கள் யார்? எங்கே வந்தார்கள்? நான் யார்? நீங்கள் என் சமீபத்தில் இருப்பதாய்ச் சொன்னவர்கள் தூரத்தில் போய்விட்டீர்களே! அதேன்?" என்றாள்.

அப்போது அவள் லக்ஷ்மியைப் பார்த்து "என்ன லக்ஷ்மி, நான் உன் தாயார் கமலமல்லவா? நன்ருய்ப் பார், என்ன இவ்வாறு பேசுகிருய்? இதோ ராஜம், வந்திருக்கிருள்" என்ருள். அப்போது லக்ஷ்மி, "கமலம் - ராஜம் கமலம், ராஜம். இவர்கள் யார்? ஆம், ஆம் கமலம்-ராஜம்-எங்கோ பார்த்திருக்கிறேன். எனக்குத் தெரிந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும், ஏன்! எனக்கு தெரிந்தவர்கள் தானே. நீங்கள் சொன்னுல் எனக்குத் தெரிந்தவர்களென்று நம்பிக் கொள்கிறேன். ஏன் சொல்லுங்களேன்" என்று ரங்கநாத்திடம் கேட்டாள்.

ரங்கநாத்: லக்ஷ்மி! நான் சொல்வதைக் கேள். இதோ நிற்கும் கமலம்மாள்தான் உன் தாயார். அதோ நிற்கும் ராஜம் உன்னை வளர்த்த அம்மாள். அவர்களை உனக்கு நன்ருய்த் தெரியும். இப்போது அவர்களுடன் நீ சென்று படுத்து உறங்கிக் காலையில் எழுந்திருந்தால் உன் உடம்பு ஆரோக்கியமாக இருக்கும். என் சொல்லைத் தட்டாமல் நீ அவர்களுடன் போ.

அப்போது லக்ஷ்மி, "என்னை எங்கே போகச் சொல்லுகிறீர்கள்? அவர்களுடன் நான் ஏன் போகவேண்டும்?" என்று சொல்லிக்கொண்டே தன் கையைத் தன் முந்தாணியின்மேல் வைத்தாள். ரத்த ஈரம் கையில் படிந்ததும், "இது என்ன ஈரம்? சிவப்பாயிருக்கிறதே! ரத்தம்போல் அல்லவா இருக்கிறது? என் முந்தாணியில் இல்லை; இல்லை; மேலெல்லாம் ரத்தம். எப்படி வந்தது? ஓஹோ!! ஸ்ரீனிவாசன் ரத்தம்போல் இருக்கிறது. ஸ்ரீனிவாசன் ரத்தம் என் புடவையில் எப்படி வந்தது? நான் ஏன் ஸ்ரீனிவாசனிடம் சென்றேன்?" என்று சற்றுத் திகைத்து நின்று, "ஏன் போனேனென்று தெரியவில்லை. ஆமாம் ஸ்ரீனிவாசன் கொலை செய்யப்பட்டான். அவன் சாகவேண்டியது நியாயந்தான். அப்பேர்ப்பட்ட மிருகம் உலகத்தில் இருக்கத்தகாது. நான்

போனேன்; அவன் வந்தான், இவன் சண்டை போட்டான்; அவன் கொல்வே னென்ருன்; அவனைக் கொன்றது யார்? நான்தான் கொன்றேனே? இல்லாவிட்டால் என்மேல் ரத்தம் எப்படி வரும்? யார் கொன்றது என்று திட்டமாய்த் தெரியவில்லை. வைரங்கள் - ஆம், வைரங்களால்தான் சண்டை. வைரங்களைப்பற்றி என்ன சண்டை? அதுதான் தெரியவில்லை; நான்தான் கொன்றிருக்க வேண்டும்'' என்று இப்படியே ஒரு வார்த்தைக்கும் மற்ருெரு வார்த்தைக்கும் தகவலில்லாமல் பேசினுள்.

அப்போது ரங்கநாத் கமலம்மாளைப் பார்த்து, "அம்மா! ராஜத்தை அனுப்பி வேறே புடவையும் ரவிக்கையும் எடுத்து வரச்சொல்லி உடைமாற்றி லக்ஷ்மியை அழைத்துப்போய் உறங்கவைக்க வேண்டும். ஜல்தியாய் எடுத்து வரச் சொல்லுங்கள்'' என்ருர்.

அந்த அம்மாள் அப்படியே ஆக்ஞாபிக்க, ராஜம் சென்ருள். அப்போது லக்ஷ்மி, "நீங்கள் கூட வ்ராவிட்டால் யாராயிருந்தாலும் சரிதான்; நான் போகவே மாட்டேன். நீங்கள் சமீபத்தில் இல்லாவிட்டால் எனக்குப் பயமாகவே இருக்கிறது; எனக்கு என்ன பயம்? நான் யாருக்குப் பயப்பட வேண்டும்? ஆமாம்; என் உடம்பில் ரத்தம் இருந்ததல்லவா? நான்தானே ஸ்ரீனிவாசனைக் கொன்றேன்? அப்படித்தான் இருக்கும்; அதற்காகப் பயமா? இல்லை; இன்னும் 12 தரம் அவன் உயிருடன் வந்தாலும் கொல்வேன், ஏன் எனக்கு ஸ்ரீனிவாசன் பேரில் அவ்வளவு கோபம்? அதுதான் தெரியவில்லை, நான் யார்?'' என்ருள்.

ரங்கநாத்: உனக்கு என் வார்த்தையில் நம்பிக்கை இருப்பதாகச் சொல்லுகிருயல்லவா? நான் சொல்வதை உண்மையாக நம்பு. நீ எவரையும் கொலை செய்யவில்லை. ஓர் எறும்பைக்கூட இம்சிப்பதைப் பார்க்கச் சகிக்காத நீ ஸ்ரீனிவாசனை எப்படிக் கொன்றிருப்பாய்? ஸ்ரீனிவாசனு

வது வேறு யாராவது உன்னால் கொலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள். ஏதோ கனவாயிருக்கும்.

லக்ஷ்மி: நீங்கள் சொல்வதை நம்புகிறேன்; ஆனால் ஒரு சந்தேகம். என் புடவையில் ரத்தம் எப்படி வந்தது? நான் இங்கே எப்படி வந்தேன்? ஏன் வந்தேன்? நான் கொலை செய்யாவிட்டால் கொலை செய்தது யார்? அவன் யார்? இந்தச் சந்தேகங்களைத் தயவு செய்து தீருங்கள்.

அதற்குள்ளாக ராஜம் புடைவையும் ரவிக்கையும் கொண்டுவரவே அவர்களைப் பக்கத்தறைக்கு அழைத்துப் போய்ப் புடைவை மாற்றிவரச் சொல்லி லக்ஷ்மியைப் பார்த்துப் பின் வருமாறு சொன்னார்.

ரங்கநாத்: லக்ஷ்மீ, நீ தூங்கும்போது கனவுகண்டு எழுந்தாய். அதனால் மனத்திற்குள் என்ன என்ன எண்ணங்களோ ஓடுகின்றன. உன் தாயாகிய கமலம்மாளுடன் நீ போய்ப் படுத்து நித்திரை செய்து காலையில் எழுந்திருந்தால் உன் தேகம் ஆரோக்கியமாக இருக்கும். அப்போது நான் வந்து உன்னைப் பார்க்கிறேன்.

லக்ஷ்மி: உங்கள் வார்த்தையைத் தட்டாமல் போகிறேன்; காலையில் தாங்கள் வருவீர்களா? நிச்சயந்தானா? செல்கிறேன். பின் எனக்குப் பயமாக இராதே? இந்த ரத்தம் எப்படி வந்தது?

ரங்கநாத்: லக்ஷ்மீ, எத்தனை தரம் அதெல்லாம் கனவென்று உனக்குச் சொல்வது? உன் புடவையில் ரத்தம் எங்கே யிருக்கிறது? தடவிப் பார்; நீ போய்ப் படுத்துறங்கு.

என்று நல்ல வார்த்தை சொல்லி அவளை அவர்கள் வீடுவரையில் அழைத்துப் போய் விட்டு வந்தார். அப்பால் லக்ஷ்மி படுத்ததும் கண் அயர்ந்துவிட்டாள்.

ரங்கநாத்துக்கும் கமலம்மாளுக்கும் ராஜத்திற்கும் உறக்கம் பிடிக்கவில்லை. லக்ஷ்மி சொன்ன வார்த்தையில் எது உண்மை, எது பொய்யென்று தெரியவில்லை. மறுநாள்

தான் சகல காரியங்களும் வெளியாகுமென்று சூரியோதயத்தை எதிர்பார்த்திருந்தார்கள். ரங்கநாத் லக்ஷ்மியின் ரத்தத்தைக் கழுவிய கோப்பையிலுள்ள தண்ணீரைக் கொண்டுபோய்த் தூரத்தில் ஊற்றிவிட்டு அவள் ரவிக்கையையும் புடைவையையும் எடுத்துப் போர்வையுடன் எவருக்கும் தெரியாமல் ஒளித்துவைத்தார். அவர் சந்தேகங்களை நிவர்த்திப்பதற்காகவே சூரியன் வந்ததைப்போல் கீழ்த்திசையில் செவ்வானம் படர்ந்து சூரியோதயம் ஆயிற்று. வழக்கம் போல் காலை 8-மணியானதும், பலகாரங்களும் காபியும் எடுத்துக்கொண்டு ரங்கூனிலிருந்து ஸ்ரீனிவாசனுடன் வந்த வேதவல்லியம்மாள் ஸ்ரீனிவாசனுக்குப்பலகாரங்கள் கொடுப்பதற்காக வந்தாள். எப்போதும் மாமூலாகத் திறந்திருக்கும் கதவானது மூடித் தாழ்ப்பாள்போட்டிருந்தது. "அப்பா! சீனு! சீனு!" என்று முதலில் மெதுவாகவும், பின்னால் பெருங் குரலாயும் கூப்பிட்டுப் பார்த்தாள்! பதில் இல்லை. தன்னால் ஆனவரையில் கதவைத் தட்டினாள்; பேச்சில்லை. அங்கிருந்த வேலைக்காரனாகிய ராமசாமியை அழைத்துக் கூப்பிடச் சொன்னாள். அப்போதும் யாரும் பதில் சொல்லவில்லை. அதற்குள்ளாக அடுத்த பக்கத்திலிருந்து ரங்கநாத்தும் வரவே, அவரிடமும் சொல்லி அவரையும் கூப்பிடச் சொன்னாள். 'இரவு வெகு நேரம் வரையில் விழித்திருந்ததால் அயர்ந்து நித்திரை செய்கிறார்போல் இருக்கிறது' என்றான் ராமசாமி. இந்த ஜன்னல், அந்த ஜன்னல் எந்த ஜன்னலையும் திறக்க முடியவில்லை எல்லாம் உள்தாழ்ப்பாள்கள் போடப்பட்டிருந்தன. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றார்கள்.

அப்போது வேதவல்லியம்மாள் அந்த அறையைத் திறக்கும் இரண்டாவது சாவி தன்னிடம் இருப்பதாகச் சொல்லி அதை எடுத்து வந்து திறந்து பார்த்ததில் உடம்பெல்லாம் நூற்றுக் கணக்கான, குத்துகள் கூரிய ஆயுதங்

களால் குத்தப்பட்டு, அங்க அடையாளம் தெரியாமல் ஸ்ரீநி வாசன் கொலை செய்யப்பட்டுக் கீழே விழுந்து கிடந்தான். வேதவல்லியம்மாள் போட்ட கூச்சலிலிருந்து கும்பல் கூடி விட்டது. ராஜேந்திரனும் வந்து பார்த்ததும் மூர்ச்சை யாகிச் சாய்ந்தார். 'இதமுறல் எந்நாள் சேயால்? என்றைக் கும் துன்பமானல்'

---

## 9. போலீசாரின் ஆராய்ச்சி

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்ருகும்
ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்'

ஸ்ரீனிவாசன் கொலையுண்டான் என்ற கூக்குரல் பரவியவுடனே ராகவன் அங்கே ஓடி வந்தார். வேலைக்காரர் களும் உடன் தொடர்ந்தனர். 'உம்' என்பதற்குள் ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூட்டம் கூடும் சுபாவமுள்ள சென்னையில் உண்மையாக ஒருவர் கொலையுண்டு கிடப்ப தாகத் தெரிந்தால் கும்பல் கூடுவதற்குக் கேட்பானேன்! ராக வனும் ரங்கநாத்தும் சேர்ந்து, ராஜேந்திரனுக்குச் சைத்தி யோபசாரஞ் செய்து மூர்ச்சையிலிருந்து எழுப்பித் தேறு தல் சொன்னர்கள். தம் பத்தினியாகிய ருக்மிணி இறந்த பின், எவ்வளவு துஷ்டனுயிருந்தாலும் அவள் வயிற்றிற் பிறந்த ஸ்ரீனிவாசன் கொலையுண்டு இறந்தா னென்ருல் ராஜேந்திரன் விசனப்படுவது ஆச்சரிய மாகுமா! உயிரு டன் இருக்கும்போது, 'இவ்வளவு அபக் கியாதியைக் கொண்டுவந்து குடும்பத்தின் நற் பெயரைக் கெடுப்பதை விடக் குளம், கிணற்றில் விழுந்து சாகக் கூடாதா!' என்றும், ஊரில் வரும் வாந்தி பேதி, பிளேக் முதலிய வியாதிகள் உனக்கு வரக்கூடாதா! வென்றும் சொல்லித் திட்டினலும்,

அப்பேர்ப்பட்ட பிள்ளை காணேமென்ருவது இறந்தானென்ருவது கேள்விப்பட்டவுடனே, கல் நெஞ்சர்களும் கஷ்டப்படும்போது, இளகிய நெஞ்சுடைய ராஜேந்திரன் துக்க சாகரத்தில் மூழ்கக் கேட்பானேன்?

ராஜேந்திரன் மூர்ச்சையிலிருந்து தெளிந்து உட்கார்ந்தபோதிலும் துக்கத்தின் மிகுதியால் இன்னது தான் செய்ய வேண்டுமென்று யோசியாமல் செயலற்று ஒரு பக்கத்தில் உட்கார்ந்துவிட்டார். உடனே ராகவன் டெலிபோன் மூலமாகப் போலீஸ் கமிஷனருக்கு இக் கொலையைப்பற்றித் தெரிவித்தார். அவர் உடனே வருவதாக மறுமொழி சொன்னர். அப்பால் ராகவன் துப்பறியும் திருவல்லிக்கேணிக் கோவிந்தனை டெலிபோன் மூலமாகக் கூப்பிட்டார். அவர்வீட்டில் இல்லையென்றும் எங்கே சென்ருரென்று தெரியாதென்றும், தம்மை யர்ராவது நேரில் தேடி வந்தாலும், டெலிபோன் மூலமாகக் கேட்டாலும் இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்கு அவசர ஜோலியின்பேரில் வெளியே சென்றிருப்பதாலும், தாம் போகும் இடங்கள் தமக்கே தெரியாததாலும் தம்மைப் பார்க்க முடியாதென்று பதில் சொல்லும்படி எஜமான் உத்தரவென்று அவர் வேலைக்காரன் சொன்னன்.

அவர் இல்லாவிட்டாலும் அவருடன் துப்பறியும் வேலை செய்யும் சீனுவையாவது ராமுடுவையாவது அனுப்பும்படி ராகவன் மறுபடியும் டெலிபோன் மூலமாகச் சொன்னர். அவர்களும் கோவிந்தனுடன் போயிருபப தாகவும், ஆகையால் அவர்களையும் இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்காவது, அவர்கள் திரும்பி வரும் வரையிலாவது, பார்ப்பது சாத்தியமில்லையென்றும் வேலைக்காரன் பதில் சொன்னன். அதற்குள்ளாகப் போலீஸ் கமிஷனர் துரையவர்களும் இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடுவும், போலீஸ் கான்ஸ்டேபிள்களும் மோட்டார்களில் வந்து

சேர்ந்தார்கள். வந்தவுடன் கும்பலை யெல்லாம் தூரத்தில் போகும்படி செய்து, கொலை நடந்த இடத்தைப் பார்த்தார்கள். ரங்கநாத் கும்பலை அறைக்குள் போகாமல் தடுத்து வைத்திருந்தா ராதலால் போலீஸ் கமிஷனர் ஆராய்ச்சி செய்வதற்குக் கஷ்டமில்லாமல் இருந்தது. போலீஸ் கமிஷனரும் சுப்பராயலு நாயுடுவும் பிணம் விழுந்து கிடந்த மாதிரியையும், காயங்கள் இருந்த மாதிரியையும் கவனித்தார்கள். நூற்றுக் கணக்கான காயங்கள் விழ வேண்டிய காரணம் என்ன? கொலை செய்தவன் ஒரே குத்தாகக் குத்துவான் அல்லது 10 தரம் குத்தக் கூடும். உடம்பெல்லாம் இப்படி அநேக நூறு காயங்கள் விழக் காரணம் என்னவென்று யோசித்துப் பின்வரும் விஷயங்களைப் பதிவு செய்துகொண்டார்கள்.

1. பிரேதத்தின் உடம்பில் விழுந்திருக்கும் காயங்களில் இரண்டொரு காயங்களே கொல்வதற்குப் போதுமானவையாக இருந்தாலும், அநேக நூறு காயங்கள் உடம்பு ஆதியந்தமும் விழுந்திருக்கின்றன.

2. இவ்வளவு காயங்கள் விழுந்திருப்பதால் அவர் அணிந்திருக்கும் உடுப்புகளால் அல்லாமல் வேறு அடையாளங்களால் இன்னார்தான் கொலை உண்டார்களென்று பார்க்கச் சாத்தியமில்லை.

3. இதில் ஆச்சரியப்படக் கூடிய விஷயம் என்னவென்றால் உடம்பில் இவ்வளவு காயங்கள் இருந்தாலும் அணிந்திருக்கும் உடுப்புகளில் அக்காயங்கள் இல்லை யாதலால் கொன்றபின் உடுப்பு மாற்றப்பட்டிருக்கவேண்டும்.

4. ஆடு மாடுகள் வெட்டிய இடத்தைச் சுற்றிலும் எப்படி ரத்தப் பிரவாகமாக இருக்குமோ அப்படியே அங்கும் இருந்தது.

5. ரத்தம் தோய்ந்த கைகள் சுவரில் தொட்டிருந்ததிலிருந்து மிகவும் சிறிய கைகளாக இருக்குமென ஊகித்த

னர். மேலும் அந்த அடையாளம், கையைத் துடைத்ததால் ஏற்பட்ட தல்லவென்றும் தொட்டதால் ஏற்பட்டதென் றும் அதிலும் கையின் பெரு விரல் நன்ருகப் பதிந்திருந்த தால் அவ்வடையாளத்தைக் கொண்டு அந்த நபரைக் கண்டுபிடிக்கக் கூடுமென்றும் நினைத்துப் படம் பிடித்துக் கொண்டனர்.

6. அந்த அறையில், அவர் மேஜையின்பேரில் வைத் திருந்த ஸ்ரீனிவாசனின் டைரி புஸ்தகத்தையும் எடுத்து வைத்துக்கொண்டார்கள்.

அப்பால் விசாரணை ஆரம்பித்து, வேதவல்லியம்மாள் காபிபலகாரங்கள் கொண்டுவந்து வைத்துக் கூப்பிட்டது முதல், ராஜேந்திரன் மூர்ச்சித்த வரையில் நடந்த விஷயங் களைத் தெரிந்துகொண்டு, அங்கே காவலிருந்த ராமசாமியை அழைத்து இன்ஸ்பெக்டர் விசாரித்தார்.

**இன்ஸ்பெக்டர்:** அடே ராமசாமி! வா இப்படி; நான் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்ல வேண் டும். நேற்று இரவு நடந்த விஷயங்களை ஒன்றும் ஒளியாமற் சொல்லு.

**ராமசாமி:** நேற்று இரவு நான் கடைத் தெருவுக்குப் போனேன்; போனேனோ? கேளுங்கோ.

**இன்ஸ்பெக்டர்:** அடே பயலே! இங்கே நடந்த சங்கதி களைச் சொல்லென்ருல், நீ கடைத்தெருவிற்குப் போனதும் கள் குடித்ததும், ஜலபாதைக்குப்போனதும் யார் கேட் டார்கள்? கேட்டதற்குப் பதில் சொல்லு.

**ராமசாமி:** ஐயா! ராத்திரி நடந்த சங்கதிகளைச் சொல் லச் சொன்னீங்க; சொன்ன அடிக்க வர்ரீங்க- எனக்கு எங்கிருந்து சொல்லணுமுண்ணு தெரியல்லே; நீங்க கேளுங்க, நான் சொல்றேன்.

**இன்ஸ்பெக்டர்:** நேற்று எத்தனை மணி முதல் இங்கே நீ இருந்தாய்?

ராமசாமி: என்னுங்க! நான் இங்கே கால் வச்சேன்? டாண்ணு குண்டுபோட்டாங்க.

இன்ஸ்பெக்டர்: சரி, அப்போது ஸ்ரீனிவாசன் இங்கே இருந்தாரா? எப்போது வந்தார்? கூட யார் வந்தார்கள்?

ராமசாமி: நான் வந்தவுடன் குண்டு போட்டுதுங்களா? குண்டு போட்டதும் என் பொஞ்ஜாதி சாப்பாடு கொண்டு வந்தா? நான் சாப்பிட்டேன், சாப்பிட்டேனு? என்னுங்க?

இன்ஸ்பெக்டர்: என்னடா மடையனு யிருக்கிருய்! நான் ஒன்று கேட்டால் நீ ஒன்று சொல்லுகிருய்; விளையாடு கிருயா என்ன? அடே 648! இன்னொரு தரம் இவன் இப்படி உளறினுல் விடு ஒரு குத்து, அவன் தவடையில். தடிப் பயல்! கேட்ட கேள்விக்குப் பதில் சரியாகச் சொல்லவில்லை. ஸ்ரீனிவாசன் எப்போது வந்தார்?

ராமசாமி: அதுதானே நான் சொன்னேன். அதுக் குள்ளே கோபிச்சிக்கிட்டீங்க! பின்னே எப்படிச் சொல்றது? நான் படிச்சா இருக்கேன்? சரியாய்ச் சொல்ல; சரியாய்ச் சொல்லாட்டி என்னை அடிக்கச் சொல்றீங்க; சரியாய் எனக்கோ சொல்லத் தெரியாது. அதை இதைச் சொல்லி விட்டு, அவர் கிட்ட அடிபட்றதுக் குண்ணுலும் சும்மா இருந்துடறேன். நான் என்ன கைதியா? திருடினேனு? ஏன் என்னை அடிக்கணும்?

இன்ஸ்பெக்டர்: என்னடா, முழுமடையனுக இருக்கிருன்; சனியன்! கேட்ட கேள்விக்கு ஜவாப் சொல்லவில்லை. சரி யாகச் சொல்லென்ருல் இப்படிச் சொல்கிருன். கைதியா என்று விவகாரம் பேசுகிருன்; சரி; உன் இஷ்டப்படிதான் சொல்லித் தொலை.

ராமசாமி: சாப்பிட்டேனுங்களா? என்னுங்கோ? சாப் பிட்டவுடனே என் பொஞ்ஜாதி வெத்திலே பாக்குக் கொடுத்தா; நான் வெத்திலே பாக்குப் போட்டுக்கிட் டிருக் கும்போது.........

**இன்ஸ்பெக்டர்:** இந்தத் தடியனை என்ன செய்வது? அடே! இந்தப்பாட்டி கதைகளையெல்லாம் யாரடா உன்னைக் கேட்டார்கள்? எத்தனை மணிக்கு வந்தார் அதைச் சொல்லடா.

**ராமசாமி:** அதுதானே சொல்றேனுங்க. என் கிட்டக் கடியாரமா இருக்கு, எத்தனை மணிக்கு வந்தாங்கண்ணு சொல்றத்துக்கு? வெத்திலே பாக்குப் போட்டுக்கிட்டு இருக்கிறப்போ வண்டி வற சத்தம் கேட்டுதுங்க. சத்தம் கேட்டவுடனே நான் எழுந்திருச்சு நிண்ணேனுங்க; நிஜமாங்க! வண்டி வரும்போது எழுந்திருச்சுத்தான் நிண்ணேனுங்க. வண்டி வந்ததும் சின்ன எஜமானும் மேல்வீட்டு எஜமானும் வண்டியிலிருந்து எறங்கினுங்க; எறங்கினதும் மேல்வீட்டு எஜமான் அவுங்க வீட்டுக்குப் போனுங்க; அப்போ சின்ன எஜமான் அவுங்களைக் கையைப் பிடிச்சு உள்ளே இழுத்தாங்க; அவுங்க, வீட்டுக்குப் போகனு முண்ணுங்க. இவுங்க உடல்லே; உள்ளேயே கூட்டிக்கிட்டுப் போனுங்க.

**இன்ஸ்பெக்டர்:** மேல் வீட்டு எஜமான் என்பது யார்?

**ராமசாமி:** என்னுங்க, இது தெரியாதா? கொழுந்தைப் புள்ளே கேக்குறுப்புலே கேக்குறீங்களே? பால் குடிக்கிற கொழுந்தைகளுக்குக்கூடத் தெரியுமே. அதோ நிக்கிருர் பாருங்க, காஷ்கிப்பர் எஜமான்.

**இன்ஸ்பெக்டர்:** உள்ளே போய் இருவரும் என்ன செய்தார்கள்? எத்தனை மணிவரையில் இருந்தார்கள்?

**ராமசாமி:** எத்தனை மணி வரைக்கும் இருந்தாங்கண்ணு சொல்ல எங்கிட்டக் கடியாரமா இருக்குங்கோ. பத்துப் பன்னிரண்டு மணிவரைக்கும் இருந்திருப்பாங்க.

**இன்ஸ்பெக்டர்:** பத்துப் பன்னிரண்டென்றால் எப்படி? பத்திருக்குமா? பதினொன் றிருக்குமா? பன்னிரண் டிருக்குமா? என்ன செய்துகொண் டிருந்தார்கள்?

**ராமசாமி:** இப்போ ஞாபகத்துக்கு வந்துதுங்க; கூப் பாடு போட்டுக்கிட்டு எழுந்திருச்சுப் போனுங்களா? போன தும், பாக்குக் கடிக்கிற நேரத்துக்குள்ளே டாண்ணு பதி ஞெண்ணு அடிச்சுதுங்க.

**இன்ஸ்பெக்டர்:** இருவரும் அதுவரையில் என்ன செய்துகொண் டிருந்தார்கள்?

**ராமசாமி:** என்னுங்க, உங்களுக்குத் தெரியாதா? வயசுப் புள்ளேங்க, என்ன செய்யும்? இதெல்லாமா கேக்கிறதுங்க?

**இன்ஸ்பெக்டர்:** சொல்லுகிருயா? இல்லையா? அடே 648!

**ராமசாமி:** சொல்லிடறேனுங்க, அவரைக் கூப்பிடா தீங்க. காகிதம் ஆடிக்கிட்டு இருந்தாங்க.

**இன்ஸ்பெக்டர்:** கூப்பாடு போட்டு எழுந்திருச்சாங் கன்னு சொன்னியே! என்ன கூப்பாடு போட்டார்கள்; எதற்காக மனஸ்தாபம் வந்தது?

**ராமசாமி:** என்னுங்க; அவங்களுக்குள்ளே மனஸ்தாபம் வந்ததுண்ணு நான் சொன்னேன்? காகிதம் ஆடினுக் கூப்பாடு வராமே இருக்குமாங்க, எங்கேண்ணலும்! இரண்டு பேரும் வயசுப் புள்ளேங்க, என்னமோ எத்தனை ஆயிரம் ரூபாயோ தோத்துட்டேண்ணு சின்ன எஜமான் சொன் னுங்க; கொஞ்ச நேரம் பொறுத்துக் காஷ்கிப்பர் ஐயா, அந்தச் சீட்டைஎடு; மாத்தாதே'ண்ணுங்க. அவுங்க, 'திருட ஞ'ண்ணுங்க இவுங்க; 'பல்லை உடைப்பேண்'ணுங்க; அவுங்க என்னமோ சொன்னுங்க; இவுங்க, 'பொம்மனுட்டிபேச்சு என் னத்துக்கு'ண்ணுங்க; 'கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன பண்ணுவே'ண்ணுங்க; இவுங்க, நீ மாத்திரம் கல்யாணம் பண் ணிக்கிட்டா அப்பிடிச் செய்வேன் இப்பிடிச் செய்வேண்' ணுங்க.

**இன்ஸ்பெக்டர்:** என்னடா உளறுகிருய்! கல்யாணம் பண்ணிக்கிட்டா அப்படிச் செய்வேன், இப்படிச் செய்வேன்

என்றார்கள் என்றாயே. யார் அப்படிச் சொன்னது! என்ன செய்வேன் என்றார்.

**ராமசாமி:** காஷ்கிப்பர் எஜமான்தான் சொன்னாங்க. 'கல்யாணம் பண்றதுக்கு முன்னே உன்னை வெட்டிப் போடறேண்'ணுங்க. என்னுங்க், அவுங்க கோபத்திலே அப்படிச் சொன்னாங்களேண்ணு அவுங்கதான் இப்போ இப்பிடிச் செய்திட்டாங்கண்ணு எண்ணுதிங்க. அவுங்க ரொம்ப நல்லவுங்க; நேத்துக்கூட எனக்கு ஒரு ரூபா இனும் கொடுத்தாங்க.

**இன்ஸ்பெக்டர்:** மடையா! உன்னை அதெல்லாம் கேட்கவில்லை; அப்பால் நடந்ததைச் சொல்லு.

**ராமசாமி:** காஷ்கிப்பர் எஜமான் போனவுடனே அதோ செத்துக் கிடக்காங்களே; அந்த எஜமான் என்னைக் கூப்பிட்டு, 'அடே ராமசாமி, பாவம் ரொம்ப நெரம் முழுச்சிக் கிட்டிருக்கே! நீ வீட்டுக்குப் போண்'ணுங்க. அதுக்கு, "எனக்கு இண்ணெக்கிப் படுக்கேங்கோ; நான் போகக் கூடாது' ண்ணேன். 'நான் போகச்சொன்ன உனக்கென்னடா? போரையா இல்லையா'ண்ணு! அடிக்க வந்தாங்க. அந்த ஐயா எப்பவும் அப்படித்தானுங்க. வேலைக்காரங்களைப் பளியா அடிப்பாங்க. ஊட்டுக்குப் போனலும் சௌக்கியமா உறங்கலாமுண்ணு போயிட்டேனுங்க. நீங்க சொல்லுங்க; இங்கே இருந்து ஏனுங்க அவுங்க கிட்ட அடிபடணும்?

**இன்ஸ்பெக்டர்:** ஏன் போகச் சொன்னரென்று உனக்குத் தெரியுமா? இதற்கு முன்னல் எப்போதாவது அப்படிப்போகச் சொல்லி யிருக்கிறாரா?

**ராமசாமி:** பத்திலே எட்டிலே போகச் சொல்றது தானுங்க? வயசுப் புள்ளீங்க இல்லையா?

**இன்ஸ்பெக்டர்:** வயசுப் பிள்ளையென்பது வாஸ்தவந்தான். ஏன் போகச் சொல்லுகிறாரென்று பார்த்திருப்பாயல்லவா!

ராமசாமி: இல்லீங்க; இது வரைக்கும் பாக்கல்லீங்க.

இன்ஸ்பெக்டர்: இதுவரையில் பார்க்காவிட்டால் நேற்றுப் பார்த்தா யல்லவா?

ராமசாமி: அப்படி நான் பார்த்ததாகச் சொல்லல்லீங் களே! நான் வேணுமுண்ணு பாக்கலீங்க. அவுங்க போகச் சொன்னவுடனே வயத்தைக் கலக்கிச்சிங்க. மெதுவாப் போயி ஜலபாதைக்கு இருந்துவிட்டுக் கேட்டு வாசலண்டை போனேனுங்க. அப்போ யாரோ வர்ற சத்தம் கேட்டுதுங்க. மரத்து நிளல்லே மறைஞ்சேனுங்க; முக்காடு போட்டுக்கிட்டு மேற்கேயிருந்து ரோட்டிலே யாரோ வந்தாங்க; எங்கே போருங்களோண்ணு பாத்தேனுங்க. உள்ளேதான் வந்தாங்க; மெத்தைப் படி ஏறி எஜமான் அறைக்குள்ளே போனுங்க, நான் நமக்கென்னண்ணு ஊட்டுக்குப் போனேனுங்க.

இன்ஸ்பெக்டர்: வந்தது யார்? உனக்குத் தெரிந்தவர் களா?

ராமசாமி: சத்தியமா இதுக்கு முன்னாலே நான் பார்த்ததே இல்லீங்க; வயசுப் பொம்மனுட்டி யாட்டமா இருந்துதுங்க நிச்சயமாத் தெரியாதுங்க.

அப்பால் இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடவர்கள் கூடியவரையில் வெவ்வேறு விதமாகக் கேட்டுப் பார்த்தும் ராமசாமி முன் சொன்ன விஷயங்களில் எள்ளளவாவது வித்தியாச மில்லாமல் சொன்னதால் அவன் சொன்னவரையில் உண்மைதானென்று அறிந்து நடந்த விஷயங்களை யெல்லாம் போலீஸ் கமிஷனருக்குத் தெரிவித்தார். கமிஷனர் துரையவர்கள் இன்னும் சரிவர ஆராய்ந்து பார்க்கும்படியும் அந்தக் கேசை அவரையே துப்புத் துலக்கும்படியும் சொல்லி; ராஜேந்திரனுக்கு வேண்டியவரையில் தேறுதல் சொல்லிவிட்டு, போலீசார் கூடியவரையில் கஷ்டப்பட்டுத் துப்புத் துலக்குவதாகவும், அநேகமாகக் கொலை செய்தவர்களைக் கண்டுபிடிக்கக் கூடு

மென்றும் தற்காலம் சென்னையிலுள்ள உத்தியோகஸ்தர்களுள் சிறந்த இன்ஸ்பெக்டரான சுப்பராயலு நாயுடவர்களைத் துப்புத் துலக்கும்படி விட்டிருப்பதாகவும் எப்போது வேண்டுமானாலும் டெலிபோன் மூலமாகக் கூப்பிட்டால் தாம் வரத் தயாராக இருப்பதாகவும் சொல்லிவிட்டு அவரிடமும் ராகவனிடமும் விடை பெற்றுக்கொண்டு போனார்.

கமிஷனர் துரையவர்கள் சென்ற பின்பு பிரேதத்தை ஒரு வண்டியில் ஏற்றி டாக்டர்களிடம் பரிசோதனைக்கு அனுப்பிவிட்டு இன்னும் ஏதாவது துப்புக் கண்டுபிடிக்கலாமென்று இன்ஸ்பெக்டர் அந்த அறைக்குப் போய்க் கூர்மையாகப் பார்த்ததில் விட்டு விட்டு ரத்தத் துளிகள் அங்கும் இங்கும் காணப்பட்டன. ரத்தத் துளிகள் விழுந்திருந்த வழியாகச் சென்றதில் ரங்கநாத்தின் அறையைத் தாண்டித் தாழ்வாரக் கடைசி வரையில் துளிகள் காணப்பட்டன. அதற்கப்பால் போவதற்கு இடமில்லை, ஆதலால் எப்படிப் போயிருக்கக் கூடுமென்று கூர்ந்து பார்த்ததில், ரங்கநாத் அறை வரையிலிருக்கும் துளிகளைவிட அறைக்குப் பின்னால் அதிகத் துளிகள் விழுந்திருந்ததால் அதிகத் துளிகள் போகும்போதும், மறுபடியும் திரும்பி வரும்போதும் ஏற்பட்ட துளிகளாக இருக்குமென்று ஊகித்தார்.

உண்மையாக ரங்கநாத் கொன்றிருந்தால் அவர் கை விரல்கள் உருண்டு திரண்ட விரல்கள் ஆதலால் கொலை செய்யப்பட்ட அறையில் இருந்த ரத்தக் கறை அடையாளம் அவருடையதாக இருக்க முடியாதென்றும் அவரே கொன்றுவிட்டு வரும்போது ஏற்பட்ட ரத்தத் துளிகளாகில் அவர் அறை அவருக்கு நன்றாகத் தெரியுமாதலால் தாழ்வாரத்தின் கடைசிவரையில் போய்த் திரும்ப வேண்டிய பிரமேயம் இல்லையாதலாலும் அவர் மூலமாக ஏற்பட்டதல்லவென்றும் நிச்சயித்தார். இருந்தாலும் ஒருகால் கொன்றவர்கள் இன்னாரென்று அவருக்குத் தெரிந்திருக்க

லாமென்று சந்தேகப்பட்டார். அப்பால் ஸ்ரீனிவாசன் டைரியைச் சோதிக்கையில் கொலை செய்யப்பட்ட அன்றைய தேதியில்,

'இன்று இரவு ரங்கநாத்திடம் சீட்டாடியதில் 20,570 ரூபாய்கள் ஜயித்தேன். நான் சரியாக ஆடவில்லையென்றும் திருட்டு ஆட்டம் ஆடினேனென்றும் சொல்லி, கடைசியில் நான் சீட்டை மாற்றினதால் தான் ஜயித்துவிட்டதாகவும், ஆகையால் பாக்கியில்லையென்றும் வாதாடுவான்போல் இருக்கிறது. இருந்தாலும் விடக்கூடாது; ஆகா? லக்ஷ்மியின் பேரை எடுத்த உடனே அவனுக்கு வந்த கோபத்தையும், 'நீ மாத்திரம் லக்ஷ்மியைக் கல்யாணம் செய்துகொள்ளப் பார்; கல்யாணத்திற்கு முன் உன்னைக் கொன்று போடுகிறேன்' என்று சொன்னதையும் பார்த்தபோது எனக்கு எவ்வளவு பயமாக இருந்தது. ஒருவேளை கொன்றாலும் கொன்றுவிடுவான்; நான் எப்போதாவது திடீரென்று கொலை செய்யப்பட் டிருந்தால் என்னைக் கொன்றது ரங்கநாத்தான் என்று தெரிவதற்காகவே இதை எழுதி வைக்கிறேன்'

என்று எழுதியிருந்ததைப் பார்த்ததும் ரங்கநாத்தை விசாரிப்பதற்காக அழைத்துவரச் சொன்னார். அன்று சனிக்கிழமை யாதலால் இன்னும் ஒரு மணி நேரத்தில் அதாவது மூன்று மணிக்கு வருவதாகச் சொல்லியனுப்பினார் அவர். அதற்குள் ரங்கநாத்தின் அறையைச் சோதிப்பதற்காக மாஜிஸ்டிரேட்டிடம் வாரன்டு பெற்று ரங்கநாத் வரு முன்னம் பூட்டை அவருக்குத் தெரியாமல் வேறு சாவியால் திறந்து உட்சென்று பார்த்தார். ரத்தத் துளிகள் அந்த அறையிலும் காணப்பட்டன. ஒரு சோபாவிலும் அதிகமாக ரத்தத் துளிகள் இருந்தன. அப்பால் அவருடைய அறைகள் இரண்டையும் தேடியதில் அழுக்குத் துணிப் பெட்டியில் ரத்தம் சிந்தியிருந்த ஒரு புடைவையை

யும் ரவிக்கையையும், ரத்தத்தில் முக்கியெடுத்த மாதிரி யிருந்த வெண்பட்டுச் சால்வையையும் கண்டெடுத்துக் கொண்டிருக்கும்போது ரங்கநாத் வந்து, தம் அறையின் பூட்டுத் திறந்திருப்பதையும் உள்ளே ஆட்கள் சத்தம் கேட்பதையும் கண்டு, ஆச்சரியமுற்று உள்ளே சென்றார். அந்தச் சமயத்தில்தான் இன்ஸ்பெக்டர் அத் துணிகளை வெளியில் எடுத்துக்கொண் டிருந்தார்

ரங்கநாத்: இன்ஸ்பெக்டரவர்களே, நான் இல்லாதபோது துராக்கிருதமாக, என் வீட்டில் பிரவேசித்துத் தங்கள் இஷ்டம்போல் காரியங்களை நடத்துகிறீர்களே! அதெப்படி?''

இன்ஸ்பெக்டர்: ஐயா! நான் சட்ட விரோதமாக ஒன்றும் நடத்தவில்லை. வீட்டைச் சோதிப்பதற்காக மாஜிஸ்டிரேட் டிடமிருந்து இதோ வாரன்டு வாங்கி யிருக்கிறேன்; பாருங் கள்.

ரங்கநாத்: வாரன்டு வாங்கியிருந்தால் என்ன? சட்டப்படி என்னையும் கிராம முனிசீப்பையும், வேறு தக்க மனிதர்களை யும் வைத்துக்கொண் டல்லவா தாங்கள் சோதிக்க வேண் டும்? அப்படிச் செய்யாமல் நான் இல்லாதபோது தங்கள் இஷ்டம்போல் திருட்டுச்சாவியால் பூட்டைத் திறந்து இங்கே இல்லாத சாமான்களை யெல்லாம் தாங்களே கொண்டுவந்து வைத்து, ஏதோ பிரமாதமாகக் கேஸ் கண்டுபிடித்துவிட்ட தாகவும், கொலை செய்த என்னைக் கண்டுபிடித்துவிட்ட தாகவும் நான் பெண் உடை தரித்துப் போய்க் கொலை செய்துவிட்டு வந்ததாகவும் ஜோடனை செய்யச் சூழ்ச்சி செய்தீர்போல் இருக்கிறது. இதுவெல்லாம் என்னிடம் பலிக்காது. உமது நடத்தையைப்பற்றி நான் ரிப்போர்ட் செய்கிறேன்.

இன்ஸ்பெக்டர்: ரங்கநாத்! பேஷ் பேஷ், நான் ஒன்றும் சொல்லாதபோதே நீர் பெண் உடை தரித்துக்கொண்டு

போய்க் கொலை செய்தீரென்று நான் சொல்வதாக எனக்குக் கற்பிக்கிறீர்போல்இருக்கிறது. அப்படி ஏமாறப்பட்ட ஆசாமி நானல்ல. பரீட்சையில் தேறியதாலோ உயர்ந்த பதவியில் இருக்கும் கனவான்களின் சிபார்சின் பேரிலோ போலீஸ் இன்ஸ்பெக்டர்களாயும் டெப்டி சூப்பிரண்டுகளாயும் தற்காலம் நியமிக்கப்படும் அநுபோகம் இல்லாத சில பொம்மைகளிடம் நீர் இப்படிப் பேசியிருந்தால் அவர்கள் உமது வலையில் விழுந்து உடனே உம்மைக் கைதியாக்குவார்கள். நான் அப்படி ஏமாறமாட்டேன். உண்மையாகக் கொலை செய்த ஆசாமியை மறைப்பதற்காக நீர் பேசிய சூழ்ச்சி மொழிகள் இவை என்று நான் அறிவேன்.

**ரங்கநாத்:** முதலில் இவ்வுடைகள் இங்கிருந்ததாக நான் ஒப்புக்கொண்டாலல்லவா நீர் மற்ற வார்த்தைகள் பேசலாம். எப்போது சட்டப்படி நீர் என்னையும் மற்றவர்களையும் வைத்துக்கொண்டு சோதனை செய்யவில்லையோ அப்போது இதெல்லாம் நீர் கொண்டு வந்து வைத்த பொருள்கள்தான் என்று நான் சொல்லுகிறேன்.

**இன்ஸ்பெக்டர்;** உம்மை அழைத்து வரச் சொன்னேன். முனிசீபும் இப்போது வருவார். இதோ இத்தெருவிலுள்ள இரண்டு பெரிய மனிதர்களும் வருகிறார்கள். இங்கே இச்சாமான்களைக் கண்டுபிடித்ததாக அவர்கள் கையொப்பமிடுவதில் என்ன ஆட்சேபம்? உண்மையாக உமது மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் சொல்லும்; இவைகள் இங்கே கண்டுபிடிக்கப்பட்டனவா அல்லது எங்களால் கொண்டு வரப்பட்டவைகளா?

**ரங்கநாத்:** போமையா போம்; இந்தப் பொம்மலாட்டமெல்லாம் என்னிடம் பலிக்காது. அவர்களும் நானும் வந்தபின் சோதனை செய்தீர்களா என்று உண்மையாக நான் தங்களையும் அவர்களையும் கேட்கிறேன். சரியான பதில் சொல்லுங்கள்; பார்ப்போம். ஏன்? நீங்களே கொண்டு

வந்து வைத்திருக்கலா மல்லவா? நீங்கள் இங்கே வரும் போது என்ன என்ன கொண்டுவந்தீர்களென்று யாரையா பார்த்தார்கள்? பார்ப்போம் ஒருகை!

**இன்ஸ்பெக்டர்:** ரங்கநாத்! ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்? இத் துணிகள் யாருடையன? இங்கே எப்படிவந்தன?

**ரங்கநாத்:** அக் கேள்விக்கும் பதில்சொல்ல வேண்டுமா? இத் துணிகள் யாருடையனவென்று உமக்குத்தான் தெரியம். உம்மாலும் உம்முடன் வந்திருக்கும் எம கிங்கரர்களாலுந்தான் இவைகள் இங்கே கொண்டுவந்து வைக்கப் பட்டன.

**இன்ஸ்பெக்டர்:** சரி; துணிகளைத்தான் நாங்கள் கொண்டுவந்து வைத்துவிட்டோம். வழி நெடுக இருக்கும் ரத்தத் துளிகளும் சோபாவின்பேரில் இருக்கும் ரத்தக் கறைகளும் எப்படி வந்தன? அதற்கு என்ன ஜவாபு சொல்லுகிறீர்?

**ரங்கநாத்:** அதற்கென்று வேலை செய்யும் தாங்கள் இவைகளை யெல்லாம் முன் கூட்டி யோசியாமலா செய்வீர்கள். இதுவும் தங்கள் சாமர்த்தியமான வேலைதான்.

**இன்ஸ்பெக்டர்:** ரங்கநாத்! நாங்கள் இப்போது வேண்டுமன்று செய்ததாகவே வைத்துக்கொள்வோம்; ரத்தம் அதற்குள் எப்படிக் காய்ந்துவிடும்?

**ரங்கநாத்:** நான் பாங்கிக்குச் சென்றதும் முன்கூட்டி இந்த ரத்தத் துளிகளைப் போட்டுவிட்டு அவைகள் காய்ந்த பின் இப்போது வந்து சோதிப்பதாகச் சாட்சியம் தயாரித்திருப்பீர்கள். மீன் குட்டிக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டும்போல் இருக்கிறது.

**இன்ஸ்பெக்டர்:** ஐயா! நீர் ஊகிக்கிறபடி இப்படி முன் கூட்டி வேலை செய்திருந்தால்; சோதனைக்குமுன் சட்டப்படி உம்மையும் மற்றவர்களையும் கூட்டிக்கொண்டு வந்திருக்க மாட்டோமா?

ரங்கநாத்: முதலில் ரத்தத் துளிகளை 10 மணி சுமாருக்குப் போட்டிருப்பீர்கள். அப்போது இந்தத் துணிகளையெல்லாம் போட்டால் புது ரத்தமானதால் காயாமல் அதிக ஈரமாக இருக்குமென்றும் அப்போது தங்கள் கதையைச் சந்தேகிப்பார்களென்றும், பின்னல் சற்றுக் காயப் போட்டு இப்போது அத் துணிகளைக் கொண்டுவந்து வைத்து மறுபடியும் பூட்டிவிட்டு, நானும் மற்றவர்களும் வந்தபின், அப்போதுதான் தாங்கள் இந்த அறைக்குள் முதல்தரம் கால் வைப்பவர்போல் நடித்து இவைகளைக் கண்டுபிடித்து என் கழுத்திற்குக் கயிறு சரியாகக் கொண்டுவர உத்தேசித்திருந்தீர்கள். தெய்வம் எனது பங்கில் இருந்ததால் நான் ஜல்தியாய் வந்து உமது வேலைத் திறத்தைக் கையும் மெய்யுமாகக் கண்டுபிடித்துவிட்டேன் இனி உமது ஜபம் பலிக்காது.

இன்ஸ்பெக்டர்: ரங்கநாத்! இன்று நீர் இப்படிச் சாமர்த்தியமாகப் பேசிவிட்டாலும் அப்பெண்ணை எப்படியாவது கண்டுபிடித்து விடுவோம். அப்போது நீர் மறைக்கப் பார்த்தீர் என்ற குற்றம் உமதுபேரில் ஏற்படும். இப்போது சொல்லிவிட்டீ ராறல் நல்லது. உமதுபேரில் குற்றம் இல்லாமல் செய்துவிடுகிறேன். பின்னல் என்பேரில் ஆவலாதி சொல்லாதேயும்.

ரங்கநாத்: ஐயா; என்னை என்ன சொல்லச் சொல்லுகிறீர்; சொல்லும். அப்படியே சொல்லுகிறேன், அப்போது உமக்குத் திருப்தியாக இருக்குமல்லவா? விஜய நகரம் மகாராணிதான் இப் பெண் உடைகளை அணிந்துகொண்டு வந்து கொன்றுவிட்டுப் போனதாகச் சொல்லச் சொல்லுகிறீரா?

இன்ஸ்பெக்டர்: இந்த ரவிக்கை உமது மூன்று விரல்களைச் சேர்த்துப் பிடித்தால்கூட அதில் ஏருதே. அப்படி இருக்க அந்தக் கதையை விட்டுவிடும்; உமக்குக் கொலை

செய்தவர்கள் இன்னாரென்று திட்டமாகத் தெரியும்; தயவு செய்து சொல்லும்.

ரங்கநாத்: எனக்கு இதைப்பற்றிய விஷயம் ஒன்றுமே தெரியாது; நீர் என்னை இப்போதே கைதி ஆக்கிக்கொண்டு போனால் உம்முடன் வரத் தடை இல்லை.

இனி அவரிடம் கேட்டு அப் பெண்ணைக் கண்டு பிடிப்பது கஷ்டமென்றும் வேறு யோசனை தான் செய்ய வேண்டுமென்றும் நினைத்துக்கொண்டு போலீஸ் கமிஷனரிடம் போய், நடந்த விருத்தாந்தங்களை இன்ஸ்பெக்டர் சொன்னார். "ரங்கநாத் சொல்லும் கதையைப் பிரமாதப்படுத்தி, நமக்கு விரோதமாகச் சட்ட நிரூபண சபையில் கேள்விகள் கேட்பதோடு, 'போலீசாரின் அக்கிரமங்கள்' என்னும் தலைப்பின் கீழ், பத்திரிகைகளில் பல வியாசங்களும் வெளி வரும். அத்துடன் நிற்காமல் சீமையில் உள்ள பார்லிமென்ட் மகா சபையிலும் இதைப்பற்றிப் பிரமாதமாகக் கேள்விகளும் கேட்பார்கள். இப்பேர்ப்பட்ட படித்த புத்தி சாலிச் சனியன்களிடந்தான் ஜாக்கிரதையாக வேலை செய்ய வேண்டும். நீர் முன்கூட்டியே சற்று ஜாக்கிரதையுடன் சட்டப்படி நடத்தியிருந்தால் நலமாக இருந்திருக்கும். நமக்கு உண்மையென்று நன்றாகத் தெரிகிறது.

போலீஸார் செய்வதெல்லாம் அக்கிரமம் என்ற கூக்குரல் உண்டாகும் இக் காலத்தில் நம்மை ஒருபோதும் நம்பமாட்டார்கள். ரங்கநாத் சொல்வதுதான் வேத வாக்கென்று நினைப்பார்கள். ஆகையால் இன்னும் அவனுக்கு விரோதமாகச் சரியானபடி சாட்சியம் கண்டு பிடிக்கும் வரையில் அவன் ஜோலிக்குப் போக வேண்டாம். ஆமாம்; எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. தண்டையார்ப்பேட்டையில் இருக்கும் லீலாவதி என்னும் பெண் வீட்டிற்கு, ஸ்ரீனிவாசன் போனதாகவும் ஸ்ரீனிவாசனிடம் அப்பெண் இரண்டு

மூன்று தரம் வந்து பேசிவிட்டுப் போனதாகவும் ஸ்ரீனி வாசனைப் பார்த்து வந்த வேவுகாரர் சொன்னார்கள். நீர் உடனே போய் எப்படியாவது அவள் படத்தைப் பெற்றுக் கொண்டு வந்து ராமசாமியிடம் காண்பித்து, அவன் பார்த்த பெண் அவள்தானா என்று விசாரிப்பதோடு லீலாவதி யின் கோச்மானையும் கூடுமானால் இங்கே அழைத்து வந் தால் விசாரிக்கலாம்" என்றார் கமிஷனர்.

அவர் சொன்னபடியே இன்ஸ்பெக்டர் போய், லீலாவதி, வீட்டில் இல்லாததால் அவள் எடுத்து வரச் சொன்னதாக அவள் படத்தை வாங்கிக்கொண்டு லீலாவதியின் கோச் மானையும் அழைத்து வந்தார்.

படிப்பு வாசனையே அறியாதவன் ஆதலால் ரங்கநாத் தைப்போல் சட்டம் பேசாமல் இன்ஸ்பெக்டர் கூப்பிட்ட வுடனே நாய்போல் அவன் ஓடி வந்தான். வரும் வழியில் சாமர்த்தியமாக விசாரித்ததில் கொலை நடந்த இரவு லீலா வதியை ருக்மிணி பாங்கிக்கு ஒரு பர்லாங்கு வரையில், தான் வண்டியில் ஏற்றி வந்ததாகவும் வண்டியை அங்கே நிறுத்தி விட்டு, லீலாவதி பாங்கியின் பக்கம் சென்று ஒரு மணி நேரத்திற்குப் பின் வந்து தன் வண்டியில் ஏறிக்கொண்டு வீட்டிற்குப் போனதாகவும் சொன்னான். உடனே கமிஷன ரிடம் கொண்டுபோய் அவன் வாக்குமூலத்தை எழுதிக் கொண்டார்கள்.

கமிஷனர் துரையவர்களுக்கு அப்போது ஒரு சந்தேகம் ஏற்பட்டதால், லீலாவதி போகும்போது அணிந்திருந்த உடையே திரும்பி வந்தபோது அணிந்திருந்தாளா வேறு உடை அணிந்திருந்தாளா என்று கேட்டார். அதே உடை தான் அணிந்திருந்தார்களென்று அவன் திட்டமாகச் சொன்னான். ராமசாமியும் படத்தைக் கண்டதும் தான்

பார்த்த பெண் அப் படத்திலுள்ள பெண்ணாகத்தான் அநேகமாக இருக்கலாம் என்று சொன்னான்.

லீலாவதியை விசாரிப்பதற்காக அவள்பேரில் சம்மன் போட்டு உடனே அவளை அழைத்துவரும்படி அந்த இன்ஸ்பெக்டரையே அனுப்பினார்கள். அவர் போய் வீட்டில் விசாரித்ததும் இன்ஸ்பெக்டர் படம் வாங்கிக்கொண்டு போனவுடனே லீலாவதி வீட்டிற்கு வந்ததாகவும், அப்பால் ஒரு கிழவர் லீலாவதியுடன் சுமார் கால் மணி நேரம் பேசிக் கொண்டிருந்ததாகவும், உடனே லீலாவதியம்மாள் ஒரு பெட்டி நிறையத் துணி மணிகளும் நகைகள், ரொக்கம் முதலியவைகளும் எடுத்துக்கொண்டு அக் கிழவர் வண்டியிலேயே ஏறிப் போனதாகவும், போகுமுன், தான் அயலூர் செல்வதால் வரச் சுமார் ஒரு மாதம் பிடிக்குமென்றும் யாராவது தேடி வந்தால் ஒரு மாதம் பொறுத்து வரும்படி சொல்லச் சொன்னதாகவும் தெரிந்தது.

தன்னை ஏமாற்றிவிட்டுப் பறவை பறந்து போயிற்றென்பதை அப்போதுதான் அவர் உணர்ந்தார். கமிஷனர் அவர்கள் லீலாவதிக்குச் சலவை செய்யும் வண்ணானை அழைத்து வந்தால் அவன் அத்துணிகள் யாருடையவை என்று சொல்வான் என்று சொன்னபடி, வண்ணானை அழைத்துக் காண்பித்ததில் அவன் அத் துணிகள் லீலாவதியின் துணிகள் அல்லவென்றும் ராகவன் புத்திரியாகிய லக்ஷ்மியின் துணிகள் என்றும் சொன்னான். போலீஸ் கமிஷனர் இவ்வாறு விசாரித்துக்கொண் டிருக்கையில், தன் அறையில் அதிக விசனத்துடன் உட்கார்ந்திருந்த ரங்கநாத்தைப் பார்க்க ஒரு கிழவர் வந்தார். அப்போது இரவு மணி ஏழு. ரங்கநாத் அவரை உட்கார வைத்துத் தன்னிடம் பெரியவர் வந்த காரணம் என்னவென்று கேட்டார். அவர் ஒன்றும் பேசாமல் ஜேபியிலிருந்து ஒரு கடிதம் எடுத்துத் தர, அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

"என் பிரியமான ரங்கநாத்! உன் கையில் இக் கடிதம் கொடுப்பவர்தான் கியாதிபெற்ற திருவல்லிக்கேணித் துப்பறியும் கோவிந்தன். அவர் உன்னிடம் எதைப்பற்றிக் கேட்டபோதிலும் ஒன்றையும் ஒளியாமல் உள்ளதை உள்ளபடி சொல்வதோடு அவர் உன்னை எந்தச் சமயத்தில் எப்படி நடக்கச் சொல்லுகிருரோ அப்படியே நீ நடக்க வேண்டும். நான் எதிரிலிருந்து சொன்னுல் எப்படி என் வார்த்தையைத் தட்டாமல் கேட்பாயோ அப்படியே அவர் வார்த்தையின்படி தவருது நட. அவர் நமது நன்மையையே என்றும் நாடுபவர்.

உன் பிரியமான,
வரதாச்சாரி."

அக் காகிதத்தைப் பார்த்ததும் ரங்கநாத், கோவிந்தன் கைகள் இரண்டையும் பிடித்துக் குலுக்கி, "தங்களைச் சந்தித்ததால் என் மனக் குறைகள் தீர்ந்தன. நான் தங்களைத் தேடி மூன்று நான்கு தடவை வந்தும் தாங்கள் ஊரில் இல்லையென்றே சொல்லி வந்தார்கள். தாங்கள் எப்போது வந்தீர்கள்?" என்று ரங்கநாத் கேட்டார்.

**கோவிந்தன்:** நான் இவ்வூரில்தான் இருக்கிறேன். அதிலும் அநேகமாகத் தங்கள் காரியாதிகளைத்தான் கவனித்து வந்தேன். அதெல்லாம் பின்னுல் சொல்லுகிறேன். இப்போது தாங்கள் போலீசார் காவலில் இருக்கிறீர்கள் என்பது தெரியுமா?

**ரங்கநாத்:** தெரியாதே; யாரும் காவல் காக்க வில்லையே.

**கோவிந்தன்:** தங்களுக்குத் தெரியாமல் தங்களைக் காவல் காக்கிருர்கள். இப்போது தங்களிடம் வந்த காரணம் அவசரமான காரியம் ஆதலால் சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள். தாங்கள் விவாகம் செய்துகொள்ள விரும்பிய லக்ஷ்மிதான் ஸ்ரீனிவாசனைக் கொன்ருள் என்று

அவள்பேரில் இன்னும் அரை மணி நேரத்தில் வாரன்டுடன் கமிஷனர் வரப்போகிறார். அத்துடன் அவளுக்கு அநுசரணையாக இருந்து அவள் குற்றத்தை மறைக்கப் பார்த்தீர்கள் என்று தங்கள் பேரிலும் வாரன்டு மனுப் போட்டுவிட்டார்கள். தங்கள் இருவரையும் இன்னும் அரை மணி நேரத்தில் பிடித்துக் கொண்டுபோய் ஜெயிலில் போட்டுவிடுவார்கள். அதிலிருந்து நீங்கள் இருவரும் தப்ப விரும்பினால், தாங்கள் தாமதியாமல் நான் சொல்லுகிறபடி நடக்க வேண்டும்.

ரங்கநாத் : சொல்லுங்கள்; அப்படியே செய்கிறேன். ஆனால் லக்ஷ்மியையும் தப்புவிப்பீர்கள் அல்லவா?

கோவிந்தன் : தடை என்ன? தங்களோடு லக்ஷ்மியும் வருவாள்.

ரங்கநாத் : லக்ஷ்மி கூட வந்தால் தாங்கள் எங்கே செல்லச் சொன்னாலும் போகத் தடை இல்லை; சொல்லுங்கள்.

கோவிந்தன் : இப்போது நான் வெளியே போய்ச் சரியாக 7–15க்கு வருவேன். அதற்குள் ராமனைத் தண்டையார்ப்பேட்டை போய் வரும்படி அனுப்பிவிடுங்கள். சரியாக 7-15 மணிக்கு உங்கள் அறைக்குள் ஒருவன் வருவான். அவன் வந்தவுடன் தாங்கள் கதவின் மறைவில் இருந்து அவன் சத்தம் போடாதபடியும் ஓடிப் போகாதபடியும் தொண்டையைப் பிடித்துக்கொள்ளுங்கள். நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் உடையில் வருவேன். என்னைக் கண்டு பயந்து அவனைப் பிடிக்காமல் இருந்துவிடாதேயுங்கள். மற்றவை பின்னால் சொல்லுகிறேன். ஒரு பெட்டியில் தங்களுக்குக் கொஞ்சம் உடுப்புகள் சேகரித்து வைத்துக்கொள்ளுங்கள்.

இப்படிச் சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார். அவர் போனவுடன், ராமசாமியைத் தண்டையார்ப்பேட்

டைக்கு அனுப்பிவிட்டு, ரங்கநாத் மணியைப் பார்த்துக் கொண்டே இருந்தார். 7–10 ஆனதும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் தெருவில் நின்றுகொண் டிருந்த, உடுப்புப் போட்ட போலீஸ்காரன் ஒருவனிடம் போய், "549 முத்துசாமி நீதானு என்ருர். அவன் சலாம்செய்து, "ஆம்" என்ருன்.

"இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடு அவசர ஜோலியாகத் தண்டையார்ப்பேட்டைக்குச் சென்றது உனக்குத் தெரியுமே! அவர் சொன்னபடி வீட்டிலிருந்து எவரும் வெளியில் போகாதபடி ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டிருக்கிருயா?" என்ருர்.

"ரங்கநாத்தைத்தான் பார்த்துக்கொள்ளச் சொன்னுர். வேலைக்காரனைப்பற்றிச் சொன்னதாக ஞாபகம் இல்லை".

"ஞாபகம் இல்லையா! பரம தடியா! வேலைக்காரன் எப்போது போனுன்? இதைப்பற்றி உனக்குக் கட்டாயமாகப் பிளாக் மார்க் கிடைக்கும். எப்படிப் போனுன்?"

"ஐயா! 5 நிமிஷங்களுக்கு முன்தான் தெருவில் வந்தான். இங்கே வந்துகொண் டிருந்த ஒரு ஜட்காவில் உடனே ஏறியதும், 'தண்டையார்ப்பேட்டைக்குப் போ' என்ருன். அவனும் வேகமாக ஓட்டிச் சென்ருன்."

"என்ன மந்த புத்தி யடா உனக்கு? உன் இன்ஸ்பெக்டர்போன தண்டையார்ப்பேட்டைக்கே அவனும் போகிருன் என்பதை அறிந்தும் நீ அவனைப் போகவிட்டாயே! சரி; நடந்துபோனதைப்பற்றிச் சிந்திப்பதில் குணமில்லை! இனி மேலும் அசுவாரசியமாக இருந்தால் ரங்கநாத்தும் ஓடிவிடுவான். வா, என் பின்னுலேயே" என்று அட்டகாசமாகச் சொல்லிவிட்டு உள்ளே சென்ருர்.

"ஐயா! தங்களை நான் எப்போதும் பார்த்த தில்லையே! தங்கள் திருநாமம் யாது?" என்று ஈனக் குரலாக அவன் இன்ஸ்பெக்டரைக் கேட்டான்.

அவர் கேட்காதவர்போல் மெத்தை அறையின் படியண்டை போனதும் வாய் பேசாமல் மெதுவாக ஜாடை காட்டி, "உள்ளே போய்ப் பார்" என்றார்.

அவன் உள்ளே அடி எடுத்து வைத்ததுதான் தாமதம். ரங்கநாத் போலீஸ்காரன் தொண்டையைப் பிடித்துக் கொண்டார். இன்ஸ்பெக்டர் உடையுடன் வந்த கோவிந்தன் தாம் தம்முடன் தயாராகக் கொண்டுவந்திருந்த நூல் கயிற்றால் அவன் கால்களையும் கைகளையும் கட்டிவிட்டுச் சத்தம் போடாதபடி தம் ஜேபியில் தயாராகக் கொண்டு வந்திருந்த பஞ்சை எடுத்து அவன் வாயில் வைத்து ஒரு துணியால், பஞ்சு கீழே விழாமல் கட்டிவிட்டு அவனைப் பார்த்து, "உன்னை இப்படிச் சில நேரம் ஹிம்சையில் வைப்பதற்காக நான் அதிக வருத்தப்படுகிறேன். இருந்தாலும் அக் கஷ்டத்திற்கு உள்ளாக்கியதற்காக இதோ உன் ஒரு மாதச் சம்பளமாகிய 15 ரூபாய் நோட்டுகளை உன் ஜேபியில் போடுகிறேன். இன்னும் அரை மணி நேரத்தில் உன்னை விடுதலை செய்வார்கள். நீ புத்திசாலியாக இருந்தால் ஜேப்பியில் இருக்கும் நோட்டுகளைப்பற்றி ஒன்றும் சொல்ல மாட்டாய்; நேரம் ஆகிறது; போய் வருகிறோம்" என்று சொல்லிவிட்டு, ரங்கநாத் துணிப் பெட்டியை எடுத்துக் கொண்டு கதவை மூடிப் பூட்டிவிட்டு வரவே, ரங்கநாத்தை அழைத்துக்கொண்டு ராகவன் வீட்டண்டை போனார்.

அங்கே தோட்டத்தில் ஒரு கிழவியுடன் நின்றுகொண்டிருந்த லக்ஷ்மி ரங்கநாத்தைக் கண்டதும் ஓடிவந்தாள். இரண்டாம் பேருக்குத் தெரியாமல் லக்ஷ்மியையும் ரங்கநாத்தையும் தம் வண்டியில் ஏற்றிக்கொண்டு, போலீஸ் இன்ஸ்பெக்டர் கதவுகளை மூடினதும் வண்டிக்காரன் கிழ்ப்பக்கமாக வண்டியை வேகமாக ஓட்டிச் சென்றான்.

அந்த வண்டி சென்ற 10 நிமிஷங்களுக்கு அப்பால் லக்ஷ்மியையும் ரங்கநாத்தையும் கைதிகள் ஆக்கிக்கொண்டு போவதற்காகப் போலீஸ் கமிஷனர் துரையவர்களும் இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடு அவர்களும் ஒரு மோட்டார் வண்டியிலும்; 8 கான்ஸ்டேபில்கள் மற்றொரு வண்டியிலுமாக வந்து சேர்ந்தார்கள். எல்லோரும் வண்டியை விட்டு இறங்கினதும், போலீஸ் கமிஷனர், "லக்ஷ்மியை முதலில் கைதியாக்கலாம்" என்ருர். இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடு அவர்கள், "முதலில் சட்டம் பேசிய அந்தத் தடிப் பயல் ரங்கநாத்தைத்தான் கைதியாக்க வேண்டும். இப்போது என்ன சட்டம் பேசுகிருன் பார்ப்போம். போலீஸ்காரர் பைத்தியக்காரர் என்று நினைத்தான்; தடிப் பயல். அந்த வேலைக்காரி ராஜம் சொன்னதையெல்லாம் கேட்டீர்கள் அல்லவா? அவ்வளவு காரியாதிகள் செய்துவிட்டு, முழுப் பூசணிக்காயை ஒரே அமுக்காகச் சோற்றில் மறைக்கப் பார்க்கிருன். முட்டாள் பயல்!"

"அடே 59! நீ இந்த வாசலில் நில்லு. அடே 438! நீ அந்த வாசலில் நில்லு. அடே நீங்கள் 4 பேர் என்கூட வாருங்கள். அந்த முரட்டுப் பயல் ஒரு வேளை ஓடப் பார்ப்பான். ஓடினுல் முட்டியை உடைத்துவிடுங்கள்; தெரியுமா? முன்பின் பார்க்க வேண்டாம். வாருங்களடா இப்போது" என்று சொல்லிவிட்டு அதிக அட்டகாசத்துடன் மெத்தைக்குச் சென்ருர்.

கதவு மூடப்பட்டிருந்தது. ரங்கநாத்! ரங்கநாத்!! அடே ரங்கநாத்!!! கதவைத் திறக்கிருயா மாட்டாயா?" என்ருர். சத்தம் இல்லை.

உள்ளே அடைபட்டிருந்த போலீஸ்காரன் எங்கே தன்னை விட்டுவிட்டு வீட்டில் யாரும் இல்லையென்று போய் விடுகிருர்களோ என்று பயந்து, தன்னுல் கூடியவரையில் கைகால்களை அடித்துச் சத்தம் உண்டாக்கினுன்.

"அடே திறப்பாயா, மாட்டாயா?" என்றார் இன்ஸ்பெக்டர். பின்னும் திறக்கவில்லை; அதற்குள்ளாகப் போலீஸ் இன்ஸ்பெக்டர் சத்தம் போட்டுக் கூப்பிட்டதையும் கதவைத் திறக்காததையும் கண்ட கமிஷனர் துரையவர்கள் மேலே வந்து, "என்ன சமாசாரம்?" என்றார்.

"தடிப்பயல் உள் தாழ்ப்பாள் இட்டுக்கொண்டு கதவைத் திறக்காமல் இருக்கிறான்" என்றார்.

மத்தியான்னம் திறந்த சாவியைக் கொண்டுவரச் செய்து திறந்து பார்த்தார்கள். தங்கள் போலீஸ்காரன் தான் கையும் காலும் கட்டுண்டு வாயில் பஞ்சடைத்து இருந்தானே தவிர வேறு யாரையும் காணவில்லை. அவனைக் கட்டியிருந்த கட்டுகளை அவிழ்த்துவிட்டுச் சமாசாரம் கேட்டதில், அவன் நடந்த காரியாதிகளைச் சொன்னான். இன்ஸ்பெக்டர் பல்லை நற நறவென்று சத்தம் உண்டாகக் கடித்து, "அந்தப் பயலை லேசில் விடக் கூடாது" என்றார்.

கமிஷனர் துரையவர்கள், "பிடித்த பிற்பாடல்லவா!" என்றார்.

அப்பால் லக்ஷ்மியை யாவது கைதி ஆக்கிக்கொண்டு போக நினைத்து, எல்லோரும் அங்கே சென்றார்கள். ராகவன், "வந்த காரியம் என்ன?" என்று விசாரித்தார். அவரிடம் லக்ஷ்மிக்குப் பிரதிகூலமான சாக்ஷியங்களையெல்லாம் சொன்னார்கள். பக்கத்து அறையில் இருந்து எல்லாவற்றையும் கேட்ட கமலம்மாள் ஓவென்று கதறினாள்.

லக்ஷ்மியை எங்கே தேடியும் காணவில்லை. இங்கிருப்பாள், அங்கிருப்பாளென்று போலீசார் எங்குந் தேடிய பின், தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த கிழவி ஒருத்தி, சற்று நேரத்திற்கு முன்பு ரங்கநாத் அந்தப் பக்கம் வந்ததாகவும் லக்ஷ்மி அவர்கூடச் சென்றதாகவும் இருவரும் ஒரு குதிரை வண்டி ஏறிச் சென்றதாகவும் சொன்னாள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் எந்த விதமான வண்டி என்றும் எந்தத் திக்கில் சென்றது என்றும் விசாரித்த பின் கமிஷனர் துரையவர்களின் மோட்டார் வண்டியை வெகு வேகமாக ஓட்டிப் பின்தொடர்ந்து பார்த்தும் வண்டி அகப் படவில்லை.

கமிஷனர் துரையவர்களும் இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடு அவர்களும் அதிக விசனத்துடன், 'மூன்று கைதிகளும் நமது கையில் இருந்து தப்பிப் போய்விட்டார்கள். இந்த ரங்கநாத் அசாத்தியப் பேர்வழிபோல் இருக்கிறது. பாங்கியில் இருந்து திருடிய ஐந்து லட்சம் ரூபாயையும் ஐம்பது லட்சம் ரூபாய் பெறுமான கோபாலபுரம் வைர நகைகளையும், கடைசியாக நமது கைதிகளாகிய லக்ஷ்மி, லீலாவதி ஆகிய இருவர்களையும் அழைத்துக்கொண்டு, நமது கண்ணில் மண்ணைப் போட்டும், நமது பேருக்கு அபக்கியாதியைக் கொண்டு வந்து விட்டுவிட்டும் பறந்துவிட்டான். இனி அவன் அகப் படுவது ஏது? அவனுக்கு அநுசரணையாக வேலை செய்ய ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள்போல் இருக்கிறது. இனி ராஜேந்திரனுக்கு நாம் என்ன பதில் சொல்வது?' என்று இவ்வாறாகப் பல சிந்தனைகளுக்கு ஆளாகி மகா விசனத் துடன் தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள்.

பிறகு, சுப்பராயலு நாயுடு மட்டும் குடக்கூலிக்கு மோட் டார் வண்டி ஒன்றை அமர்த்திக்கொண்டு அன்றைய இரவு பூராவும் மறு நாள் பகல் முழுவதும் மேற்படி மூன்று கைதி களையும் தேடித் தேடி அலைந்து, வாடி, மனம் புண்ணுனார்.

தம்மால் கூடியவரையில் சென்னை முற்றும் சந்து சந் தாகத் தேடிப் பார்த்தும் விசாரித்தும் அந்தப் பாழும் போலிப் போலீஸ் இன்ஸ்பெக்டரையும் தமக்கு அதிக கோபத்தை உண்டுபண்ணிய ரங்கநாத்தையும், லக்ஷ்மி

யையும் அவர்களை ஏற்றிக்கொண்டு போன வண்டியை யும்பற்றி எவ்வித உளவும் கிடைக்கவே இல்லை; கண்க ளுக்குத் தென்படவும் இல்லை. அதிலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடுவுக்கு ஆத்திரம் இன் னும் அதிகம் ஆயிற்று. ருக்மிணி பாங்கி முதல் சமுத்திரக் கரை வரையில் அந்த வண்டி போனதைப் பார்த்ததாகப் பலர் சொன்னார்களே தவிர, அப்பால் அந்த வண்டி என்ன ஆயிற்றென்றும் அதில் இருந்த மூன்று பேர்களும் எப்ப டிப் போனார்களென்றும் தெரியாததால் அந்த வண்டி ஆட்களுடன் கூவம் ஆற்றில் முழுகிப் போயிற்றா? அல் லது சமுத்திரத்தில் நேராகப் போய் இறங்கிவிட்டதா என்றுகூடச் சந்தேகப்படக் கூடிய விதமாக இருந்தது. என்ன செய்வார்; பாவம்!

---

# 10. கோவிந்தனின் கடைசி ஆராய்ச்சி

'வீரன் கேண்மை கூரம் பாகும்'

சோறு, தண்ணீர் இல்லாமல் ஓர் இரவு, ஒரு பகல் முழுவதும் அலைந்த அலுப்புத் தீரச் சுப்பராயலு நாயுடவர் கள் நன்றாகப் படுத்து உறங்கிவிட்டுத் திங்கட் கிழமை காலை 8 மணிக்குக் கமிஷனர் துரையவர்களிடம் வந்தார். கமிஷ னர் துரையவர்கள் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டே, "நால் வரைப்பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா?" என்றார்.

இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடு: ஐயா! ருக்மிணி பாங்கி முதல் சமுத்திரக்கரை வரையில் அவ் வண்டி போனதைப் பார்த்ததாகப் பலர் சொல்லுகிறார்கள். அப்பால் அந்த வண்டியும் அதில் இருந்த மூவரும் என்ன ஆனார்கள் என்று

தெரியவில்லை. பாதாள லோகத்திற்கே சென்றுவிட்டதாகத்தான் தோன்றுகிறது. வண்டியுடன் ஆட்களும் காணமற் போனது ஆச்சரியமே! முனிசிபல் ஆபீசிலுள்ள கணக்கின்படி சென்னையில் உள்ள லாயங்களில் எல்லாம் பார்த்து ஆகிவிட்டது. அந்த அடையாளம் உள்ள வண்டியே எந்த லாயத்திலும் இல்லை. அந்தத் தடிப்பயல் ரங்கநாத் பேரில் இருக்கும் கோபத்தால் எப்படியாவது அவர்களைப் பிடித்துவிட வேண்டுமென்று நானும் இன்னும் 10 பேரும் அதே தொழிலாக இருந்து வேலை செய்தும் பயன் இல்லாமல் அலுத்துப் போனோம். அந்த வண்டி சென்னையில் இல்லை. சென்னையில் இருந்து வெளியே போகும் டோல் கேட்களில் எல்லாம் கேட்டதிலும் அந்த அடையாளம் உள்ள வண்டி போகவில்லை என்று எல்லாச் சுங்கச் சாவடிக்காரர்களும் சொல்லுகிறார்கள். இனி என்ன செய்வதென்றே தோன்றவில்லை. தாங்கள் ஏதாவது யுக்தி சொன்னால் அதன்படி நடக்கிறேன்.

கமிஷனர் துரை: மிஸ்டர் சுப்பராயலு! தயவு செய்து இக் கடிதத்தை வாசித்துப் பாருங்கள். இதுவரையில் நமக்கு இருட்டாக இருந்த அநேக விஷயங்கள் இப்போது வெளிச்சம் ஆகும். ரங்கநாத் நமக்கு விரோதமாக இவ்வளவு சாமர்த்தியமாக வேலை செய்ய முடியாதென்றும் நம்மை விடத் தேர்ந்த கையால்தான் இக் காரியங்கள் நடத்தப்பட்டிருக்க வேண்டுமென்றும் நான் சொன்னபோது தாங்கள் அதை நம்பவில்லை. இப்போதாவது தங்களுக்கு அர்த்தம் ஆகிறதா பாருங்கள்.

உடனே இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடவர்கள் அக் கடிதத்தை அவசரமாக வாங்கி வாசித்தார். அதில் பின்னல் சொல்லும் விஷயங்கள் வரையப்பட்டிருந்தன:

கோவிந்த நிலயம்
திருவல்லிக்கேணி 24—3—

போலீஸ் கமிஷனர் துரையவர்களுக்கு,
எழும்பூர்.

அன்பார்ந்த கனம் ஐயா,

தாங்கள் நேற்றைய தினம் பல தடவைகளில் என்னிடம் நேரில் பேச வேண்டுமென்று டெலிபோன் மூலமாய்க் கூப்பிட்டதாகவும் நான் வீட்டில் இல்லாததால் எனது வேலைக்காரன் நான் வீட்டில் இல்லையென்றும் எப்போது திரும்பி வருவேனென்று தெரியாதென்றும் சொன்னதாகவும் தெரிந்துகொண்டேன். நான் நேற்று இரவு வீட்டிற்கு வரும்போது மணி பதினென்று ஆகையாலும், அந் நேரத்தில் வந்து தங்களை நித்திரையிலிருந்து எழுப்ப இஷ்டப்படவில்லை ஆதலாலும், இன்று காலையில் வர எனக்குச் சௌகரியம் இல்லாததாலும் தங்களை உடனே வந்து பார்க்காததைப்பற்றி மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நான் சென்ற பதினைந்து தினங்களாகத் தாங்கள் இப்போது முக்கியமான கேஸ்களாகக் கருதும் ருக்மிணி பாங்கியின் திருட்டைப்பற்றியும் ருக்மிணி பாங்கியின் வெளி வீட்டில் நடந்த கொலையைப்பற்றியும் விசாரித்துக் கொண்டிருப்பதோடு அநேகமாகத் துப்பும் துலக்கிவிட்டேன். நான் நினைக்கிறபடி எல்லாம் சரியாக நடந்தால், இன்னும் 48 மணி நேரத்திற்குள் தங்களுக்குச் சமாதானமாகும்படி சகலமும் ருஜுப்படுத்துகிறேன். நிற்க; எனது நண்பர் இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடவர்கள் முந்தா நாள் இரவும் நேற்றுப் பகலும் ரங்கநாத், லக்ஷ்மி, போலிப் போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலியவர்களையும், அவர்கள் ஏறிப் போன வண்டியையும் தேடி அதிகமாக அலுத்திருக்கிறார்கள் ஆதலால் அவர்களுக்கு மூன்று தினங்களுக்கு ரஜா கொடுக்கும்படியாகவும் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்று தினங்களுக்குள் அந்த வண்டியிலேயே ஏற்றிக் கொண்டுபோய் சகலமும் நேரில் காண்பிக்கிறேன் என்று தயவுசெய்து அவரிடம் சொல்லுங்கள். எல்லாவற்றிற்கும் மேல் அவரை ஏமாற்றிவிட்டும் அவருடைய துப்பறியும் போலீஸ் வீரனைக் கட்டிவிட்டும் போன, போலிப் போலீஸ் இன்ஸ்பெக்டர்பேரில் அவர்களுக்கு அதிகக் கோபம் இருக்கும். அந்தப் போலிப் போலீஸ் இன்ஸ்பெக்டர் நேரில் விவரித்துச் சொல்லிய பின்தான் அவர் செய்தது நியாயமா அல்லவா என்று அவருக்குத் தெரியும். அதுவரையில் கோபத்தை அடக்கிக்கொண்டு, நாளை மாலை 6 மணி முதல் 10 மணி வரையில் எங்கும் போகாமல் இருக்கச் சொல்லுங்கள். அநேகமாக நாளை இரவே அவருடைய சந்தேகங்களைத் தீர்க்கக் கூடும். கடைசியாக எப்போது வேண்டுமானாலும் போலீஸிலுள்ள எந்த உத்தியோகஸ்தர்கள் உடையையும் அணியலாம் என்றும் அவ் வுடையுடன் அமல் செலுத்தலாம் என்றும் எனக்குத் தாங்கள் கொடுத்திருக்கும் உத்தரவை அநுசரித்து, சனிக்கிழமை சாயங்காலம் நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் உடையைத் தரித்துப் போன விஷயத்தைத் தங்களுக்கு இப்போது தெரிவித்துவிட்டேன்.

அவ் வுடை அணிந்த 48-மணி நேரத்திற்குள் தெரிவிக்க வேண்டும் என்னும் நிபந்தனையின்படி இன்று சாயங்காலந் தான் 48-மணி நேரம் ஆகும். ஆகையால் போலிப் போலீஸ் இன்ஸ்பெக்டர், சட்டத்திற்கு விரோதமாக நடந்துகொள்ளவில்லையென்று ஸ்ரீமான் சுப்பராயலு நாயுடு அவர்களுக்குத் தெரிவித்துவிடுங்கள். தாங்கள் வாரன்டு எடுத்த மூன்று நபர்களையும் தாங்கள் வேண்டும்போது ஆஜர்ப்படுத்த நான் ஜவாப்தாரியாக இருக்கிறேன். ருக்மிணி பாங்கியின் திருடர்களும் கொலை செய்த நபரும் எனது பார்வையிலேயே இருக்கிறார்கள். நாளை இரவு 8-மணிக்குமேல்

தயவுசெய்து தாங்கள் வேறு வேலைகள் வைத்துக்கொள்ளாமல் தங்கள் பங்களாவிலேயே இருக்கக் கோருகிறேன். அவ் வேலையைத் தவிர வேறு வேலையாகத் தாங்கள் என்னைப் பார்க்க விரும்பினால் தயவுசெய்து எப்போது டெலிபோன் மூலமாகக் கூப்பிட்டு என் வேலைக்காரனிடம் சமாசாரம் தெரிவித்தாலும் 3-மணி நேரத்துக்குள் நான் தங்களை நேரில் பார்க்கிறேன்.

இப்படிக்கு, தங்கள் நண்பன்,
**கோவிந்தன்.'**

இதை வாசித்துப் பார்த்ததும் சுப்பராயலு நாயுடவர்கள் கோபத்துடன் கடிதத்தைக் கமிஷனர் துரையவர்களிடம் கொடுத்தார். அவர் வாங்கிக் கொண்டு பின்வருமாறு சொன்னார்:

**போலீஸ் கமிஷனர்:** மிஸ்டர் சுப்பராயலு! என்ன, தங்கள் கோபம் இன்னும் தீரவில்லையே! இக் காகிதம் தங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்க வில்லையா?

**சுப்பராயலு நாயுடு:** என்னதான் கெட்டிக்காரனாக இருந்தாலும் என்போன்றவர்களை ஏளனம் செய்வதே அந்தக் கோவிந்தனுக்கு எப்போதும் வழக்கம் ஆகிவிட்டது. அவன் செய்திருக்கும் கேலியைப் படித்துவிட்டு எவ்வாறு சந்தோஷமாக இருக்கக் கூடும்?

**கமிஷனர்:** நாயுடுகாரு! கோவிந்தன் பல தடவைகளில் நாம் கண்டு பிடிக்க முடியாமல் திண்டாடும் கேஸ்களைத் துப்புத் துலக்கி இருக்கிறார் அல்லவா? ஆகையால் அவர் சாமர்த்தியம் நமக்கு இல்லை என்பதை நாம் ஏன் ஒப்புக் கொள்ளக் கூடாது? வாஸ்தவமாக இக் கேசில் கோவிந்தன் வேலை செய்து வருவதே எனக்குத் தெரியாது. தெரிவித்திருந்தால் நாம் இவ்வளவு கஷ்டம் எடுத்துக்கொண்

டிருக்க வேண்டியதில்லை. எல்லாவற்றிற்கும் மேல் இக் கஷ்டமான களவைக் கண்டு பிடித்துவிட்டது எனக்கு மெத்த சந்தோஷம். இரவும் பகலும் இதைப்பற்றிய சிந்தனையால் எனக்குத் தூக்கங்கூடப் பிடிக்கவில்லை. வித்து முதலில் ஏற்பட்டதா? செடி முதலில் ஏற்பட்டதா? வித்து இல்லாவிட்டால் செடி எப்படி முளைக்கும்? செடி இல்லாவிட்டால் வித்து எங்கிருந்து வரும்? என்பதைத் தீர்மானிப்பது எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டம் இந்தக் கேஸ்.

எப்படியெனில், ராகவனிடத்தில் ஒரு சாவி, ரங்கநாத்திடம் ஒரு சாவி; இந்த இரண்டு சாவிகள் இல்லாவிட்டால் பெட்டி திறக்க முடியாது. ராகவன் பாகஸ்தன்; அவருக்கு எந்த விதமான பணக் கஷ்டமாவது இடைஞ்சலாவது இல்லை. பாங்கி விருத்தியானல்தான் அவருக்கு அநுகூலம். ஆகையால் அவர் ரங்கநாத்துடன் சேர்ந்து திருடப் பிரமேயமே இல்லை. மேலும் ரங்கநாத்துடன் சேர்ந்திருந்தால் அவர்பேரில் சந்தேகப்பட மாட்டார். ஆகையால் அவர்கள் இருவரும் சேரக் காரணம் இல்லை. ரங்கநாத் நோட்டுகள் வைத்ததை ராமன் பார்த்ததாகச் சொல்லுகிறுன். பின், தனியாக ரங்கநாத்தும் எடுக்க முடியாது. எப்படியாவது ரூபாய்கள் போனது போனதுதான். எந்தப் பக்கத்திலிருந்து பார்த்தாலும் இன்னார்தான் திருடியிருக்கக் கூடும் என்று சொல்லச் சாத்தியம் இல்லை. பூட்டுகள் பூட்டியபடி இருப்பதால் வெளித் திருடர் வரவில்லை. பின் யார்தான் திருடி இருப்பார்கள்? இன்று முதல் சௌக்கியமாகத் தூங்குங்கள்; இன்னும் இரண்டொரு தினத்தில் மிகவும் சுலபமாகக் கோவிந்தன் விவரித்துச் சொல்லுவார். நாம் ஆவென்று வாயைத் திறந்துகொண்டு சந்தோஷமாகக் கேட்க வேண்டியதுதான். அப்பால் இவ்வளவு சுலபமான வழி நமது புத்திக்கு ஏன் முன்னல் தெரியவில்லை என்று நினைக்

கப்போகிறோம். நீரும் சந்தோஷமாக இரும். ஏன் பொறுமை? நமது சக்தி அவ்வளவுதான்.

அப்பால் கோவிந்தன் கேட்டுக்கொண்டபடியே இன்ஸ்பெக்டருக்கு ரஜா கொடுத்து வீட்டிலேயே இருக்கச் சொன்னார். "ஒரு வேளை திடீரென்று கோவிந்தனுக்கு நமது உதவி தேவை இருக்கும். ஆகையால் அவர் சொன்ன பிரகாரம் வீட்டிலேயே இரும்" என்று சொல்லி அனுப்பி விட்டார். நிற்க; கோவிந்தன் தன் வீட்டிற்கு ரங்கநாத்தையும் லக்ஷ்மியையும் அழைத்துப் போனார். போனவுடன், லக்ஷ்மிக்குப் புத்தி ஸ்வாதீனம் இல்லாமல் சிதறிப் போயிருந்ததால் அவளை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி தன் பத்தினியிடம் ஒப்பித்துவிட்டு ரங்கநாத்தைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டார்.

**கோவிந்தன் :** ஐயா ரங்கநாத்! நான் கேட்கும் கேள்விகளுக்குத் தயவுசெய்து உண்மையான பதில் அளிக்க வேண்டும். சங்கோசப்பட்டுக்கொண்டு எதையும் மறைக்க வாவது மாற்ற வாவது கூடாது. இப்போதே எனக்கு அதிகமாகத் தங்கள் காரியாதிகள் தெரியும். ஆகையால் நான் அரை குறையாகச் சந்தேகப்படுகிற கேள்விகளை மட்டும் கேட்கிறேன். தயவுசெய்து முன்பின் யோசியாமல் சரியான பதில் உரையுங்கள்.

**ரங்கநாத் :** சாயங்காலம் தாங்கள் காகிதம் என் கையில் கொடுத்தவுடனேயே நான் உண்மையை ஒளிக்காமல் சொல்வதாக வாக்களித்தேன். தங்களுக்கு இன்னும் சந்தேகம் ஏன்?

**கோவிந்தன் :** பாங்கியில் களவு போனதாகக் கண்டு பிடித்ததற்கு முந்திய இரவு நடந்த விஷயங்களை விவரமாகச் சொல்லக் கோருகிறேன். முக்கியமாகத் தாங்கள் லீலா

வதியின் வீட்டிற்குப் போனபின் நடந்த விஷயங்களைத் தான் சொல்ல வேண்டும்.

**ரங்கநாத்:** லீலாவதி மெத்தவும் யோக்கியதை யுள்ள ஒரு மாது. அவள் பிறந்ததுமுதல் கஷ்டதசையிலேயே இருந்தவள். ஆயினும் அவளுக்கும் இவ் விஷயங்களுக்கும் சம்பந்தம் இல்லாததால் தயவுசெய்து அவளைப்பற்றிய விஷயங்களைச் சொல்லாததற்கு மன்னிக்கக் கோருகிறேன்.

**கோவிந்தன்:** ரங்கநாத்! லீலாவதியைத் தங்களுக்குத் தெரிந்ததைவிடப் பதின்மடங்கு எனக்கு நன்ருகத் தெரியும். அவள் யோக்கியதை உள்ளவளா அல்லவா என்பதைப் பற்றி நாம் கவனிக்க வேண்டிய பிரமேயம் இல்லை. நமக்கு அதைப்பற்றி அவசியமும் இல்லை, திருட்டைக் கண்டு பிடித்த அன்று தாங்கள் விசனத்துடன் அவள் வீட்டிற்குச் சென்றபோது தங்கள் துயரத்தை மாற்றுவதற்காக அவள் தங்களைப் பலாத்கரிக்க ஆரம்பித்ததில் இருந்தே அவள் யோக்கியதை நன்ருகத் தெரிகிறதல்லவா?

ரங்கநாத் மிகவும் ஆச்சரியப்பட்டு, தனக்கும் லீலாவதிக்கும் ஏகாந்தத்தில் நடந்த பேச்சுகள் கோவிந்தனுக்கு எவ்வாறு தெரிந்ததோ என்று திக்பிரமை கொண்டு கேட்டார். அதற்குக் கோவிந்தன், வார்த்தை வளர்ப்பதில் பிரயோஜனம் இல்லை என்றும், தாம் லீலாவதியையும் ரங்கநாத்தையும் திருட்டுப் போனது முதல் கவனித்து வருவதாகவும், ஆகையால் தமக்குச் சகல சங்கதிகளும் தெரியும் என்றும் அதற்கு முன்ஞல் உள்ள விஷயங்களை ஒளிக்காமற் சொல்ல வேண்டும் என்றும், ஒளித்தால் துப்புத் துலக்குவது கஷ்டமாகும் என்றும் சொன்ஞர். அதற்கப்பால் ரங்கநாத் சொல்லுவதாக ஒப்புக்கொண்டு பின்வருமாறு கூறிஞர்.

ரங்கநாத்: பாங்கியில் களவு போவதற்கு முன் சில தினங்களாகப் பேச்சு வாக்கில் லீலாவதி, பாங்கியின் இரும்புப் பெட்டியைப்பற்றியும் அதைத் திறக்கும் வழிகளைப்பற்றியும் பேசிக்கொண்டே இருந்தாள். நான் அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லி வந்தேன். திருட்டுப்போன முந்திய நாளுக்கு முந்திய நாள் இரவு, வழக்கம்போல் லீலாவதியின் வீட்டிற்குப் போனபோதும் அப்படியே பூட்டுகளைப்பற்றிப் பேசிவிட்டு, அப்போது போட்டிருக்கும் பூட்டைத் திறக்கும் பெயர் என்ன என்று கேட்டாள். அந்தப் பெயரை எனக்கும் ம-ா-ா-ஸ்ரீ ராகவனுக்கும் தவிர மற்றவர்களுக்குத் தெரிவிக்கக் கூடாதென்று சொன்னேன். எனக்குக் கூடவா சொல்லக் கூடாது. நான் என்ன உங்கள் பாங்கியின் இரும்புப் பெட்டியைத் திறந்துவிடுவேனு?' என்று லீலாவதி கேட்டாள்.

'எவ்வளவு அந்தரங்க மானவர்களுக்கும் தெரிவிக்கக் கூடாது. ஆகையால் அதைப்பற்றி வருத்தப்படாதே' என்று சொல்லிவிட்டேன். அப்போது நாடகக் கம்பெனிகளையும் அக் கம்பெனிகளில் இருக்கிற நடிகர்கள், பெண்களை வெகு தந்திரமாகக் கெடுத்துவிடுவதில் மிக்க தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பதையும், அவர்களை மன்னுதி மன்னர்கள் என மயங்கி மானம் உள்ள பெண்களில் அநேகர் மதிமோசம் ஆகி இருப்பதையும் பணக்காரர்களிற் பலர் கைமாற்ருகவும், கடனுகவும் அடகு வைத்துக்கொள்ளும்படியாகவும் பை பையாக ரூபாய்களும் நகைகளும் தந்து ஏமாறிப்போயிருப்பதையும் குறித்து வெகு நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, 'நாளை நாம் நாடகத்திற்குப் போவோமா? என்று கேட்டாள்.

நாடகத்திற்குப் போவதில் எனக்குப் பிரியம் இல்லாவிட்டாலும், சிற்சில புண்ணிய சரித்திரங்களைத் தவிர்த்துட்

பெரும்பான்மையும் நாடகங்களுக்குப் பெண்கள் போவது தகுதி அல்ல என்பது என் அபிப்பிராயம் ஆதலால், அவள் கோரிக்கையைப் பூர்த்தி செய்கிற ஒரு நிமித்தமாக மட்டும், 'அப்படியே போவோம்' என்றேன். 'தாங்கள் தயவு செய்து பாங்கி மூடின உடனே மிகத் துரிதமாக இங்கே வந்துவிடுங்கள். நாம் இங்கேயே சாப்பிட்டுவிட்டு நாடகத்திற்குப் போவோம்' என்றாள். அதற்காகவே நான் அத்தனை விரைவாக ம-ா-ா-ஸ்ரீ ராகவனை அழைத்துப் பூட்டுப் போடச் சொல்லிவிட்டு, ஐந்து நிமிஷங்களில் ரெயிலில் ஏறி உடனே வந்தேன்.

வந்ததும் நாடகத்திற்குப் போகும்போது சாப்பாடு சாப்பிட்டு விட்டுப் போனால் பின்னால் தூக்கம் இல்லாததால் ஒருவேளை அஜீரணம் உண்டாகும் என்று நினைத்துக் 'கிரி' செய்து வைத்திருப்பதாயும் அதைச் சாப்பிட்டுப் போவோமென்றும் சொன்னாள். நானும் சம்மதிக்கவே, அவளும் நானுமாக, 'கிரி' சாப்பிட்டோம். கிரி வெகு ருசியாக முந்திரிப் பருப்பு, பாதம் பருப்பு, குங்குமப் பூ, சாரப் பருப்பு, முதலியவைகள் போட்டுச் செய்யப்பட் டிருந்ததால் பிரம்மானந்தமாக இருந்தது. இன்னும் ஒரு டம்ளர் வாங்கிச் சாப்பிட்டேன். சாப்பிட்டதும் ஒரு விதமான உத்ஸாகத்தா அப்படியே சோபாவில் உட்கார்ந்துல் சாப்பிட்டபடியே சோபாவில் தூங்கிவிட்டேன். எனக்கு வாய் சுத்தி செய்ததாக் கூட ஞாபகம் இல்லை.

**கோவிந்தன்:** சரி! ஆனால் அன்று நாடகத்திற்குப் போகவே இல்லைபோல் இருக்கிறது.

**ரங்கநாத்:** நான் அயர்ந்து தூங்கிவிட்டதால் என்னை எழுப்பிச் சங்கடப்படுத்தி நாடகத்திற்கு அழைத்துப் போவதைவிட் இன்னொரு நாள் நாடகம் பார்த்துக்கொள்ளலாம் என்று இருந்துவிட்டதாக லீலாவதி சொன்னாள்.

பெண்கள் தாங்கள் விரும்பியபடி எவர்களுக்கு எவ்வித மான இடைஞ்சல் உண்டானாலும் அதைப் பொருட்படுத் தாமல் தாங்கள் கோரியபடியே நடக்கிற, பொதுவான பெண் தன்மைக்கு மாறாக லீலாவதி என் சௌகரியத்தை உத் தேசித்து அவள் கோரிக்கையை மாற்றிக்கொண்டது எவ்வளவு சிலாக்கியமான குணம் பார்த்தீர்களா? பெண் என்றால் அவள் அல்லவா பெண்.

**கோவிந்தன்:** உண்மைதான்! அவளைப்போல் பெண் அகப்படுவது கஷ்டமே! அவளுடைய அதி சிலாக்கியமான உண்மைக் குணத்தைத் தாங்கள் இன்னும் நன்கு அறியீர் கள். நான் தங்களுக்கு ருஜூப்படுத்திய பின்தான் தங்க ளுக்குத் தெரியப் போகிறது. அது இருக்கட்டும். தாங்கள் கிரி சாப்பிட்டுக்கொண் டிருந்தபோது என்ன பேசிக்கொண் டிருந்தீர்கள்?

**ரங்கநாத்:** வழக்கம்போல் எங்கள் இரும்புப் பெட்டியின் பெருமையையும், அதை வாங்கிய ம-ா-ா-ஸ்ரீ ராகவனுடைய புத்தி சூட்சுமத்தையும், கடைசியாக அந்தச் சூட்சுமத்தைக் கண்டு பிடித்து அந்த இரும்புப் பெட்டியைச் செய்த கம்பெ னியின் திறமையையும் சற்று வர்ணித்துக்கொண் டிருந் தாள். அப்பால் அப் பெட்டியைத் திறக்க எவராலும் சாத் யப்படாதென்றும் சொன்னாள்.

**கோவிந்தன்:** கடைசியில் அவள் கேட்டது என்ன?

**ரங்கநாத்:** இரும்புப் பெட்டி என்ன பேரால் பூட்டப்பட் டிருக்கிறதென்றோ என்னமோ, திட்டமாகத் தெரியவில்லை.

**கோவிந்தன்:** தாங்கள் அக் கேள்விக்கு பதில் உரைத் தீர்களா?

**ரங்கநாத்:** லீலாவதி கேட்ட கேள்வியே எனக்குத் தெரி யாதபோது நான் பதில் உரைத்ததை எவ்வாறு சொல்லக் கூடும்?

கோவிந்தன்: சரி, அதுவரையில் தாங்கள் சகல செலவு களும் செய்து வந்தீர்களே? அவளிடம் ரூபாய்கள் வைத் துக்கொண்டு தங்களைச் செலவு செய்யச் சொன்னாளா? அல்லது உண்மையாகவே அவளிடம் பணம் இல்லையா?

ரங்கநாத்: உண்மையாகவே அவளிடம் பணம் இல்லை. எப்படி யென்றால் ரூபாய்கள் வைத்துக்கொண்டு மறை வாகப் பேச அவளுக்குத் தெரியாது. இப்போது அவளி டம் ரூபாய்கள் இருப்பதால் என்னைச் செலவு செய்ய வேண்டாமென்று சொல்லிவிட்டதோடு, நான் இதுவரை யில் செலவு செய்திருக்கும் ரூபாய்களையும் திருப்பிக் கொடுக்க வந்தாள். நான் வாங்கமாட்டேன் என்று சொல்லி விட்டேன்.

கோவிந்தன்: தாங்கள் இதுவரையில் அவள் நிமித்தம் சுமார் எவ்வளவு ரூபாய் செலவழித் திருக்கிறீர்கள்?

ரங்கநாத்: சுமார் ஏழாயிரத்துச் சில்லறை ரூபாய்கள் இருக்கலாம்.

கோவிந்தன்: இதுவரையில் ஒரு காசுகூட இல்லாமல் இருந்தவளால் திடீரென்று எப்படி அப் பெருந்தொகை கொடுக்கச் சாத்தியமென்று யோசித்தீர்களா?

ரங்கநாத்: அவளுக்கு வர வேண்டிய இடத்திலிருந்து ரூபாய் ஐம்பதாயிரம் வந்ததாகவும் ஆகையால் திருப்பிக் கொடுக்க உத்தேசித்த தாகவும் சொன்னாள்.

கோவிந்தன்: அவள் அப்படிச் சொன்னது உண் மையாக இருக்கலாம் என்று தாங்கள் நம்புகிறீர்களா?

ரங்கநாத்: ஏன் நம்பக் கூடாது? அவளைப் பார்க்கும் போதே அவள் சீமாட்டியாக இருக்க வேண்டுமென்று என் மனத்தில் பட்டது. கால வித்தியாசத்தால் ஏதோ கஷ்ட தசையில் இருப்பதாகவும் கூடிய விரைவில் தன் கஷ்டம்

தீர்ந்துவிடும் என்றும் சொன்னாள். அப்படியே தீர்ந்திருக் கலாம். இதில் ஆச்சரியப்பட வேண்டியது என்ன இருக் கிறது?

கோவிந்தன் : சரிதான். தங்களுக்குத் திருப்திகரமாக இருந்தால் எனக்கும் சந்தோஷந்தான். தாங்கள், 'வெளுத்த தெல்லாம் பால்' என்று எண்ணி, பெண்கள் என்றால் எல் லோரும் பெண்கள் எனக் கருதி மயங்கிவிட்டீர்கள். எதுவும் தனக்குத்தானே கைப்பொருள் நஷ்டப்பட்டு அநுபவித் தால்தான் தெரியும்.

ரங்கநாத்தைப் படுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டுக் கோவிந்தன் லீலாவதியை அழைத்து வந்தபோது அணிந் திருந்த கிழவன் வேஷத்துடன் லீலாவதியை வைத்திருக் கும் இடத்திற்குச் சென்றார். அங்கே அவர் உள்ளே சென்ற தும் லீலாவதி மிகுந்த கோபத்துடன் அவரைப் பார்த்து, "என்னை ஏய்த்து இவ்விடத்தில் கொண்டுவந்து சுமார் ஐந்து மணி நேரமாகச் சிறை வைத்த காரணம் என்ன? நீர் வந்தபின் உம்மைக் கண்டு, கேட்டுவிட்டு நீர் திருப்திகரமான பதில் சொல்லாவிடில், கூச்சல் போட்டால் தெருவில் போகப்பட்டவர்கள் வந்து விடுதலை செய்துவிடுவார்கள். அப்போது என் மனப் போக்கின்படி போய்விடலாம் என்று நினைத்துக்கொண்டு நீர் வரும்வரை சாந்தமாக இருந்தேன். என் சுபாவத்திற்கு, இப்படி ஒரு பக்கத்தில் அடைபட் டிருப்பது கஷ்டமாக இருக்கிறது. தயவு செய்து உடனே விவரமாகத் தெரிவிப்பதாகச் சொன்ன விஷயங்களைத் தெரிவியுங்கள்" என்றாள்.

கோவிந்தன் : லீலாவதி! உன்னை அழைத்து வந்து வைத்த விஷயங்களை விவரமாகச் சொல்லிவிடுகிறேன். அப்பால் நீ உடனே போக வேண்டுமென்று அபிப்பிராயப் பட்டால், நீ கூச்சல் போட்டு வெளி ஜனங்களின் ஒத்தாசை

யால் வெளியே போக வேண்டிய அவசியம் இல்லை. நானே கதவுகளைத் திறந்துவிடுகிறேன். நீ தாராளமாகப் போகலாம். இந்த அறை புதிதாகச் செய்யப்பட்ட செமன்டு ஓடுகளால் கட்டப்பட்டிருப்பதால் நீ எவ்வளவு கூச்சல் போட்டாலும் வெளியில் கேட்கவே கேட்காது. ஆகையால் நான் உன்னை வேண்டுமென்று சிறை வைத்தால் உன்னால் வெளியில் போக முடியாது. அப்படி உன்னைச் சிறை வைக்க வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. நீ நேற்றைய இரவு ஸ்ரீனிவாசன் இருக்கும் ஜாகைக்குப் போனது முதல் ஸ்ரீனிவாசன் அறையில் சுமார் பதினொரு மணி வரையில் இருந்திருப்பதை மூன்று சாட்சிகள் பார்த்திருக்கிறார்கள். ஸ்ரீனிவாசன் இரவு சுமார் பதினொரு மணிக்குத்தான் கொலையுண்டிருக்கிறான். இந்த விஷயங்கள் எல்லாம் போலீசாருக்கு நன்றாகத் தெரியும். நீ வெளியே அடி வைத்தால் உடனே ஸ்ரீனிவாசனைக் கொன்றதாக உன்னைப் போலீசார் கைது செய்துவிடுவார்கள். இந்த அறையை விட மிக்க உறுதியாக உள்ள பெரிய கட்டிடத்திற்கு நீ போக வேண்டியதாக இருக்கும்.

**லீலாவதி:** இந்தச் சமாசாரங்களைச் சொல்லித்தானே என்னை இவ்விடம் அழைத்து வந்தீர்கள். அவைகள் உண்மையென்று எனக்கு எப்படித் தெரியும்?

**கோவிந்தன்:** நெருப்பில் விழுந்தால் சுட்டுவிடும் என்று சொல்லலாம். எப்படிச் சுடும் என்றால் விழுந்து பார்த்தால்தான் தெரியும். அறையில் இருந்து பத்து அடி தூரம் செல்லு முன் உன்னைக் கண்ட எவரும் கைது செய்வார்கள். நீ வேண்டுமானால் போய்ச் சற்றுப் பரீட்சை பார்.

**லீலாவதி:** தாங்கள் சொல்வதை நான் நம்புவது எப்படி? மேலும் என்னை எல்லோருக்கும் எப்படித் தெரியும்?

உடனே கோவிந்தன் அன்று மாலையில் சென்னையில் பிரசுரமான தினசரிப் பத்திரிகைகளில் பலவற்றையும் எடுத்துக் காண்பித்தார். அவைகள் ஒவ்வொன்றிலும் லீலாவதியின் படம் போடப்பட்டு இருந்ததோடு லீலாவதி இருக்கும் இடத்தைச் சொல்பவர்களுக்கு 5,000 ரூபாய் இனும் கொடுக்கப்படும் என்றும், லீலாவதியைக் கண்டு பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 10,000 ரூபாய் போலீஸ் கமிஷனரால் கொடுக்கப்படும் என்றும், விளம்பரம், தடித்த எழுத்துக்களில் போட்டு இருந்ததைக் காண்பித்தார். அவைகளைப் பார்த்தவுடன் வெகு துக்கத்தோடு கோவிந்தனைப் பார்த்து, "ஐயா! நான் இந்தப் போலீஸ் கமிஷனருக்கு என்ன தீங்கு இழைத்தேன்? என்னைப்பற்றி ஏன் இவ்வாறு பரிசளிப்பதாக விளம்பரப்படுத்த வேண்டும்" என்று கேட்டாள்.

**கோவிந்தன் :** லீலாவதி! நான் சொல்லட்டுமா? ருக்மிணி பாங்கியில் திருட்டுப்போனதாகக் கண்டு பிடித்த அன்று இரவு ரங்கநாத் உன்னிடம் வந்திருந்தபோது நீ சரச வார்த்தைகள் ஆடினதாகவும், அதைக் கண்டு ஸ்ரீனிவாசன் மனந் தாளாமல் பொறுமையின்பேரில் நீ இனிமேல் ரங்கநாத்திடம் இப்பேர்ப்பட்ட சரச வார்த்தைகள் ஆடினால் உன்னைக் கொன்று விடுவதாக வர்மித்ததாகவும், உனக்கு உண்மையாக ரங்கநாத்திடம் மோகம் அதிகரித்து விட்டதாகவும், அதற்கு இடைஞ்சலாக இருக்கும் ஸ்ரீனிவாசனை நீ கொன்றுவிட்டால் உன் இஷ்டம்போல் ரங்கநாத்திடம் சரச சல்லாபமாக இருக்கலாம் என்றும் நினைத்து, நீ உன் பழைய திருட்டு நாயகனாகிய ஸ்ரீனிவாசனைக் கொன்றுவிட்டதாகவும் போலீஸ் கமிஷனர் துரை நினைக்கிறார்.

**லீலாவதி :** யார்! ஸ்ரீனிவாசன் என் ஆசை நாயகனா? ஐயோ என் ச...........

கோவிந்தன்: ஏன்? வாக்கியத்தைப் பூர்த்தி செய்யேன்! ஏன் நிறுத்திவிட்டாய்? சொன்னதைப் பூர்த்தி செய்.

லீலாவதி: இல்லை, என் சகோதரனைப்போல் பாவித்து வரும் ரங்கநாத்திடம் என்று சொல்ல வாயெடுத்தேன்.

கோவிந்தன்: சரி! அது எப்படியாவது இருக்கட்டும்; கமிஷனர் துரை ஏன் உன்னைப் பிடிக்க இவ்வளவு பெருந்தொகை இனும் அளிப்பதாகச் சொல்லுகிறார் தெரியுமா? ருக்மிணி பாங்கியில் திருட்டுப்போன ரூபாய்களையும் நகைகளையும் ரங்கநாத் களவு செய்து உன்னிடம் கொடுத்து வைத்திருப்பதாக அவர் நினைக்கிறார். ஆகையால் உன்னைப் பிடித்துக் கொட்டடியில் அடைத்துக்கொண்டு போலீஸ் மரியாதைகள் நடத்தினால் நீ உண்மையைச் சொல்லுவாய் என்றும், உன் மூலமாகக் களவுபோன ரூபாய்களையும் கோபாலபுரம் வைரங்களையும் கண்டுபிடித்துவிடலாம் என்றும் நினைக்கிறார்.

லீலாவதி: ஐயா! தங்களை ஒரு கேள்வி கேட்கிறேன்; அதற்குத் தக்க விடை கொடுக்க வேண்டுகிறேன். தாங்கள் யார்? என்னைப் பிடித்துக் கொடுத்தால் பதினாயிரம் ரூபாய் இனும் கொடுக்கப்படும் என்பதை நன்கு உணர்ந்தும் என்னைப் போலீஸ் கமிஷனர் வசம் ஒப்பிவித்து இனும் பெறுமல் என்னை இங்கே வைத்திருக்கும் தாத்பரியம் என்ன? தாங்கள் ம-ா-ா-ஸ்ரீ, ரங்கநாத்துக்கு நண்பரா? விரோதியா?

கோவிந்தன்: நீ மகா புத்திசாலி என்றும், நியாயத்திற்குக் கட்டுப்படுவாய் என்றும் நான் நினைத்தது சரியாக ஆயிற்று. நீ எந்த நோக்கத்துடன் என்னை இக் கேள்விகள் கேட்டாயோ அந்த நோக்கத்துடனேயே நானும் உனக்கு உண்மையான பதில் உரைக்கிறேன்; கேள். "நான் தான் திருவல்லிக்கேணித் துப்பறியும் கோவிந்தன். நான்

ரங்கநாத் திருடவில்லை என்று நம்பி அதற்கு ஏற்ற சாட்சியங்களைக் கண்டு பிடித்துவிட்டேன். நீ, சென்ற சில நாட்களாக அம் மூவரிடம் போய் உன்னால் ஆன வித்தைகள் எல்லாம் செய்து பார்த்தும் எதுவும் பலிக்காததைப் பார்த்துப் பட்ட வருத்தமும் எனக்கு நன்ருகத் தெரியும். நீ இதற்கு முன் எவ்வாறு நடந்திருப்பினும் இப்போது ரங்கநாத் பேரில் இருக்கும் அபிமானத்தாலோ, அல்லது வேறு எக் காரணத்திஞலோ அவரை நிரபராதி என்று ரூபித்துவிட எடுத்துக்கொண்ட சிரமத்தையும் நான் நன்கு உணர்வேன்.

நீ பெரிய மனது வைத்து எனக்கு இருக்கும் ஒரே ஒரு சந்தேகத்தைமட்டும் நிவர்த்தித்துவிட்டால் நான் ரங்நாத் குற்றவாளி அல்ல என்று ரூபிக்கத் தவறுவதில்லை. உனக்கும் எந்த விதமான நஷ்டமும் சம்பவிக்காமல் செய்கிறேன். நான் ஒரு வார்த்தை சொன்னல் அதில் இருந்து தவறுவது இல்லை என்ற சமாசாரமும் உனக்குத் தெரியும். ரங்கநாத்தின் பெருந் தன்மைக்கும் அந்தஸ்துக்கும் பரோபகாரத்திற்கும் எல்லாவற்றிற்கும் மேல் உன்பால் அவர் நிர்மலமான இருதயத்தோடு நடந்துகொண்டதற்கும் உன்னிடம் அவர் பெறும் கைம்மாறு இதுதான் என்பதை உத்தேசித்தும், எப்படி நீ நடந்துகொள்வது உசிதமோ அப்படி நடந்துகொள். நீ என் சந்தேகத்தை இப்போது நிவர்த்திக்கா விட்டால் இவ்வளவு கண்டு பிடித்த எனக்கு இந்த ஒரு விஷயத்தை ரூபிப்பது கஷ்டம் ஆகாது. இருந்தாலும் நீ சொல்லிவிடுவதில் எனக்குச் சற்றுச் சிரமம் குறைவதோடு நீயும் கஷ்டத்தை அநுபவியாமல் சந்தோஷம் அடையலாம். என்ன சொல்லுகிருய்?

லீலாவதி: தங்களுக்கு எந்த எந்த விஷயங்கள் தெரியும்? சொல்லுங்கள் பார்ப்போம். ரங்கநாத் விஷயத்தில் என் பிராணனைக்கூடத் திரணமாக நினைத்திருக்கிறேன்.

இருந்தாலும் தங்களுக்கு எவ்வளவு தெரியும் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

உடனே கோவிந்தன் தாம் இந்தக் கேஸில் துப்பு ஆராய ஆரம்பித்தது முதல், தாம் கண்டுபிடித்தவற்றை யெல்லாம் விவரமாகச் சொன்னார். லீலாவதி அதிக ஆச்சரிய முற்று, "இவ்வளவு கண்டு பிடித்த பின் என் ஒத்தாசையால் தங்களுக்கு என்ன பலன்?'' என்றாள். "நான் ஊகித்தது சரியா அல்லவா என்று திட்டமாகத் தெரிந்துகொள்வதற்காகத்தான்'' என்று சொல்லித் தமக்கு ஏற்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்வதற்காக உண்மையான பதிலை உரைக்கும்படி அவளிடம் கேட்டார்.

அவள் அவர் கேட்டுக்கொண்டபடியே உண்மையான பதில் உரைத்தாள் என்பது கோவிந்தனுடைய சந்தோஷகரமான முகக் குறிப்பால் தெரிந்தது. அப்பால் லீலாவதி தான் இனி நடந்துகொள்ள வேண்டிய விதம் என்னவென்று கேட்டாள். கோவிந்தன் அப்போது அவள் வெளியிற் போவது அபாயகரமாக முடியுமென்றும் தாம் சொல்லுகிறபடி அங்கிருந்தால் அவளுக்கு எந்த விதமான கஷ்டமும் நேரிடாமல் தாம் பாதுகாத்துக் காப்பாற்றுவதாகவும் தாம் கேட்டுக்கொண்டபடியே நடக்க வேண்டுமென்றும் சொன்னதன்பேரில், கோவிந்தன் வார்த்தையின்படி நடப்பதாக அவள் ஒப்புக்கொண்டாள். தான் ரங்கநாத்தைப் பார்க்கக் கூடுமோ என்று கோவிந்தனைக் கேட்டாள். அவளைப்போலவே ரங்கநாத்தும் வேறோர் இடத்தில் மறைந்திருப்பதால் அவரைப் பார்க்க முயல்வது இருவருக்கும் ஆபத்தை விளைவிக்க ஹேதுவாகும் என்று அவர் சொன்னார்.

## 11. எதிர்பாராத சம்பவங்கள்

'கொலை யஞ்சார், பொய்ந் நாணார், மானமும் ஓம்பார்
களவொன்றோ?—ஏனையவும் செய்வார்'

ருக்மிணி பாங்கியின் வெளி வீட்டில் கொலை நடந்த அன்றைய மறு நாள் இரவு 9-மணிக்குத் தெருவில் ஒருவன், 'வெற்றிலை பாக்கு .பழம் ரொட்டி பிஸ்கோத், வெற்றிலை பாக்கு பழம் ரொட்டி பிஸ்கோத், வெற்றிலை பாக்கு பழம் ரொட்டி பிஸ்கோத்' என்று விற்றுக்கொண்டு போனான். மறுபடியும் மறுபடியும் ஐந்தாறு முறை கூவிக் கொண்டு, போவதும் வருவதுமாக இருந்தானே தவிர வேறு தெருக்களுக்குப் போக வில்லை. யாரோ ஒருவர் கூப்பிட்டு வாங்க வேண்டுமென்று எதிர்பார்த்துக்கொண்டே திரும்பவும் திரும்பவும் அந்தத் தெருவிலேயே சுற்றிக் கொண்டிருந்தான்.

கடைசியாக ஒரு வீட்டின் கதவை ஒருவர் மெதுவாகத் திறந்துகொண்டு ஈனக் குரலுடன்; 'ரொட்டி! ரொட்டி!!' என்று கூப்பிட்டார். தான் எதிர் பார்த்தவர் கூப்பிடுவதைக் கேட்டவுடன் அதைக் கேளாதவன்போல் மெதுவாக, 'யார் கூப்பிடுகிறது? எங்கே?' என்று தள்ளாடிக் கொண்டு கேட்டான்.

'இங்கே வா; இங்கே வா' என்று ஒருவர் கூப்பிடுவதை அப்போதுதான் கேட்டவன்போல், மெதுவாக அந்தத் திக்கில் போனான். அவர் கூபபிட்டு ஆறு ரொட்டிகளும் 4 அணுப் பழமும் வாங்கிக்கொண்டு, 'அப்பா! எனக்கு அரைப் படி பால் தேவை; வாங்கிக் கொண்டுவந்து கொடுக்கிறாயா?' என்றார்.

இந்த இருட்டில் நான் எங்கே போய்ப் பால் தேடுகிறது. இருந்தாலும் செம்பும் ரூபாயும் கொடுங்கள். என்

ளுல் கூடியவரையில் கஷ்டப்பட்டுப் பால் வாங்கி வருகிறேன்; இந் நேரத்தில் பால் அகப்படுமோ என்னமோ தெரியவில்லை' என்று சொல்லிக்கொண்டே அவர் கொடுத்த அரை ரூபாயையும் செம்பையும் வாங்கிக் கொண்டு போய், சுமார் ஒரு மணி நேரம் பொறுத்து வந்து, 'ஐயா பால் வாங்கி வந்தேன்; கதவைத் திறவுங்கள்! ஐயா! ஐயா!' என்று கூவினுன்.

இரண்டு கதவுகளைத் திறந்துகொண்டு மெதுவாக, 'யார் அது?' என்று கேட்டார்.

'நான்தான் ஐயா, பால் வாங்கி வந்தேன்' என்ருன்.

அவர் பாலையும் பால் வாங்கி வந்தவன் கொடுத்த சில்லறை அணு நாலையும் வாங்கிக்கொண்டு பாலில் கொஞ்சம் சாப்பிட்டுப் பார்த்து, 'இவ்வளவு நேர்த்தியான பால் உனக்கு எங்கே கிடைத்தது? என்ருர்.

குரும்பைத் தெருவில்போய், கிட்ட இருந்து, பால் கறந்து, என் எதிரிலேயே காய்ச்சும்படி செய்து வாங்கி வந்தேன். பாவம்! தாங்கள் தனியாக இருக்கிறீர்கள்போல் இருக்கிறது. அதற்காகவே காய்ச்சி வந்தேன்! என்ருன்.

'இதோ இந்த நாலு அணுவையும் உன் கஷ்டத்திற்காக வைத்துக்கொள். காலையிலும் எனக்கு ஒரு படி பால் வாங்கி வந்து கொடுக்கிருயா?' என்ருர்.

'ஐயா! நான் வெகு தூரத்தில் இருப்பவன், காலையில் வருவதானுல் அதிகக் கஷ்டமாகும். மேலும் என் எஜமான் ஊருக்குப் போயிருக்கிருர். வீட்டில் யாரும் இல்லை. அவ்வளவு பெரிய வீட்டில் நான் ஒருவன்தான் தனியாக இருக்கிறேன். என் எஜமானர் ராமேசுவரம், திருவனந்தபுரம் முதலிய இடங்களுக்கு யாத்திரை போயிருக்கிருர். அவர் வர இன்னும் ஒரு மாதம் பிடிக்கும். சாயங்

கால வேளைகளில் வீட்டில் ன் சும்மா இருக்க வேண்டும் என்று வெற்றிலை, பாக்கு, பழம், ரொட்டி, பிஸ்கோத்து கொஞ்சம் வாங்கிக் கொண்டுவந்து விற்று வருகிறேன். பாவம்! தங்களைப் பார்த்தால் நல்லவராகத் தோன்றுகிறது. பெரிய வம்சத்தில் பிறந்தவர்போல் இருக்கிறது. ஏதோ கால வித்தியாசத்தால் இந்த இடத்தில் வசிக்கிறீர்கள்போல் இருக்கிறது. தங்களுக்கு வேலை செய்யவும் யாரும் இல்லை. இந்த இடத்தில் இருந்துகொண்டு கஷ்டப்படுவதைவிட, தங்களுக்கு இஷ்டம் இருந்தால் என் எஜமான் வீட்டில் வந்து இருக்கலாம்.

'நான் பொழுதுக்கும் உங்கள் சௌகரியங்களை அங்கிருந்தே கவனிக்கக் கூடும்; வீட்டிலேயே ஒரு பசு மாடு இருக்கிறது. பால் கறந்து கொடுக்கிறேன். எஜமான்கள் இஷ்டப்பட்டுக் கொடுத்ததைக் கடைசியில் பெற்றுக் கொள்ளுகிறேன். இல்லாவிட்டாலும் பரவா யில்லை. தங்களை என்னுடன் வரும்படி நான் கட்டாயப்படுத்துவதாகத் தாங்கள் நினைக்க வேண்டாம். தங்களுக்கு இஷ்டம் இருந்தால் வாருங்கள்' என்றான்.

அவர், சற்று முன் பின் யோசனை செய்யவே, 'தங்களுக்கு வர இஷ்டம் இல்லைபோல் இருக்கிறது. நான் வெகு தூரம் போக வேண்டி இருப்பதால் உத்தரவு கொடுங்கள்; நான் போகிறேன். காலையில் என்னால் வர முடியாது. நாளைச் சாயங்காலம் வேண்டுமானால் வருகிறேன்' என்றான்.

'உன்னுடன் வருவதற்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் அங்கே வேறு யாராவது வருவார்களோ என்னமோ! வேறு வேலைக்காரர் யாராவது இருக்கிறார்களோ என்று தான் யோசிக்கிறேன்.''

'ஐயா! எனக்கு அர்த்தம் ஆயிற்று. தங்களைப் போன்ற கனவான்கள் தலை கால் தெரியாமல் அமோகமாகப்

பணம் செலவு செய்துவிட்டுப் பெரியவர்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்து வைத்த சொத்துக்களை எல்லாம் விற்றுத் தொலைத்து, அத்துடன் நிற்காமல் மார்வாடிகளிடமும், நாட்டுக் கோட்டை செட்டிகளிடமும் கடன் வாங்கிவிட்டு, அவர்கள் கேட்டுக் கேட்டு அலுத்த பின் கோர்ட்டில் சம்மன் செய்து வாரன்டு எடுத்து ஆளைத் தேடும்போது, இப்படி ஒளிந்துகொண் டிருப்பது வழக்கம். தாங்களும் இப்போது அப்பேர்ப்பட்ட பரிதாபமான நிலைமையில் இருக்கிறீர்கள்போல் இருக்கிறது.

'பாவம்! என்ன செய்யலாம்? தாங்கள் அதைப்பற்றிக் கொஞ்சமாவது பயப்பட வேண்டிய காரணமே இல்லை. எங்கள் எஜமான் வீட்டில், என்னைத் தவிர வேறு யாரும் வரவே மாட்டார்கள். ஒரு காக்காய், குருவிகூட உள்ளே நாடாது. பாவம்! இவ்வளவு சொற்ப வயதுக்குள் தாங்கள் இப்பேர்ப்பட்ட கஷ்டத்திற்கு உள்ளாகிவிட்டீர்களா! தங்கள் பேரில் கொஞ்சமாவது தப்பிதம் இல்லை. இங்கே வயதுப் பிள்ளைகளைக் கெடுப்பதற்கே ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள். அவர்கள் கையில் ஒருவர் சிக்கிக்கொண்டால் பின்னல் இன்சால்வென்ட் கோர்ட்டுக்குப் போகும் வரையில் விடவேமாட்டார்கள்.

'மேலும் இச் சென்னையில் வயதுப் பிள்ளைகளைக் கெடுப்பதற்கென்றே பலவிதமான சாதனங்கள் அமைந்திருக்கின்றன. சென்னையில் வால்டாக்ஸ் ரோட்டில் ஒரு நாடகப் பந்தலும், சால்ட் கொட்டாரில் ஒரு நாடகப் பந்தலும், செங்காங் கடையில் ஒரு நாடகப் பந்தலும், சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு நாடகப் பந்தலும், கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் உள்ள சௌந்தரிய மஹால் என்னும் நாடகப் பந்தலும், விக்டோரியா பப்ளிக் ஹாலில் ஒரு நாடக சாலையும், தங்கசாலைக்கு அருகாமையில் ஒரு நாடகப் பந்தலும்,

மியூசியம் தியேட்டர் என்று சொல்லும் ஒரு நாடக சாலையும் ஆக எட்டு நாடகப் பந்தல்கள் இருக்கின்றன.

"அவைகளைத் தவிர மேல் நாட்டுக் காதலின் ஆபாசங்களைக் காட்டுகிற பையாஸ்கோப் கம்பெனிகளும்; ஸினிமோட்டகிராப் கம்பெனிகளும், மௌன்ட்ரோட்டில், கெயிடி, வில்லிங்டன், எல்பின்ஸ்டன் என்னும் மூன்றும், தங்கசாலையில், கிரௌன் என்று ஒன்றும், புரசைபாக்கத்தில், குளோப் தியேட்டர் என்று ஒன்றும் ஆக ஐந்து கம்பெனிகள், ஒரு நாளைக்கு ஒவ்வொன்றிலும் இரண்டு ஆட்டங்கள் ஆடிக்கொண் டிருக்கின்றன.

"அம்மட்டோ? இடை இடையே சர்க்கஸ் கம்பெனிகளும் வாலாயமாக வந்துகொண்டே இருக்கின்றன. பாட்டுக் கச்சேரிகளுக்கும் காலட்சேபங்களுக்கும் கணக்கு இல்லை. கோகர்ஜான், பார்வதிக்குட்டி முதலிய தூர தேசப் பெண்களை விக்டோரியா பப்ளிக் ஹாலில் கொண்டுவந்து வைத்து வேறே கச்சேரிகள் நடத்துகிறார்கள்.

"இவ்வளவு போதாதென்று ஒவ்வொரு தெருவிலும் குறைந்தது ஒரு டஜன் காபி ஹோட்டல்களும் மிட்டாய்க் கடைகளும் இருக்கின்றன. போலீஸாருக்குத் தெரிந்தும் தெரியாமலும் வாலாயமாகச் சூதாடும் இடங்கள் சிலவும் இருக்கின்றன.

"வயதுப் பிள்ளைகளைக் கெடுப்பதற்கென்றே இவ்வளவு சாதனங்கள் அமைந்திருக்கும்போது உங்கள்மேல் குறை கூறுவதற்கு இல்லையே. கிராமாந்தரங்களில் பவுன் பவுனைச் செலவு செய்தாலும் இந்தத் தமாஷாக்களில் ஒன்று கூடக் கிட்டாது. இந்த விபரீதங்கள்தாம் நாம் முன்னை விட அதிக நாகரிகர்கள் என்பதைக் காட்டுகின்றனவாம்! என்ன பேதைமை!

"தங்களுக்குக் கஷ்டம் வந்த காரணத்தை எனக்குத் தெரிவிக்க வேண்டாம். எவருக்கும் தெரியாமல் எங்கள் எஜமான் வீட்டில் தாங்கள் ஏகாந்தமாக இருக்கலாம். அங்கே தாங்கள் இருப்பதாக எவரும் சந்தேகிப்பதற்குக் கூட இடம் இல்லை. அப்பால் தங்கள் இஷ்டம்" என்றான்.

அவர் வருவதாக ஒப்புக்கொண்டு ஒரு வண்டியை அழைத்து வரச் சொன்னார். பெரியவர் தெருவில் போனதும் ஒரு வண்டி அவர் வரவை எதிர்பார்த்து அவருக்காகவே காத்திருப்பதுபோல் அங்கே நின்றது. அவர் வண்டிக்காரனிடம் பேசிவிட்டு உள்ளே வந்து, "வண்டி கொண்டுவந்து விட்டேன்" என்றார்.

"இந்தத் தெருவில் இந் நேரத்தில் வண்டி அகப்பட்டது நமது அதிருஷ்டந்தான். இதோ வருகிறேன்" என்று சொல்லி, பெரியவரையும் தம்முடன் அழைத்துப் போய்த் துணியால் மூடி வைத்திருந்த சுமார் மூன்றடி உயரம் உள்ள ஒரு வஸ்துவை அவரை எடுத்து வண்டியில் வைக்கச் சொல்லி, வீட்டை மூடிச் சாவியை எடுத்துக்கொண்டு இருவரும் வண்டியில் வந்து ஏறியதும் வண்டி வேகமாகச் சென்றது.

வண்டிககாரன் பெரியவர் சொன்ன அடையாளத்தின்படி ஒரு மாடி வீட்டுக்கு முன் கொண்டுபோய் வண்டியை நிறுத்தினான். பெரியவர் வண்டியில் இருந்து இறங்கியதும், "ஜட்கா வண்டிக்காரனுக்கு எட்டணாக் கொடுத்து அனுப்புங்கள்; நான் கதவைத் திறக்கிறேன்" என்று சொல்லிவிட்டுத் தம் ஜேபியிலிருந்து சாவி ஒன்றை எடுத்துக் கதவைத் திறந்ததும், பெரியவர் வண்டியில் கொண்டுவந்த வஸ்துவை எடுத்து வரும்போதே வந்தவரையும் தம்முடன் அழைத்துக்கொண்டு உள்ளே போனதும் கதவைத் தாழ்ப்பாள் இட்டுவிட்டு அங்கே

வைத்திருந்த பொத்தானை அமுக்கினார். வீடு முழுவதும் வெளிச்சம் ஆகிவிட்டது.

வந்தவர் தாங்கள் இருக்கிறது வெளியில் தெரியுமோ என்று சுற்றிலும் பார்த்தார்.

அப்போது பெரியவர், "ஐயா! தாங்கள் வீட்டிற்குள் வந்தபின்தான் கதவை மூடிவிட்டு வெளிச்சம் விட்டேன். ஆகையால் தாங்கள் இங்கே இருப்பதை யாரும் பார்க்க முடியாது. இப்போது வெளி ஜன்னல்கள் எல்லாம் நன்ருக மூடப்பட்டிருக்கின்றன. வெளி ஜன்னல்கள் மூடியிருந்தாலும் உள் ஜன்னல்கள் வழியாகப் போதிய காற்று வரும். அதுவும் போதாதென்ருல் மின்சாரப் பங்காக்கள் இருக்கின்றன. தங்கள் இஷ்டம்போல் சௌக்கியமாக இருங்கள். இந்தச் சோபாவில் படுத்துக்கொள்ளுகிறீர்களா? அல்லது கட்டிலில் படுத்துக்கொள்ளுகிறீர்களா? தங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள். கதவை மூடிக்கொள்ளுங்கள். நான் சோபாவில் படுத்துக்கொள்ளுகிறேன்" என்ருர்.

அவரும் அப்படியே உள் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு படுத்துக்கொண்டார். அவர் படுத்த அரை மணி நேரத்தில், பெரியவர் குறட்டை விட்டுத் தூங்கினார்.

இக் கதையை வாசிப்போரில் பெரும்பான்மையோர் பழம் விற்று வந்தவர் துப்பறியும் கோவிந்தனென்று நாம் சொல்லாமலே ஏற்கனவே ஊகித்திருப்பார்கள். அவர் இங்கே அழைத்து வந்தவரிடம் ஏதோ கிரகிப்பதற்காக ஹிதம் பேசி, அவருக்குக் கொடுத்த பாலில் மயக்கத்தைக் கொடுக்கும் மருந்தைக் கலந்து கொடுத்து அழைத்து வந்தார். ஆதலால் அவர் மயக்கத்தோடு படுத்து உறங்குவதானார். தமது ஜேபியில் இருக்கும் திறவுகோலால் உள் தாழ்ப்பாளைத் திறந்துகொண்டு வந்து சுமார் ஒரு மணி

நேரமாக வந்தவர் தம்முடன் எடுத்து வந்த வஸ்துவைக் கூர்மையாகச் சோதித்துப் பார்த்து ஜாக்கிரதையாகத் திறந்து பார்த்ததில் எடுத்து வந்த வஸ்து ஒரு காளிகா தேவியின் விக்கிரகம் என்று கண்டார்.

அதன்மேல் போர்த்திருந்த துணியை அவிழ்த்ததும் ஓர் உயிருள்ள தேவதையைப்போல் கண்கள் ரத்த வர்ணமாய்த் தகதகவென நெருப்புப் பொறி பறப்பது போல் ஜோதியாக இருந்தன. அவ்வுருவத்தின் முன் பக்கம் பூராவும் அரை அங்குலச் சுற்றளவுள்ள துவாரங்கள் காணப்பட்டன. அவ் வுருவத்தைத் தொடாமலே முன் பக்கத்தின் வழியாகத் துவாரங்களை உற்று நோக்கியதில் தகதகவென்று மின்னும் கூர்மையான ஈட்டி முனைகள் உட்புறம் இருப்பதுபோல் காணப்பட்டன. சுமார் ஒரு முழ தூரத்திற்கு அப்பால் நின்றுகொண்டு நீண்ட இடுக்கியால் ஒரு ஈட்டியை இழுத்துப் பார்த்தார். அது அசையவே இல்லை.

பின்னல் ஏதோ சூட்சுமம் இருக்க வேண்டுமென்று நினைத்து அவ் வுருவத்தின் பின் பக்கத்தில் போய் நின்று பார்த்தார். அங்கே கடிகாரங்களுக்குக் கொடுக்கும் சாவிபோல் ஒரு சாவியும் ஒரு பொத்தானும் இருந்தன. தூரத்தில் நின்றுகொண்டு கொம்பால் அந்தப் பொத்தானை அமுக்கினர். அமுக்கியதுதான் தாமதம். அதுவரையில் உயிர் அற்று இருந்த விக்கிரகமானது திடீரென்று உயிர் பெற்று எழுந்ததுபோல் ஒருவிதமான பயங்கரத் தொனியுடன் ஒரு முழ உயரம் எழுந்தது. அதன் உடம்பில் உள்ள ஒவ்வொரு துவாரத்தினின்றும் ஒவ்வொரு ஈட்டி வெளி வந்து சிலம்ப வித்தைக்காரன் சுற்றுவதைப்போல சுமார் ஐந்து நிமிஷம் ஈட்டிகளைச் சுற்றிக்கொண்டே இருந்து பின் அசையாமல் நின்றுவிட்டது. மறுபடியும் ஒரு தரம்

சாவி கொடுக்காமல் வயிற்றின் பக்கத்திலுள்ள பொத்தானை அமுக்கினர். அப்போது அந்த உருவமானது செயலற்றுத்தான் இருந்தது.

ஆகையால் சாவி கொடுத்த பின்தான் அவ்வுருவத்தினிடம் செல்வது அபாயமென்றும் சாவி கொடுக்காவிட்டால் அவ் வுருவத்தினிடம் பயப்பட வேண்டிய பிரமேயம் இல்லை என்றும் தெரிந்துகொண்டார். அப்பால் மெதுவாக அவ் வுருவத்தைத் தூக்கிப் பார்த்து, இன்னும் என்ன இருக்கிறதென்று உற்று நோக்கினர். ஒரு பெட்டி இருப்பதாகத் தெரிந்தது. அப் பெட்டியை உருவத்திடமிருந்து மெதுவாக வெளியே எடுத்து, தம்மிடம் தயாராக வைத்திருந்த பல சாவிகளால் திறந்து பார்த்தும் சாவி ஒன்றும் பிடிக்காததால் ஒரு சூட்சும விசையைக் கண்டு பிடித்து, அதை முதலில் அமுக்கிக்கொண்டு பார்த்ததில் சாவி போடும் துவாரம் இன்னொரு பக்கம் இருந்தது. அந்தத் துவாரத்தில் தம்மிடம் இருந்த சாவிகளைப் போட்டுப் பார்த்ததில் அதற்கு ஒரு சாவி சரிப்பட்டுத் திறந்தது. பெட்டியின் கதவைத் தூக்கிப் பார்த்ததில் பல கடிதங்கள் இருந்தனவே ஒழிய வேறு ஒன்றும் இல்லை.

கடிதங்கள் மாத்திரம் வைத்திருந்தால் அதற்கு இவ்வளவு பந்தோபஸ்து வேண்டியதில்லை என்றும், இவ்வளவு ஆபத்திற்குள் அகப்பட்டுக்கொண்டு ஒளிந்து திரியும்போதும் அப் பெட்டியைத் தம்முடன் சுமந்து செல்ல வேண்டிய பிரமேயம் இல்லை என்றும் ஆகையால் அப் பெட்டியில் ஏதாவது சூட்சும அறைகள் இருக்க வேண்டுமென்றும் தீர்மானித்து பெட்டியின் வெளி அளவையும் உள் அளவையும், அளந்து பார்த்ததில் ஒன்றரை அங்குலம் வித்தியாசம் இருந்தது.

பின்னல் அதிக கஷ்டப்பட்டு அந்தச் சூட்சும அறையைத் திறந்து பார்த்ததும் அவர் நாடி வந்த பொருள் அங்கிருக்கக் கண்டார். உடனே அதில் உள்ள வஸ்துக்களை எடுத்துப் பார்த்துவிட்டு எப்படி இருந்ததோ அப்படியே வைத்துக் காகிதங்களை எல்லாம் அடையாளப்படி வைத்து, பெட்டியைப் பூட்டிச் சூட்சுமப் பொத்தானையும் அமுக்கிக் காளிகாதேவியின் பாதத்தில் பெட்டியை வைத்துவிட்டு, காளிகா தேவியின்மேல் மூடியிருந்த துணியையும் போர்த்துவிட்டு வெளியே போய்த் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு படுத்துக்கொண்டார்.

வந்தவர் சௌக்கியமாக இரவெல்லாம் தூங்கிவிட்டுக் காலையில் எழுந்தார். எழுந்ததும் பொழுது விடிந்திருக்கக் கண்டு, திடுக்கிட்டு, அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்தார். எல்லாம் நிசப்தமாக இருந்தது. உடனே தம் பெட்டி இருக்கும் இடத்திற்குப் போய்த் திறந்து, "பெரியவரே! பெரியவரே!" என்ருர். அவர் தயாராகக் கறந்து காய்ச்சி வைத்திருந்த பாலைக் கொண்டுவந்து கொடுத்தார். அவருக்கு ஆட்சேபம் இல்லாவிட்டால் பக்கத்துத் தெருவில் உள்ள காபி ஓட்டலில் இருந்து பொங்கல், உப்புமாவு, இட்டிலி, ஆமவடை முதலியவைகளை ஓர் ஐயரையே எடுத்து வரச் சொல்வதாகச் சொன்னர். அவர் வேறு ஆள் வருவதற்குச் சம்மதிக்காமல் பெரியவரையே வாங்கி வரச் சொன்னர்.

அவர், ஐயரையே வைக்கச் சொல்லித் தொடாமல் எடுத்து வருவதாச் சொல்லிப் போய், அப்படியே கொண்டு வந்து கொடுக்க, தினசரிப் பத்திரிகைகள் அகப்பட்டால் வாங்கி வரச் சொன்னர். பெரியவர் பக்கத்துத் தெருவில் அகப்படும் என்று சொல்லிப் போய் ஐந்து நிமிஷங்களில் சகல பத்திரிகைகளையும் கொண்டு வந்து கொடுத்தார்.

அவைகளை எல்லாம் முற்றும் வாசித்தார். பின், தாம் எழுதுவதற்குக் கொஞ்சம் காகிதம், கவர், மைக்கூடு, பேனா, முதலியவைகள் கொண்டுவரச் சொல்லிக் கடிதம் எழுதினார்:

அன்பார்ந்த கனம் ஐயா,

நாம் தீர்மானித்துக்கொண்டபடி எவ்வளவு நல்ல தனமாகக் கேட்டுப் பார்த்தும் வழிக்கு வராமல் ஒரே பிடிவாதமாக முரண்டினதோடு என்னைக் கொல்லவும் பார்த்தான். தன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லலாம் என்பதற்கு ஏற்பக் காரியங்கள் நடந்தேறி விட்டன. நம்மில் ஒருவரை இழக்கும்படி நேரிட்டதைப்பற்றி இனி விசனப்படுவதில் பிரயோஜனம் இல்லை. தாங்கள் விசனத்தை விடுங்கள். நல்ல வேளையாக ஒரு முட்டாள் கிழவன் எனக்கு அகப்பட்டு, அவன் வீட்டில் சௌக்கியமாக எவருக்கும் தெரியாமல் நான் இருக்கிறேன். அக் கிழவன் எனக்கு வேண்டியவைகளைச் சரிவரச் செய்து வருகிறான். இன்று இரவு எட்டு மணிக்கு நமது ரூபாய்களை எல்லாம் எடுத்துக் கொண்டு இக் காகிதம் கொண்டுவரும் கிழவனுடன் வந்தால் அவன் நான் இருக்கும் ஜாகைக்கு ரகசியமாக அழைத்து வருவான். நாம் முன் தீர்மானித்த பிரகாரம் பங்கு போட்டுக்கொண்டு சமாசாரம் வெளிப்படுமுன் ஓடிப் போய்விட வேண்டும்.

எப்போது நமது லீலாவதியே நமக்கு விரோதமாக ஏற்பட்டு விட்டாளோ இனி இங்கிருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் நமக்கு ஆபத்தை விளைவிக்கும், நாம் இருவரும் இப்போது ஓடிப் போய்விட்டால், கிழவியைப் பின்னால் வர ஏற்பாடு செய்வோம். என் வார்த்தையைத் தட்டாமல் கணக்கு முழுவதையும் எடுத்துக்கொண்டு கணக்குகளின் பிரகாரம் அணா பைசாவுடன் ரொக்கம் எடுத்து வந்தால் இன்று இரவே ஒன்பதரை மணிக்கு ஓடிப் போய்விடலாம்;

தவறக் கூடாது. கிழவரைச் சரியாக எழுரை மணிக்கு மறு படியும் அனுப்புகிறேன். இக் காகிதம் சேர்ந்ததற்குப் பதில் அனுப்பவும். தாமதித்தால் நாம் துன்பத்திற்கு ஆளாவோம்.

இப்போதே லீலாவதியைத் தேட ஆரம்பித்துவிட்டார்கள். அவளைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பதிணுயிரம் ரூபாய் இனம் கொடுப்பதாகவும் பிரசுரித்துவிட்டார்கள்; சனீசுவரன் நமக்கு எப்போதும் துணை செய்யான்! 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும்'. ஜாக்கிரதை! மற்றவை நேரில்.

தங்கள் குமாரன்,
கிருஷ்ணன்.

மேற்சொன்ன காகிதத்தை எழுதி ஒரு பைக்குள் போட்டு நன்ருகக் கோந்து போட்டு ஒட்டிக் கிழவனைக் கூப்பிட்டு, அடையாளம், சொல்லி, காகிதத்தை நேரில் கோபாலாச்சாரியார் கையிலேயே கொடுத்து, பதில் பெற்று வரும்படி அனுப்பினுர்.

பைத்தியக்கார முட்டாள் கிழவனுகிய கோவிந்தன் காகிதத்தை வீட்டுக்குக் கொண்டுபோய்க் கொதிக்கும் தண்ணீரின்மேல் சில நிமிஷ நேரம் வைக்கவே அது திறந்துவிட்டது. கடிதத்தை எடுத்து வாசித்துப் பார்த்து விட்டு, அதைப் படம் பிடித்துக்கொண்டு, மறுபடியும் அந்தப் பைக்குள் போட்டு, கோந்துபோட்டு ஒட்டி, ஜட்கா வண்டி ஏறி, ஜல்தியாகப் போய்க் கோபாலாச்சாரியிடம் கொடுத்தான்.

அவர் அதை வாசித்துப் பார்த்துவிட்டு, 'நீ விரும்பியபடி இன்றிரவு 8-மணிக்கு உன்னைத் தொகையுடன் சந்திக்கிறேன்' என்று எழுதி, பையில் போட்டு ஒட்டி, 'எனது அருமைக் கிருஷ்ணனுக்கு' என்று மேல்விலாசம் போட்டுக் கிழவன் கையில் கொடுத்தார். கிழவனும் வாங்கிக்

கொண்டு போய், தன் வழக்கப்படி திறந்து வாசித்துவிட்டு ஏதும் அறியாதவன்போல் காகிதத்தைக் கொண்டு போய்க் கொடுத்தான்.

வாங்கிப் பார்த்ததும் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டே, 'நீங்கள் என்னைக் கொல்ல நினைத்தீர்கள். நீங்கள் நினைத்தது உங்களுக்கே கெடுதலை விளைவித்தது. இன்று நான் கோடீசுவரப் பிரபு ஆகி ஓடிவிடலாம்' என்று நினைத்துக் கொண்டு உத்ஸாகமாக இருந்தான்.

சாயங்காலம் ஆறு மணிக்கே கிழவனிடம் சொல்லி, வேண்டிய ஆகாராதிகள் கொண்டுவரச் செய்து திருப்தியாகச் சாப்பிட்டுவிட்டுக் கிழவனைக் கூப்பிட்டு, 'சரியாக ஏழுமணிக்கு இங்கிருந்தே நல்ல ஜட்கா வண்டி ஒன்று வைத்துக்கொண்டு இன்று காலையில் கடிதம் கொடுத்தவரிடம் போய், உன் வரவைத் தெரிவித்தால் அவர் பெட்டியுடன் வருவார். அவரை அழைத்துக்கொண்டு விரைவில் வா. வந்ததும் இதோ இந்த நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டுபோய் ஒரு ஜட்கா பிடித்துக்கொண்டு தண்டையார்ப்பேட்டைக்குப் போய் 36-வது நம்பர் பங்களாவாகிய, 'லக்ஷ்மீ விலாசத்தில்' லீலாவதி என்று ஒரு பெண் வசிக்கிறாள். அவளிடம் நான் கொடுக்கச் சொன்னதாக இந்த நோட்டைக் காடுத்து விட்டு வா. அவள் வீட்டில் இல்லாவிட்டால் திருப்பிக் கொண்டு வா. பிறகு பார்த்துக் கொள்வோம்'' என்றார்.

மேற்சொன்ன விஷயங்கள் நடந்த அன்று சாயங்காலம், சாமியார் ஒருவர் ருக்மிணி பாங்கியின் சமீபத்தில் உள்ள தோட்டத்தில் இருந்துகொண்டு தமது மந்திர சக்தியால் அங்குள்ள வேலைக்காரர் கேட்கும் ஆருடங்களுக்கெல்லாம் தக்க பதில் சொல்லிக்கொண் டிருந்தார். அப்போது அங்குள்ள வேலைக்காரி போய், வேதவல்லி யம்மாளை

அழைத்து வந்தாள். அந்த அம்மாள் ஒன்றும் கேட்கா மல் நின்றுகொண் டிருந்தாள்.

அப்போது சாமியார் அவளைப் பார்த்து, "பெண்ணே, ஏன் அநாவசியமாக மனம் வருந்துகிறாய். நீ நினைக்கிறபடி உன் குமாரன் இறந்து போகவில்லை. சௌக்கியமாக இருக் கிறான். பயப்படாதே! என் சொல்லை நம்பு'. என்றார்.

அப்போது அந்த அம்மாள், 'சாமியாரே! நான் நேரில் பார்த்ததை நம்பாமல் உமது சொல்லை நம்பச் சொல்லு கிறீரே! அதை எப்படி நம்புவது என்றாள்.

"நான் சொல்வது அல்ல, ஈசுவர வாக்கு; ஒருகாலும் பொய்க்காது. 'கண்ணாரக் கண்டதும் பொய், காதாரக் கேட்டதும் பொய், தீர விசாரிப்பதே மெய்' என்பதை உண ராமல் ஏன் வீண் கஷ்டப்படுகிறாய். விசனத்தை விடு. இப்போது என்ன? தூரத்தில் இல்லை, இன்று இரவே நீ உன் மகனைச் சந்திக்கப் போகிறாய். அப்போதாவது என் வார்த்தை உண்மை ஆகும் அல்லவா? நீ வீட்டில் சும்மா இருந்தாலும், ஒரு கனவான் வலிய வந்து உன்னை அழைத் துப்போய் உன் புத்திரனைக் காண்பிப்பார்- இன்னும் சில மணி நேரங்களில் இதன் உண்மை தெரியும். நாளை மறுப டியும் வருகிறேன், அப்போது என்ன இனம் கொடுக்கி றாயோ பார்ப்போம்" என்று சாமியார் வேஷம் போட்டு வந்த கோவிந்தன் சொல்லிப் போய்ப் பழையபடி கிழவன் உடையுடன், வீட்டில் வந்திருப்பவருக்குச் சாப்பாடு, பால் முதலியவைகளைக் கொடுத்தார்.

இரவு 7-மணி ஆனதும் வந்தவர் அவரை அழைதது முன் சொன்ன பிரகாரம் 100-ரூபாய் நோட்டைக் கையில் கொடுத்து, கோபாலாச்சாரியை அழைத்து வந்து விட்டதும் தாமதம் இல்லாமல் தாம் சொன்ன வேலையைக் கவனிக்க வேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார். கிழவரும்,

"பெரியவரை அழைத்து வந்து விட்ட உடனேயே ஒரு விநாடி கூடத் தாமதியாமல் ஓடிப் போய்விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு மெதுவாகவும் அங்கே வந்து இருப்பவருக் குக் கேட்கும்படியாகவும், தமக்குள் தாமே பேசிக் கொள் பவர்போல், 'ஜட்கா வைத்துக்கொண்டு போவதற்குப் பதி லாக நடந்தே போனால் அந்த ஜட்காக்காரப் பயலுக்குக் கொடுக்கும் ரூபாய் எனக்கு மிச்சம் ஆகும்; அப்படியே செய் கிறேன்' என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார்.

அங்கே வந்திருப்பவர், 'நல்ல தாயிற்று; லீலாவதி அவ் விடத்தில் இல்லை என்று தெரிந்தே அவனை அனுப்பு கிறேன். அவன் போய் வரக் குறைந்தது 2-மணி நேர மாவது ஆகும். அதற்குள் எனது வேலைகள் முடிவாகி விடும்.

'கிழவா! நீ திரும்பி வந்தால் எனக்கு இவ்வளவு உப காரம் செய்ததற்குப் பிரதியாக உனக்கு என்ன செய்கி றேன் பார்த்தாயா? கஷ்டந்தான், என்ன செய்யலாம்? அதற்காகத்தான் உனக்கு நூறு ரூபாய் நோட் ஒன்றைக் கொடுத்திருக்கிறேன்' என்று தம் மனத்திற்குள் நினைத் துக்கொண்டு வெகு சந்தோஷமாக இருந்தார்.

சாதாரணமாக மனிதன் அதிகமான சிக்கலில் பலமாக அகப்பட்டுக்கொள்கிறபோதுதான், தான் மிகவும் சாமர்த் தியமாக வேலைகளை நடத்தி இருப்பதாகத் தனக்குள் தானே மகிழ்ந்துகொண்டு, தன்னை மெச்சி உச்சிமேல் வைத் துப் புகழ்ந்துகொள்கிறான்; அப்பேர்ப்பட்ட மூடர்களில் இவ னும் ஒருவனே!

சென்னையில் இரவு எட்டு மணிக்கு அந் நேரத்தைத் தெரிவிக்கும் குண்டு போடுவது வழக்கம். அந்தக் குண்டு போட்டதுதான் தாமதம். தெருவில் ஒரு ஜட்கா வண்டி வந்து நின்றது. அந்த வண்டியில் இருந்து

கோபாலாச்சாரியார் ஒரு கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு இறங்கினார். கிழவர் அவரை உள்ளே அழைத்துப் போய்க் கதவை லேசாகத் தட்டினார். உள்ளே இருந்தவர் திறந்ததும், கோபாலாச்சாரியாரை உள்ளே போகச் சொல்லிவிட்டு, "ஐயா! நான் தண்டையார்ப்பேட்டை போகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொள்ளச் சொல்லிக் கிழவர் போய்விட்டார்.

கோபாலாச்சாரியார் உள்ளே சென்றதும், வீட்டில் இருந்தவர் விளக்கு வெளிச்சத்தின் மறைவில் உட்கார்ந்து கொண்டு கோபாலாச்சாரியாரை நாற்காலியில் அமரும்படி சைகை செய்தார். அவர் உட்கார்ந்துகொண்டதும் அங்கிருந்தவர் பேசாமல் இருப்பது கண்டு, கோபாலாச்சாரி பின் வருமாறு சொன்னார்.

கோபாலாச்சாரி: கிருஷ்ணு! என்னை வருத்தப்பட வேண்டாமென்று மட்டும், தைரியமாகக் காகிதம் எழுதிவிட்டு, நீ துக்க சாகரத்தில் மூழ்கி இருக்கிறாயே; இது நியாயமா? போனவன் போனாலும், இனி இருக்கப்பட்ட நாமாவது சந்தோஷமாக இருக்க வேண்டாமா? அந்த ஸ்ரீனிவாசன் பயலுக்கு எவ்வளவு ஒத்தாசை செய்தோம். அந்தப் பயல் கொஞ்சமாவது நினைத்தானா? 'பாம்புக்குப் பால் ஊற்றி வளர்த்தாலும் ஒரு நாளைக்குக் கட்டாயமாகக் கடிக்கும்' என்பதைப்போல் நாம் தீர்மானித்தபடி நமக்குச் சம பாகம் கொடுக்க வேண்டிய திருக்க வைரங்களை எல்லாம் அபகரித்துக்கொண்டானே! பாவம், லீலாவதி எவ்வளவு தூரம் கெஞ்சினாள். என்னிடம் எத்தனை தடவை வந்தாள். அவனிடம் எத்தனை தடவை போய் வேண்டினாள். மேலும் வைரங்களை எடுப்பதாக நாம் சொல்லவில்லை அல்லவா? அவள், பாவம்! ரங்கநாத்துக்குக் கெட்ட பேர் வரக் கூடாது என்று வைரங்களை இன்னார் அனுப்பினார்கள் என்று தெரி

யாமல் தபால் மூலமாக ராஜேந்திரனுக்கு அனுப்பச் சொல்லி என்ன பாடு பட்டாள்?

வைரங்களை எடுக்கும் விஷயம் தனக்குத் தெரிந்திருந்தால் தான் ஒரு நாளும் இதற்கு உடன்பட் டிருக்கமாட்டாள் என்று சொல்லி, எவ்வளவு தூரம் கெஞ்சிக் கேட்டாள். நிரபராதியான ரங்கநாதத்தின்பேரில் சந்தேகம் ஏற்படாமல் போயிருந்தால் அவள் ஒன்றும் சொல்லி யிருக்கமாட்டாள். ரங்கநாதத்தின்பேரில் ஒரு நாளும் சந்தேகம் ஏற்படாது என்று நாம் மூவரும் அவளுக்குத் தெரிவித்ததால்தான், தான் இதில் சம்மந்தப்பட்டதாகவும், இல்லாவிட்டால் சேரவேமாட்டாள் என்றும் எத்தனை தரம் சொன்னாள். அவள் கேட்டுக்கொண்டபடி வைரங்களை இன்று சாயந்திரத்திற்குள் திரும்ப அனுப்பாவிட்டால், நாளைக் காலையில் போலீஸ் கமிஷனரிடம் போய்ச் சகலமும் சொல்லிவிடுவதாகவும், அதனால், தான் தண்டனை அடைய நேரிட்டபோதிலும் பரவா இல்லை என்றும், கடைசியாக வற்புறுத்திக் கூறிவிட்டுப் போனாளே!

அவள் என்ன ஆனாளோ தெரியவில்லை. இதற்குள்ளாக அவள் போலீசில் தெரிவித்து அவர்கள் நம்மைத் தேடிக்கொண் டிருக்கிறார்களோ என்னமோ? தெரியவில்லை. இதோ இருக்கிறது பணப் பெட்டியின் சாவி, கணக்குப்படி ரூபாய்கள் சரியாக இருக்கின்றனவா என்று பார்.

அங்கிருந்தவர் வாய் பேசாமல் பெட்டியைத் திறந்து நோட்டுகளை எண்ணிப் பார்த்தார். மொத்தம் இருபத்தைந்து லட்சத்து நாற்பதாயிரத்துப் பதினெட்டு ரூபாய்கள் இருந்தன. அவர் எண்ணிக்கொண் டிருக்கும்போதே கோபாலாச்சாரியார் பின்வருமாறு பேசிக்கொண் டிருந்தார்.

**கோபாலாச்சாரி:** நீ முநதா நாள் இரவு வந்து கேட்டபோது அந்த ஸ்ரீனிவாசன் பயல் என்ன சொன்னான்?

வைரங்களைக் கொடுக்கவே மாட்டேன் என்றான்போல் இருக்கிறது. அதன்பேரில் நீ எப்படிச் சரிப்படுத்தினாய்? அநேக நூறு காயங்கள் இருந்ததாகச் சொன்னார்களே. அவ்வளவு காயங்கள் எப்படி உண்டாயின. நீ ஏன் பேசாமல் இருக்கிறாய்? இப்போது வைரங்கள் எங்கே?

அங்கிருந்தவர்: அப்பா! வைரங்கள் அதோ அந்த விக்கிரகத்தின் பாதத்தில் உள்ள பெட்டியில் இருக்கின்றன. அதை எடுங்கள்; பங்கு போட்டுக்கொள்வோம்.

கோபாலாச்சாரி, "பேசியது யார்? ஸ்ரீனிவாசன் குரல் போல் இருக்கிறதே! இப்படி வெளிச்சத்தில் வா. நான் சரியாகப் பார்க்கட்டும்" என்றார்.

ஸ்ரீனிவாசன்: ஐயா! தாங்கள் நினைக்கிறபடி நான் கிருஷ்ணன் அல்ல, ஸ்ரீனிவாசன்தான். வைரங்களை நான் நல்ல தனத்தில் கொடுக்காவிட்டால் என்னை உடனே கொன்றுவிட்டாவது எடுத்து வரும்படி தாங்கள் உத்தரவு கொடுத்து அனுப்பினதாகக் கிருஷ்ணன் சொல்லி, கைத் துப்பாக்கியையும் காண்பித்தான். தெய்வம் என்னைக் காப்பாற்றி, எனக்குக் கேடு நினைத்த அவனைக் கொன்றது.

"ஆகா! கிருஷ்ணா, இறந்தாயா!" என்று முகத்தில் அறைந்துகொண்டு. கோபாலாச்சாரி அழுதார். அப்போது ஸ்ரீனிவாசன், "அவ்வளவு உருக்கம் இந்தப் புத்திரனாகிய ஸ்ரீனிவாசன்பேரில் இல்லையே! இப்போதும் நீர் தகப்பனார் என்று கடைசித் தரம் கேட்கிறேன். நான் முன் சொன்னதுபோல் ரூபாய்களைப் பங்கு போட்டுக்கொண்டு போகிறீரா என்ன?" என்றான்.

கோபாலாச்சாரி: கவைக்கு உதவாத பதரே! அத்தனை வருஷங்களாகக் கஷ்டப்பட்டு, ருக்மிணி ஸ்ரீரங்கத்தில் அவள் தகப்பனாருக்கு எழுதி என்னிடம் தபாலில் போடும்படி

கொடுத்த காகிதத்தையும், ராஜேந்திரன் ருக்மிணிக்கு ஞாபகார்த்தமாகக் கொடுத்து, அவள் கண்ணெடுத்துக் கூடப் பாராமல், ராஜேந்திரன் போட்ட இடத்திலேயே கிடந்த வைர மோதிரத்தையும், தலைக் குட்டையையும் இத்தனை வருஷ காலமாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்து உன்னையும் உன் தாயாரையும் ரங்கூனுக்கு அனுப்பி விளம்பரப்படுத்தி நீதான் ராஜேந்திரன் புத்திரன் என்று நம்பும்படி ருக்மிணி கையெழுத்துப்போல் கஷ்டப்பட்டு எழுதி, கடைசியாக எனது புத்திரியாகிய லீலாவதியை, ரங்கநாத்தை வசப்படுத்தும்படி தூண்டி, அவள் மூலமாக ரங்கநாத் மயக்கத்தில் இருக்கும்போது பேர்ப் பூட்டு இன்ன பேரால் பூட்டி இருக்கிறது என்று அறிந்து, அதிக சிரமத்துடன் சூழ்ச்சி செய்து, ராகவன் மனைவியாகிய கமலம்மாளின் உதவியால் பாங்கியில் இருந்து ரூபாய்களையும் எடுத்து வந்ததோடு, உனக்கு லக்ஷ்மியைக் கொடுக்கச் சம்மதிக்கும்படியும் செய்து-இவ்வளவு உபகாரங்கள் செய்த சகோதரனையும் கொன்றுவிட்டு, என்னையும் ஏமாற்றப் பார்க்கிறாயா? பார்ப்போம் ஒரு கை! நான் கிழவன்; என்னை வஞ்சித்து நீ உயிர் வாழலாம் என்று நினைக்கிறாயா? இனி நான் இருந்தாலும் சரிதான்! இறந்தாலும் சரிதான்! உன் சங்கதிகளைப் போலீசுக்குத் தெரிவிக்காமல் இருப்பதில்லை.

**ஸ்ரீனிவாசன்:** அப்பா! ஏன் இப்படிக் கோபித்துக் கொள்ளுகிறீர்! நீர் இவ்வளவு கஷ்டப்பட்டதற்கு வைரங்களை எல்லாம் நீரே கொண்டு போம்; கூச்சல் போடாதேயும்: உமக்குக் கோடி புண்ணியம் உண்டு.

**கோபாலாச்சாரி:** வழிக்கு வந்தாயா பயலே! உன்னை வஞ்சித்து நான் உன்னைப்போல் கொண்டுபோக மாட்டேன். பாதியை உனக்குக் கொடுத்துவிட்டுப் பாதியை எத்துப் போகிறேன்.

விக்கிரகத்தின் பாதத்தண்டையில் இருக்கும் பெட்டியை அவர் எடுக்கப் போனார். சட்டென்று எழுந்து, ஸ்ரீனிவாசன், ஒரு கொம்பால் சூட்சுமப் பொத்தானை அமுக்கிவிட்டான். அதற்குள்ளாகப் பக்கத்து அறையைத் திறந்துகொண்டு வேதவல்லி அம்மாள், 'விக்கிரகத்திடம் போகாதேயுங்கள், அது கொன்றுவிடும்! போகாதீர்கள்!'' என்று சொல்லிக்கொண்டு ஓடி வந்தாள். ஸ்ரீனிவாசன் பொத்தானை அமுக்கினதுதான் தாமதம். அந்த விக்கிரகம் உயிருள்ள வஸ்துவைப்போல் சீறி, ஒருவிதமான பயங்கரச் சத்தம் போட்டுக்கொண்டு எழுந்தது. அதன் உடம்பு முற்றும் இருந்து வெளிவந்த நூற்றுக் கணக்கான கூரிய ஈட்டிகளால் குத்தப்பட்டதால் கோபாலாச்சாரியார் ஒரு விநாடிக்குள் உருத் தெரியாமல் கொல்லப்பட்டார்.

அதே நிமிஷத்தில் இன்னோர் அறையின் கதவைத் திறந்துகொண்டு லக்ஷ்மி ஓடிவந்து, 'ஸ்ரீனிவாசா! 'உன்னை நான் கல்யாணம் செய்துகொள்ளவே மாட்டேன். அதை விடப் பிராணனையே விட்டுவிடுவேன். ஆகையால் ரங்கநாதத்தைக் கல்யாணம் செய்துகொள்ள உத்தரவு கொடு' என்று நான் அவ்வளவு தூரம் கேட்டும் நீ மறுதலித்துவிட்டதால் நான் இன்னொரு தரம் வேண்டிக்கொள்ள வந்தபோது ருக்மிணி பாங்கியின் வெளி வீட்டில் உன் அறையில் இந்த விக்கிரகத்தின் உதவியால்தானே அவரையும் நீ கொன்றாய். இப்போதல்லவா எனக்கு அவைகள் எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. எனக்குப் புத்தியும் ஸ்வாதீனம் ஆயிற்று'' என்றாள்.

''உடனே ஸ்ரீனிவாசன் உங்கள் இருவரையும் இனி உயிருடன் விட்டால், எனக்கு ஆபத்து வரும். காளிகா தேவிக்குப் பசி அதிகமாக இருக்கிறது, உங்கள் இருவரையும் பலி கொடுத்துவிடுகிறேன்'' என்று இழுத்துக்கொண்டு விக்கிரகத்தண்டை போனான்.

அதற்குள்ளாக விக்கிரகத்தின் பின் பக்கம் இருந்த கதவைத் திறந்துகொண்டு, கிழவன் வேஷத்தோடு வந்த கோவிந்தன் விக்கிரகத்தின் பக்கவாட்டில் ஓர் உதை கொடுக்கவே விக்கிரகம் தலைகுப்புறப் பக்கவாட்டில் விழுந்துவிட்டது. விக்கிரகம் விழுந்ததுதான் தாமதம். சத்தமும் நின்றுவிட்டது. ஈட்டிகளும் உள்ளே போய்விட்டன.

அதே நிமிஷத்தில் இன்னொரு பக்கத்து அறையின் கதவைத் திறந்துகொண்டு வந்த போலீஸ் கமிஷனர் துரையும் இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடுவும் ஸ்ரீனிவாசனைப் பிடித்து விலங்குகள் மாட்டிவிட்டார்கள். அதே விநாடியில் இன்னோர் அறையில் இருந்து ராஜேந்திரனும் ராகவனும் ஓடி வந்தார்கள். லக்ஷ்மி வந்த அறையில் இருந்தே ரங்கநாத்தும் லக்ஷ்மியின் பின்னாலேயே ஓடிவந்தார். கோவிந்தன் மாத்திரம் அவ் விக்கிரகத்தை உதைத்துத் தள்ளியிராவிட்டால் இவ்வளவு பேர் வந்தும் தடுக்கும் முன் லக்ஷ்மியும் வேதவல்லியம்மாளும் அக் காளிகா தேவிக்குப் பலியாகி இருப்பார்கள் என்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகம் இல்லை.

கோவிந்தன் வைரங்கள் இருந்த பெட்டியையும் மேஜையின்மேல் இருந்த நோட்டுக்களின் பெட்டியையும் எடுத்துப் போலீஸ் கமிஷனர் துரையவர்களிடம் கொடுத்து, பத்திரமாக வைத்துக்கொள்ளச் சொன்னார். நாம் எழுதுவதற்கு இவ்வளவு நேரம் ஆயிற்றே ஒழிய இவ் விஷயங்கள் எல்லாம் கண் மூடி விழிப்பதற்குள், உயர்தரமான பார்ஸி கம்பெனியின் நாடகத்தில் காண்பிக்கப்படுகிற அற்புதக் காட்சிகளில் ஒன்றைப்போல், ஒரு விநாடியில் நடந்தேறி விட்டன.

அப்போது வேதவல்லியம்மாள், "அட, கொலைகாரப் பாவி! உன் அண்ணாவையும் அப்பாவையும் கொன்றது போதாது என்று உன் தாயாகிய என்னையும், உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதித்திருந்த லக்ஷ்மியை

யுங்கூடக் கொல்லப் பார்த்தாயே! நீ இன்னும் ஏழு ஏழு நாற்பத்தொன்பது ஜன்மங்களுக்கு நரக பாதையே அநுப விப்பாய்!'' என்று சொல்லிவிட்டுத் தன் பர்த்தாவின் பிரே தத்தின்மேல் விழுந்து ஒப்பாரி வைத்து அழுவதானாள்.

வேதவல்லியின் கண் முன்பாகவே அவளது கணவன் கொல்லப்பட்டுக் கிடக்கிறான். ஏற்கனவே அவளுடைய மற்றொரு மகனும் கொலையுண்டு போனான். உயிரோடு இருந்த ஸ்ரீனிவாசனும் இப்போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டுத் தூக்குத் தண்டனைக்குத் தப்ப முடியாதவன் ஆனான். இவ்வளவு பேர்களும் மகா பரிசுத்தவான் ஆகிய ராஜேந்திரனைக் காலமெல்லாம் வஞ்சித்து, சிறுகச் சிறுக அவரது திரவியங்களை எல்லாம் கொள்ளை கொண்டு அம் மட்டில்கூடத் திருப்தி அடையாமல், ராஜேந்திரன் பெய ருக்கே ஒரு பெரிய களங்கம் உண்டாகும்படியாக, வைரங் களையும் களவு செய்து லக்ஷக்கணக்கான தொகைகளையும் அபகரித்து, இவ்வளவு அக்கிரமங்களை நடத்திவிட்டு, தாங் கள் அவற்றைக் கொண்டு சுகமாகப் பல நூறு வருஷங்கள் வரையில் வாழ்ந்திருக்க நினைத்தார்கள்.

இங்கேதான் நமது வாசகர்கள் முக்கியமாக அறிந்து கொள்ள வேண்டிய படிப்பினை ஒன்று இருக்கிறது. இவ் வளவு தூரத்திற்கு அவர்களின் தீச்செயல்கள் தங்கு தடை இன்றி, நிர்விக்கினமாக யாதொரு இடையூறும் இல்லாமல், தெய்வமே அவர்கள் பங்கில் இருப்பதாக அவர்கள் கருதும்படியாக அவர்கள் நினைத்தபடி எல்லாம் நடந்து விடும் வண்ணமாகச் செய்வித்து வந்த கடவுள் - அவர்கள் எவ்வளவு தூரம் பாவ மூட்டைகளைச் சுமந்துகொள்ள முடி யுமோ அவ்வளவுக்கும் தாராளமாக விட்டுக்கொடுத்து வந்த கடவுள்-கடைசியில் ஒரே அடியாக அவர்கள் அத்தனை பேரையும் பாதாள லோகத்தில் அமிழ்த்தி, அவர்களுக் குள்ளாகவே விரோதங்களும் கொலைகளும் உண்டாக

வைத்து, அகப்பட்டுக்கொண்டு அழியும்படி செய்து அதோகதிக்கு ஆளாக்கிவிட்டார். துஷ்டர்கள் ஆரம்பத்தில் மிகச் சிறப்புடன் வாழ்வதுபோல் காணப்பட்டாலும், அந்த வாழ்வு நீடித்து நில்லாது என்பது நிச்சயம்.

பகவான் இக் கலி யுகத்திலும்-அடுத்த ஜன்மத்தில் அல்ல-இந்த ஜன்மத்திலேயே அவரவர்களுக்கு ஏற்றபடி படி அளக்கிறார் என்பதை நாம் இங்கே அறிய வேண்டியது அவசியம்.

கிருஷ்ணவதாரத்தில் இதே விதமாகக் கம்சன் தேவகியினுடைய குழந்தைகளை எல்லாம் கொல்லும் வரையில் பொறுத்திருந்து அவனது பாவ மூட்டை, போதும் என்று ஆய்விட்ட சமயத்தில் இமைப்பொழுதில் அவன் வாழ்வை அழித்து மாய்த்துத் தீர்த்தார். ராமாவதாரத்திலும் பொறுத்துக் காத்திருந்து, கடைசியில் ராவணனைக் குலத்தோடு சர்வ நாசம் செய்தார். தங்கள் அக்கிரமங்கள் எல்லாம் பலித்துக்கொண்டு காரியங்கள் எல்லாம், தங்கள் இஷ்டப்படி நிறைவேறி வருவதாகக் கனவு கண்டு மகிழும் அற்பர்களும் துஷ்டர்களும் கிராதகர்களும் பக்கத்து வீட்டுக்காரர்களும் இதைப் படித்த பின்னாவது நற்புத்தி வரப் பெற்று, இனிமேலாவது நன்னடத்தையில் திரும்பி, நல் வழிப் படுவார்களாக! பிறருக்கு நினைக்கும் கேடு தனக்கு என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. துஷ்டர்களுடைய முடிவெல்லாம் இப்படித்தான் ஆகும். எவர் எவரை ஏமாற்றினாலும் சகல புவனங்கட்கும் அதிபதியாகிய ஸர்வ லோக சக்கரவர்த்தியை-பகவானை-ஏமாற்ற முடியாது. இது திண்ணம்! திண்ணம்!! திண்ணம்!!!

இனி மகா உத்தமர்களான ருக்மிணி, ராஜேந்திரன், ராகவன், நிரபராதியான ரங்கநாத், பரிசுத்த வஸ்துவாகிய லக்ஷ்மி, கமலம் ஆகிய இவர்கள் தம் வாழ்வினையின்

பயனுகப் பல கஷ்டங்களை அநுபவிக்க நேரிட்டபோதி லும், துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலகரான பகவான், இப் போது என்ன விதமான ஏற்பாட்டினை-முடிவை-அவர்களுக் குச் செய்திருக்கிருர் என்று பார்ப்போம்.

---

## 12. கோவிந்தன் விவரித்துச் சொல்லல்

‘தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.’

கோவிந்தனுடைய வீட்டிலே பந்தோபஸ்தான அறை ஒன்றில் ஸ்ரீனிவாசன், கை விலங்கு, கால் விலங்குகளுடன் அடைக்கப்பட்டான். வெளிக்குப் பலமான பூட்டு ஒன்றும் போடப்பட்டது. இவ்விதமே கோபாலாச்சாரியார் கொல்லப் பட்டும், வேதவல்லி அழுதுகொண்டும் இருந்த அறையை யும் பூட்டி அவ்விரு அறைகளுக்கும் போலீஸாரைக் காவல் இருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வளவையும் கோவிந்தன் நிறைவேற்றிவிட்டு, வைரங்கள் இருந்த பெட் டியையும் நோட்டுகள் அடங்கிய பெட்டியையும் கமிஷனரிடம் ஒப்பித்துவிட்டு, எல்லோரையும் ஹாலுக்கு அழைத்து வந்து சோபாக்களில் வீற்றிருக்கும்படி செய்தார். இன்ஸ் பெக்டர் சுப்பராயலு நாயுடு தம் அருகே ரங்கநாத் அமர்ந் ததைக் கடூர திருஷ்டியுடனும் கோபத்தோடும் பார்த்து விட்டுத் தக்ஷணமே எழுந்து வேறு சோபாவில் போய் உட்கார்ந்தார்.

இன்ஸ்பெக்டரவர்களது பரபரப்பைக் கமிஷனர் துரை யவர்கள் பார்த்துச் சிரித்துக்கொண்டு, “என்ன சுப்பராயலு! இன்னும் ரங்கநாத்பேரில் உனக்கு இருக்கும் கோபம் தணியவில்லைபோல் இருக்கிறது” என்ருர்.

உடனே கோவிந்தன், "ஐயா! அவர்களுக்குக் கோபம் இருப்பது நியாயந்தானே! என்பேரில்கூடக் கோபந்தான் இருக்கும். தாங்கள் அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டாம். கோபம் எல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்தில் போய்விடும்'' என்றார். கமிஷனர் துரையவர்கள் கோவிந்தனைப் பார்த்து, "எப்படி இவைகளைக் கண்டுபிடித்தீர்கள்? சொல்லுங்கள்'' என்றார்.

**கோவிந்தன்:** ம-ா-ா-ஸ்ரீ ராஜேந்திரன் அவர்கள் இரும்புப் பெட்டிக்கு இரண்டு சாவிகள் இருக்கிறதென்று சொன்னவுடனே, இப்பேர்ப்பட்ட பெட்டிகளுக்கு இரண்டு வெவ்வேறு சாவிகளுடன், 'மாஸ்டர் கீ' என்று சொல்லும் இரண்டு பூட்டுகளையும் திறக்கும் ஒரு சாவி இருப்பதும் வழக்கம் ஆதலால், அப்பேர்ப்பட்ட சாவி இந்தப் பெட்டிக்கு உண்டா என்று கேட்டதில் ராஜேந்திரன் உண்டு என்றார். அந்தச் சாவியைத் தம் கைப் பெட்டியில் பந்தோபஸ்தாக வைத்திருப்பதாகவும் அந்தப் பெட்டியின் சாவி எப்போதும் தம் பூணூலில்தான் இருப்பது வழக்கம் என்றும் தெரிவித்தார். அப் பெட்டியை வேலைக்காரனை விட்டு எடுத்து வரச் செய்து அவரிடம் இருந்து சாவியை வாங்கி, நானே திறந்து, பூதக் கண்ணாடியின் உதவியால் பார்த்த போது அப் பெட்டியில் உள்ள மற்றக் காகிதங்கள், சாமான்கள் முதலியவற்றின்பேரில் எல்லாம் தூசு படிந்து இருப்பதையும், அச் சாவியைப் போட்டு முத்திரை வைத்திருக்கும் பையின்மேல் மாத்திரம் தூசு இல்லாமல் இருப்பதையும் கண்டு, அந்தப் பையைப் பார்த்ததில் அந்த முத்திரையை வெகு சாதுரியமாக எடுத்துவிட்டு முத்திரை கலையாமல் மறுபடியும் ஒட்டப்பட் டிருப்பது தெரிந்தது.

அதில் இருந்து இரண்டு விஷயங்களை அறிந்தேன். அதாவது இரும்புப் பெட்டியில் இருக்கும் ரூபாய்களையும் வைரங்களையும் எடுப்பதற்கு இந்தச் சாவிதான் உபயோ

இக்கப்பட்டது என்பது ஒன்று. ராஜேந்திரன் எடுத்திருந்தால் அரக்கு முத்திரையை எடுத்து எறிந்துவிட்டு வேறு முத்திரையைத் தாராளமாகப் போட்டிருக்கக் கூடுமென்றும், அப்படிப் போடாமல் அதிக சிரமத்துடன், பழைய அரக்கு முத்திரையை எடுத்து, எடுத்தது தெரியாமல் மறுபடியும் அதையே வைத்திருப்பதால் அதைத் திறந்தது ராஜேந்திரன் அல்லவென்றும் கண்டுகொண்டேன். ஆகவே, அந்தச் சாவியால்தான் பெட்டி திறக்கப்பட்டது என்று தெரிந்துவிட்டது. யார் திறந்தார்கள் என்று கண்டு பிடிக்க வேண்டி யிருந்தது.

அப்பால் ம-ா-ா-ஸ்ரீ ராஜேந்திரனை விசாரித்ததில் அவருக்கு எவ்விதமான பணக் கஷ்டமும் இல்லையென்றும், தனக்கு இன்ன இன்ன பாங்கிகளில் இவ்வளவு இவ்வளவு பெருந் தொகைகள் வர வேண்டி இருக்கிறதென்றும் சொன்னார். அந்தப் பாங்கிகளில் எல்லாம் விசாரித்ததில் அவர் சொன்னது முற்றும் உண்மையெனத் தெரிந்ததால், அவரால் பெட்டி திறந்து எடுக்கப்படவில்லை என்றும் அவருக்குத் திருட்டைப்பற்றிய சமாசாரமே தெரியாது என்றும் திட்டமாய் ஊர்ஜிதப்படுத்திக்கொண்டேன்.

அவருக்குப் பண நெருக்கடி கிடையாது என்றும், ஆனால் ருக்மிணி பாங்கிக்கு மட்டும் பண நெருக்கடி உண்டு என்றும் அதன் கணக்கை அவர் விவரித்துச் சொன்ன போது அவர் குமாரனை ஸ்ரீனிவாசன் பாங்கியிலிருந்து சுமார் பதினைறரை லட்சம் ரூபாய்கள் உண்டியல்கள் கொடுத்து வாங்கினதையும் அந்த ரூபாய்களெல்லாம் கோபாலாச்சாரியார் அண்டு சன்ஸுக்கே போயிருக்கிறதென்பதையும் சொன்னார். உடனே ஸ்ரீனிவாசனையும் கோபாலாச்சாரியார் அண்டு சன்ஸையும்பற்றி விசாரிக்கக் குறிப்பு எழுதிக்கொண்டேன்.

அப்பால் ரங்கநாத் என்ன அவசர ஜோலியாகப் போனார் என்றும், அன்று இரவை அவர் எப்படிச் செலவழித்தார் என்றும் கண்டுகொள்ள வேண்டுமென்று எழுதிக் கொண்டு, அவ்விதமே அவரைப் பின்பற்றிச் சென்று, லீலாவதிக்கும் அவருக்கும் நடந்த சம்பாஷணைகளை எல்லாம் கேட்டேன். அப்பால் கோபாலாச்சாரியார் குமாரனான கிருஷ்ணமாச்சாரி, பாங்கியில் திருட்டுப்போன விஷயம் வெளிக்குத் தெரியாத முன்னமே செய்த ஆர்ப்பாட்டத்தையும், ருக்மிணி பாங்கியார் பணம் கொடுப்பார்களோ கொடுக்க மாட்டார்களோ என்று தம் தகப்பனார் சந்தேகித்துச் சொன்னதாகச் சொன்னதையும், அப்பால் ரங்கநாத்துக்குக் கிருஷ்ணமாச்சாரி பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதாகவும் அதைப் பெற்றுக்கொண்டு எங்காவது ஓடி ஒளிந்து கொள்ளும்படியும் சொன்னதில், அவ்விதமே ரங்கநாத் செய்திருந்தால்-எல்லோரும் ரங்கநாத்தைப் பாங்கியின் களவில் சம்பந்தப்பட்டதால் ஓடிவிட்டதாக நினைக்கக் கூடுமானதால்-அப்படித் தந்திரமாக ரங்கநாத்தின்மீது பழி ஏற்றப் பார்ப்போரது தன்மையும் செயல்களும் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் சிந்தித்ததில், அவர்கள் பேரில் ஏற்கனவே தோன்றிய சந்தேகம் இன்னும் பலப்பட்டது.

ராகவனை அழைப்பித்து அவரிடம் நேரில் பேசியதில் இருந்து அவரும் நிரபராதியாக இருக்கக் கூடுமென்று என் மனத்தில் தோன்றியது. காரணம்: அவர்பேரில் சந்தேகிக்க எவ்வித நியாயமும் இல்லாததுதான். அப்பால் ராகவன் ரங்கநாத்பேரில் சந்தேகித்ததற்குக் காரணங்கள் சொன்னபோது ரங்கநாத்தின் குணம், மூன்று மாத காலமாக மாறி யிருப்பதாகத் தெரிந்தது. அதற்குக் காரணம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அதையும் குறித்துக் கொண்டேன். பிறகு ராஜேந்திரனின் அந்தரங்க வேலைக்

காரனுன ராமனே என்கூட அழைத்துப் போய் விசாரித்த தில் ரங்கநாத்தைக் கல்யாணம் செய்துகொள்ள முடியாது என்று லக்ஷ்மி அதிக வருத்தத்துடன் சொன்னதாகவும் அப்படி அவள் தன் இஷ்டத்திற்கு மாருக நடக்கும்படி யாரோ அவளே எப்படியோ பலவந்தப்படுத்துவதாகவும், அதிலிருந்து தப்புவதற்கு மார்க்கம் இல்லே என்றும் ஆகை யால் அவளுடைய தூண்டுதலின்பேரில்தான் ரங்கநாத் அவரது ஜாகையை வேருக வைத்துக்கொண்டதாகவும், ரங்கநாத் நோட்டுகளேத் திட்டமாகப் பெட்டியில் வைத்த தாகவும், அப்போது எடுத்துப் போகவாவது அப்புறப் படுத்தவாவது சாவகாசம் இல்லாததால், ரங்கநாத் பெட்டி யில் அப்போது வைத்தது நிச்சயந்தான் என்றும் தெரிந்து கொண்டேன்.

மேலும் ராமன் கபட மற்ற பழைய நாள் மனிதன் ஆத லின் அவன் வார்த்தையில் எனக்கு நிச்சயமும் பிறந்தது. அப்படி லக்ஷ்மி சொல்லும்படி ஏற்பட்ட காரணம் என்ன வென்று கண்டு பிடிக்க வேண்டும் என்றும், லக்ஷ்மியும் அவள் தாயாரும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருந்ததாக ராமன் சொன்னதிலிருந்து லக்ஷ்மியின் தாயா ரைப்பற்றிக் கவனிக்க வேண்டுமென்றும் தீர்மானித்தேன்.

அப்பால் ராஜேந்திரன் கைப் பெட்டி வைத்திருக்கும் அறையின் கதவு அவர் வெளியில் செல்லும்போதெல் லாம் பூட்டி இருப்பதாகவும், ராஜேந்திரன் இல்லாத காலங் களில் பல சமயத்தில் ஸ்ரீனிவாசன் அவ்வறையில் இருந்த தாகவும் ராமன் கூறியதால், பேச்சுவாக்கில் ராஜேந்திரன் வெளியே போகும்போது அந்த அறையின் சாவியை எவ ரிடமாவது கொடுத்துப் போவதுண்டா என்று, அவரை நான் கேட்டதில், தாம் ஒரு நாள்கூடப் பூட்டாமலும் சாவி யைத் தன்னுடன் எடுத்துப் போகாமலும் போனதில்லே என்றும், தாம் வெளியே போயிருக்கும்போது தம் அறை

யில் எவராலும் போக முடியாதென்றும், அவர் திட்டமாகச் சொன்னதாலும், ஸ்ரீனிவாசன் ராஜேந்திரனுக்குத் தெரியாமல் திருட்டுச் சாவி போட்டுத்தான் திறந்து போயிருக்க வேண்டுமென்றும், ருக்மிணி பாங்கியில் திருட்டுப் போன முந்தின இரவு ஸ்ரீனிவாசன் அவ்வறையில் இருந்திருப்பதால் அவன்தான் இரும்புப் பெட்டியைத் திறக்கக் கூடிய, 'மாஸ்டர் கீ'யை எடுத்திருக்கலாம் என்றும் ஊகித்தேன்.

அப்பால் ராமனை விசாரித்ததில் ருக்மிணி பாங்கியின் முன் பக்கத்தில் ராமனும் இன்னும் இரண்டு வேலைக்காரரும் படுத்திருந்ததாலும், ராமனைத் தள்ளிக்கொண்டுதான் கதவைத் திறக்கக் கூடுமென்று சொன்னதாலும், முன் பக்கத்தின் வழியாகத் திருட்டுப் போகவில்லை என்றும், ராஜேந்திரன் வீட்டு மெத்தையில் இருந்தோ ராகவன் வீட்டு மெத்தையில் இருந்தோ பாங்கிக்கு வரும் உள் வழியாக வந்துதான் திருடிக்கொண்டு போயிருக்க வேண்டும் என்றும் அந்தச் சத்தத்தைத்தான் ஜடா முனி நடமாடுவதாக வேலைக்காரர்கள் நினைத்துக்கொண்டார்கள் என்றும் ஊகித்து, எந்த மெத்தையின் வழியாகத் திருடர் இறங்கினார்கள் என்று கண்டுபிடிக்க வேண்டுமென்று பதிவு செய்துகொண்டேன்.

அன்றைச் சாயங்காலம் ரங்கநாத்தைப் பின் தொடர்ந்து சென்றதில், ஸ்ரீனிவாசன் ரங்கநாத்தை அவனுக்குத் தெரியாமல் வேவு பார்ப்பதாகவும், போலீஸ்காரன் அவ்விருவரையும் கவனிப்பதாகவும் அறிந்ததோடு லீலாவதியும் ரங்கநாத்தும் பேசியதில் இருந்து லீலாவதி ருக்மிணி பாங்கியின் இரும்புப் பெட்டியைப்பற்றி அடிக்கடி பேசுவதாகவும், ஸ்ரீனிவாசனுக்கும் லீலாவதிக்கும் விசேஷப் பழக்கம் உண்டு என்றும் அறிந்தேன். அத்துடன் பாங்கியில் ரூபாய் திருட்டுப்போன விஷயம் மட்டும் லீலாவதிக்கு முன்கூட்

டியே தெரியும் என்றும் வைரங்கள் போனது தெரியாது என்றும் ஊகித்தேன். அப்பால் லீலாவதிக்குத் திடீரென்று ஐம்பதாயிரம் ரூபாய்கள் எங்கிருந்து வந்ததென்று கவனிக்க வேண்டுமென்றும் குறிப்பு எழுதிக்கொண்டேன்.

'இத் திருட்டை நீங்கள் செய்யவில்லை என்றும், இன்னார்தான் செய்தார்கள் என்றும் நான் ரூபித்தால் அப்போது என்னைக் கல்யாணம் செய்துகொள்கிறீர்களா?' என்று லீலாவதி கேட்டதில் இருந்தும், ரங்கநாத் வெளியே சென்றவுடனே ஸ்ரீனிவாசன் அவளைப் பயமுறுத்தியதில் இருந்தும், திருடினது இன்னாரென்று லீலாவதிக்குத் தெரியுமென்றும் ஊகித்தேன். அன்றைய முதல், ஸ்ரீனிவாசன், ரங்கநாத், லீலாவதி, கோபாலாச்சாரி, லக்ஷ்மி, அவள் தாயார் ஆகிய இவர்கள் எல்லோரையும் நானும் எனது ஆட்களும் வேவு பார்த்து வந்தோம். இரண்டாம் அத்தியாயத்தில் சொன்ன விளம்பரங்கள் வெளிவந்த பத்திரிகைகளின் ஆபீஸ்களில் போய் அவ் விளம்பரங்களைப் போடும்படி கொடுத்தவர்கள் யார் என்று விசாரித்ததில் கோபாலாச்சாரியார்தாம் போடும்படி செய்தாரென்று தெரிந்தது.

அப்பால் ரங்கூனில் இருக்கும் எனது நண்பருக்குத் தந்தி அடித்து வேதவல்லி யம்மாளும் ஸ்ரீனிவாசனும் மாண்ட் கோமெரி ரோட் 111-ம். நெம்பர், வீட்டில் எவ்வளவு காலமாக வசித்து வந்தார்கள் என்றும், எங்கிருந்து வந்தார்கள் என்றும் அவர்களைப்பற்றிய முழு விவரங்கள் விசாரித்து எழுதும்படி கேட்டிருந்தேன்.

அவர் விசாரித்ததில் மேற்சொன்ன வீட்டில் வேதவல்லியும் ஸ்ரீனிவாசனும் ஒரே ஒரு வாரந்தான் இருந்தார்கள் என்றும், அவர்கள் அதற்கு முந்திய வாரத்தில் வந்த, 'ஜைடா' என்னும் கப்பலில்தான் சென்னையில் இருந்து வந்ததாகவும், அதற்கு முன்னாவது பின்னாவது அவர்கள்

ரங்கூன் வந்ததாகத் தெரியவில்லை என்றும் பதில் தந்தி வந்தது.

ஆகவே, வேதவல்லியம்மாள் ராஜேந்திரனிடம் சொன்னவை முற்றும் பொய்யென்று தெரிந்தது. அப்பால் கோபாலாச்சாரியைப்பற்றி விசாரித்ததில் ஸ்ரீரங்கத்தில் இருந்து வந்ததாகத் தெரிந்து, அங்கே போய் விசாரித்ததில் கோபாலாச்சாரியார் அல்லது கோபண்ணு என்பவர் ஒரு தரகர் என்றும், அவர் மனைவியின் பெயர் வேதவல்லி யம்மாள் என்றும், அவருக்கு 2 ஆண் பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருந்ததாகவும், ஸ்ரீனிவாசன் என்ற ஆண் பிள்ளை எட்டு வயதில் எங்கோ ஓடிப்போனதாகவும், லீலாவதி என்னும் புத்திரி, சிறு பிராயத்திலேயே பாலாமணி கம்பெனியில் சேர்ந்து வீட்டைவிட்டு வெளியேறிவிட்டதாகவும் ஆகவே கோபாலாச்சாரியும் அவர் மனைவி வேதவல்லியும் கிருஷ்ணமாச்சாரியும் மாத்திரம் ஸ்ரீரங்கத்தில் இருந்து சில வருஷங்களுக்கு முன் சென்னை சென்றதாகவும் அறிந்தேன்.

வேதவல்லி யம்மாள் சொன்ன கதை முற்றும் பொய் என்று தெரியவே, அவளுடன் இருந்த ஸ்ரீனிவாசன் 8 வயதில் ஓடிப்போன ஸ்ரீனிவாசனாகத்தான் இருக்க வேண்டும் என்றும், அவன் ராஜேந்திரனின் பிள்ளை என்பது மோசம் என்றும் ஊகித்தேன். ஆனால் ராஜேந்திரனிடம் போய்த் தீர விசாரித்ததில், மோதிரமும் தலைக்குட்டையும் தாம் ருக்மிணிக்குக் கொடுத்தவைகள் என்பதில் சற்றும் சந்தேகம் இல்லையென்றும், ருக்மிணி வேதவல்லி யம்மாளிடம் தனக்குக் கொடுத்த கடிதத்தில் உள்ள எழுத்துகளும், முன்னால் ருக்மிணி தமக்கு எழுதித் தமக்கு அப்போது கொடுக்காமல் தம் தாயார் மறைத்து வைத்திருந்த கடிதத்தின் எழுத்துகளும் அநேகமாக ஒரே மாதிரியான எழுத்துக்களாக இருப்பதில் சந்தேகம் இல்லையென்றும், அவர் சொன்னதில் இருந்து எனக்கு நிச்சயிக்கக் கூடவில்லை.

சென்னையில் உள்ள, பழைய பூட்டுகளுக்குச் சாவி போடுவோரை விசாரித்ததில், ஸ்ரீனிவாசன் ராஜேந்திரன் படுக்கை அறையின் பூட்டுச் சாவியும் படுக்கை அறையில் உள்ள ஒரு கைப் பெட்டியின் பூட்டுச் சாவியும் காணமற் போய்விட்டதாகத் தன்னை அழைத்துப் போய்ப் புதுச் சாவிகள் போட்டுக் கொடுக்கச் சொன்னதாகவும், தான் போட்டுக் கொடுத்ததாகவும் அதற்காக ஸ்ரீனிவாசன் ரூபாய் 10 கொடுத்ததாகவும் தெரிய வந்தது. ஆகவே கைப் பெட்டியைத் திறந்து அதிலுள்ள இரும்புப் பெட்டியின், 'மாஸ்டர் கீ' யை எடுத்தவன் ஸ்ரீனிவாசனாகத்தான் இருக்க வேண்டுமென்றும் ஊகித்தேன்.

அப்பால் அன்று ஸ்ரீனிவாசன் வெளியிலேயே போக வில்லையென்றும், ஆனால் எவரோ ஒருவர் திருட்டுப்போன அன்று இரவு 9-மணிக்கு வந்து, அவருடன் ஏதோ பேசி விட்டுப் போனதாகவும் மறுபடியும் சுமார் 10-மணிக்குத் திரும்பி வந்து, ஸ்ரீனிவாசனிடம் ஏதோ கொடுத்துவிட்டுப் போனதாகவும் தெரிந்தது.

வந்தவர் 2 தடவையும் வீட்டிற்குள் செல்லவில்லை ஆத லாலும், திரும்பிப் போகையில் பெட்டியாவது வேறு சாமான்களாவது எடுத்துப் போகவில்லை ஆதலாலும், வைரங்களையும் நோட்டுகளையும் ஸ்ரீனிவாசன் திருடிக் கொடுத்து அனுப்பவில்லை என்றும், மறு நாள் சாயங்காலம் வரையில் ஸ்ரீனிவாசன் வெளியிலேயே போகவில்லை என்றும், வீட்டில் இருந்து எந்தச் சாமானும் வெளியே போகவில்லை என்றும் பாராக்காரன் திட்டமாகச் சொன்னதாலும், திருட்டுப்போன மறு நாள் சாயங்காலம் ரங்கநாத் லீலாவதி யிடம் சென்றபோது, தன்னிடம் ரூபாய் ஐம்பதாயிரம் இருப் பதாக அவள் சொன்னதாலும், ஸ்ரீனிவாசனைத் தவிர வேறு எவரோதான் திருடி அவளிடம் ரூபாய் ஐம்பதாயிரம் கொடுத்திருக்க வேண்டுமென்றும் ஊகித்தேன்.

வைரங்களும் நோட்டுகளும் பாங்கியின் முன் வாசல் வழியாக வாவது ராஜேந்திரன் வீட்டின் வழியாக வாவது போகவில்லை. ஆகையால் ராகவன் படுக்கை அறையின் வழியாகத்தான் போயிருக்க வேண்டுமென்று நினைத்து ராகவன் வீட்டில் உள்ள ஒரு பெண் வேலைக்காரியை ரஜா எடுத்துப் போகச் செய்து அவளுக்குப் பதிலாகத் துப்பறியும் என் பெண் ஆட்களில் ஒருத்தியை அங்கே வேலைக்கு வைத்துக் கமலத்தையும் லக்ஷ்மியையும் ஜாக்கிரதையாகக் கவனிக்கும்படி செய்ததில் அவர்கள் இருவரும் ரக்சியமாகப் பேசிய சம்பாஷணை முழுவதையும் கேட்டு என்னிடம் தெரிவித்தாள்.

அங்குள்ள பாராக்காரனைக் கமலம்மாள், திருட்டுப் போன அன்று இரவு 8-மணிக்கு மருந்து ஷாப்புக்குப் போகும்படி அனுப்பினதாகவும், அவன் மருந்து வாங்கிக் கொண்டு இரவு 11-மணிக்குத்தான் வந்ததாகவும், அதற்குப்பின், வீட்டிற்குள் இருந்து வெளியில் ஒன்றும் கொண்டு போகப்படவில்லை என்றும் சொன்னான் ஆதலாலும், ராகவன் எங்கே வந்து விடுகிறாரோவென்று கமலம்மாள் உத்தரவின்பிரகாரம் லக்ஷ்மி வெளியிலிருந்து பார்த்திருந்ததாகவும், அப்போது கமலம்மாள், கோபாலாச்சாரியார் பேசிய கொடூரமான வார்த்தைகளால் மயக்கம் அடைந்ததாகவும், மூர்ச்சை தெளிந்து எழுந்தபோது கோபாலாச்சாரியார் மாத்திரம் இருந்தாலும், கிருஷ்ணமாச்சாரியார் டாக்டரை அழைத்து வரப் போனதாகக் கோபாலாச்சாரியார் சொன்னதில் இருந்தும், கோபாலாச்சாரியும் கிருஷ்ணமாச்சாரியும் திருடிக் கிருஷ்ணமாச்சாரியிடம் கொடுத்து அனுப்பி இருக்க வேண்டுமென்றும் ஊகித்தேன்.

பின்னால் லீலாவதி பேசியதில் இருந்து அவளுக்கு வைரங்கள் திருட்டுப்போன விஷயம் தெரியாதென்றும் நினைத்தேன். மறு நாள் அவள் கோபாலாச்சாரியிடமும்

கிருஷ்ணமாச்சாரியிடமும் சென்று வைரங்களைத் திருப்பி அனுப்ப வேண்டுமென்றும், அப்படி அனுப்பாவிட்டால் தான் உண்மையை வெளிப்படுத்துவதாகவும் சொன்னதை யும், அவர்கள் ஸ்ரீனிவாசனுடன் கலந்து பேச வேண் டுமென்று சொன்னதையும், அப்பால் லீலாவதி ரகசிய மாக ஸ்ரீனிவாசனிடம் அவ் விஷயத்தைப்பற்றிப் பேசிய தையும் அதற்கு அவன் ஒப்பாமல் மறுத்துக் கூறி, பிறகு சம்மதித்தவன்போல் அபிநயித்து, கோபாலாச் சாரியிடம் இருந்து ராஜேந்திரனுக்கு யார் அனுப்பினார்கள் என்று தெரியாமல் வைரங்களை அனுப்பிவிட எடுத்துப் போவதாகச் சொல்லி, வீட்டிற்குக் கொண்டுபோனவன் என்ன செய்தான் என்று தெரியாமல் ஒளித்துவிட்ட தாகவும், பின்னால் லீலாவதியும் கோபாலாச்சாரியும் கிருஷ்ணமாச்சாரியும் பல தடவைகளில் கேட்டும் சரியான பதில் சொல்லாததால், கடைசியாகப் பயமுறுத்தி யாவது வாங்கும்படியும், கொடுக்காவிட்டால் கொன்று விடும்படியும் கைத் துப்பாக்கி சகிதம் கிருஷ்ணமாச்சாரியை அனுப்பியதாகவும், கிருஷ்ணமாச்சாரி வந்தபோது ரங்கநாத் தும் ஸ்ரீனிவாசனும் சீட்டு விளையாடிக்கொண் டிருந்ததால் வெளியே காத்திருந்த தாகவும் அப்பால் லக்ஷ்மி ஸ்ரீனிவாச னிடம் வந்து, தன்னால் அவரைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாதென்றும், பாங்கியில் திருடியது ஸ்ரீனிவா சன்தான் என்று தான் சந்தேகிப்பதாகவும் தன்னைத் தன் இஷ்டம்போல் ரங்கநாத்தைக் கல்யாணம் செய்துகொள்ள விடாவிட்டால் மறு நாள் போலீசுக்குத் தெரிவிப்பதாகவும் பயமுறுத்தினாள்.

'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்னும்' என்பது போல் லக்ஷ்மி சொன்ன வெறும் வார்த்தைகள் ஸ்ரீனிவாசன் மனத்தில் புகுந்து துளைத்ததால் யோசித்துச் சொல்வதா கச் சொன்னான். அவள் போனதும் லீலாவதி வந்து மன்று

டிக் கேட்டுப் பின்-பயமுறுத்தினுள். மறு நாள் சாயங் காலத்துக்குள் வைரங்களை ராஜேந்திரனுக்கு அனுப்பி விடுவதாகவும், அப்படிச் செய்யாவிட்டால் மூன்றும் நாள் போலீசாரிடம் சொல்லும்படியும் சொல்லி ஸ்ரீனிவாசன் அவளைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டான். அவள் போன பின் கிருஷ்ணமாச்சாரி போய்ப் பேசிக்கொண் டிருக் கும்போதே, லக்ஷ்மி மறுபடியும் வந்து ஜன்னல் பக்கத்தில் ஒண்டி நின்று அவர்கள் பேசுவதைக் கேட்டாள். விஸ்த ரிப்பானேன்!

அண்ணன், தம்பிகள் இருவருக்கும் வார்த்தைகள் வள ரவே ஸ்ரீனிவாசன் சம்மதித்ததைப்போல் அபிநயித்து, 'அதோ இருக்கிறது வைரங்கள், எடுத்துக்கொள்' என்றுன்.

அறை பூட்டி இருந்ததால் உள்ளே என்ன நடந்த தென்று நான் பார்க்கவில்லை. ஏதோ பயங்கரமான சத்தம் மட்டும் கேட்டது. ஐந்து நிமிஷங்களில் ஸ்ரீனிவாசன் விக்கிரகத்தை எடுத்துக் கொண்டு வந்து பக்கத்துத் தெரு வில் உள்ள வீட்டிற்குள் சென்றுன். நான் அதுமுதல் அவ னுக்குக் காவல் இருந்தேன்.

காலையில் வேறு காவல் வைத்துவிட்டு, விசாரித்ததில் லக்ஷ்மிக்குப் புத்தி மாருட்டமாக இருப்பதாகவும், ரங்கநாத் அறைக்கு அவள் போனதையும் தெரிந்துகொண்டு, கவனித் ததில் இன்ஸ்பெக்டர் சுப்பராயலு நாயுடு செய்த காரியாதி களைத் தெரிந்து, வைரங்கள் எங்கே இருக்கின்றன என்று அறியுமுன் லீலாவதியைப் பிடித்து இம்சித்துக் கேட்டால் வைரங்கள் சாட்சி ருஜுவுடன் அகப்படாவென்றும் திட்ட மாகத் தெரியும்வரையில் லீலாவதியை இன்ஸ்பெக்டர் கையில் அகப்படாதபடி செய்வதற்காகவும் அவளைத் தப்பு வித்தேன்.

கிருஷ்ணமாச்சாரி கொலையுண்டபோது, லக்ஷ்மி வெளியில் இருந்ததாலும், ஸ்ரீனிவாசன் வெளியே போன பின், புத்தி சுவாதீனம் இல்லாமல் உட்சென்ற லக்ஷ்மி பிரேதத்தின்மேல் விழுந்து புரண்டதில் அவள் உடம்பு முற்றும் ரத்தக் கறைகள் ஆயிற்றென்றும், அவரைத் தொட்டதில் ரத்த அடையாளம் ஏற்பட்டதென்றும், ஆகையால் ரங்கநாத்தும் லக்ஷ்மியும் நிரபராதிகள் என்றும்-நான் கூட இருந்து பார்த்தேன் ஆதலால்-அவர்கள் அநியாயமாக ஜெயிலில் அடைபடுவதில் இருந்தும் தப்புவித்தேன். நான் திட்டம் செய்திருந்தபடி ராகவன் வீட்டில் வேலை செய்துகொண்டிருந்த துப்பறியும் வேலைக்காரி, லக்ஷ்மியை நான் குறிப்பிட்ட இடத்துக்கு அழைத்து வந்து வைத்திருந்தாள். லக்ஷ்மி ரங்கநாத்தைக் கண்டவுடன் தடை இல்லாமல் வருவாள் என்று நான் எதிர் பார்த்தபடி அவள் கூடவே வந்தாள். வேதவல்லி யம்மாளைத் திடீரென்று ஓர் அந்நியன் போய் அழைத்தால் வரமாட்டாளென்று மத்தியான்னமே ஆருடம் சொல்லி இப்போது அழைத்து வந்தேன். பின்னால் நடந்த விஷயங்களைத்தான் நீங்கள் எல்லோரும் நேரில் பார்த்தீர்களே. இன்னும் ஏதாவது சந்தேகங்கள் இருந்து கேட்டால் தெரிவிக்கின்றேன்.

**இன்ஸ்பெக்டர்:** லீலாவதி, லக்ஷ்மி, ரங்கநாத் இவர்களை ஏற்றிக்கொண்டு போன வண்டி எங்கே? அது என்ன ஆயிற்று?

**கோவிந்தன்:** அன்று கமிஷனர் துரையவர்களுக்கு நான் எழுதிய பிரகாரம், நாங்கள் இன்று ஏறி வந்த வண்டி அதுதான்.

**இன்ஸ்பெக்டர்:** என்ன ஐயா! என்னை முழுப் பைத்தியக்காரன் ஆக்குகிறீர். அந்த வண்டியின்மேல் எல்லாம் ரோஜாப் புஷ்பங்களைப்போல் வர்ணம் எழுதி இருந்ததாக எத்தனையோ பேர் சொன்னார்கள். இது சாதாரண வர்ண

மாகத்தானே இருக்கிறது. இந்த வண்டியை நான் அன்றே பார்த்தேனே! அன்று இரவுக்குள் பழைய வர்ணத்தை மாற்றி இம்மாதிரி வர்ணம் போடச் சாத்தியப்படாதே.

கோவிந்தன்: அதுவா? மேலே அழுக்குப் படியாதபடி வர்ணத்தைப்போலவே தோன்றும்படி அவ்வளவு பிகுவாய் அடித்திருக்கும் படுதா. அப் படுதாவை 5 நிமிஷங்களில் போட்டு, 5 நிமிஷங்களில் கழற்றிவிடலாம். அந்தப் படுதா தான் தங்களை ஏமாற்றிவிட்டதுபோல் இருக்கிறது. சமுத்திரக் கரைகுப் போனவுடன் என் வேலைக்காரன் படுதாவைக் கழற்றிவிட்டான்.

இன்ஸ்பெக்டர்: ராஜேந்திரன் வசம் இருக்கும் சாவியால்தான் திறந்திருக்கிறதென்று தெரிந்தும் அவர்மேல் சந்தேகம் இல்லையென்று சொன்னீர்களே! அதெப்படி? மேலும் இந்த ராஜேந்திரன்தான், ஸ்ரீனிவாசன் பதினறரை லக்ஷம் ரூபாய்கள் செலவழித்த விஷயம் நம்மிடம் சொன்ஞரா? கோவிந்தனிடம் சொன்னதைப்போல் நம்மிடத்திலும் சொல்லியிருந்தால் நாமும் கண்டுபிடித் திருக்கலாம் அல்லவா? பொது ஜனங்கள் போலீஸாரிடம் சரியானபடி நம்பிக்கைவைத்துச் சமாசாரங்களை விவரமாகச் சொல்லாமற் போய்விடுவதால்தான் கேஸ்கள் பாழாகின்றன.

கமிஷனர்: சுப்பராயலு நாயுடுவாள்! தாங்கள் பொறுமையின்பேரில் இவ்வாறு பேசுகிறீர்களே தவிர வேறல்ல. ராஜேந்திரனுக்கும் ராகவனுக்குமாவது அல்லது ராஜேந்திரனுக்கும் ரங்கநாத்துக்குமாவது விரோதம் இருப்பதாக ஏதாவது ருஜுவாயிற்று? அப்படி இருக்க ஏன் அந்த வீண் கேள்வி? மேலும் பூட்டைப்பற்றிய விஷயம் நம்மிடம் சொன்னதைப்போல்தானே கோவிந்தனிடமும் சொன்ஞர். அவர், 'மாஸ்டர் கீ' விஷயத்தைப்பற்றிக் கேட்டாரே, நாம் கேட்டோமா? மேலும் ராஜேந்திரனுக்கும், ருக்மிணி பாங்கிக்கும் பண நெருக்கடி உண்டாவென்று கோவிந்தன்

விசாரித்ததில் இருந்துதானே ஸ்ரீனிவாசன் பதினைந்தரை லட்சம் ரூபாய் செலவழித்த விஷயம் அவருக்குத் தெரிந்தது. அப்படி நீரும் கேட்டு ஆராய்ந்திருக்கலாம் அல்லவா? நமது போலீஸார் ராஜேந்திரன், ரங்கநாத், ராகவன் ஆகிய மூவர்மேல் மட்டும் சந்தேகப்பட்டு அவர்களையே சுற்றிக் கொண்டு திரிந்ததால் நம்மால் கண்டு பிடிக்க முடியாமற் போயிற்று. இப்போது எனது நண்பர் கோவிந்தன் சொன்னது எவ்வளவு சுலபமாக இருக்கிறது. அவர் புத்தி நமக்கு இல்லை; இதில் வருத்தம் ஏன்?

**இன்ஸ்பெக்டர் :** ரங்கநாத் தம் வீட்டிற்கு வெளியே காவல் இருந்த ஜவானுடைய கை கால்களைக் கட்டி வாயில் பஞ்சடைத்துச் சென்றாரே! அது சட்ட விரோதம் அல்லவா?

**கமிஷனர் :** நமது முன்பின் யோசியாத அவசரத்தினால் நிரபராதிகளான இருவரைச் சிறையில் அடைத்து ஹிம்சிப்பதால் நமக்கு வரக் கூடிய கெட்ட பேரில் இருந்தும் நம்மைத் தப்புவித்ததற்கு நாம் அவர் பேரில் குறை கூற வேண்டியது அவசியந்தான்! கோவிந்தா! நீர் இவ்வளவு சிக்கலான இக்கேசில் துப்புத் துலக்கியதற்காக என் மனப் பூர்வமான வந்தனம் அளிக்கிறேன். ஆனால் நீர் லக்ஷ்மியையும் வேதவல்லியையும் அக் காளிகா தேவியிடம் இருந்து தப்புவித்ததைப்போல் கோபாலாச்சாரியையும் தப்புவித் திருக்கக் கூடும் அல்லவா? ஏன் அப்படிச் செய்யவில்லை?

**கோவிந்தன் :** மனித உருக்கொண் டிருக்கும் அந்தச் சனியனாகிய கோபாலாச்சாரியார் என்ற கோபண்ணாவின் சங்கதிகள் முற்றும் தங்களுக்குத் தெரியாது. அந்தச் சண்டாளன் செய்திருக்கும் காரியாதிகளுக்கு இந்த ஜன்மத்தில் மட்டும் அல்ல; இன்னும் நூறு ஜன்மங்கள் எடுத்து இம்சை அடைந்தாலும் அவன் கர்மம் தொலையாது. அது மாத்திரம் அல்ல; அக் காளிகா தேவியின் முதல் நாள்

கொலையைப் பார்த்ததால்தான் லக்ஷ்மியின் புத்தி சித றிற்று. இப்போது மறுபடியும் அதே மாதிரி காரியத்தைப் பார்த்தால், அவள் புத்தி சரிப்பட்டு வரும் என்று சாஸ் திரங்களில் சொல்வதால் அதைப் பரீக்ஷை பார்த்தேன். சாஸ்திரம் பொய்யாகாமல் உண்மை ஆயிற்று. லக்ஷ்மி புத்தி ஸ்வாதீனம் அடைந்தாள். அந்தச் சண்டாளன் பேச் சைத் தள்ளுங்கள்.

**ராஜேந்திரன் :** நண்பரவர்களே! தாங்கள் இப்போது செப்பிடு வித்தை காட்டியதுபோல் ரூபித்த விஷயங்களில் இருந்து என்னை மறுபடியும் நடுக் கடலில் விட்டுவிட்டீர் கள். என் பிராண நாயகியாகிய ருக்மிணியின் கதி என்ன ஆயிற்றோ? அவள் உயிருடன் இருக்கிறுளோ என்னவோ, தெரியவில்லையே! எனது ஜன்மத்தில் நான் செய்த ஒரே பிழைக்காக என்னைக் கடவுள் தண்டித்தது போதாதோ? இவ்வளவு கஷ்டமான விஷயங்களை எல்லாம் கண்டு பிடிக் கப்பட்ட தங்களுக்கு இது ஒரு கஷ்டமாகுமா? தயவு வைத்து எனக்காகத் தாங்கள் அவ்வளவு செய்யக் கூடாதா? அப்போதே திருக்கோயிலில் அவளைக் கண்டபோது அவ ளுடைய ஒரு நாளைய ரமிப்பிக்கு என் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் இழக்கத் தயாராக இருந்த நான், இப்போது அவளை அடையும் பாக்கியம் அடைந்தால் என்ன செய்ய மாட்டேன்!

இப்படிச் சொல்லி மூர்ச்சித்து விழுந்தார். அவரைப் படுக்கையில் படுக்க வைத்துவிட்டு, மற்றவர்களை எல்லாம் அவரவர்கள் ஜாகைகளுக்குக் கோவிந்தன் போகச் சொன்னார்.

**கமிஷனர் :** சரி; தாங்கள் லீலாவதியிடம் கேட்ட தென்ன?

**கோவிந்தன் :** ஸ்ரீனிவாசன் கோபாலாச்சாரியார் புத் திரன் என்றும், பூட்டின் பேர் அறிந்து சொன்னது லீலா

வதிதானு என்றும், அதற்காகத்தானு ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்தார்கள் என்றும், திருடினது ராகவன் படுக்கை அறையின் வழியாகத்தானே என்றும் கேட்டுச் சந்தேக நிவர்த்தி செய்துகொண்டேன்.

---

## 13. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

மூர்ச்சை அடைந்ததும் ராஜேந்திரனைக் கோவிந்தன் சோபாவில் படுக்க வைத்துவிட்டு, வரதாச்சாரியாரையும் ருக்மிணியையும் சந்திக்கத் துறைமுகம் சென்று அவர்களைச் சந்தித்தார்.

**வரதாச்சாரி:** கோவிந்தா, ரங்கநாத் வரவில்லையே ஏன்?

**கோவிந்தன்:** நான் ரங்கநாத்திடம் சொல்ல வில்லை.

**வரதாச்சாரி:** இன்னும் கேஸ் முடிவு பெறவில்லையா? ரங்கநாத் எங்கே இருக்கிறான்?

**கோவிந்தன் :** ரங்கநாத் குற்றவாளி அல்லவென்றும் குற்றம் செய்தவர்கள் இன்னார்தான் என்றும் நேற்று இரவு தான் திட்டமாக ருஜுவாயிற்று.

**வரதாச்சாரி:** இவ்வளவு சாமர்த்தியமாகத் திருடியவன் யார்?

**கோவிந்தன்:** ருக்மிணி பாங்கியின் சொந்தக்காரரான ராஜேந்திரன் என்பவருடைய மகனாகிய ஸ்ரீனிவாசன்.

**வரதாச்சாரி :** யார்! யார்! ராஜேந்திரன் மகனா? எனக்குத் தெரிந்தவரையில் ராஜேந்திரனுக்குக் கல்யாணம் இல்லையே. அப்படி இருக்க அவருக்கு மகன் எங்கிருந்து வந்தான்?

இதுவரையில் வரதாச்சாரியுடன் வந்த பெண், தன்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்றுகூடக் கவனியாமல் இருந்தவள்-இந்தச் சம்பாஷணை ஆரம்பித்த உடன்

தனது கவனத்தை இதில் செலுத்தியதாகக் கோவிந்தன் அறிந்தார்.]

**கோவிந்தன் :** அதைத்தான சொல்ல வந்தேன். தாங்கள் முழுவதையும் கேளுங்களேன். அதற்குள் அவசரப்படுகிறீர்களே!

சுமார் இருபது வருஷங்களுக்கு முன் ராஜேந்திரன் சட்டக் காலேஜில் வாசிக்கும்போது, திருச்சி செயின்ட் ஜோஸப் காலேஜ் மாணவர்களுடன் பந்தாடுவதற்காகத் திருச்சி வந்தாராம். அப்பொழுது எல்லோரும் வேடிக்கையார்த்தமாக ஸ்ரீரங்கநாதரைத் தரிசிக்க வந்தார்களாம்.

**வரதாச்சாரி:** கோவிந்தா! இந்தப் பழைய கதை எல்லாம என்னத்திற்கு? நான் கேட்ட கேள்விக்குத் தயவு செய்து பதில் சொல்லுங்கள்.

**கோவிந்தன்:** ஐயா! தயவு செய்து என்னை மன்னியுங்கள். எனக்கு எது பழைய கதை என்றும் எது புதிய கதை என்றும் தெரியாது. தங்களுக்கு இஷ்டம் இருந்தால் நான் சொல்லுகிறபடி கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். இல்லாவிட்டால் தங்கள் இஷ்டம்போல் யாரையாவது கேட்டுக்கொள்வதில் ஆக்ஷேபம் இல்லை.

[வரதாச்சாரியுடன் வந்த பெண், "அவர் இஷ்டப்படியே சுருக்கமாகச் சொல்லச் சொல்லுங்கள்'' என்றாள். உடனே வரதாச்சாரி கோவிந்தனிடம் சுருக்கமாகச் சொல்லச் சொல்லிக் கேட்டுக்கொள்ள, அவர் தமக்குத் தெரிந்தவரையில் சுருக்கமாகச் சொல்வதாகச் சொல்லிப் பின்வருமாறு சொன்னார்.]

**கோவிந்தன்:** ஸ்ரீரங்கம் கோவிலுக்குள் ராஜேந்திரன் வந்ததும், அங்கே ஸ்ரீரங்கநாதரைத் தரிசிக்க வந்திருந்த ஒரு பெண்ணைக் கண்டாராம். கண்டதும் காமுற்றாராம். அப் பெண்ணின்மேல் இருந்த பிரியத்திற்குத் தம் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் ஏக காலத்தில் இழக்க

நேரிடினும், அப் பெண்ணை அடையாமற் செல்வதில்லை என்றும் சாத்தியம் இல்லாவிட்டால் காவேரி ஆற்றிலேயே உயிர் துறப்பதென்றும் ரங்கநாதர் சாட்சியாக ஆணை இட்டுக்கொண்டாராம். அப்பால் கோபண்ணு என்னும் ஒரு தரகர் மூலமாக, ரூபாய் இரண்டாயிரம் கடன் வாங்கி, அப் பெண்ணின் சிற்றன்னை வசம் கொடுத்து, அப் பெண் இப் பேர்ப்பட்ட அக்கிரமமான செய்கைக்குச் சம்மதிக்கமாட்டாள் என அறிந்து, அப் பெண்ணுக்கு மயக்க மருந்தைக் கொடுத்து, கோபண்ணு வீட்டிற்கு அழைத்து வந்து, அவள் மயக்கத்துடன் இருக்கும்போதே ராஜேந்திரன் தம் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டு ஜல்தியாக வந்துவிடும்படி கோபண்ணு சொன்னாராம். ராஜேந்திரன் தம் மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொண்டவுடன், காம வெறி தீர்ந்துவிட்டதால் தமக்கு இயற்கையாக உள்ள நல்ல புத்தி தோன்றிவிடவே, அப் பெண்ணைச் சமாதானப் படுத்திவிட்டுச் செல்லக் கருதி, அவள் மயக்கம் தெளியும் வரையில் இருந்து, அவளுக்கு மயக்கம் தெளிந்தவுடன் எப்படியோ அவளைச் சமாதானப்படுத்திவிட்டு அவள் தற்கொலை செய்துகொள்வதில்லை என்ற வாக்குறுதியும் அவளிடம் பெற்றுக்கொண்டு, தம் ஞாபகார்த்தமாகத் தமது வைரமோதிரத்தையும் தம் தலைக்குட்டையையும் வைத்துக் கொள்ளும்படி அவளைக் கேட்டுக்கொண்டு, அவள் குறிப்பிட்ட இடத்தில் அவ்விரு வஸ்துக்களையும் வைத்துவிட்டு வந்துவிட்டாராம்.

மூன்று மாதங்களுக்குப் பின் ராஜேந்திரன் சாந்திக் கல்யாணம் செய்துகொள்ளத் தம் மனைவியின் வீட்டிற்குச் சென்று நலங்கிட உட்கார்ந்துகொண்டு பெண்ணைப் பார்க்கையில் பெண்ணைக் காணோமாம். எங்கே தேடியும் பெண் அகப்படாததால், ராஜேந்திரன் எழுந்து போய் மாடியில் உட்கார்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கை

யில், தாம், ஸ்ரீரங்கத்தில் கற்பழித்த பெண்ணின் படத்தைப்போன்ற ஒரு படம் அங்கே இருக்கக் கண்டு, அது யாருடைய படம் என்று கேட்டதில், அப் படம் அவருடைய மனைவியாகிய ருக்மிணியின் படம் என்று தெரிந்தது முதல் இன்றைய வரையில் எந் நேரமும், 'ருக்மிணி, ருக்மிணி' என்று அவள் நாம ஸ்மரணை தான் செய்துகொண் டிருக்கிறார். இப்பேர்ப்பட்ட உத்தமனைத் திண்டாடும்படி வைத்து விட்டு அப் புண்யவதி ருக்மிணி, கல் மனத்துடன் எங்கே ஒளிந்துகொண் டிருக்கிறாளோ தெரியவில்லை.

அவள் மனம் என்ன கருங்கல்லோ இரும்போ தெரியவில்லை. ஒரு புருஷனை இவ்வாறு திண்டாட வைப்பதில் அவளுக்கு எவ்வளவு ஆனந்தமோ? ஈசன் தான் அறிவார். அன்றைய முதல் இன்றையவரையில் சந்தோஷம் என்பதே அவருக்கு இல்லை. நானாக இருந்தால், 'அந்தக் கழுதை கெட்டாள்!' என்று மறுமாதம் வேறு கல்யாணம் செய்துகொண் டிருப்பேன். நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். கல்யாணமே செய்துகொள்ளாமல், 'ருக்மிணி, ருக்மிணி!' என்று அழுதுகொண்டே இருக்கிறார். இது என்ன பேதைமை? நீங்கள் தான் சொல்லுங்கள், பார்ப்போம். இல்லை; அந்தப் பெண்ணின் மனந்தான் எப்பேர்ப்பட்டதாக இருக்க வேண்டும்? என்று சமயத்துக்குத் தக்க அபிநயத்தோடு பேசினார்.

**வரதாச்சாரி:** கோவிந்தா! மகா புத்திசாலியாகிய நீர் ஏன் இப்படிக் காலம் போக்குகிறீர் என்று தெரியவில்லை. ராஜேந்திரன் கல்யாணம் செய்துகொள்ளாவிட்டால் பின் அவர் குமாரன் ஸ்ரீனிவாசனோ என்னமோ என்கிறீரே! அவன் எங்கிருந்து வந்தான்? அதைச் சொல்லாமல் வீணாக அப் பெண்ணை ஏன் நிந்திக்கிறீர்?

**கோவிந்தன்:** போங்களையா போங்கள், நன்றாகச் சொன்னீர்கள். அப் பெண் அவரை இம்சித்ததற்கு அப்

பெண் மாத்திரம் யாரென்று எனக்குத் தெரிய வேண்டும். அப்படியே கடித்துக்கூடத் தின்றுவிடலாம் என்று, அவ்வளவு கோபம் எனக்கு இருக்கிறது; பாருங்கள்! அப்புருஷனை இன்னும் எத்தனை வருஷங்களுக்குத்தான் சோதிக்கிறது.

**வரதாச்சாரி:** அவள் சோதிக்கிருள் என்று உமக்கு எப்படித் தெரியும்?

**கோவிந்தன்:** எனக்கா எப்படித் தெரியும் என்று கேட்கிறீர்கள்? அவள் மகனை மட்டும் தகப்பனிடம் அனுப்பிவிடத் தெரிந்தது; தனக்கு வர வழி தெரியாமல் போய்விட்டதுபோல் இருக்கிறது! இந்தச் செப்பிடு வித்தையெல்லாம் யாரிடம் காட்டுகிறது?

**வரதாச்சாரி:** நீர் சொல்வது ஒன்றும் புரியவில்லையே. யார் மகனை யார் எங்கே அனுப்பிஞர்கள்?

**கோவிந்தன்:** என் வயிற்றெரிச்சலை மட்டும் கிளப்பாதேயுங்கள். நான் சொல்கிறேன்.

சென்னைப் பத்திரிகைகளில் விளம்பரம் வெளியானதும், ராஜேந்திரன் ரங்கூன் போய் ருக்மிணிக்கு ஞாபகார்த்தமாகத் தாம் கொடுத்து வந்த மோதிரத்தையும் தலைக்குட்டையையும் ருக்மிணியின் கடிதத்தையும் அடையாளம் கண்டு ஸ்ரீனிவாசனையும் வேதவல்லியையும் அழைத்து வந்ததும், பின் ஸ்ரீனிவாசன் பதினறரை லட்சம் ரூபாய்கள் உண்டியல்கள் கொடுத்து வாங்கினதும் கடைசியாக ருக்மிணியின் முகத்திற்காக-ருக்மிணிக்கும் தமக்கும் பிறந்த பிள்ளையென்ற அபிமானத்திற்காக-ஸ்ரீனிவாசன், ராஜேந்திரன் நண்பரான ராகவனை, வாய்க்கு வந்தவாறெல்லாம் திட்டியதைப் பொறுத்தும், முடிவில் ஸ்ரீனிவாசன், கோபாலாச்சாரி, கிருஷ்ணமாச்சாரி, லீலாவதி ஆகிய இவர்களுடன் சதியாலோசனை செய்து, லீலாவதியின் உதவியால் ரங்கநாத்திடம், பூட்டின் பேர் அறிந்து, திருடி, பின் தன்

சகோதரனையும் தகப்பனையும் கோரமாகக் கொலை செய்து போலீஸ் பந்தோபஸ்தில் இருக்கும் வரையில் சொல்லி முடித்து, அப்பால் தனக்கும் ருக்மிணிக்கும் பிறந்ததாக எண்ணி இருந்த பிள்ளையும், ருக்மிணியின் பிள்ளை அல்ல என்று தெரிந்தது முதல்...என்று முடிக்கும் முன் வண்டி கோவிந்தன் வீட்டண்டை நின்றது.

வண்டியில் இருந்து இறங்கி வீட்டிற்குள்ளே போய்க் கொண்டிருக்கும்போதே, ஸ்ரீனிவாசன் தங்கள் பிள்ளை அல்லவென்று தெரிந்தது முதல், ராஜேந்திரன் ருக்மிணியைப் பற்றியே விசனப்பட்டு, நேற்றிரவு பிராண மூர்ச்சை அடைந்து டாக்டர்கள் எவ்வளவு மருந்துகள் கொடுத்த போதிலும் மூர்ச்சை தெளியவில்லை என்றும், 'ருக்மிணி!' என்ற வார்த்தைதான் அவர் பேசிய கடைசி வார்த்தை என்றும், இனி மூர்ச்சை தெளிவதே சந்தேகம் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள் என்றும் சொன்னார்.

அதுவரையில் பேசாமல் மௌனமாக இருந்த வரதாச்சாரியுடன் வந்த பெண், "அவர் எங்கே இருக்கிறார்?" என்றாள்.

கோவிந்தன், "இந்த அறையில்தான் அதோ அந்தச் சோபாவில் மூர்ச்சையாகக் கிடக்கிறார். அவரைக் கொன்றது ருக்மிணியே; ஒருகால் அந்த ருக்மிணியே இப்போது வந்து அவரைத் தட்டி எழுப்பி அவளுடைய இனிமையான குரலுடன், அவரிடம் பேசினால் பிரக்ஞை வரும் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். இப்போதாவது அந்த ருக்மிணி யம்மாளுக்குத் தயவு வருமோ, வராதோ!" என்று அவர் வாக்கியத்தைப் பூர்த்தி செய்யுமுன் கதவைத் திறந்ததும், வந்த பெண், "நாதா! இந்த ஸ்திதியிலா தங்களை நான் சந்திக்க வேண்டும்!" என்று சொல்லிக்கொண்டே அவர்மேல் போய் விழுந்து கண்ணீர் உகுத்தாள். அவள் கூடவே உள்ளே போகப் போன வரதாச்சாரியாருக்குச்

சைகை செய்து, கோவிந்தன், தம்பதிகள் தங்கள் ஆத்திரத்தையும் பிரிவாற்ருமையையும் தீர்த்துக்கொள்ள அவர்களை ஏகாந்தத்தில் விட்டுவிட வேண்டுமென்று குறிப்பால் உணர்த்திக் கையைப் பிடித்து வெளியே இழுத்துக் கதவை மூடிவிட்டு, வேறு இடத்திற்கு அழைத்துப் போனுர்.

ருக்மிணி ராஜேந்திரன்மேல் விழுந்து புரண்டு, "நாதா! இந்த அபாக்கியவதியாகிய ருக்மிணியுடன் ஒரு வார்த்தை பேசல் ஆகாதா! 20 வருஷ காலமாக இவ்வளவு நிர்ணயமாக இருப்பீர்கள் என்பதை உணராத பாவியானேன். ஐயோ! 'இனிமேல், ராஜேந்திரன் என்ற பேச்சே என் காதில் விழக் கூடாது, அவரைப்பற்றிய எவ் விஷயமும் எனக்குத் தெரிவிக்க லாகாது' என்று என் சிற்றப்பாவிடம் பிரமாணம் பண்ணி வாங்கினதால் அல்லவா அவர் இதுவரையில் விஷயங்களைச் சொல்லாமல் இருந்தார். ஐயோ, நாதா! நாதா!! நாதா!!!" என்று அலறினுள்.

ருக்மிணியின் கை ராஜேந்திரன்மேல் பட்டமாத்திரத்தில் அதுவரையில் இல்லாத விதமாக அவர் தேகம் மயிர்க்குச் செறிந்தது. ருக்மிணியின், 'நாதா!' என்ற சத்தம் பல முறை கேட்டதும், மெதுவாகக் கண் திறந்து பார்த்தார். அப்போது கண் திறந்தாரே தவிர அவருக்குக் கண் பார்வை தெரியவும் இல்லை, வாய் பேசவும் கூடவில்லை. சத்தம் மாத்திரம், தான் வெகு நாட்களுக்கு முன்பு கேட்ட ருக்மிணியின் குரல் என்று அவருக்குத் தோன்றிற்று. ஜலம் வேண்டும் என்று ஜாடை காட்டினுர். ருக்மிணி பக்கத்தில் இருந்த சுத்த ஜலத்தை, ஒரு டம்ளரில் கொட்டி, கொஞ்சம் அவர் வாயில் ஊற்றினுள். ஜலம் குடித்ததும், கண் பார்வை சற்றுத் தெரிந்தது.

**ராஜேந்திரன் :** மிகு தீக்ஷண்யமான அகோர வெயிலின் இடையே கடும் பாலைவனம் ஒன்றில் அகப்பட்டுக்கொண்டு அத்தியந்த தாகத்தின் கொடுமையால் தத்தளித்து, நாற்

றிசையும் நோக்கி, மனப் பிராந்தியால் எதிர்ப்படும் கானலை ஜலமென்று நம்பி, அறிவு மயங்கி, கஷ்டத்தோடு கஷ்டமாக நெடுந் தூரம் போய்ப் பார்த்தும், உபகாரம் இல்லாமல் போவதைப்போல், அநேக தடவைகளில் என் ருக்மிணி சமீபத்தில் இருப்பதாகக் கனவுகள் பல கண்டு, கண் திறந்து பார்க்கையில் நான் தனியாக இருந்ததைப் போல், இன்றும் ருக்மிணியின் தோற்றம் தெரிகிறதுபோல் இருக்கிறது. இனி இந்த ஜன்மத்தில் நான் ருக்மிணியை உயிருடன் பார்ப்பேன் என்ற நம்பிக்கை எனக்குக் கிஞ் சித்தாவது இல்லை. இனிமேல் இப் பிராணனை வைத்துக் கொண்டு இவ்வளவு கஷ்டத்துடன் ஜீவிப்பதில் நான் அடையும் பயன் என்னவோ? இதுகாறும் என் ருக்மிணி யைப் பிரிந்து பட்ட வேதனைகள் போதும். இனி பிராணத் தியாகம் செய்துகொண்டு இந்த நீங்காக் கவலையை ஒழிப் பதுதான் சரி.

அப்போது ருக்மிணி, "நாதா!" என்றாள்.

அவ்வளவுதான். ராஜேந்திரனுக்கு இருந்த மயக்கம் முற்றும் தெளிந்து சட்டென்று எழுந்து, தான் கேட்ட குரல் யதார்த்தமாக ருக்மிணியினுடையதே என்றும், எதி ரில் நிற்பது உண்மையாகவே ருக்மிணிதான் என்றும், கண்டுகொண்டவராக, 'ருக்மிணி! கடைசியாக என்மேல் உனக்கு நிச்சயமான தயை பிறந்ததா?' என்று சொல்லி, அவளை இறுகத் தழுவிப் பன்முறையும் அவள் இரு கன் னங்களிலும் முத்தம் கொடுத்தார்.

ருக்மிணியும் அவர் இஷ்டம்போல் அவர் ஆசை தீரு கிற வரையில்-தீருவதுதான் ஏது! ஏதோ அந்த நிமி ஷத்திற்குத் திருப்தியாகிற வரையில்-அவருக்குத் தன்னை விட்டுக் கொடுத்துச் சும்மா இருந்து வியாதியாக இருப்பதால், அவரை உட்காரும்படி வேண்டிக்கொண் டாள்.

தமக்கு ஏற்பட்ட வியாதி மன வியாதியே ஆதலின் அதற்கு ருக்மிணி என்ற அமிழ்தம் கிடைத்ததும், அந்தப் பிணி தீர்ந்து போயிற்று என்றும், இனித் தம்மிலும் பாக்கியவான் இல்லையென்றும் அவர் புளகாங்கிதத்தோடு கூறினர். அப்பால் இந்த ஆபத்தான சமயத்தில் எங்கிருந்து வந்தாள் என்றும் அதுவரையில் எங்கிருந்தாள் என்றும், இதைப்போல் ஒத்த ஆயிரம் கேள்விகளை; ராஜேந்திரன் ஏக காலத்தில் அடுக்கடுக்காகக் கேட்டார். அதற்கு ருக்மிணி தன்னல் கூடியமட்டும் பதில் சொல்லிக்கொண்டு வந்தாள்.

அவர்கள் பேச்சு ஓயவில்லை. பிரிந்தவர் கூடினல் பேசவும் வேண்டுமோ?

சுமார் ஒரு மணி நேரம் ஆனவுடன் கோவிந்தனும் வரதாச்சாரியும் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்து, ராஜேந்திரனுக்கு உடம்பு எப்படி இருக்கிறது என்று கேட்டார்கள். ராஜேந்திரன் தமக்குச் சுகக் குறைவு ஏதும் இல்லையென்றும் தம்மைப் பாதித்து வாட்டிய நெடு நாட் பிணி இப்போது தீர்ந்துவிட்டதால் தம்மைப்போல் இப் பூலோகத்திலேயே பாக்கியவான் வேறு எங்கும் கிடையாது என்றும் சொன்னர். கோவிந்தன் சிரித்துக்கொண்டே, "மனைவியைப் பார்த்தவுடனேயே இப் பூலோகத்திலேயே தங்களைவிடப் பாக்கியவான் இல்லையென்று நினைத்துவிட்டீர்களே!, புத்திரன் இல்லாத குறை ஒன்று இல்லையா?" என்று கேட்டார். அதற்கு ராஜேந்திரன் முகத்தைச் சற்றுச் சுளித்தார்.

**கோவிந்தன்:** நண்பரவர்களே! நான் எப்போதும் வேடிக்கையாகப் பேசப்பட்டவன் அல்ல என்பது தங்களுக்குத் தெரியும். தங்களுக்கு மிக்க கௌரவமான புத்திரர் ஒருவர் இருக்கிறர். அவர் யாரோ என்று நினைக்க வேண்டாம். தங்கள் பிரியமான மனைவி ருக்மிணியம்மாள் வயிற்

றில் பிறந்தவர்தாம். ஸ்ரீரங்கநாதர் கிருபையால் ஸ்ரீரங்கத்தில், உங்கள் முதற் சந்திப்பிலேயே உற்பத்தியானவர் தாம். வேடிக்கையார்த்தமாகப் போலிப் புத்திரனை அந்தத் திருட்டு ஸ்ரீனிவாசனைக் குறிப்பிடுகிறேன் என்று நினையாதீர்கள்? தங்கள் புத்திரனைப் பார்க்க விரும்பினால் என்னுடன் கூட வாருங்கள். நான் காண்பிக்கிறேன்.

ராஜேந்திரனை அழைத்துப் போய்ப் பக்கத்து அறையில் இருந்த ரங்கநாத்தைக் காட்டி, "இவர்தாம் தங்கள் உண்மையான புத்திரர். ரங்கநாத்! ராஜேந்திரன்தான் உமது பிதா!' என்று சொன்னார். அவர் சொல்லி வாய்மூடு முன் ராஜேந்திரன் ரங்கநாத்தை இறுகத் தழுவி முத்தமிட்டார். ரங்கநாத் ஏதும் சொல்லத் தோன்றாமல் விழித்துப் போனார். ராஜேந்திரரா நமது பிதா? என்று ஆச்சரிய பரவசரானார். கோவிந்தன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்து சந்தோஷமாகத் தம் மனம் குளிரப் பிதா, புத்திரர் இருவரையும் பார்த்துக்கொண் டிருந்தார்.

தாம் இழந்துவிட்டதாக நினைத்த தமது பிராணேசுவரியையும் தமது புத்திரனையும் ஏக காலத்தில் அடைந்ததற்காக ராஜேந்திரன் எவ்வளவு சந்தோஷம் அடைந்திருப்பார் என்று நாம் எழுதச் சாத்தியம் இல்லை.

அன்று மத்தியான்னம் சாப்பாட்டிற்குப் பின் ருக்மிணி அத்தனை வருஷ காலமாக எங்கே சென்றிருந்தாள் என்று விவரமாகச் சொல்லும்படி ராஜேந்திரன் கேட்டார்.

**ருக்மிணி:** நாதா! சோபன முகூர்த்தத்திற்குத் தாங்கள் வந்ததும் தெருவில் உங்களுக்கு ஆரத்தி எடுக்கும் போதே எவருக்கும் தெரியாமல் ஜன்னல் வழியாகத் தங்களைப் பார்த்தேன். ஸ்ரீரங்கத்தில் என் ஓர் இரவு ரமிப்புக்காக இரண்டாயிரம் ரூபாய் கொடுத்த பிரபு தாங்கள்தாம் என்றும், தங்களை நான் திட்டியதும் மற்ற விஷயங்களும் என் ஞாபகத்திற்கு வந்ததும், என் மனத்திற்கு வெகு

வேதனையாகி, தங்கள் முன் எதிர்ப்படவே கூடாதென்றும், பிராணத் தியாகம் செய்துகொள்வதே மேலென்றும் என் மனத்தில் பட்டுவிட்டதால், தாங்கள் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்குமுன் நான் பின் வாசல் வழியாகப் பறந்துவிட்டேன்.

எல்லோரும் மாப்பிள்ளையைப் பார்க்கும் கோலாகலத்தில் இருந்ததால் என்னைக் கவனிப்பார் யாரும் இல்லை. அப்போது இரவு சுமார் ஏழு மணி இருக்கும். எவருக்குந் தெரியாமல் கிணற்றில் விழுந்து இறப்பதே சரியென்று நிச்சயித்துக் கிணற்றின் கரைமேல் ஏறி, 'ஹரி, ஹரி, ரங்கா! வெங்கடாசலபதி! நான் இதுவரையில் செய்த என் பாவங்களை மன்னித்து என்னை உன் பாதத்தில் சேர்த்துக்கொள்!' என்று சொல்லிக் கிணற்றில் குதிக்கப் போகும் சமயத்தில் பின்னால் இருந்து ஒரு குழந்தையை அலக்காகத் தூக்குவதைப்போல், என் சிற்றப்பாவாகிய வரதாச்சாரியார் என்னைத் தூக்கிக்கொண்டார்.

என் கல்யாண காலத்தில் கோபித்துக்கொண்டு போன என் சிற்றப்பா, பினங்கில் வியாபாரம் செய்து, தனவந்தர் ஆகி, அநேக வருஷங்களுக்கு அப்பால், நான் சிறு குழந்தையாக இருக்கும்போது என்பேரில் அவருக்கு இருந்த பிரியத்தாலும் அபிமானத்தாலும் என்னைப் பார்ப்பதற்காகவே முன் கூட்டித் தெரிவிக்காமல் தம் மோட்டார் வண்டியில் வந்ததாகவும், ஜல ஸ்பரிசத்திற்காக வண்டியைச் சற்றுத் தூரத்தில் நிறுத்திவிட்டுக் கீழே இறங்கியவர், கால் கை சுத்தி செய்துகொண்டு அநுஷ்டானம் செய்துகொள்ளக் கிணற்றண்டை வந்ததாகவும், அந்தச் சமயத்தில் வயதுப் பெண்ணாகிய நான் தன்னந் தனியாகக் கிணற்றண்டை வரவே, தாம் சற்று மறைந்து நின்றதாகவும், அப்பால் நான் பிராணத் தியாகம் செய்துகொள்ள உத்தேசித்ததை அறிந்து, என்னைத் தப்புவிப்பதற்காகச் சமீபத்தில் வந்த

தாகவும், அப்போதுதான் நான், 'ஹரி, ஹரி, ரங்கா'! என்று பேசியதாகவும் என் குரலைக் கேட்ட பின்தான் நானென்று தெரிந்துகொண்டதாகவும் சொல்லி, நான் தற்கொலை செய்துகொள்ள ஏற்பட்ட காரணம் என்ன என்று கேட்டார்.

நான் நடந்த விஷயங்களைச் சவிஸ்தாரமாகச் சொன்னதோடு என்னை விட்டுவிடும்படியும் கெஞ்சினேன். அவர் அப்போது, நான் அன்றையமுதல் தற்கொலை செய்து கொண்டதாக நினைத்துக்கொண்டு அவருடனேயே பினாங்கில் வசிக்கலாம் என்றும், தம்மைத் தவிர மற்றவர்களுக்கெல்லாம் நான் இறந்ததாகவே இருக்கட்டும் என்றும், அப்போதே மோட்டாரில் போய், மறு நாள் காலையில் புறப்படும் கப்பலில் பினாங்குக்குப் போய்விடலாம் என்றும் நல்ல வார்த்தை சொன்னார். அப்போதும் நான் ஒப்புக்கொள்ளவில்லை. 'ராஜேந்திரனைப்பற்றியாவது என் பெற்றோர்களைப் பற்றியாவது எந்த வார்த்தையும் சொல்வதில்லை என்றும், அவர்களைப்பற்றிய விவரம் பத்திரிகைகளில் வெளிப்பட்டாலும் எனக்குக் காட்டுவதில்லை என்றும் பிரமாணம் செய்து கொடுத்தால் ஒழிய நான் ஜீவித்திருக்கமாட்டேன்' என்று சொல்லி ஒரே முரண்டாகப் பிடித்ததில் அவர் அவ்வாறே பிரமாணம் செய்து கொடுத்து, இன்றைய வரையில் அவர் கொடுத்த உறுதி மொழியைக் காப்பாற்றினார்.

நாங்கள் பினாங்கு சென்ற 7-வது மாதம் ரங்கநாத் பிறந்தான். அவனுக்கு வேண்டிய கல்வி புகட்டி வைத்திருக்கையில், சுமார் நான்கு வருஷங்களுக்கு முன்னால் சென்னையில் உள்ள, 'ருக்மிணி பாங்கி' என்னும் எனது பேருடைய பாங்கியில் காஷ்கிப்பர் வேலை காலி இருக்கிறது என்றும் அவ் வேலைக்கு ரங்கநாத்தை அனுப்பி, அவன் அவ் வேலையில் தேர்ச்சி பெற்றால் பின்னால் சென்னையில் அவனுக்கே ஒரு பாங்கி வைத்துக் கொடுப்பதாகவும்

என்னிடம் சொல்லி, ரங்கநாத்தை இங்கே அனுப்பினார். அடிக்கடி நான் ரங்கநாத்தைத் தருவிக்கும்படி சொல்லிக் கொண்டே வந்தேன். ஏதாவது சாக்குப் போக்குகள் சொல்லிக்கொண்டே வந்தார்.

கடைசியாகப் பாங்கியில் ஆச்சரியமாக நடந்த திருட்டைப்பற்றிச் சொல்லி, திருவல்லிக்கேணித் துப்பறியும் கோவிந்தனைத் துப்புத் துலக்கச் சொல்லியிருப்பதாகச் சொன்னார். ஒரு வாரத்திற்கு முன், 'நாங்கள் இருவரும் நேரில் சென்னைக்கு வந்து ரங்கநாத்துக்கு அநுகூலமாகச் சாட்சி சொன்னால் ஒழிய ரங்கநாத் கட்டாயமாகத் தண்டனை அடைவான்' என்று கோவிந்தன் அவசரத் தந்தி அடித்தார். 'நாம் இங்கே இருந்தோம். சென்னையில் திருட்டு நடந்திருக்கிறது; நாம் போய் என்ன சாட்சி சொல்லப் போகிறோம்?' என்று கேட்டதற்கு என் சிற்றப்பா, 'கோவிந்தன் அநாவசியமாகத் தந்தி அடிக்கவே மாட்டார்; ஏதோ அவசரமான காரியம் இருக்கும்' என்று பதில் சொல்லி உடனே புறப்பட வேண்டுமென்று என்னைக் கட்டாயப்படுத்தி அழைத்து வந்தார். தயவு செய்து எங்களை ஏன் வரவழைத்தார் என்று அவரைக் கேளுங்கள்.

ராஜேந்திரன் பக்கத்து அறையில் இருந்த கோவிந்தனைக் கூப்பிட்டு, 'ஏன் வரவழைத்தீர்கள்?' என்று கேட்டார்.

**கோவிந்தன்:** ஒரு வாரத்திற்கு முன் ரங்கநாத் அறையில் நான் உட்கார்ந்து, அவருடன் பேசிக்கொண்டிருக்கையில் அவர் ஒரு பெட்டியைத் திறந்தார். அதில் ருக்மிணியம்மாளின் படம் இருந்தது. தங்களிடம் இருக்கும் ருக்மிணியின் படங்களுக்கும் ரங்கநாத் இடம் இருந்த படத்திற்கும் அநேக வித்தியாசங்கள் இருந்ததால், இது தங்கள் இடம் இல்லாத மாதிரி படம் என்றும், ரங்கநாத்துக்கு எங்கிருந்து கிடைத்ததென்றும் ஜாடையாகக் கேட்டேன்.

அப் படம் பினாங்கில் பிடித்த, தமது தாயார் ருக்மிணியம்மாளின் படம் என்று ரங்கநாத் சொன்னார். அதற்கு முன்னதாகவே ரங்கநாத்தைப்பற்றி முழு விவரங்கள் விசாரித்து எழுதும்படி பினாங்கிலுள்ள எனது துப்பறியும் நண்பனுக்கு எழுதியதில், 'வரதாச்சாரியார் 20 வருஷங்களுக்கு முன் சென்னையில் 6 மாதம் இருந்துவிட்டு வருவதாகச் சென்றவர், போன 15-வது நாளே அவர் குமாரத்தியாகிய ருக்மிணியுடன் திரும்பி வந்ததாகவும், அந்த அம்மாள் வந்த 7-வது மாதத்தில் பிரசவித்ததாகவும் அப்போது பிறந்த குழந்தைதான் ரங்கநாத்' என்றும் மற்ற விவரங்களையும் தெரிவித்தார்.

ருக்மிணி காணாமற் போன தேதியும், வரதாச்சாரி பினாங்குக்குப் போன கப்பல் புறப்பட்ட தேதியும், முன் பின்னாக இருந்ததால் ராஜேந்திரன் மனைவியாகிய ருக்மிணியம்மாள்தான் அவ்விடத்தில் இருக்கிறாள் என்று ஊகித்தேன். ரங்கநாத் படத்தைப்பற்றிய விஷயம் தெரிவித்தவுடனே எனக்கு நிச்சயம் ஆகிவிட்டதால் தங்கள் இருவருக்கும் இருக்கும் மனக் குறையை நிவர்த்திசெய்யும் அவசர ஜோலிக்காகத்தான் அத் தந்தி யடித்தேன். நான் உண்மையைச் சொல்லாமல் மாறு பாஷையாகத் தந்தி அடித்ததற்காக எனக்கு என்ன தண்டனை விதிக்கிறீர்களோ அத் தண்டனையைச் சந்தோஷமாக ஏற்கத் தயாராக இருக்கிறேன்.

ராஜேந்திரன், கோவிந்தனுக்கு அவ் விஷயங்கள் தெரிந்தும் தமக்கு ஏன் தெரிவிக்கவில்லை என்றார். தம் மனத்துக்கு நிச்சயம் ஆகிவிட்டாலும் உண்மை என்று திட்டமாக அறியுமுன் தாம் ஏதும் சொல்வதில்லை என்றும், உண்மையைக் கண்டு பிடிப்பதற்காக ருக்மிணியம்மாளை அந்த அறைக்குள் போகச் சொன்னார் என்றும், பின் வரதாச்சாரியிடம் கேட்டதில் தாம் நினைத்தது சரிதான் என்று ருஜு

வானதாகவும் தெரிந்தது. அப்பால் கோவிந்தன் வேறு ஜோலியாக வெளியே போவதாகச் சொல்லிப் போனார். அப்போது ராஜேந்திரன் ருக்மிணியைத் தம் மடியின்மீது உட்கார வைத்துக்கொண்டு அவள் கூந்தலைத் திருத்திக் கொடுத்துக்கொண்டே பின் வருமாறு கேட்டார்.

**ராஜேந்திரன்:** ருக்மிணி! ஸ்ரீரங்கத்தில் நடந்தேறிய விஷயங்களுக்கு உன்மேல் தப்பிதம் இல்லை என்று எனக்குத் திட்டமாகத் தெரியும் என்பதை நீ அறிந்திருக்கும்போது உன்னால் எனக்குக் கொடுக்கப்பட்ட வாக்குக்கு முற்றும் மாறாக நீ தற்கொலை செய்துகொள்ளச் சென்றதும், தெய்வாதீனமாக உன் சிற்றப்பாவால் நீ காப்பாற்றப்பட்ட பின்னும் சுமார் இருபது வருஷ காலமாக என்னைத் துன்பத்திற்கு ஆளாக்கிவிட்டு, நான் உயிருடன் இருக்கிறேனா இல்லையா என்றுகூடக் கவனியாமல் ஒரே வைராக்கியமாக இருந்தது எதனால்? சொல் பார்ப்போம்.

**ருக்மிணி:** நாதா! நான் சொல்லும் காரணங்கள் தங்களுக்குச் சரியென்று தோற்றுமோ என்னமோ எனக்குத் தெரியாது. என் மனத்தில் அப்போது தோன்றிய விஷயங்களை ஒளிக்காமல் சொல்லிவிடுகிறேன். அவைகள் எப்படி இருப்பினும் அங்கீகரித்து நான் செய்த அவிவேகமான காரியத்திற்கு மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நான் தங்களைப் பார்த்தவுடன் ஸ்ரீரங்கத்தில் நடந்த காரியத்திற்குப் பின் தங்கள் கண்ணில் படுவதைவிடப் பிராணனை விடுவதே சிலாக்கியம் என்னும் ஒரே எண்ணத்தால் தூண்டப்பட்டு வீட்டில் இருந்து வெளியேறி விட்டேன்.

அன்று ஸ்ரீரங்கத்தில், 'நான் உமது மனைவியாகவே உண்மையில் இருந்திருந்து இன்னொரு அந்நிய புருஷன் என்னை நீர் செய்தவாறு மானபங்கப்படுத்தி இருந்தால்

அப்போது உமது மனம் எப்படி இருந்திருக்கும்?' என்று கேட்டதற்குத் தாங்கள் என்ன ஜவாபு சொன்னீர்கள் என்று ஞாபகப்படுத்திப் பாருங்கள். ஐந்து நிமிஷத்திற்கு முன்னால் சொல்லியிருந்தால் எப்படி அதைச் சொல் வேனோ அப்படியே சொல்லுகிறேன். கேளுங்கள், 'உன் கேள்வி என் மனத்தைப் பிளக்கிறது. ஆம், அதிக அவதி அடைந்திருப்பேன்; சாகவும் துணிந்திருப்பேன். அந்த நிலை யில் உன்து பர்த்தா இருந்து அச் சேதியை அறிவாரானால் எத்தனை சஞ்சலம் ஏற்றுக்கொள்வாரோ? மகா பாதகனாகிய எனக்கு அதை நினைக்கவே நெஞ்சு திடுக்கிடுகின்றது!' என்றீர்கள். ஆகையால் தாங்கள் என்னை அங்கீகரித் தாலும் முழு மனத்துடன் அங்கீகரிக்க மாட்டீர்கள் என்னும் எண்ணம் என் மனத்தில் பட்டதால்தான் தங்களுக்குக் கொடுத்த வாக்கு முடிவு பெற்றது என்றும், ஆகையால் தற்கொலை செய்துகொள்வதால் நான் கொடுத்த வாக்கைத் தவறி நடந்ததாகக் கருதப்பட மாட்டேன் என்றும் நினைத்தேன்.

எல்லாவற்றிற்கும் மேல் சிறு வயதில் நமக்குக் கல்யாணம் நடந்ததால் எனக்குத் தங்களைச் சரிவர அடையாளம் தெரியாவிட்டாலும் என் சிற்றன்னைக்கும் அவள் கணவ னுக்கும் தங்களை நன்றாகத் தெரியும் என்றும் அவர்கள் தாங்கள் இன்னார் என்று தெரிந்துகொண்டு, அவர்க ளுடைய தூண்டுதலின்பேரில் நான் சம்மதிக்காதவளைப் போல் நடிப்பதற்காக மயக்கத்தை உண்டாக்கும்படி செய்த தாகவும் பின் திடீர் என்று தெரிந்தவுடன் தங்களை முதலில் திட்டி, வர வரச் சமாதானப்பட்டதாகத் தோற்றும்படியும் செய்து தங்கள் மனத்தில் நான் மகா பதிவிரதா சிரோமணி என்று அபிப்பிராயம் உண்டாக்குவதற்காக அவ்வா றெல்லாம் பாசாங்கு செய்தேன் என்றும் தங்கள் மனத்தில் எங்கே பட்டுவிடுகிறதோ என்னும் பயந்தான், 'இனிமேல்

தங்கள் கண்ணிலேயே படக் கூடாது’ என்ற தீர்மானத்தை உண்டாக்கிவிட்டது.

கடைசியாகத் தாங்கள் அன்று ஸ்ரீரங்கத்தில், ‘இனி என் சவம்கூட உன் கண்முன் படாது. அது நிச்சயந்தான் என்று சொன்ன வார்த்தையை வைத்துக்கொண்டு எங்கே என்னைப் புறக்கணிப்பீர்களோ என்றும் பயந்தேன். இக் காரணங்களால்தான் தங்கள் கண்ணில் படவே கூடாது என்று சென்றேன். பல வருஷ கலமாக ஸ்ரீமந் நாராயண னைத் தியானித்துக்கொண்டே இருந்தேன்.

**ராஜேந்திரன் :** அதன் பலன்தான் இப்போது என்னை- இல்லை இல்லை-நம்மை- ஆனந்த சாகரத்தில் மூழ்கவிட் டிருக்கிறது. சென்ற இருபது வருஷத்தில் நாம் அநுப வித்திருக்கக் கூடிய இன்பத்தைவிட அநேக ஆயிரம் பங்கு அதிக இன்பத்தை நாம் இனி எதிர்பார்க்கலாம்.

அதற்குள்ளாக ராகவன், அவர் பத்தினி, லக்ஷ்மி முத லானவர்கள் ருக்மிணியைப் பார்க்க வந்தார்கள். ராகவனைப் பார்த்ததும் ருக்மிணி நாணத்துடன் தலை குனிந்தாள். அப்போது ராஜேந்திரன், “பழைய ஞாபகம் வைத்து ருக்மிணி இன்னும் சங்கோசப் படுகிறாள்” என்று சொல்லி இனிமேல் பழைய சங்கதிகளை மறந்துவிடும்படி வேண்டிக் கொண்டார்.

அப்பால் ராகவன், தன் மனைவி அவிவேகத்தால் தன்னிடம் உண்மையைக் கூறாமல் தரகன் கோபண்ணா விடம் சிக்கிக்கொண்டு அவஸ்தை அடைந்ததும், தங்கள் ஏக புத்திரியாகிய லக்ஷ்மியை ஸ்ரீனிவாசனுக்குப் பலியிடுவ தற்குத் தீர்மானித்ததும், இவ்வளவு செய்தும் கடைசிவரை யில் தம்க்குத் தெரியாமல் மறைத்து வைக்க உத்தேசித்த விஷயம் மறைக்க முடியாமல் போனதையும், இவ் விஷ யத்தை வாசிப்போர் தெரிந்துகொள்ள வேண்டிய கற்ப னையையும் வெகுவாகப் பிரசங்கம் செய்தார்.

பின்பு வரதாச்சாரியார் சென்னை ருக்மிணி பாங்குக்கு ஒரு காஷ்கிப்பர் வேண்டுமென்று பத்திரிகைகளில் செய்திருந்த விளம்பரத்தைத் தாம் பார்த்ததும் மிக்க சந்தோஷம் அடைந்ததாகவும், ராஜேந்திரன் தம் பிராணகாந்தியை மறவாதவராக அவளுடைய பெயரையே பாங்கிக்கு வைத்திருக்கும் அன்பை நோக்கித் தாம் மிகவும் பூரித்ததாகவும், இந்த வழியில் ரங்கநாத்தை ருக்மிணி பாங்கிக்குக் காஷ்கிப்பராக அனுப்பிப் பிதாவுடன் புத்திரனும் போய்ச் சேருமாறு-சேர்க்காமலே சேர்த்த விதமாகச்-செய்ய எண்ணி, அவ்விதமே ரங்கநாத்தைச் சென்னைக்கு அனுப்பினதாகவும், முடிவில் யாவும் மங்களகரமாகவே ஆயிற்றென்றும் புகன்றார்.

ருக்மிணிக்குத் தாம் ராஜேந்திரன் சம்பந்தமான எதைப்பற்றியும் தெரிவிப்பதில்லை என்று பிரமாணிக்கம் செய்து கொடுத்திருந்தபடியால், இவ்விதமாகத் தம் தந்தையிடமே ரங்கநாத் போய்ச் சேரும் விஷயத்தை தாம் ருக்மிணிக்குத் தெரிவிக்க முடியவில்லை என் ருக்மிணி தனது புத்திரனைத் தருவிக்கும்படி பல கூறியும் பிதாவிடமே குமாரன் இருப்பது எதற்கு தெனத் தாம் கருதியதால் ரங்கநாத்தைத் தருவ ருக்மிணிக்குச் சாக்குப் போக்குகள் சொல்லிவர் கூறினார்.

அப்பால் அவரவர்கள் வீட்டிற்கு அவரவ ர்ர்கள். பாங்கியின் திருட்டைப்பற்றி வெளி குந் தெரியாததால் போலீஸ் கமிஷனர் துணை கேட்டு அனுமதி பெற்றுக்கொண்டு, லீலாவ ளுக்கு இஷ்டமான இடத்திற்குப் போகும்படி சொன்னார். லீலாவதி தான் போகு முன்ன தரன் ஸ்ரீனிவாசனைப் பார்த்துப் பேசிவிட்டுப் டும் என்று உத்தரவு கேட்டுக்கொண்டு அவ

மான மைசூர்ப்பாகை வாங்கிக்கொண்டுபோய்க் கொடுத்து, அவனிடம் சில நிமிஷ நேரம் பேசிக்கொண் டிருந்துவிட்டுப் போய்விட்டாள். அந்த மைசூர்ப்பாகைச் சாப்பிட்டவுடன், ஐந்து நிமிஷங்களில் ஸ்ரீனிவாசன் இறந்து போனான். போலீஸ் கமிஷனர் துரையவர்கள் இதைக் கேட்ட வுடனே வந்து பார்த்து, அவன் உடம்பைப் பரீட்சித்ததில், 'விஷம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை' என்று டாக்டர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். ஆனால் போலீஸ் கமிஷனரவர் கள் கோவிந்தனைக் கேட்டபோது ஸ்ரீனிவாசன் விஷத்தால் தான் இறந்தான் என்றும், அந்த விஷம் டாக்டர்கள் பரீட் சைக்குத் தென்படாத விஷம் என்றும் சண்டமாருதஸ்வாமி இடம் இருந்து, தான் எடுத்து வந்து வைத்திருக்கும் விஷத் தைப்பற்றிப் பேச்சுவாக்கில் தான் லீலாவதியிடம் சொல்லி, விஷத்தை அவளுக்குக் காட்டிக்கொண் டிருக்கும்போதே ஏதோ வேலையாகத் தாம் வெளியே போக, அவள் அதில் ..ஞ்சம் எடுத்து வைத்திருக்கலாம் என்றும் அதன் உத ..ல் கொன்றிருக்கலாம் என்றும் சொன்னார்.

..லீஸ் கமிஷனர்: ஆனால் அவன் இப்படி இறக்க ..மென்று தாங்கள் உத்தேசித்ததால்தான், தங்க ..த்தைக் காட்டிக்கொண் டிருக்கும்போது அவசர ..தது போலும்!

..தன்: நான் வேண்டுமென்று செய்ததல்ல; ..ல்பம் அப்படி நேர்ந்துவிட்டது. இரு கொலை ..வன் எப்படியும் மரணதண்டனை அடைவான். ..தமாக இறந்தால்தான் என்ன? இப்படி நடந் .. அநுகூலம் என்றால், ராஜேந்திரன் மகன் ..ால் நம்பப்பட்ட அச்சனியன் இப்படித் ..பானதில் பகிரங்கமாக அவன் விசாரணைக்குக் .. படாதது ஒன்று, இனிமேல் லீலாவதியின்